2811

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: LXVIII NO: 1 and 2

October 8 and 9 1984

C

D

V211,31 N84

N84.68.1 ; 2:1

136272

D
V211,31 N84
N84.68.1 f2;1
136272

உள்ளடக்கம்
8-10-1984 பக்கங்கள்

(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும். i—iii

(ii) Personnel of the Government of Tamil nadu. iv—vi

(iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். vii—vii

(iv) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் (தொகுதிகள் உள்பட—அகரவரிசையில்) ix—xvi

1. இரங்கல் குறிப்புகள் :

முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களான திருவாளர்கள் டி.பி.எம்.பெரியசாமி, டி. கே. சுப்பையா, டாக்டர் இராஜா சர் எம். ஏ. முத்தையா செட்டியார், டாக்டர் பி. நடராஜன், எஸ். இராதாகிருஷ்ணன், எஸ். சுவாமிக்கண்ணு படையாட்சி, கே. எஸ். கோதண்டராமையா, ஆர். அப்துல் கலீல், பி. குனிராமன் கிடவு, டி. கே. டி. என். ஆர். தாத்தாச்சாரி, என். எஸ். சுந்தரராஜன் மறைவு குறித்து. 1—6

2. இரங்கல் தீர்மானங்கள்:

முன்னாள் சட்ட மன்றப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. வி. கே. இராமசாமி முதலியார் அவர்கள் மறைவும், பேரவை உறுப்பினர் திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் அவர்கள் மறைவும். 6—28

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் 6—12

திரு. என். எஸ். வி. சித்தன் 12—14

திரு. அன்பில் தர்மலிங்கம் 14—16, 26

திரு. என். சங்கரய்யா 16—18

திரு. சோ. அழகர்சாமி 18—19

திரு. எஸ். டி. சோமசுந்தரம் 20

உள்ளடக்கம்—தொடர்ச்சி.


2. இரங்கல் தீர்மானங்கள் —தொடர்ச்சி

| | |
|---|---|
| திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் | 21 |
| திரு. எஸ். ஆண்டித்தேவர் | 21—22 |
| திரு. பி. முகமது இஸ்மாயில் | 22—23 |
| திரு. ப. நெடுமாறன் | 23—24 |
| திரு. இ. சட்டநாத கரையாளர் | 24—25 |
| திரு. ஜி. மூர்த்தி | 25 |
| மாண்புமிகு பேரவைத் தலைவர் | 26—27 |
| 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 28—55 |


2811

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர்லால் குரானா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)-நிதி, வருவாய், சட்டமன்றம், தேர்தல்கள், இளைஞர் அணி, மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், மற்றும் இரும்பு—எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (பால்பெருக்குத் திட்ட அமைச்சர்)—பால், பால் பெருக்கு திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி—அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திரைப்படச் சட்டம், அறநிலையத்துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

6. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) —கல்வி, மற்றும் ஆட்சிமொழி.

7. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

8. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர்)—சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், பெருந்தொழில்கள், சுரங்கம் மற்றும் கனி வளம்.

9. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

10. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர், புள்ளிவிவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

11. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத்துறை.

12. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத்துறை அமைச்சர்—(போக்குவரத்து, அரசுடமையாக்கப்பட்ட போக்கு வரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

13. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (வணிகவரிகள் மற்றும் கைத்தறி அமைச்சர்)—வணிகவரிகள், ஆயத்துறை நெசவாலைகள் மற்றும் கைத்தறி.

14, மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (சுற்று சூழல் மாசுக் கட்டுப்படுத்தல் துறை அமைச்சர்)—சுற்று சூழல் மாசுக் கட்டுப்படுத்தல் மற்றும் பயண இசைவுச் சீட்டு.

15. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், மற்றும் வேலைவாய்ப்பும் பயிற்சியும்.

16. மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராசன் (உள்ளாட்சித் துறை அமைச்சர்) நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றி யங்கள், சமுதாய வளர்ச்சி மற்றும் கிராமப்புற கடன் சம்பந்தப் பட்டவை.

17. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (பொதுப்பணித் துறை அமைச்சர்) வீட்டுவசதி, குடிசை மாற்று வாரியம், பொதுப் பணித்துறை மற்றும் பொதுப் பணித்துறை அலுவல்கள் சம்பந்தமாக.

18. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம்.

19. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூகநலத்துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள் அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.



20. மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்)—கதர்.

21. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (நீர்ப்பாசனத்துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி கூட்டுறவு சங்கங்கள் சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.

22. மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் (ஊரகத்தொழில் துறை அமைச்சர்)—கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத்தொழில்கள்.

23. மாண்புமிகு திரு. க. கனலமணி (மீன்வளத்துறை அமைச்சர்)—மீன்வளம்.

24 மாண்புமிகு திரு. த. வீராசாமி (உணவு அமைச்சர்)—உணவு விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் (கூட்டுறவுத்துறை அமைச்சர்)—கூட்டுறவு.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

Thiru. SUNDAR LAL KHURANA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS :

(1) Hon. Dr.M. G. RAMACHANDRAN (Chief Minister)— Public, General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology, Prohibition excluding grant of Liquor Permits, Electronics, Science and Technology.

(2) Hon. Dr. V. R. NEDUNCHEZHIAN (Minister for Finance) Finance, Revenue, Legislature, Elections, Youth Service Corps and Ex-Servicemen.

(3) Hon. Thiru S. RAMACHANDRAN(Minister for Electricity)- Electricity, Iron and Steel Control.

(4) Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Dairy Development)—Milk, Dairy Development, Registration and Stamp Act.

(5) Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and Grant of Liquor Permits.

(6) Hon. Thiru C. ARANGANAYAGAM (MinisterforEducation Education and Official Language.

(7) Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agriculture)— Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

(8) Hon. Thiru C. PONNAIYAN (Minister for Law and Industries)—Law, Courts, Prisons, Legislation of Weights and Measures Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits, Large Scale Industries, Mines and Minerals.



(9) Hon. Thiru P. KULANDAIVELU (Minister foi Nutritiouls Meals)—Nutritious Meals, Bhoodan and Gramdhan and Highways.

(10) Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour)— Labour, Statistics, Tamil nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

(11) Hon. Dr. H. V. HANDE (Minister for Health)—Health.

(12) Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)— Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

(13) Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Commercial Taxes and Handlooms)—Commercial Taxes, Excise, Handlooms and Textiles.

(14) Hon Thiru S.N. RAJENDRAN (Minister for Environmental Pollution Control)—Environmental Pollution Control and Passports.

(15) Hon. ThiruM. VIJAYASARATHI (Minister for Adi-Dravidar Welfare)—Adi Dravidar Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Boonded Labour and Employment Training.

(16) Hon.Thiru R. SOUNDARARAJAN (Minister forLocal Administration)—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

(17) Hon. Thiru S. R. ERADHA (Minister for Public Works)— Housing, Slum Clearance Board, P.W.D., and Establishment matters relating to Public Works Department.

(18) Hon. Thiru M. R. GOVENDHAN (Minister for Backward Classes)—Backward Classes.

(19) Hon. Tmt. GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

(20) Hon. Tmt. VIJAYALAKSHMI PALANISAMY ( Minister for Khadi)—Khadi.

(21) Hon. Thiru Y.S.M. YUSUF (Minister for Irrigation)— Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

(22) Hon. Thiru R. ARUNACHALAM (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries.

(23) Hon. Thiru K. KALAIMANI (Minister for Fisheries)—Fisheries.

(24) Hon. Thiru T. VEERASWAMY (Minister for Food)—Food, Price Control and Census.

(25) Hon. Thiru K. K. S. S. R. RAMACHANDRAN (Minister for Co-operation)—Co-operation.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

* மாண்புமிகு திரு. க. இராசாராம்

பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

†மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்
2. திரு. மெ. அ. இராசகுமார்
3. திரு. எல். இளையபெருமாள்
4. திரு. பெ. சு. திருவேங்கடம்
5. திரு. டி. கே. நல்லப்பன்
6. திரு. ஏ. சி. சண்முகம்

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்கள்:

திரு. இரா, பாலகுரு, பி.ஏ.

திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி. எல்.

திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.

குழு அலுவலர்:

திரு. சா. சீனிவாசன், பி.எஸ்.சி.

சார்புச் செயலாளர்கள்:

திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.

திரு. செ. சு. ஜானகிராமன், பி. ஏ., பி.எல்.

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.,

திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எ .

திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.,

திரு. வ. சா. ஜான், பி.ஏ.,

---

*21-6-80 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

†9-10-84 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.

எஸ்டேட் அலுவலர்:

திரு. கே. தியாகராஜன், பி. ஏ., பி.எல்.

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கோதண்டராமன்

விவாதப் பதிப்பாளர்:

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

தலைமை நிருபர்

திரு. வி. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்எல்.பி.



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல்.

(தொகுதிகள் உள்பட அகர வரிசையில்)

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 1 | அங்குசாமி திரு. ச. | திருவாடானை |
| 2 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரம்பூர் |
| 3 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4 | அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6 | அமிர்தராஜ், திரு. இரா. | திருச்செந்தூர் |
| 7 | அய்யாறு வாண்டையார், திரு. கி. | தஞ்சாவூர் |
| 8 | அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 9 | அரங்கநாதன், திரு. மு. | குன்னூர் (செ.வ.) |
| 10 | அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 11 | அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர் |
| 12 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 13 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 14 | அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 15 | அன்பில் தர்மலிங்கம். திரு. | லால்குடி |
| 16 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 17 | ஆண்டித்தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 18 | ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ.வ.) |
| 19 | சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்-2 |
| 20 | ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 21 | ஆரூர் ஜெகதீசன், திரு. பு. கோ. | செங்கல்பட்டு |
| 22 | இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 23 | இராசகுமார் திரு மெ. அ. | மருங்காபுரி |
| 24 | இராசமாணிக்கம் திரு. இரே. | குத்தாலம் |
| 25 | இராசரத்தினம், திரு. து | பூந்தமல்லி |
| 26 | இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ.) |
| 27 | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 28 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 29 | இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ. வ.) |
| 30 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 31 இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 32 இராமச்சந்திரன் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33 இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 34 இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | செஞ்சி |
| 35 இராமச்சந்திரன், திரு. சோ. மா. | அண்ணாநகர் |
| 36 இராமசாமி திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 37 இராமசாமி திரு. த. | இராமநாதபுரம் |
| 38 இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீ வைகுண்டம் |
| 39 இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார்கோயில் (செ.வ.) |
| 40 இராமலிங்கம், டாக்டர் கே. பி. | இராசிபுரம் |
| 41 இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 42 இராஜசேகரன், திரு. வே. | டாக்டர் இராதாகிருஷ்ண நகர் |
| 43 இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 44 இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 45 இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 46 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 47 உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 48 உச்சி, திரு. கே. | கடலூர் |
| 49 உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 50 உமாநாத், திரு. ரா. | நாகை |
| 51 கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 52 கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 53 கணேசன், திரு. இ. | இடப்பாடி |
| 54 கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 55 கந்தசாமி, திரு. கா. வே. | இணைத்துக்கடவு |
| 56 கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 57 கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 58 கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 59 கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 60 கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை (செ.வ) |
| 61 கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 62 கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 63 கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ.வ.) |
| 64 கலையரசன், திரு. நன்னிலம் அ. | நன்னிலம் (செ.வ.) |
| 65 காளிமுத்து, டாக்டர் கா. | திருப்பரங்குன்றம் |
| 56 கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 67 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு |
| 68 கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம் |
| 69 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 70 கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1 |
| 71 கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 72 குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 73 குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 74 குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ.வ.) |
| 75 குமரி அனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 76 குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ.) |
| 77 குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 78 குலசேகரபாண்டியன், திரு. த. | வாணியம்பாடி |
| 79 குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 80 கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 81 கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 82 கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |
| 83 கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 84 கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 85 கோவைத்தம்பி, திரு. | பேரூர் |
| 86 சக்ரபாணி, திரு. ஆர். | பொன்னேரி (செ.வ) |
| 87 சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 88 சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி |
| 89 சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 90 சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 91 சத்தியசீலன், திரு. கி. | மயிலாடுதுறை |

| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 92 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 93 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |
| 94 | சபாபதி, திரு. சி. | அரூர் (செ.வ.) |
| 95 | சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டினம் |
| 96 | சரோஜா, திருமதி இரா. | உப்பிலியாபுரம் |
| 97 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 98 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 99 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 100 | சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி |
| 101 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 102 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 103 | சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 104 | சிவபெருமாள், திரு. மு. | ஓமலூர் |
| 105 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 106 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 107 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 108 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 109 | சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர் |
| 110 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 111 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 112 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 113 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 114 | சுந்தரராஜ், திரு. நா | திருமயம் |
| 115 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 116 | சுப்பிரமணியன் திரு உ. | சிவகங்கை |
| 117 | சுப்பிரமணியன், திரு. கே.எம்.எஸ். | போடிநாயக்கனூர் |
| 118 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 119 | சுப்பிரமணியன் திரு. வி. | திருநாவலூர் |
| 120 | சுப்பிரமணியன், திரு. ஜி.கே. | பவானிசாகர் |
| 121 | சுவாமிநாதன், திரு. வி.வி. | புவனகிரி |
| 122 | செங்கோட்டையன், திரு. கு.அ. | கோபிச்செட்டி பாளையம் |
| 123 | செம்மலை, திரு. கெ. | தாரமங்கலம் |



| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 124 | செல்லமுத்து, திரு. எம் | திருவாரூர் (செ.வ) |
| 125 | செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 126 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப.செ. | அரவக்குறிச்சி |
| 127 | சேதுராமன், திரு. ஏ.எம். | ஆற்காடு |
| 128 | சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் (செ.வ) |
| 129 | சோமசுந்தரம், திரு. எஸ்.டி. | பட்டுக்கோட்டை |
| 130 | சோமு, திரு. என்.வி.என். | பூங்காநகர் |
| 131 | சௌந்திரராசன், திரு. கே | திருச்சி—2 |
| 132 | சௌந்திரராஜன், திரு. திருச்சி ஆர். | ஸ்ரீரங்கம் |
| 133 | சௌரிராஜன், டாக்டர் கே. | தி. நகர் |
| 134 | தங்கமணி திரு. கே.எம். | திண்டிவனம் |
| 135 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 136 | தங்கவேல்ராஜ், திரு. பி.எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 137 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 138 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ.வ) |
| 139 | தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ) |
| 140 | தனுக்கோடித்தேவர், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 141 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 142 | தியாகராசன், திரு. ஆர் | விருத்தாசலம் |
| 143 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 144 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 145 | திருமான், திரு. இரா. | ஏற்காடு (ஆ.வா) |
| 146 | திருவேங்கடம், திரு. பெ.சு. | கலசப்பாக்கம் |
| 147 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னாகரம் |
| 148 | துரைசாமி திரு. பி. எஸ். | பர்கூர் |
| 149 | துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை. |
| 150 | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 151 | துரைராஜ், திரு. பி. | சங்கர நாயனார் கோவில் (செ.வ.) |
| 152 | தேவராஜ், திரு. வி.எம். | வேலூர் |
| 153 | நரசிம்மன், திரு. பு.மூ. | பள்ளிப்பட்டு |

| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 154 | நல்லப்பன், திரு. தி.கா. | பெருந்துறை |
| 155 | நவநீதகிருஷ்ண பாண்டியன் | ஆலங்குளம் |
| 156 | நாச்சிமுத்து, திரு. கே.பி. | மேட்டூர் |
| 157 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 158 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 159 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 160 | நெடுமாறன், திரு.ப. | மதுரை (மத்திய) |
| 161 | பக்கீர் முகமது, திரு. இ.எஸ்.எம். | கும்பகோணம் |
| 162 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 163 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 164 | பரமசிவகவுண்டர், திரு. பி.என். | பல்லடம் |
| 165 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 166 | பழனிச்சாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 167 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 168 | பழனியப்பன், திரு. கு.பா. | விழுப்புரம் |
| 169 | பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 170 | பாண்டியன், திரு. பி.எச். | சேரன்மாதேவி |
| 171 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 172 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 173 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.) |
| 174 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 175 | பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி |
| 176 | பாலசுப்பிரமணியன், திரு க. | சீர்காழி (செ.வ.) |
| 177 | பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர் வி.பி. | வேடசந்தூர் |
| 178 | பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ.வ.) |
| 179 | பானுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ |
| 180 | பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 181 | பிரபாகரன், திரு. ஜே.சி.டி. | வில்லிவாக்கம் |
| 182 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை |
| 183 | பூங்காவனம், திரு. என்.ஏ. | காட்பாடி |
| 184 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ.வ) |
| 185 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் |



| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 186 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 187 | பெருமாள், திரு. ரா.கு. | விளாத்திகுளம் |
| 188 | பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 189 | பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 190 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 191 | மணி திரு. டி. | விளவங்கோடு |
| 192 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 193 | மாணிக்கம், திரு. எம்.எஸ். | வேதாரண்யம் |
| 194 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 195 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம் |
| 196 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி–1 |
| 197 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 198 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 199 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 200 | முத்துவேல், திரு. என். | வானூர் (செ.வ.) |
| 201 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 202 | முனிரத்தினம், திரு. இரா.சா. | கும்மிடிப்பூண்டி |
| 203 | முனுசாமி, திரு. மு.பா. | பாலக்கோடு |
| 204 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட்(செ.வ) |
| 205 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 206 | யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 207 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 208 | ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 209 | ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 210 | ரமணி, திரு. ரு. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 211 | ராஜமாணிக்கம், திரு. எம்.கே. | முசிறி |
| 212 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 213 | வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 214 | விசயலட்சுமி பழனிச்சாமி, திருமதி | வீரபாண்டி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 215 | வின்செண்ட், திரு. மி. | நாகர்கோவில் |
| 216 | விஜயசாரதி திரு. எம். | அரக்கோணம் (செ.வ.) |
| 217 | விஜயபாலன், திரு. என், | பூம்புகார் |
| 218 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 219 | விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட்டு |
| 220 | வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 221 | வீராணம்பலம், திரு. க.வெ. | மேலூர் |
| 222 | வெங்கடசுப்பிரமணியம், திரு. | காஞ்சிபுரம் |
| 223 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 224 | வெங்கடேசன், திரு. பி.எம். | பெரணமல்லூர் |
| 225 | வெள்ளைச்சாமி, திரு. அ. | ஆத்தூர் |
| 226 | வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு |
| 227 | வேலப்பன், திரு. சி.வி. | கபிலமலை |
| 228 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 229 | ஜான் வின்செண்ட், திரு. மு. | நாங்குனேரி |
| 230 | ஜெயராமன், திரு. வே.இரா. | தேனி |
| 231 | ஹாஜா செரீப், திரு. கே.எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 232 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 233 | மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி | நியமன உறுப்பினர் |
| 234 | வெற்றிடம் | புரசைவாக்கம் |
| 235 | வெற்றிடம் | புதுக்கோட்டை |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமைபெற்றவர்கள்

(1) மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன், அமைச்சர்
(2) மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தர், அமைச்சர்
(3) மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே, அமைச்சர்
(4) மாண்புமிகு திரு. எஸ்.ஆர். இராதா, அமைச்சர்
(5) மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப், அமைச்சர்
(6) மாண்புமிகு திரு. க. கலைமணி, அமைச்சர்
(7) திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி, தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984, அக்டோபர் 8, திங்கட்கிழமை

புரட்டாசி 23, ரக்தாக்ஷி—திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

" குடம்பை தனித்து ஒழியப் புள்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு".

உடம்போடு உயிர்க்கு உள்ள உறவு, தான் இருந்த கூடு தனியே இருக்க அதைவிட்டு வேறிடத்திற்குப் பறவை பறந்தாற் போன்றது.

## 1. இரங்கற் குறிப்புகள்

முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களான,
திருவாளர்கள் டி.பி.எம். பெரியசாமி, டி.கே. சுப்பையா,
டாக்டர் இராசா சர் எம்.ஏ. முத்தையா செட்டியார், டாக்டர்
பி. நடராஜன், எஸ். இராதாகிருஷ்ணன், எஸ். சுவாமிக்கண்ணு
படையாட்சி, கே. எஸ். கோதண்டராமையா, ஆர். அப்துல்
கலீல், பி. குனிராமன் கிடவு, டி.கே.டி.என்.ஆர். தாத்தாச்சாரி,
என். எஸ். சுந்தரராஜன் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; தமிழ்நாடு சட்டமன்றப்
பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. டி.பி.எம்.
பெரியசாமி அவர்கள் 3-5-1984 ஆம் தேதியன்றும் திரு. டி.
கே. சுப்பையா அவர்கள் 5-5-1984 ஆம் தேதியன்றும், டாக்டர்
இராசா சர் எம்.ஏ. முத்தையா செட்டியார் அவர்கள் 12-5-1984
ஆம் தேதியன்றும், டாக்டர் பி. நடராசன் அவர்கள் 13-5-1984
ஆம் தேதியன்றும், திரு. எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள்
18-5-1984 ஆம் தேதியன்றும், திரு. எஸ். சாமிக்கண்ணு படை
யாட்சி அவர்கள் 19-5-1984 ஆம் தேதியன்றும், திரு. கே. எஸ்.
கோதண்டராமையா அவர்கள் 4-6-1984 ஆம் தேதியன்றும்,
திரு. ஆர். அப்துல் கலீல் அவர்கள் 12-7-1984 ஆம் தேதியன்றும்,
திரு. பி. குனிராமன் கிடவு அவர்கள் 8-8-1984 ஆம் தேதி
யன்றும், திரு. டி. கே. டி. என். ஆர். தாத்தாச்சாரி அவர்கள்
19-8-1984 ஆம் தேதியன்றும், திரு. என். எஸ். சுந்தரராசு
அவர்கள் 12-9-1984 ஆம் தேதியன்றும் மறைந்தமை குறித்து
இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி.பி.எம். பெரியசாமி அவர்கள் 1977 ஆம் ஆண்டி
லிருந்து 1980 ஆம் ஆண்டு வரை, மதுரை மாவட்டம், மதுரை
மேற்கு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின்
உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணி
யாற்றியுள்ளார். மேலும் அன்னார் இந்திய தேசிய பார்வர்டு
பிளாக் கட்சியின் தலைவராகவும், மதுரை தமிழ்ச் சங்கத்
செயலாளராகவும் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. டி. கே. சுப்பையா அவர்கள் 1957 ஆம் ஆண்டிலிருந்து
1962 ஆம் ஆண்டு வரை திருச்சிராப்பள்ளி மாவட்டம், டி. பளூர்
தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்
பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்
றியுள்ளார். மேலும், அவர் 1966 ஆம் ஆண்டிலிருந்து 1972 ஆம்
ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும்
நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

செட்டி நாட்டரசர் என அனைவராலும் அழைக்கப்பட்ட
டாக்டர் இராசா சர் எம்.ஏ. முத்தையா செட்டியார் அவர்கள்
1905 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 5 ஆம் நாள் பிறந்தார்.
1930 ஆம் ஆண்டிலிருந்து 1937 ஆம் ஆண்டு வரை அன்றைய
சென்னை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், 1937 ஆம்
ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1946
ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரையிலும் நாட்டுக்
கோட்டை நகரத்தார் சங்கத்தின் சார்பாக அன்றைய ஒருங்
கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்
கப்பட்டும் நல்ல முறையில் பணிபுரிந்துள்ளார். மேலும் 1952
ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1957
ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையும் இருமுறை
இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் மற்றும் காரைக்குடி
தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்
பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். 1964 ஆம் ஆண்டிலிருந்து
1970 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1980 ஆம் ஆண்டிலிருந்து
1983 ஆம் ஆண்டு வரையும் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை
உறுப்பினராகவும் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மேலும்
1946 ஆம் ஆண்டிலிருந்து 1950 ஆம் ஆண்டு வரை இந்திய
அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினராகவும் இருந்தார்.

1930 ஆம் ஆண்டிலிருந்து 1936 ஆம் ஆண்டு வரை மேல
வையில் நீதிக் கட்சியின் தலைமைக் கொறடாவாகப் பணி
யாற்றினார். நீதிக் கட்சியின் ஆட்சியின்போது 1936 ஆம்
ஆண்டிலிருந்து 1937 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டு கல்வி
அமைச்சராகவும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராகவும்
ஊராட்சி அமைச்சராகவும், அறநிலையப் பாதுகாப்பு அமைச்
சராகவும் பணிபுரிந்துள்ளார். 1932 ஆம் ஆண்டிலிருந்து 1933
ஆம் ஆண்டு வரையும், 1934 ஆம் ஆண்டிலிருந்து 1935 ஆம்
ஆண்டு வரையும் சென்னை நகரின் முதல் மேயராகப் பணி
புரிந்தார். சென்னை பல்கலைக் கழக இணை வேந்தராகவும்





தமது தந்தை செட்டி நாட்டரசர் 'இராசா சர் அண்ணா
மலைச் செட்டியார் நிறுவிய அண்ணாமலைப் பல்கலைக் கழக
இணை வேந்தராகவும் பதவி வகித்துள்ளார்.

சிறந்த தொழில் வணிகரும், தொழிலதிபருமான இவரை
மத்திய அரசு பத்மபூஷன் விருதையும், மாநில அரசு தமிழிசைக்
காவலர் என்ற பட்டத்தையும், சென்னை பல்கலைக் கழகம்
'டாக்டர்' பட்டத்தையும் அளித்து கௌரவித்துள்ளன.

தனது 24-வது வயதிலேயே வங்கிகள் விசாரணைக் குழுவில்
Banking Enfuiry Commitee உறுப்பினரானார். இம்பீரியல்
வங்கித் தலைவர் மற்றும் இயக்குநராகவும், இந்தியன் வங்கி
இயக்குநர்கள் குழுத் தலைவராகவும், தென்னிந்திய வர்த்தக
சபை Southern India Chamber of Commerce தலைவராகவும்,
அனைத்திந்திய தொழில் வர்த்தக சபை (F.I.C.C.I.) தலை
வராகவும் மற்றும் செட்டிநாடு சிமெண்ட்ஸ், மதுரா கோட்ஸ்
போன்ற பல தொழில் நிறுவனங்களின் தலைவராகவும் இருந்து
தமிழகத்தில் தொழில் துறை வளர்ச்சியில் பெரும் பங்கு
வகித்தவர்.

தனது தந்தையைப் போலவே தமிழிசையில் மிகவும் ஆர்வம்
கொண்டு சென்னையில் அவர் தந்தை நிறுவிய தமிழிசைச்
சங்கத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டு தமிழிசையை
வளர்த்தார். மதுரையில் தமிழிசைச் சங்கத்தை நிறுவி அதன்
வளர்ச்சிக்கும் பாடுபட்டு வந்தார். இவ்வாறு டாக்டர் இராசா
சர் எம்.ஏ. முத்தையா செட்டியார் அவர்கள் 50 ஆண்டுகளுக்கு
மேல் தமிழகத்தில், அரசியல், தொழில், கல்வி, தமிழிசை
பொதுத் தொண்டு போன்ற பல துறைகளிலும் சிறந்த பணி
யாற்றி சேவை செய்தவர் ஆவார்.

டாக்டர் பி. நடராசன் அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து
1967 ஆம் ஆண்டு வரை கன்னியாகுமரி மாவட்டம் கன்னியாகுமரி
தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையின் உறுப்பின
ராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றி
யுள்ளார்.

சென்னை பல்கலைக் கழகத்தில் பொருளாதாரத் துறையில்
விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர், 1942-ஆம் ஆண்டு
மத்திய அரசின் முதல் பொருளாதார ஆலோசகராக நியமிக்
கப்பட்டார். 1948-ஆம் ஆண்டு சென்னை மாநில முதல்
பொருளாதார ஆலோசகர் மற்றும் இணைச் செயலாளராக
நியமிக்கப்பட்டார். ஆந்திர மாநில பொருளாதாரம் மற்றும்
திட்டத் துறையின் ஆணையர் மற்றும் செயலாளராகவும் பணி
யாற்றியுள்ளார். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும்
சிறந்த எழுத்தாளராவார். தமிழ்நாடு மாநில திட்டக் குழுவின்
உறுப்பினராகவும் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.
பொருளாதார ஆராய்ச்சிக்கான தேசிய கழகத்தின்

துணை இயக்குநராகவும் தொழில் நுட்ப பொருளாதார கல்வி நிலையத்தின் நிறுவனர்—தலைவராகவும் பணிபுரிந்துள்ளார்.

திரு. எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் 1952-ஆம் ஆண்டிலிருந்து 1957-ஆம் ஆண்டு வரை, தென்னாற்காடு மாவட்டம் பண்ருட்டி தொகுதியில் இருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் அவர் 1971-ஆம் ஆண்டிலிருந்து 1977-ஆம் ஆண்டு வரை பாராளுமன்ற மக்கள் அவை உறுப்பினராகவும் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எஸ். சுவாமிக்கண்ணு படையாட்சி அவர்கள் 1953-ஆம் ஆண்டிலிருந்து 1957-ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1957-ஆம் ஆண்டிலிருந்து 1962-ஆம் ஆண்டு வரையும் இருமுறை தென்னாற்காடு மாவட்டம் புவனகிரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

இவர் 1922 முதல் 1934 வரை, இடையில் சிறிது காலம் தவிர, தொடர்ந்து சிதம்பரம் வட்டக் கழகத்தின் (Taluk Board) உறுப்பினராகவும், பிறகு 1925 முதல் மாவட்டக் கழகத்தின் (District Board) உறுப்பினராகவும் இருந்தார். மேலும், ஸ்ரீமுஷ்ணம் ஊராட்சித் தலைவராக 1932 முதல் 1954 வரையிலும், பின்னர் 1954 முதல் மாவட்டக் கழகத்தின் (District Board) தலைவராகவும் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு கே. எஸ். கோதண்டராமையா அவர்கள் 1967-ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1971-ஆம் ஆண்டிலிருந்து 1976-ஆம் ஆண்டு வரையும் இருமுறை தர்மபுரி மாவட்டம் உத்தனப்பள்ளி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்த இவர் அப்பதவியிலிருந்து 1956-ஆம் ஆண்டு விலகி, அரசியலில் ஈடுபட்டார். நீண்ட காலமாகப் புறக்கணிக்கப்பட்ட மொழியான ஹோசூர் வட்டத்தின் முக்கிய மொழியாம் தெலுங்கு மொழியினுடைய இலக்கிய, கலாச்சாரத்தை வளப்படுத்துவதே இவரது தலையாய நோக்கமாக இருந்தது.

(முற்பகல் 10-40)

தமிழ்நாடு, மைசூர் ஆகிய மாநிலங்களில் தெலுங்கு மொழியும், கலாச்சாரமும் வளர 'ஹோசூர் தாலுகா ஆந்திர சமஸ்கிருதிகா சமிதியை' 1962-ஆம் ஆண்டு நிறுவினார். தெலுங்கு இலக்கியம், தென்னிந்திய வரலாறு, திராவிட மொழி ஆராய்ச்சி [illegible] துறைகளில் பெரிதும் ஈடுபாடு உடையவராய் விளங்கினார்.



திரு. ஆர். அப்துல் கலீல் அவர்கள் 1962-ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டு வரை வட ஆற்காடு மாவட்டம் இராணிப்பேட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு பி. குனிராமன் இடவு அவர்கள் 1952-ஆம் ஆண்டிலிருந்து 1956-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முடிய, அதாவது மாநிலங்கள் திருத்திய, மத்தல் சட்டம் அமுலுக்கு வரும் வரை தற்போது கேரளாவிலிருக்கும் பெரம்பரா தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. டி. கே. டி. என். ஆர். தாத்தாச்சாரி அவர்கள் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை, சந்திரகிரி பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. என். எஸ். சுந்தரராஜன் அவர்கள் 1958-ஆம் ஆண்டிலிருந்து 1962-ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1962-ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டு வரையும் இருமுறை, சேலம் மாவட்டம் தாரமங்கலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், தற்போதைய பாராளுமன்ற மக்கள் அவையின் உறுப்பினருமான திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் 4-10-1984 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினரான திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் 1946-ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை சிவகங்கை பொது கிராமப்புற தொகுதியிலிருந்து போட்டி எதுவுமின்றி அன்றைய ஒருங்கிணைந்த சென்னை, சட்டமன்றப் பேரவைக்கும், 1952-ஆம் ஆண்டிலிருந்து 1957-ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1962-ஆம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டு வரையும் இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கைத் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் பாராளுமன்ற மக்கள் அவைக்கு 1971-ஆம் ஆண்டிலிருந்து 1977-ஆம் ஆண்டு வரையும், 1977-ஆம் ஆண்டிலிருந்து 1979-ஆம் ஆண்டு வரையும், மதுரை மாவட்டம் மதுரை தொகுதியிலிருந்தும் மற்றும் 1980-ஆம் ஆண்டு தற்போதைய பாராளுமன்ற மக்கள் அவைக்கு இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கைத் தொகுதியிலிருந்தும் தேர்ந்

தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மேலும்
1980-ஆம் ஆண்டிலிருந்து மத்திய அமைச்சரவையில் மூன்றாண்டு
காலம் வேளாண்மைத் துறை துணை அமைச்சராகவும் பதவி
வகித்துள்ளார்.

1929-ஆம் ஆண்டிலிருந்தே காங்கிரஸ் கட்சியில் தொடர்
புடையவர். சுதந்திரப் போராட்ட வீரரான இவர் ஆங்கிலேயர்
ஆட்சியின் போது உப்பு சத்தியாக்கிரகம், சட்ட மறுப்பு
இயக்கம், தனி நபர் சத்தியாக்கிரகம், ஆகஸ்ட் கிளர்ச்சி ஆகிய
போராட்டங்களில் பங்கு கொண்டு பலமுறை சிறை சென்ற
வராவார்.

காமன்வெல்த் பாராளுமன்ற சங்க மாநாடுகளுக்கு இந்திய
பாராளுமன்றக் குழு உறுப்பினராக நியுசிலாந்து மற்றும் கனடா
ஆகிய நாடுகளுக்கும் சென்று வந்தார். ஸ்காண்டிநேவியன்
நாடுகளான டென்மார்க், ஸ்வீடன், நார்வே ஆகிய நாடுகளுக்
கும் மற்றும் ஐரோப்பிய நாடுகள், கிழக்காசிய நாடுகள் பல
வற்றிற்கும் சென்று வந்துள்ளார்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும்
இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும்
தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகை
யில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்
கள் மவுனமாக எழுந்து நிற்குப்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌன
மாக எழுந்து நின்றனர்.)

[குறிப்பு ; ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்
றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெறாதது என்
பதைக் குறிக்கும்].

## 2. இரங்கல் தீர்மானங்கள்.

[முன்னாள் சட்டமன்றப் பேரவை எதிர்க் கட்சித் தலைவர்
திரு. வி. கே. இராமசாமி முதலியார் அவர்கள் மறைவும்
பேரவை உறுப்பினர் திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத
தொண்டமான் அவர்கள் மறைவு].

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப்
பேரவையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த
திரு.வி.கே, இராமசாமி முதலியார் அவர்கள் 7-8-1984 அன்றும்
தற்போதைய சட்ட மன்றப் பேரவை
உறுப்பினரான





திரு. விஜயரகுநாத தொண்டமான் அவர்கள் 24-7-1984 அன்றும்
மறைந்ததை இந்தப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன்
தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர்
அவர்கள் இரங்கல் தீர்மானங்களை மொழிவார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி
கிறேன்.

இராமசாமி முதலியார் அவர்கள்
திரு. வி. கே. பேரவைக்கு 1952 ஆம் ஆண்டிலிருந்து
தமிழ்நாடு சட்டமன்றப் மற்றும் 1957 ஆம் ஆண்டிலிருந்து
1957 ஆம் ஆண்டு வரையும் செங்கற்பட்டு மாவட்டம்
1962 ஆம் ஆண்டு வரையும், இருமுறை தேர்ந்தெடுக்கப்
உத்திரமேரூர் தொகுதியிலிருந்து பணியாற்றியுள்ளார். 1957-ஆம்
பெற்று நல்ல முறையில் ஆண்டு வரையில் இப்பேரவையின்
ஆண்டிலிருந்து 1962 ஆம் 1964 ஆம் ஆண்டிலிருந்து
எதிர்க் கட்சித் தலைவராகவும், சட்டமன்ற மேலவை
1970 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு பணியாற்றியுள்ளார். அவர்
உறுப்பினராகவும் நல்ல முறையில் திறனும் கொண்டவர்.
இனிய பண்பும், உள்ளமும். செயல் மறைந்ததைக் குறித்து
அன்னார் 7-8-1984 ஆம் தேதியன்று தெரிவித்துக் கொள்
இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத்
கிறது.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும்,
இரங்கலையும் இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட
தீர்மானத்தை மொழிகிறேன் ;

திரு. ஆர்.விஜயரெகுநாத தொண்டமான் அவர்கள் தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவைக்கு 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம்
ஆண்டு வரையும், 1977 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு
வரையும் மற்றும் 1980 ஆம் ஆண்டு தற்போதைய சட்டமன்றப்
பேரவைக்கும் புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டை
தொகுதியிலிருந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப் பெற்று
நல்லமுறையில் பணியாற்றியுள்ளார். புதுக்கோட்டை அரச
பரம்பரையில் பிறந்த அவர் எளிமையும், இனிய பண்பும்,
உள்ளமும், செயல் திறனும் கொண்டவர். சிறந்த விளையாட்டு
வீரராகவும், முன்னாள் இராணுவ வீரருமாக விளங்கிய அவர்
24-7-1984 ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவை
தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்
தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும்,
இரங்கலையும் இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது."

திரு. வி. கே. இராமசாமி முதலியார் அவர்கள் 1952-லிருந்து 1957 வரையிலும், பிறகு 1957 லிருந்து 1962 வரையிலும் ஆக இருமுறை சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், பிறகு 1964-லிருந்து 1970 வரையில் மேலவை உறுப்பினராகவும் இருந்து பணியாற்றி வந்தவர் ஆவார்கள். அவர் தம்முடைய 83-வது வயதில் மாரடைப்பின் காரணமாக இயற்கை எய்தினார் என்ற செய்தி நமக்கெல்லாம் வருத்தத்தையும், துயரத்தையும் அளிக்கக்கூடிய ஒன்றாகும். அவர் நீண்ட நெடுங்காலமாகவே அரசியலிலே மிகத் தீவிரமாக ஈடுபாடு கொண்டவர் ஆவார். அவர் செய்யூர் ஜமீன் குடும்பத்திலே பிறந்தவராக இருந்தாலும் ஒரு பெரும் நிலக்கிழாராக அவர் விளங்கியிருந்தாலும் அரசியலிலே மிகத் தீவிரமாக ஈடுபட்டிருந்ததோடு மட்டுமல்லாமல், சமூகத் தொண்டாற்றுவதிலும் தம்முடைய நேரத்தையும் நினைப்பையும் உழைப்பையும் பயன்படுத்தி எல்லோருடைய அன்பையும் அரவணைப்பையும் பெறுவதிலே முனைப்புள்ளத்தோடு இருந்து பாடுபட்டு வந்தவர் ஆவார்.

192[illegible]-ஆம் ஆண்டிலிருந்து அவர் அரசியல் ஈடுபாடு கொண்டு விளங்கினார் என்பதை நாம் நன்கு அறிவோம். தாலுகா போர்டு இருந்த காலத்தில் அந்த வட்டக் குழுவினுடைய உறுப்பினராக இருந்து பணியாற்றியதோடு மட்டுமல்லாமல், டிஸ்டிரிக்ட் போர்டு இருந்த காலத்திலும் அதனுடைய உறுப்பினராக இருந்தார். அதோடு, அதனுடைய தலைவராகவும் ஒருமுறை இருந்து சிறப்பாகப் பணியாற்றுகின்ற பேற்றினையும் அவர் பெற்றார்.

அது மட்டுமல்லாமல், செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் கூட்டுறவு இயக்கம் மிக நல்லமுறையில் வளர்வதற்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைப்பு நல்கியவர் அவர். மாவட்ட அளவிலே கூட்டுறவு இயக்கங்களிலே இருந்து உறுப்பினர் பதவி, இயக்குநர் பதவி, தலைவர் பதவி போன்ற பல்வேறு பதவிகளை வகித்து வந்து நல்ல பெயரையும் புகழையும் தந்ததோடு மட்டுமல்லாமல் கடைசி வரையிலும் கூட்டுறவு இயக்கங்களோடு தொடர்பு கொண்டு சிறப்பாகப் பணியாற்றியவர் ஆவார்கள்.

அது மட்டுமல்லாமல், அவர் பொது அமைப்புகள் பலவற்றோடும் ஈடுபாடு கொண்டிருந்து பொதுப்பணி ஆற்றுவதில் மிக ஆர்வத்தோடு இருந்தார். அவர் சிறந்த விவசாயியாக இருந்ததன் காரணமாக வேளாண்மைத் துறையிலும் ஈடுபட்டு அதனை நவீன முறையிலே வளர்க்கின்ற அளவுக்குத் தன்னுடைய கருத்தையும் கவனத்தையும் செலுத்தி வந்திருக்கிறார்கள். அதையும் பார்த்துக் கொண்டு அரசியலிலும் ஈடுபடுகின்ற அளவுக்கு தம்முடைய நேரத்தைத் திறம்பட செலவிடுகின்ற அளவிற்கு மற்றவர்க்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அவர்கள் விளங்கினார்கள்.





அதோடு மட்டுமல்லாமல் பல்வேறு அறநிலையங்களோடு தொடர்பு கொண்டு அறநிலையங்களின் மூலமாக ஏழை எளியவர்களுக்குப் பயன்படுகின்ற பணிகளிலே தம்மை ஈடுபடுத்திக் கொண்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக கட்சி வேறுபாடுகள் கருதாமல், எல்லா கட்சிகளைச் சேர்ந்தவர்களோடு, கருத்து வேறுபாடு உடையவர்களோடு நெருங்கிப் பழகி, இனிமையாகப் பழகி, எல்லோருடைய அன்புள்ளத்தையும் பெறுகின்ற அளவுக்குச் சிறந்த பண்புகளின் உறைவிடமாக விளங்கியவர் ஆவார். எப்பொழுதும் எல்லா அரசியல் கருத்துக்களைப் பற்றியும் எல்லா நிலைகளைப் பற்றியும் எவரோடும் மணிக்கணக்கில் உரையாடுகின்ற அளவுக்குத் தகுதி, திறமைகள் பெற்று எல்லோருடனும் சிரித்துப் பேசி மகிழ்ச்சியைப் பெறுகின்ற அளவுக்கான தன்மையைப் பெற்று தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்தவர். பழகுவதற்கேற்ற இனிய பண்புகள் உடையவர் ஆவார்.

அது மட்டுமல்லாமல், அவர் எஸ்.எஸ்.எல்.சி. வரையில்தான் முதலிலே படித்தார் ஆயினும் தமது 80-வது வயதில் தாமாகவே படித்து மைசூர் பல்கலைக் கழகத்திலே எம்.ஏ. தேர்வை எழுதி, அதிலே ஒரு பார்ட்டில் தேர்ச்சி பெறுகின்ற அளவுக்கு 80-வது வயதிலே தேர்வை எழுதுகின்ற அளவுக்கு முனைப்புள்ளம் கொண்டிருந்தார் என்றால், கடைசி வரையிலும் அவர் கல்வி கற்பதிலும் தன்னுடைய தகுதி திறமையை வளர்த்துக் கொள்வதிலும் ஆர்வம் கொண்டிருந்தார் என்பதைத் தான் நன்றாக நாம் அறியலாம்.

(முற்பகல் 10-50)

அவர்கள் சிறந்த செயலாற்றல் திறன் படைத்தவர்கள். அவர்கள் எந்தெந்தப் பணிகளை எடுத்துச் செய்ய வேண்டுமென்று எண்ணினார்களோ அந்தப் பணிகளைச் செய்து முடிப்பதற்கு உறுதுணையாக இருந்தது மட்டுமல்லாமல், பலருடைய ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெறுவதிலும் அனைவரின் அரவணைப்பைப் பெறுவதிலும் நல்ல கவனம் செலுத்தி அதிலேயும் சிறந்த வெற்றிக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர்கள் ஆவார்கள். பெருந்தகையாளர் என்ற சொல்லுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அவர்கள் விளங்கினார்கள் என்று சுருங்கச் சொல்வோமேயானால் அதுவே அவருடைய சிறந்த தன்மையைக் கூறிக் கொள்கிற ஒன்றாகும். தமிழகத்தில் வாழ்கிற முதுபெரும் அரசியல் தலைவர்களில் அவர் ஒருவராக விளங்கி வந்தவர். தன்னுடைய 83-வது வயதிலே இயற்கை எய்தியது உள்ளபடியே தமிழகத்திற்கு ஒரு பெரும் இழப்பாகும். அந்த வகையிலே அவருடைய இழப்பினை அறிந்து இந்தப்பேரவை தன்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்

கொள்வதோடு, அன்னாரைப் பிரிந்து வருந்தும் அன்னாருடைய குடும்பத்தினருக்குத் தன்னுடைய ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இந்தப் பேரவை தெரிவித்துக் கொள்கிறது என்ற தீர்மானத்தை நான் மொழிகிறேன்.

அதைப்போன்றே இந்த அவையிலே உறுப்பினராக இருந்து பணியாற்றி வந்த திரு. ராஜ்குமார்விஜயரெகுநாத தொண்டமான் அவர்கள் எதிர்பாராத வகையிலே மாரடைப்பின் காரணமாக அதிர்ச்சியும், துக்கமும், துயரமும் அளிக்கத்தக்க வகையில் மறைந்தார் என்பது நமக்கெல்லாம் பெரும் வேதனையைத் தருகிற ஒன்றாகும். அவருடைய உடல் கட்டும், அவர் தன்னுடைய உடலைப் பேணி வந்த முறையையும் பார்க்கிற பொழுது இவ்வளவு விரைவில் அவர் இயற்கை எய்துவார் என்று யாரும் எதிர்பார்த்து இருக்க முடியாது.

திரு. விஜயரெகுநாத தொண்டமான் அவர்களை 30 ஆண்டுக் காலமாக நான் நன்கு அறிவேன். அவர் எல்லோருடனும் இனிமையாகப் பழகி வந்தவர். சிறந்த பண்புகளுக்கு உரியவர் ஆவார்கள். கட்சி மாச்சரியங்களுக்கு அப்பால் நின்று, கட்சி வேறுபாடுகளுக்கு மதிப்பளிக்காமல், மனிதனுக்கு மனிதன் காட்ட வேண்டிய அன்பு, சிறந்த பண்புகள் ஆகியவற்றையெல்லாம் மிகச் சிறந்த முறையிலே வெளிப்படுத்தியதற்கு சிறந்த எடுத்துக் காட்டாக அவர்கள் விளங்கினார்கள். யாருடனும் அவர்கள் இனிமையாகப் பழகுவார்கள் ஆகவேபடோடோபத்தை அவரிடத்திலே பார்க்க முடியாது. ஒரு அரச பரம்பரையிலே வந்தவர்கள் என்றாலும், சாதாரணமாக அரச பரம்பரையினரிடத்திலும் எதிர்பார்க்கிற கர்வமோ, பகட்டு நிலைமையோ, படோடோபமோ, ஆரவாரமோ, ஆர்ப்பரிப்போ எதுவும் அவரிடத்தில் நாம் சிறிதும் காண முடியாது. தமிழகத்தை ஆண்ட கடைசி தமிழ் மன்னர்கள் என்று சொல்லத்தக்க அளவிற்கு இருப்பவர்கள் புதுக்கோட்டையை ஆண்டவர்கள்தான். இந்த கடைசி மன்னர் பரம்பரையிலே வந்திருந்தாலும் அரச பரம்பரையினருக்கு இயல்பாக இருக்கிற படோடோபம்,பகட்டும் எதுவும் இல்லாமல் மக்களோடு மக்களாக இணைந்து நின்று மக்களுக்குத் தொண்டாற்றுகிற பெரும் உள்ளத்தைப் பெற்று, எல்லோரிடத்திலும் இனிமையாகப் பேசி, இனிமையாகப் பழகி எல்லோருடைய குறைபாடுகளையும் நீக்குவதிலே தணியாத ஆர்வம் கொண்டு பணியாற்றி வந்தவர்கள் ஆவார்கள்.

அதுமட்டுமல்லாமல்,அவருடைய சிறப்புக்குரிய தன்மையைச் சொல்ல வேண்டுமென்றால், அவர் சிறந்த விளையாட்டு வீரராக திகழ்ந்தார்கள். அவர் கால்பந்து விளையாட்டிலும் சரி, கிரிக்கெட் விளையாட்டிலும் சரி, சிறந்த விளையாட்டு வீரராக இருந்து வந்தார்கள். ஒரு தடவை இங்கிலாந்து கிரிக்கெட் அணியை இந்தியா எதிர்த்து நின்றபோது, இந்திய கிரிக்கெட் அணியிலே தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, அந்த அளவிற்கு சிறந்த விளையாட்டு வீரராக திகழ்ந்தவர்கள். நான் அண்ணாமலை



பல்கலைக் கழகத்திலே படித்துக் கொண்டிருந்தபொழுது கால்பந்து விளையாட்டிலே புதுக்கோட்டை அணியும், அண்ணாமலை பல்கலைக் கழக அணியும் போட்டியிட்டபொழுது புதுக்கோட்டை அணியிலே மூன்று மன்னர்களும், மூத்தவர், நடுவர்,இளையவர் ஆகிய மூன்று பேர்களும் இணைந்து வந்து அண்ணாமலை பல்கலைக் கழகத்திலே மூன்று நாட்கள் விளையாடினார்கள். ஆகவே சிறு வயதிலிருந்தே விளையாட்டிலே நிலையான ஆர்வத்தைக் கொண்டு, விளையாட்டுக்களை ஊக்குவிப்பதிலே சிறந்த பணிகளை மேற்கொண்டு விளங்கியவர்கள் ஆவார்கள். அதுமட்டுமல்லாமல் இராணுவத்திலும் சில ஆண்டுகாலம் பணியாற்றி அவர்கள் இராணுவ வீரராகவும் திகழ்ந்தார்கள் என்பதை நாம் நன்றாக அறிவோம். அவர்கள் சிறு பகுதி புதுக்கோட்டையிலே வாழ்ந்தாலும், பெரும் பகுதி கொடைக்கானல் பகுதியிலே வாழ்ந்து, கொடைக்கானல் பகுதியை அழகுபடுத்துவதிலும், செம்மைப்படுத்துவதிலும் அதனுடைய தனிச் சிறப்புகள்,தனி இயல்புகள் எந்த வகையிலும் கெடக்கூடாது என்பதில் ஆர்வம் கொண்டு, கொடைக்கானலில் வளர்ச்சிக் குழுவிலே தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, ஒரு உறுப்பினராக இருந்து சிறந்த பணிகள் பலவற்றை ஆற்றிவந்தார்கள். அதுமட்டுமல்லாமல் வனவிலங்குகள் பாதுகாப்பிற்காக இருக்கிற குழுவிலேயும் அவர்கள் தன்னை தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டு வனவிலங்குகளை காப்பாற்றுகிற பெரு முயற்சிகளையும் எடுத்து கொடைக்கானல் பகுதியைப் பொறுத்தவரையில் தன்னுடைய முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் மிகச்சிறந்த முறையில் நல்கி வந்தவர்கள் ஆவார்கள்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் அவர்கள் புதுக்கோட்டை அரசினர் கல்லூரியில் படித்ததோடு மட்டுமல்லாமல், சென்னை மாநிலக் கல்லூரியில் படித்து, பின்னர் இங்கிலாந்து, நெதர்லாந்து போன்ற நாடுகளிலும் படித்து திரும்பியவராவார். அவர்கள் ஐரோப்பா போன்ற வெளி நாடுகளுக்கும் மேற்படிப்பிற்காக பயணம் செய்து தன்னுடைய அனுபவத்தையும், அறிவுத் திறனையும், ஆற்றல் திறனையும் வளர்த்துக் கொள்வதில் மிகச் சிறப்பாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்ஆவார்.

மிக இளைஞர் என்று இல்லாவிட்டாலும், இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து பணியாற்ற வேண்டும் என்று எல்லோராலும் எதிர்பார்க்கத் தக்க அளவிற்கு அறிவுத் திறனும், ஆற்றல் திறனும் பெற்று இருந்தார்கள். அதே நேரத்தில் அவர் மிகுந்த பண்போடு எல்லோரிடத்திலும் பழகி வந்தவர் ஆவார். அவர் எதிர்பாராத வகையில் இயற்கை எய்தினார் என்ற செய்தி இந்தப் பேரவையில் இருக்கும் அத்தனை உறுப்பினர்களின் உள்ளங்களை நெகிழச் செய்யும் என்பதில் யாருக்கும் ஐயம் இல்லை.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 அக்டோபர் 8

அவருடைய மறைவு குறித்து வருந்தும், அவரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கும், அவருடைய உற்றார் உறவினருக்கும், இப்பேரவையின் சார்பில் ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதா பத்தையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர் களால் இந்த அவை முன்மொழியப்பட்டிருக்கும் இரண்டு இரங்கல் தீர்மானங்கள் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் எங்களுடைய இரங்கலையும் தெரிவித்து, என்னுடைய உரையைத் தொடர்கிறேன்.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. வி.கே. இராமசாமி முதலியார் அவர்கள் இந்த மாமன்றத்திலே இரண்டு முறை உறுப்பினராக இருந்தும், சட்டமன்ற மேலவையில் ஒரு முறை உறுப்பினராக இருந்தும் நல்ல முறையில் பணியாற்றினார் என்பதை நாடு நன்கு அறியும். ஒரு முறை இந்த மாமன்றத்திலே எதிர்க்கட்சித் தலைவராக அவர்கள் இருந்த நேரத்திலே சட்ட மன்ற, பாராளுமன்ற சம்பிரதாயங்களில் இருந்து சிறிதும் வழு வாமல், மெத்த கண்ணியத்தோடு நடந்து கொண்ட பெரியவர் என்பதை நாம் நன்றாக அறிவோம். அவை முன்னவர் அவர்கள் சொன்னதைப்போல, அவர் பெருங்குடியில் பிறந்து இருந்தாலும் இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காக பல்வேறு பொதுப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட ஒரு பெருமான் ஆவார். எனவே, அவருடைய மறைவு ஒரு பேரிழைப்பு என்பதைக் கூறி, அவருடைய மறைவால் வாடும் அவருடைய குடும்பத்தாருக்கு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கடந்த கூட்டத் தொடர் வரையில் இந்த மாமன்றத்திலே உறுப்பினராக இருந்து, நம்மோடு ஒருவராக வாழ்ந்து மறைந்த திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்ட மான் அவர்களைப் பற்றி என்ன சொல்வது என்று எனக்கு விளங்கவில்லை. ஒரு தகுதி மிகுந்த சகாவை இழந்த நிலையில் நாங்கள் இன்றைக்கு வாடிக்கொண்டு இருக்கிறோம். அவர்கள் இந்த மன்றத்திற்கு 3 முறை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு இருக்கிறார்கள். அதாவது 1967, 1977 மற்றும் 1980 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்று இந்த மன்றத்திலே உறுப்பினராக இருந்து இருக்கிறார்கள்.

இந்த மாமன்றத்திலே அவர்கள் பேசுகின்ற. பேச்சை இந்த மாமன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் அனைவரும் மெத்த ஆர்வத்தோடும் கவனத்தோடும் கேட்பார்கள் எதிர் வரிசையில் இருந்து பேசினாலும் கூட எந்த நேரத்திலும் அவர் ஒரு சின்ன சொல்லைக் கூட யாரையும் புண்படுத்துகிற வகையில் பேசியது இல்லை. அந்த வகையில் அவர்கள் மெத்த நிதானத்தோடும், அதே நேரத்தில் நல்ல கருத்துக்களைத் தெரிவிக்கிற வகையிலும் பேசுகின்ற ஆற்றலைப் பெற்றிருந்தார்கள். அரசுக்கு பல நல்ல



1984 அக்டோபர் 8] (திரு.என்.எஸ்.வி. சித்தன்)

அவர் அரசு பரம்பரையில் பிறந்து இருந்தாலும், அந்த படோடோபம் இல்லாமல் சாதாரண பிரஜையாக வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். இந்த நாட்டை எதிரிகள் தாக்க முற் பட்டபோது இந்த நாட்டைக் காப்பதற்காக இராணுவத்திலே சேர்ந்து அரும்பணி ஆற்றியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நினைவு கூர்வது பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னதைப் போல, திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் அவர்கள் விளையாட்டுகளில் மெத்த ஆர்வம் உள்ளவர்கள். இந்த மாமன்றத்திலே எப்போது பேசினாலும் கல்வியிலேயே மிகுந்த ஆர்வம் காட்டி பேசுவார்கள். கல்வி மானியத்திலே பேசுகின்ற நேரத்தில் எல்லாம் விளையாட்டுக் கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டும் என்றும், மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி கட்டாயமாக்கப்பட வேண்டும் என்றும் பல்வேறு நேரங்களிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர் சார்ந்து இருக்கிற காவிரி ஆலை இடர்பட்டு இருந்த நேர தில் எல்லாம் அவர்கள் முன்னணியில் நின்று பல்வேறு சமயங்களில் நல்ல கருத்துக்களை கூறியிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

அவர்கள் காங்கிரஸ் கட்சியிலே மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவராக பல்லாண்டு காலம் பணிபுரிந்தார்கள். அரசியலுக்கு வந்த காலத்திலிருந்தே பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் அவர்மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந் தார்கள். எங்கள் கட்சிக் கூட்டங்கள் நடைபெறுகின்ற போது அவர் ஒரு இராணுவ வீரரைப் போன்றும் அதே நேரத்தில் ஒரு சாதாரண பிரஜை போன்றும் செயல்பட்டார். அவர் எப்போதும் கட்சித் தலைமைக்குக் கட்டுப்பட்டிருந்தார்.

(முற்பகல் 11-00)

அவர் மிகுந்த ஈகைக் குணம் பெற்றிருந்தார். சட்டமன்ற படியையக் கூட அவர் யாராவது வந்து கேட்டால், அப்படியே கொடுத்துவிடுவார்; அவர் எடுத்துக் கொள்வதில்லை. அவருடைய இறுதி ஊர்வலத்திலே கூட கடன் வாங்கி பிறருக்கு உதவி செய்த பெருந்தகையாளர் என்று சொன்னார்கள். இப்படிப் பட்ட ஒரு பெருந்தகையாளரை, நல்ல பண்பாளரை, ஒரு நல்ல சட்டமன்ற உறுப்பினரை நாங்கள் இழந்து வருந்துகிறோம்.

அவர்களுடைய இறுதிக்காலத்திலே அவர்கள் கோடைக் கானலில் இருந்தார்கள். கோடைக்கானல் படகுக் குழுவில் உறுப்பினராக இருந்து, கோடைக்கானலை ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாக்க நல்ல ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள்; கோடைக்கானல் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. அவர்கள் எதிர்வரிசையிலே இருந்தாலும்
கூட ஆளும் கட்சியில் இருக்கிற மாண்புமிகு முதலமைச்சர்.
ஏனைய அமைச்சர்கள் எல்லாம் கேட்கும் அளவுக்கு நல்ல கருத்துக்
களை, பொருத்தமான கருத்துக்களைச் சொல்லி, நல்ல முறையில்
பணியாற்றினார்கள். அவர்களுடைய மறைவு நம்மைப்
பொறுத்தவரையில், ஈடு செய்ய முடியாத இழப்பு. இந்திய
தேசிய காங்கிரஸ் கட்சி ஒரு அற்புதமான பண்பாளரை இழந்து
விட்டது. இந்திய நாடு ஒரு நல்ல குடிமகனை இழந்திருக்கிறது.

அவர்கள் மறைந்தபோது நான் அங்கே பேசியிருந்தேன்.
இந்த நாட்டிலே இவ்வளவு அதிகமான மக்கள் கூடியிருந்து,
யாருக்கும் அஞ்சலி செலுத்தியதில்லை என்று சொல்லக்கூடிய
அளவுக்கு ஆண்களும் பெண்களும் கூடியிருந்தார்கள், கண்ணீரும்
கம்பலையுமாக காட்சியளித்தார்கள். மயானத்திற்குக்கூட
பெண்கள் திரண்டுவந்து இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.
அந்த நிகழ்ச்சி யாருடைய நெஞ்சத்திலிருந்தும் அகலமுடியாத
ஒன்று. ஆகவே, அவர்களுடைய இழப்பு ஒரு பேரிழப்பு; இந்த
மன்றத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பு. மறைந்துவிட்ட
அன்னாரின் துணைவியாருக்கும், அன்னாரின் குடும்பத்தாருக்கும்,
அரசப் பரம்பரையில் வந்திருக்கிற அன்னாரின் சகோதரருக்கும்
உற்றார் உறவினருக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின்
சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்துக்
கொள்கிறேன்.

*திரு. அன்பில் தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, அவை முன்னவர் அவர்களால் கொண்டுவரப்
பட்டிருக்கிற இந்த இரங்கல் தீர்மானங்களின் மீது திராவிட
முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத்
தெரிவிக்க விரும்புகிறேன்.

மறைந்தும் மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கிற பெரியவர்
வி. கே. இராமசாமி முதலியார் அவர்களைப்பற்றி அவை
முன்னவர் அவர்கள் பல்வேறு கருத்துக்களை, பல்வேறு துறை
களில் அவர்கள் ஆற்றிய பணிகளைப்பற்றிச் சொன்னார்கள்.
திரு. வி. கே. இராமசாமி முதலியார் அவர்களோடு கூட்டுறவுத்
துறையிலே சேர்ந்து பணியாற்றுகின்ற வாய்ப்பினை நான் பல்
லாண்டுக் காலம் பெற்றிருக்கிறேன். அவர் அரசியல் துறையை
விட கூட்டுறவுத் துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து,
கூட்டுறவு வளர்ச்சியிலே அதிக அக்கறை கொண்டிருந்தார்கள்.

ஆரம்பகாலத்தில் அவர் காங்கிரஸ் பேரியக்கத்தின்
வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தாலும் இறுதியில் சுதந்திராக்
கட்சித் தலைவராக ஆகி, அவர் எதிர்க்கட்சித் தலைவராக
இருந்து இந்த அவையிலே பணியாற்றியதை நான் பார்த்திருக்
கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைய தினம்
திராவிட முன்னேற்றக் கழகத்தின் குழுத் தலைவராக இருந்த
போது வி. கே. இராமசாமி முதலியார் அவர்கள் எதிர்க்





கட்சித் தலைவராக இருந்தார்கள். அப்போது அவர்கள் பேரறிஞர்
அண்ணா அவர்களைப் பற்றி பல்வேறு நேரங்களில் பேசியதை
எல்லாம் நினைத்துப் பார்க்கும் போது உண்மையிலேயே
ஒரு நல்ல கூட்டுறவுப் பண்பாளரை, மாற்றாரை மதிக்கும் ஒரு
பண்பாளரை நாம் இழந்துவிட்டோம் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. வி. கே. இராமசாமி முதலியார் அவர்களோடு நான்
கூட்டுறவுத் துறையிலே பணியாற்றிய போது, அப்போது தலை
வராக இருந்த டாக்டர் நடேசன், திரு. கஸ்தூரி பிள்ளை,
திரு. வி. வி. இராமசாமி நாடார், மதுரை அழகப்பன், வடாற்
காடு மாவட்டம் பக்தவத்சலம் நாயுடு, தஞ்சை இராமலிங்கம்,
சேலம் சுப்பிரமணிய கவுண்டர், நாகர் கோவில் டேனியல்,
சிதம்பரம் கனகசபை ஆகியோரைக் கொண்டு கூட்டுறவு அமைப்
புக்கு ஒரு குழு அமைக்கப்பட்டது. பெரியவர் வி. கே. இராமசாமி
முதலியார் அவர்கள் அப்போது, இளைஞரான என்னைத்தான்
அந்தக் குழுவின் தலைவராகப் போட வேண்டுமென்று வற்
புறுத்தினார்கள். அப்போது நான் அண்ணா அவர்களிடத்திலே
கேட்டபோது அவர் தேவையில்லை என்று சொல்லி, கனக
சபையே இருக்கட்டும் என்று சொன்னார்கள். வி.கே. இராமசாமி
அவர்கள் என்னிடத்திலே கோபித்துக் கொண்டார்கள்
நாங்கள் எல்லாம் இப்படிச் செய்யும்போது அவர் சொன்னார்
என்பதற்காக நீங்கள் விட்டு விட்டீர்களே என்று கோபித்துக்
கொண்டார்கள். இருந்தாலும் நான் அண்ணா பேச்சுக்கு கட்டுப்
பட்டவன் என்று சொன்னேன். இதை நான் கூறுவதற்குக்
காரணம், எதிர்க்கட்சி வரிசையில் நாங்கள் இருந்தாலும் கூட,
எங்களை உற்சாகப்படுத்துவது என்பது அந்தப் பெரியவருடைய
ஆசை. அவரை மருத்துவமனைக்குச் சென்று பார்த்தபோது
அவர் பேசும் நிலையில் இல்லை. இருந்தாலும் புரிந்து கொண்
டார்கள். ஒரு நல்ல கூட்டுறவாளரை, தலை சிறந்த பண்
பாளரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்கும், அவரது
உறவினர்களுக்கும், அவருடைய அன்பு மகனுக்கும் திராவிட
முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே ஆழ்ந்த அனுதாபத்தையும்,
இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மறைந்தும் எல்லோருடைய நெஞ்சத்திலே நிறைந்
திருக்கின்ற ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் அவர்கள்.
அவர்களுடைய ஆரம்பக் காலத்திலிருந்து இறுதிக்காலம் வரையில்
அவரோடு நன்கு பழகி, அவரோடு வாழ்ந்தவன் என்ற
முறையில் அவர் இறந்தார் என்பதை உண்மையிலேயே எண்ணி
பார்க்க முடியவில்லை. பொதுவாக இங்கே அவை முன்னவர்
சொன்னதைப் போல, அவர் மன்னர் வம்சத்திலே பிறந்தவராக
இருந்தாலும், அதிலும் மாமன்னர் குடும்பத்தில் பிறந்தவர்.
இந்தியாவிலே ராஜாக்கள் நிறைய உண்டு. ஆனால் மகாராஜக்கள்
என்று பார்த்தால், மைசூர், திருவாங்கூர், புதுக்கோட்டை ஆகிய
மூன்று ஊர் மன்னர்களுக்கு மட்டும் மகாராஜாக்கள் என்ற
பட்டம் உண்டு. அப்படிப்பட்ட மாமன்னர் குடும்பத்தில்

பிறந்தவர். ஆனால் அவர் மாடி வீட்டு ஏழையாகவே மறைந்தார். உயர்ந்த குடும்பத்தில் பிறந்தாலும், குலப் பெருமை பேசுகின்ற குடும்பத்தில் பிறந்தாலும், மண் குடிசைகளில் வாழ்பவர்களின் நலனில் அக்கறை கொண்டவர். அவர் பல்வேறு துறைகளிலே பணியாற்றியவர். இளைய ராஜா அவர்கள் அவர்களுடைய இளமைப் பருவத்தில் சிறந்த விளையாட்டு வீரராகவும், வாலிபப் பருவம் பூராவும் விளையாட்டு வீரராக காலத்தைத் தள்ளியவர். ராஜகோபால் தொண்டமான் அவர்கள், இளையவர் ராதா கிருஷ்ணன் தொண்டமான் அவர்கள், விஜய ரெகுநாத தொண்டமான் அவர்கள் மூவரும் சேர்ந்து ஒரு விளையாட்டுக் குழு வைத்திருந்தார்கள். அதற்கு மகாராஜா குழு என்றும் பெயர் அதிலே சட்டப் பேரவையின் உறுப்பினரான காடுவெட்டியார் அவர்கள் இருந்தார்கள். இரு முறை அவர்கள் லண்டனுக்குச் சென்று கால்பந்தாட்டத்திலே வெற்றிபெற்றிருக்கிறார்கள்.

அதைப் போலவே இளையவர் அவர்கள் நாட்டு விடுதலைக் காக பட்டாளத்திலே சேர்ந்து பணியாற்றியவர். ஏழைக் குடும் பத்திலே பிறந்த பிள்ளைகள் கூட பட்டாளத்திலே சேர பயப்படும் காலத்தில், மாமன்னர் குடும்பத்தைச் சேர்ந்த அவர்கள் நாட்டைக் காப்பதற்காக பட்டாளத்திலே பணிபுரிந் தவர். அப்படிப்பட்ட பரந்த நோக்கம் உடையவர்கள். அவர் ஒரு நல்ல பாரம்பர்யக் குடும்பத்திலே பிறந்தவர் அவர் ஏழை எளியவர்களுக்காக இறுதி வரையில் உழைத்தவர். அதனாலே அந்த புதுக்கோட்டை மாவட்டம் மாத்திரமல்ல, கோடைக்கானலில் வாழ்கின்ற சாதாரண மக்கள் கூட அவரு டைய இரங்கல் கூட்டத்தில் கலந்து கொண்டது, உண்மையிலேயே ஒருவர் இறந்ததற்குப் பிறகுதான், அவருடைய புகழ் தெரியும் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு. அப்படிப்பட்ட விஜயரெகு நாத தொண்டமானின் மறைவு அவருடைய குடும்பத்திற்கு மாத்திரமல்ல, அவருடைய கட்சிக்கு மாத்திரமல்ல, இந்த நாட்டிற்கே ஒரு பேரிழப்பு. அப்படிப்பட்டவரை, இழந்து தவிக்கும் அவருடைய குடும்பத்ினருக்கும், சிறப்பாக அவரது துணைவியாருக்கும், சிறப்பாக அவரது சகோதரர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதோடு, அவரை இழந்து தவிக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கும் எங்களுடைய கட்சியின் சார்பில் இரங்கலை தெரிவித்து, அமர்கிறேன்.

(முற்பகல் 11-10)

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அவை முன்னவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த இரண்டு இரங்கல் தீர்மானங்களையும் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வழிமொழிந்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.





காலஞ்சென்ற திரு. வி. கே. இராமசாமி முதலியார் அவர்கள் அநேகமாக மறைந்து வரக்கூடிய பழைய தலை முறையின் ஒரு ஓரிய பிரதிநிதியாகத் திகழ்ந்தார் என்று சொன்னால், அது மிகையாகாது. அவருடைய அரசியல் கருத்துக் களில் சுதந்திராக் கட்சியினுடைய கருத்துக்களை அவர்கள் பிரதி பலித்தாலும், தமிழகத்தில் இருக்கக்கூடிய பண்புகளுக்கு ஏற்றவாறு ஒரு பரந்த மனோபாவத்தையும், பல்வேறு அபிப்பிராயபேதங்களையும் கேட்டு அறிந்து விவாதிப்பதில் ஆர்வம் காட்டிய ஒரு பெரியவர். அவர்கள் சிறப்பான சேவை செய்ததோடு மட்டுமல்லாமல் சமீபத்திலே பசுவதை தடுப்புச் சட்டம் சம்பந்தமாக நமது சட்ட மன்றம் நியமித்து இருக்கக்கூடிய ஆய்வுக் குழுவிலே, அந்த மசோதாவை ஆதரித்து, சாட்சியம் கூறுவதற்காக வந்திருந்தார்கள். அந்த நேரத்திலே நான் அவரிடத்திலே, "நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் லட்சக்கணக்கான வயதான மாடுகளை விவசாயிகள் பராமரிக்க முடியாவிட்டால் அதை என்ன செய்வது" என்று நான் கேட்ட போது "அப்படி என்றால் நீங்கள் சொல்வது சரிதான் ஐயா" என்று அவர்கள் சொன்னார்கள். அதாவது எந்த நேரத்திலேயும் ஒரு சரியான வாதம் சொல்லப்பட்டாலும் அதை ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு மனோபாவம் அவர்களிடத்திலே இருந்தது என்பதை சமீபத்திலே ஒரு ஆண்டுக்கு முன்னாலே நடந்த இந்த நிகழ்ச்சியிலே நான் பார்த்தேன். ஆகவே நேர்மையான குணங்களும், மனதிலே ஒன்றை வைத்துக் கொண்டு, வெளியிலே ஒன்றைப் பேசுவது என்ற பழக்கங்கள் இல்லாத அந்தப் பழைய காலத்து மனிதர்களிடையே ஒரு சிறந்த பிரதிநிதியாக திகழ்ந்தார். தமிழகத்திலே ஒருவர் இறந்து போனதற்குப் பிறகு, அவர் நல்ல பெயருடன் மறைந்தார் என்பது தான் நீடித்து இருக்கக்கூடிய புகழ் என்ற காரணத்தால், அவர்கள், அரசியல் ஊழியர்களுக்கும், பொதுநல ஊழியர்களுக்கும், ஒரு சிறந்த முன் உதாரணமாகத் திகழ்ந்தார்கள் என்று எடுத்துக் கூறி, அவருடைய மறைவினால் வாடக்கூடிய அவர்களுடைய குடும்பத்தார்க்கு மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல, நண்பர் தொண்டமான் அவர்கள் இவ்வளவு சீக்கிரத்திலே மரணம் அடைவார் என்று நாம் யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது. அவர்களுடைய உடல்நிலையில் சற்று தளர்ச்சி காணப்பட்டாலும், அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்து, சிறந்த முறையிலே சேவை செய்வார் என்று தான் நாங்கள் கருதியிருந்தோம்.

அவர் இந்தச் சட்டமன்றத்திலே இருந்த காலம் முழுவதிலும், நானும் இந்தச் சட்டமன்றத்திலே உறுப்பினராக இருந்திருக் கிறேன். அந்த நேரத்திலே கூட அவர்கள், தன்னுடைய காங்கிரஸ் கட்சியினுடைய கருத்துக்களைக் கூறுவதிலே கூட ஆக்கிரமிப்புத் தன்மை இல்லாத ஒரு அணுகுமுறையை அவர்கள் கையாண்டார்கள் என்பது இந்தச் சபையினுடைய வரலாற்றிலே இடம் பெறக்கூடிய ஒன்றாகும். அவர்கள் பெரும்பாலும் ஆக்க

பூர்வமான பிரச்சனைகளைப் பற்றித்தான் தங்களுடைய கருத்துக்களை இங்கே பேசியிருக்கிறார்கள் என்பதையும் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அவர் காங்கிரஸ் கட்சியிலே இருந்தாலும், மாற்றுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களிடத்திலேயும், ஊழியர்களிடத்திலேயும் இங்கே மட்டுமல்ல, புதுக்கோட்டை, கோடைக்கானல் போன்ற அந்தப் பகுதிகளிலேயும், அவர்கள் எந்த விதமான வேறுபாடும் இன்றித் தான் பழகி வந்தார்கள். அவர்கள் சில காலத்திற்கு முன்பு, இன்றைக்கு இருக்கக் கூடிய சமுதாய அமைப்புகளைக் கடுமையாகச் சாடக்கூடிய கோமல் சுவாமிநாதனுடைய 'தண்ணீர் தண்ணீர்' என்ற நாடகத்தை நான் பார்த்துக் கொண்டு இருக்கும் போது, பக்கத்திலே அவர் வந்து, என்ன சௌக்கியமா? என்று கேட்டார்கள். அப்போது தான் நான் பார்த்தேன். அவர்களுடைய கொள்கை நிலைக்கும், இதற்கும் முற்றிலும் மாறுபட்ட நோக்கமாக இருந்தாலும், இதையும் பார்ப்பதற்கு அவர் வந்திருக்கிறார் என்பதிலேயிருந்து அவர்களுடைய மனோபாவத்தையும், பரந்த தன்மையையும் நான் புரிந்து கொள்ள முடிந்தது அவர்கள் எங்களைப் பெறுத்தவரையிலும் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்களோடு, வெளியிலேயும், உள்ளேயும் மிகவும் அன்னியோன்னியமாகப் பழகியிருக்கிறார்கள். சிறந்த நட்புணர்வோடு நாங்கள் பழகியிருக்கிறோம். ஆகவே அவருடைய மறைவை அகால மரணம் என்று நிச்சயமாக நாம் கூறமுடியும். எங்களுக்கு நிச்சயமாகத் தெரியும்—ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும்— புதுக்கோட்டை மாவட்டத்திலே உள்ள சாதாரண மக்களிடையேலே பல காரணங்களால் அவர்களுடைய சேவையினாலும், மற்ற பண்புகளினாலும் சிறப்பாக மதிக்கப்பட்டார் என்பது நிச்சயமான உண்மையாகும். ஆகவே அவருடைய இழப்பினால் வாடக்கூடிய அவருடைய மனைவிக்கும், அவர்களுடைய குழந்தைகளுக்கும், குடும்பத்திற்கும் எங்களுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி தன்னுடைய சிறப்பான ஒரு உறுப்பினரை இழந்து, அவர்களுடைய உறுப்பினர்களும் பெரும் துக்கத்தில் இருக்கிறார்கள். ஆகவே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கும் என்னுடைய கட்சியின் சார்பிலே என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து இந்த இரண்டு தீர்மானங்களையும் வழி மொழிந்து அமர்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இரண்டு இரங்கல் தீர்மானங்களையும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வழி மொழிந்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

மதிப்பிற்குரிய திரு. வி. கே. இராமசாமி முதலியார் அவர்கள் இந்தப் பேரவையிலே இரண்டு தடவை உறுப்பினராக [illegible]வும் அல்லாது, எதிர்க் கட்சித் தலைவராகவும்





இருந்து சிறந்த முறையிலே பணியாற்றியவர்கள் ஆவார்கள். அது மட்டும் அல்லாமல், மேலவையிலேயும் ஐந்தாண்டு காலம் பணிபுரிந்திருக்கிறார்கள். அத்தோடு மட்டும் அல்லாமல், கூட்டுறவுத் துறையிலேயும் சிறந்த முறையிலே, கூட்டுறவு மூலமாக அதிகமான மக்களுக்கு பலன் அளிக்கக்கூடிய முறையில் என்னென்ன செய்யலாம் என்பதைப் பற்றி சிந்தித்து நல்ல முறையில் செயலாற்றியவர் அவர். அன்னாருடைய மறைவு குறித்து வருந்தி, அவருடைய மறைவால் துயருறும் குடும்பத்தாருக்கும், அவரைச் சார்ந்த கட்சியினருக்கும் எங்களுடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கடுத்து, நம் அனைவராலும், அந்த வட்டார மக்களாலும் 'இளையராஜா' என்ற சொல்லில் அன்பாக அழைக்கப்படக் கூடியவரான திரு. விஜயரெகுநாத தொண்டமான் அவர்களுடைய மறைவு உண்மையிலேயே அனைவருக்கும் மிக ஆழ்ந்த துக்கத்தையும், வருத்தத்தையும் தரக்கூடிய செய்தியாகும். அவர் இந்த அவையிலே உறுப்பினராக இருக்கக்கூடிய ஆரம்பக் காலத்திலேயிருந்து, நானும் இந்த அவையிலே உறுப்பினராக இருந்திருக்கிறேன். 1967 ஆம் ஆண்டு முதல், மத்தியிலே ஒரு தடவை நீங்கலாக, இன்று வரையில் அதாவது 1980-ல் தேர்ந்து எடுக்கப்பட்டதற்குப் பிறகும், இந்த அவையிலே நாங்கள் ஒன்றாகப் பணியாற்றியிருக்கிறோம்.

அவருடைய அன்பு நிறைந்த அந்தக் குழந்தை உள்ளம் அனைவரையும் வசீகரிக்கக்கூடிய ஒரு சிறந்த பண்பான குணமாகும். அவர் யாருடன் பழகினாலும் தன்னுடைய சகோதரர் போல பாவித்து, அவ்வளவு நேசமாக அன்பாக பழக்கக் கூடியவர் ஆவார். புதுக்கோட்டைக்கு ஏதாவது அரசியல் காரணமாக செல்லக்கூடிய நேரத்திலும், அவரைப் பார்க்கச் சென்றால், அவர் வீட்டிலே விருந்து அளிக்காமல், யாரையும் சாப்பிடாமல் அனுப்ப மாட்டார். அவ்வளவு அன்புமிக்க சிறந்த பண்புள்ளம் கொண்ட ஒரு மனிதர் அவர். அவருடைய, மறைவு நல்ல பண்புள்ளம் கொண்ட அனைவருக்குமே அதிர்ச்சியைக் தரக்கூடிய ஒரு சம்பவம் ஆகும்.

மாண் மிகு சங்கரய்யா அவர்கள் கூறியது மாதிரி, அவருக்கு வயதும் அதிகம் ஆகவில்லை. குறைந்த வயதுதான். நாங்கள் அடிக்கடி அவரைப் பார்க்கிற போதெல்லாம், ராஜா நன்றாக உடம்பை பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்வது வழக்கம். நன்றாகத்தான் இருக்கிறது என்று அவரும் பதில் சொல்வார்கள். ஆகவே, அந்த நிலையில் திடீரென்று அவர் குறைந்த வயதிலேயே மறைந்தது எல்லோருக்கும் அதிர்ச்சியைத் தரக்கூடிய ஒரு சம்பவம் ஆகும்.

ஆகவே. அன்னாரை இழந்து தவிக்கக்கூடிய அவருடைய குடும்பத்தினருக்கும், அன்னாருடைய கட்சியினருக்கும் எங்களுடைய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தையும், வருத்தத்தையும் தெரிவித்து, எங்களுடைய [illegible]

[1984 அக்டோபர் 8

திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இரங்கல் தீர்மானங்களை நான் சார்ந்திருக்கிற இயக்கத்தின் சார்பில் வழிமொழிகிறேன்.

மறைந்த பெரியவர் வி. கே. இராமசாமி முதலியார் அவர்கள் இங்கே எதிர்க்கட்சித் தலைவராக இருந்து பணியாற்றியதையும் இந்த அவையின் உள்ளேயும், வெளியேயும் அவர் பணியாற்றிய போது, சமுதாயத்திற்காக சிறப்பாக பணியாற்றியவைகளையும் நாடு நன்கு அறியும். அது மட்டும் அல்லாமல் அவர் இந்த அவையிலே பேசிய பேச்சுக்களைப் பார்த்தால்—அவர் எதிர்க்கட்சித் தலைவராக ஆவதற்கு முன்னால், அதாவது சில தினங்களுக்கு முன்னால், அன்றைய ஆளும் கட்சி உறுப்பினராக இருந்தவர்.-ஆளும் கட்சி உறுப்பினராக இருந்தவர் எதிர்க்கட்சித் தலைவரான பிறகு எவ்வளவு பண்பாக தன்னுடைய கொள்கைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது, ஒரு சிறந்த பண்பாளர் எப்படி இருப்பார் என்பதற்கு எடுத்துக் காட்டாக அவர் அமைந்திருந்தார் என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்.

(முற்பகல் 11-20)

பேரறிஞர் அண்ணா அவர்கள் இங்கே பேசுகிறபோது கூட அவர்கள் எந்தளவிற்கு பண்பாளராக இருந்து பணியாற்றுகிறார்கள் என்பதைக் குறித்து இங்கே பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப்பட்டவர் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் தான் அண்மை நாள் வரையில் நம்மோடு ஒன்றாக இருந்து இந்தச் சட்டமன்றத்தில் பணியாற்றி வந்த திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் அவர்கள் அரச பரம்பரையைச் சார்ந்தவர். யாராவது அவரைப் பற்றிச் சொன்னால் தான் அவர் அரசர் பரம்பரையைச் சேர்ந்தவர் என்பது தெரியும். அவர்கள் பேசும்போதும் சரி, பழகும்போதும் சரி சாதாரண ஒரு குடியானவன், ஏழைக் குடியானவன் எப்படிப் பேசுவாரோ அல்லது எப்படி நடந்து கொள்வாரோ அதைப் போல் நடந்து ஒரு சிறந்த பண்பாளராக அவர்கள் இருந்தார்கள் என்பதை யாராலும், மறுக்க முடியாது. அது மட்டுமல்ல. விளையாட்டு வீரராக மட்டுமல்ல, அவர் ஒரு இராணுவ வீரரும் கூட. அரச பரம்பரையைச் சார்ந்தவர்கள். நல்ல வசதி உள்ள குடும்பத்தில் உள்ளவர்கள் பட்டாளத்திற்குச் செல்வது தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் யாரும் ஏற்றுக் கொள்வதில்லை. போவதில்லை. அப்படியிருந்தும் அவர்கள் நாட்டுக்காக இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றியிருக்கிறார்கள். இந்த இருவருக்காகவும் கொண்டு வந்துள்ள இரங்கல் தீர்மானத்தை நான் சார்ந்திருக்கிற இயக்கத்தின் சார்பிலும் பொதுத் தொண்டில் ஈடுபட்டுள்ள அத்தனை பேர்கள் சார்பிலும் எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1984 அக்டோபர் 8]

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இரண்டு இரங்கல் தீர்மானங்களையும் நான் சார்ந்திருக்கிற காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் வழிமொழிகிறேன். மறைந்த பெரியவர் திரு. வி. கே. இராமசாமி முதலியார் அவர்கள் இரண்டு தடவை சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும் ஒரு தடவை மேலவை உறுப்பினராகவும் பணியாற்றியிருக்கிறார்கள். அவர்கள் சட்டமன்றப் பேரவையில் எதிர்கட்சித் தலைவராக இருக்கிறபோது ஒரு எதிர்க்கட்சித் தலைவர் எவ்வாறு இயங்கவேண்டும் என்பதற்கு உதாரணமாக விளங்கினார்கள். அவர்கள் காங்கிரஸ் கட்சியிலிருந்து கருத்து வேறுபாடுகொண்டு பிளவு பட்டபோதுகூட காந்தியத்திலிருந்து கடைசி வரை அவர்கள் வழுவியதில்லை. கூட்டுறவுத் துறை மூலம்தான் இந்த நாடு நல்ல முன்னேற்றம் அடைய முடியும் என்பதை ஏற்று கூட்டுறவுத்துறை வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட அந்த பெரியவரின் மறைவு உண்மையிலே நமக்கு ஓர் பேரிழப்பாகும். அவர்களை இழந்துவாடுகிற அவரது குடும்பத்தாருக்கு காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் எங்களது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மறைந்த இளைய ராஜா திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் அவர்களைப் பற்றிச் சொல்கிறபோது உண்மையிலேயே எனக்கு வார்த்தைகள் வரவில்லை. மன்னர் பரம்பரையில் பிறந்தாலும்கூட எந்த பகட்டோ அல்லது எந்த ஒரு வீராப்போ இன்றி சாதாரண எளிய குடிமகன் ஒருவன் எப்படிப் பழகுவாரோ அந்தளவிற்கு எல்லோருடனும் பழகியவர்கள் அவர்கள். பொதுவாக மன்னர் பரம்பரையைச் சார்ந்தவர்கள் தன்னைவிட வயதுக்கு மூத்தவர்களுக்கு மரியாதை கொடுப்பார்களே தவிர தன்னை விட வயது குறைந்தவர்களுக்கு மரியாதை கொடுக்கும் பழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால்திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் அவர்கள் தன்னைவிட வயது குறைந்தவர்களைக் கூட வாருங்கள், அமருங்கள் என்று மரியாதை கொடுத்து அமர வைக்கும் பண்பினை இப்போது என்னால் உணர்ந்து பார்க்கமுடிகிறது. சிறந்த விளையாட்டு வீரராக இருந்த அவர்களின் இழப்பு இந்த நாட்டுக்கு மிகப் பெரிய இழப்பாகும். அவர்களது மறைவால் வாடிக்கொண்டிருக்கிற அவர்களது சகோதரர்களுக்கும், துணைவியாருக்கும் மற்றும் அவர்களது குடும்பத்தாருக்கும் காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி சார்பில் எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்து, அமர்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த இரண்டு இரங்கல் தீர்மானங்களையும் அகில இந்திய பார்வேர்ட் ப்ளாக் கட்சி சார்பில் வழிமொழிகிறேன். திரு. வி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் இந்த மன்றத்திலே எதிர்க்கட்சித் தலைவராக

கள். அவர் நல்லதொரு பண்பாளர். இந்த மன்றத்தில் அவர் நடந்துகொண்டுள்ள முறை, அவருடன் பழகிய எல்லா உறுப்பினர் களும்—நமது அன்பில் அவர்கள் சொல்கிறபோது எந்தள விற்கு கூட்டுறவை இந்த நாட்டில் பரப்பவேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டார் என்பதைப்பற்றி தெளிவாகச் சொன்னார்கள். அந்தப் பெரியவரின் மறைவு இந்த நாட்டுக்கு ஒரு பேரிழப்பாகும். அவரை இழந்து தவிக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு அகில இந்திய பார்வேர்ட் ப்ளக் கட்சி சார்பில் எனது இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. விஜயரகுநாத தொண்டமான் அவர்களை மகாராஜா என்று அழைத்தால், அது மிகையாகாது. பலமுறை அவரோடு பேசுகின்றபோது, அவரை மகாராஜா என்று கூப்பிட்டால், ஏன் இன்னும் அதைச் சொல்லுகிறீர்கள், நான் உங்களோடு ஒருவன், நான் ஒரு சாதாரண தொண்டன் என்ற முறையில் அவர்கள் பழகுவார்கள். கொடைக்கானலுக்குச் சென்றால் அவர் இல்லத்திற்குச் சென்றால், அவர்கள் மிக நல்லமுறையில் வரவேற்கும் நல்ல உள்ளம் படைத்தவர் ஆவார்கள். தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலும், கொடைக்கானல் பகுதியிலுள்ள மக்கள் மத்தியிலும் மகாராஜா என்று சொல்லும் அளவுக்கு நல்ல பெயர் பெற்றவர்கள் ஆவார்கள். அவர்களை இழந்து தவிக்கின்ற அவருடைய குடும்பத்தாருக்கு அகில இந்திய பார்வேர்டு பிளாக் கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து முடிக்கிறேன்.

திரு. பி. முகமது இஸ்மாயில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்ற முன்னவர் அவர்கள் முன்மொழிந்த இரங்கல் தீர்மானங்களை வழிமொழிந்து, சில கருத்துக்களை இந்த மன்றத்தில் வைக்க நான் முனைகிறேன்.

மறைந்துவிட்ட திரு. வி. கே. இராமசாமி முதலியார் அவர்களைப் பற்றியும், திரு விஜயரெகுநாத தொண்டமான் அவர்களைப்பற்றியும் இங்கே கூறப்பட்ட கருத்துக்களையும், உணர்ச்சிகளையும் நான் பகிர்ந்து கொள்கிறேன். வி. கே. இராம சாமி முதலியார் அவர்கள் இந்த மாமன்றத்தின் உறுப்பினராக இருந்து திறம்பட செயலாற்றி இருக்கிறார்கள். அவர் இந்த மன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் பணி யாற்றி மிகமிக சிறப்புடையவர் என்பதை நாம் அறிவோம். ஒரு எதிர்க்கட்சித் தலைவர் எந்த முறையில் பணியாற்ற வேண்டும் என்பதற்கு அணிகலனாக இருந்து பணியாற்றிய பெருமை அவருக்குண்டு. இந்த மன்றத்திலே மட்டுமல்ல, ஏனைய பல சமுதாய அமைப்புகளிலும் நல்லமுறையில் பணியாற்றி சிறந்து விளங்கினார் என்பதை எனக்கு முன்னால் பேசிய அருமை நண்பர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். குறிப்பாக கூட்டுறவு அமைப்புகளிலும், ஏனைய பல அமைப்பு களிலும் உறுப்பினராகவும், அவற்றின் தலைமைப் பொறுப்பை ஏற்று சிறந்த முறையில் பணியாற்றியதோடு, மற்றவர்களுக்கு [illegible]



விஜயரெகுநாத தொண்டமான் அவர்கள் மறைவு நம் அத்தனை பேருக்கும் ஓர் பேரதிர்ச்சியைத் தந்தது. அவர் இனிய முறையில் பழகுகின்ற நற்பண்புகளைப் பெற்றவர். இந்த மன்றத்திலே உறுப்பினராக இருந்து, தன் கடமைகளைச் செவ்வனே செய்து வந்திருக்கிறார்கள். விஜயரெகுநாத தொண்டமான் அவர்களிடத்திலே எந்த அளவுக்கு அரசியல் பண்புகள் இருந்தன என்பதை நாம் பார்க்க முடிந்தது. நேர்மை யையும், நாணயத்தையும் அடிப்படையாக வைத்து, அவர் அரசி யலை நடத்தி வந்தார்கள் என்பது நம் அத்தனை பேர்களுக்கும் தெரியும். விஜயரெகுநாத தொண்டமான் அவர்கள் கோடைக் கானலுக்குச் செல்லுகின்ற அத்தனை பேர்களையும் அழைத்து விருந்து உபசரணை செய்வது நம் எல்லோருக்கும் தெரியும். அந்தப் பகுதியிலே இருக்கின்ற அத்தனை அமைப்புகளிலும் கால்ப் கிளப், போட் கிளப், ரோட்டரி கிளப் போன்ற அமைப்புகளில் உறுப்பினராக இருந்து, அவைகளிலே உள்ளவர் களின் நன்மதிப்பையும், மரியாதையையும் பெற்று வாழ்ந்து வந்தவர். அரச பரம்பரையிலே பிறந்தாலும், சாதாரண ஒரு குடிமகன் என்ற முறையிலே எல்லோரிடமும் இனிமையாகப் பழகுவார்.

வி. கே. இராமசாமி முதலியார் அவர்களைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், தொண்டமான் அவர்களைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவர்களது உற்றார் உறவினர்களுக்கும் ஜனதா பேரியக்கத்தின் சார்பாக ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்து, அவர்களது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே எதிர்க் கட்சித் தலைவராக இருந்து மறைந்த மதிப்பிற்குரிய வி. கே. இராமசாமி முதலியார் அவர்களுக்கு என்னுடைய அஞ்சலியை நான் முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் சுட்டிக்காட்டியது போல், அவர் முந்திய தலைமுறையின் பிரதிநிதியாகத் திகழ்ந்தவர். சிறந்த குண நலன்களையும், சிறந்த பண்பாடுகளையும் கொண்டு திகழ்ந்த ஒரு நல்ல சட்டமன்ற உறுப்பினர் ஆவார்கள். அவர்கள் தன் பணிகளை இங்கே சிறந்த முறையில் ஆற்றி மறைந்திருக்கிறார் கள். அவரது மறைவினால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு எங்கள் இயக்கத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

அதைப்போலவே இந்த சட்டமன்றத்திலே நம்முடன் உறுப்பினராக இருந்து மறைந்த என்னுடைய இனிய நண்பர் புதுக்கோட்டை இளைய மன்னரான திரு. விஜயரெகுநாத தொண்டமானைப் பற்றி நினைத்தால் வள்ளுவர் கூறிய ஒரு குறள் தான் என்னுடைய நினைவுக்கு வருகிறது:

[திரு. ப. நெடுமாறன்] [1984 அக்டோபர் 8

''உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்''

என்று வள்ளுவர் அவர்கள் சொன்னார்கள். அது அவருக்கு எல்லா வகையாலும் பொருத்தமான குறள். அவர் நெஞ்சுடைய உள்ளத்திலே எந்தவிதமான சூது வாது இல்லாமல் யாருடனும் இன்னார் இனியார் என்ற வேறுபாடு இல்லாமல் அரசியல் வேறுபாடுகள் இல்லாமல் வேறு எந்தவிதமான வேறுபாடுகளும் இல்லாமல் எல்லோருடனும் இனிமையாக பழகி எல்லோருடைய அன்புக்கும் மதிப்புக்கும் உரியவராக இருந்த சிறந்த மனிதர். அவருடைய தொண்டு எல்லாத் துறையிலும் இருந்தது. அரசியல் துறையோடு மட்டுமல்லாது அவர் சார்ந்து இருந்த இயக்கத்தோடு மட்டும் அல்லாது அவர் சேவையை அவர் அதோடு மட்டும் அடக்கிக் கொள்ளவில்லை. விரிந்து பரந்த அளவிலே எல்லா துறையிலும் இருந்தார். தொகுதி மக்களுக்கும் அவருடைய தொண்டு கிடைத்தது. அந்த அளவுக்கு எல்லோருடைய மரியாதையையும் பெற்று இருந்து ஒரு சிறந்த தலைவராக அவர் விளங்கினார். அரச குடும்பத்திலே பிறந்து இருந்தாலும் கூட அவர் எந்தவிதமான அறிகுறியும் இல்லாமல் எளிமையான அதற்கான யோடு ஒரு எளிய உறவு முறையோடு எல்லோருடனும் பழகி வாழ்க்கை வாழ்ந்த ஒரு மா-மனிதராக அவர்கள் திகழ்ந்தார்கள். அவர் மறைவு என்பது அவர் சார்ந்து இருக்கிற இயக்கத்திற்கு மட்டும் அல்ல இந்த சட்டமன்றத்திற்கும், தமிழகத்திற்கும் மிகப் பெரிய இழப்பாகும் என்பதை சுட்டிக்காட்டி அன்னாரின் பிரிவினால் வருந்தும் அன்னாருடைய குடும்பத்தினருக்கு எங்கள் கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அமைகிறேன்.

*திரு. கி. சட்டநாத கரையாளர்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இரங்கல் தீர்மானங்கள் குறித்து இரண்டொரு வார்த்தைகள் இந்திய சோஷலிச கட்சியின் சார்பில் சொல்ல விரும்புகிறேன்.

திரு. வி. கே. இராமசாமி முதலியார் அவர்கள் 1951 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரை இந்த அவையிலே உறுப்பினராக இருந்து சிறந்த முறையிலே பணியாற்றினார்கள். அந்தக் காலத்திலே இந்த மன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக அவர்கள் பணியாற்றியபோது நானும் அவர்களோடு சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பைப் பெற்ற ஒருவன் என்ற முறையிலும் அவர்களோடு நீண்டு நெடு நாட்கள் தொடர்பு கொண்ட ஒரு நண்பன் என்ற முறையிலும், அவர்களுடைய மறைவு எனக்கும் ஒரு இழப்பு என்ற முறையிலும் எனது ஆழ்ந்த துயரத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



1984 அக்டோபர் 8] [திரு. கி. சட்டநாத கரையாளர்

அவர்கள் இந்த அவையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலத்திலே பல்வேறு சந்தர்ப்பங்களில் இன்று நாட்டிலே உள்ள பொருளாதார பிரச்சினைகளில், குறிப்பாக கிராமப்புற மக்களின் நல்வாழ்வுக்காகவும், விவசாயிகள் நல்வாழ்வுக்காகவும் அடிக்கடி குரல் எழுப்புவார்கள். பொருளாதார துறையில் இந்திய அரசு கடைப்பிடிக்கும் கொள்கை பற்றி குறிப்பிடுகிற போது, தொழில் துறைக்கு எந்த' அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்களோ அந்த அளவுக்கு முக்கியத்துவம் விவசாயத் துறைக்கு கொடுக்கப்படவில்லை என்பத அழுத்தம் திருத்தமாக கடைசி வரை குறிப்பிட்டு வந்தார்கள், அதுதான் அவர்கள் இந்த அவையிலே தொடர்ந்து மீண்டும் மீண்டும் எடுத்து வைத்த கருத்தாகும். கடைசி வரைக்கும் இதையே அவர்கள் ஆணித்தரமாக கூறிவந்தார்கள். அவருடைய சிறந்த பண்பாகிய—எல்லோருடனும் எளிய முறையிலே பழகி விவாதித்து தன்னுடைய கருத்தை அழுத்தமாக சொல்லக்கூடிய தன்மை இன்று அரசியலிலே குறைந்து வருகிறது, அந்தப் பண்பை போற்றும் முறையில் அதை ஞாபகப்படுத்துகிற முறையில் அவர்கள் பழகிய முறையை வலியுறுத்தம் முறையில் நான் இன்று அதை ஞாபகப்படுத்தி, அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலத்தில் இந்த அவையின் கண்ணியத்தையும். கட்டுப்பாட்டையும் எப்படி கட்டிக்காத்து வந்தார்கள் என்பதையும் ஞாபகப்படுத்தி, அன்னாருக்கு எனது ஆழ்ந்த அஞ்சலியையும் அன்னாருடைய குடும்பத்தினருக்கு இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக நம்மோடு பழகி இனிய முறையில் உயர்ந்த எல்லோரும் போற்றக்கூடிய முறையில் பண்பாளராக விளங்கிய மன்னர் பரம்பரையைச் சேர்ந்த திரு. விஜயரெகுநாத தொண்டமான் அவர்களுடைய மறைவுக்கு இந்திய சோஷலிச கட்சியின் சார்பாக இரங்கலை தெரிவித்து அவர்களுடைய ஆயுட்காலத்திலே அவர்கள் செய்த சேவைகளை போற்றக்கூடிய முறையில் என்னுடைய அஞ்சலியை கூறி அமைகிறேன்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இரங்கல் தீர்மானங்களை குடியரசு கட்சியின் சார்பில் ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மறைந்த திரு. இராமசாமி முதலியார் அவர்களுக்கும், இங்கு சட்டமன்ற உறுப்பினராக இருந்து நம்மை விட்டு பிரிந்து இருக்கிற திரு. விஜயரெகுநாத தொண்டமான் அவர்களுக்கும் குடியரசு கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொண்டு அவர்களை பிரிந்து வாழ்கிற அவர்களுடைய குடும்பத்தினருக்கும் அவர்களோடு இருந்து பணியாற்றி இன்று அவரை இழந்து தவிக்கின்ற காங்கிரஸ் கட்சியின் அருமை நண்பர்களுக்கும் குடியரசு கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து அமைகிறேன்.

திரு. அன்பில் தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த திரு முத்தையா செட்டியார் அவர்களைப் பற்றி குறிப்பிடுகிறபோது 1938 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது அவர் கொடி பிடித்து கடற்கரை வரை வந்தது ஞாபகம் இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே அதையும் தாங்கள் முதலில் படித்த குறிப்புடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்கசாலைத் தெருவிலிருந்து கடற்கரை வரை அவர் வந்தார். அதுவும் இணைத்துக் கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு அவை முன்னவர் மற்றும் அனைத்துக்கட்சித் தலைவர்கள் தெரிவித்த இரங்கல் கருத்துக்களோடு என்னுடைய இரங்கலையும் இணைத்துக்கொள்ள விரும்புகிறேன்.

மறைந்த பெரியவர் திரு வி. கே. இராமசாமி முதலியார் அவர்களை நான் பல ஆண்டு காலமாக நன்றாக றிவேன், பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மாமன்றத்திலே பணியாற்றியபோது அவர்கள் அருகிலேயே அமர்ந்து எதிர்க்கட்சி தலைவர் பதவியினை வகித்தவர்கள் என்பதனை எல்லாம கண்டு நாங்கள் மகிழ்ச்சி அடைந்து இருக்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டவர்கள். பெரியவர் பக்தவச்சலம் அவர்களுக்கு அவர்கள் சம்பந்தியாக இருந்தாலும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பொறுப்பை நிறைவேற்றுகின்ற வகையில் அரசாங்கத்தின் குறைபாடுகளை அவர்கள் சுட்டிக்காட்ட என்றைக்கும் தவறியது கிடையாது.

அதைப்போலவே அவர்களுக்கு விவசாயத் துறையில் சிறந்த ஈடுபாடு உண்டு என்பதையும் மாடு வளர்ப்பதிலேயும் மிகுந்த அக்கறை கொண்டு இருந்தார்கள் என்பதையும் நான் அறிவேன்,

அதோடு மட்டும் அல்ல, அவர்களுக்கு இசைத் துறையிலே மிகுந்த ஈடுபாடு இருந்தது. சென்னையில் உள்ள மியூசிக் அக்காடமி என்ற மிகப் பெரிய இசை நிறுவனத்திலே அவர்கள் ஒரு நிர்வாக இயக்குநராக இருந்து பல ஆண்டுக் காலம் பணியாற்றியிருக்கிறார்கள். பல பாடகர்களை முன்னுக்கு கொண்டு வரவேண்டும் என்பதில் அரும்பாடுபட்டார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகவே தமிழிலே அவருக்கு ஆர்வமும், அக்கறையும் இருந்தது. நாவலர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல் 80 ஆம் வயதை அடைந்தும் பல்கலைச் கழகத்திலே எம். ஏ. பட்டம் பெறவேண்டும் என்ற ஆசையை வைத்துக்கொண்டு இருந்தார்கள். செங்கற்பட்டைச் சார்ந்த அவர்கள் ஒரு பெரிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள். பாரம்பரிய தேசிய இயக்கத்தை சேர்ந்தவராக இருந்தாலும் தேசிய இயக்கத்திலே சில சண்டை சச்சரவுகள் வந்தபோது, அதிலிருந்து விலகி இந்த மன்றத்திலே





எதிர்க்கட்சித் தலைவராக இருந்து பணியாற்றினார்கள். அப்போது ஒரு மணிக்கும் அதிகமாக அவர்கள் பேசிய பேச்சுக்களை கேட்கிற வாய்ப்பை அந்தக் காலத்திலே நாங்கள் பெற்று இருந்தோம்.

அதைப்போலவே நம்முடைய விஜயரெகுநாத தொண்டமான் அவர்கள் இந்த மாமன்றத்திலே பணியாற்றிய காலத்தில் அவர்களோடு பழகுகிற நல்வாய்ப்பை நானும் பெற்றேன். அவர்கள் இந்த மன்றத்திலே பல்வேறு நேரங்களில் விளையாட்டுக்களைப் பற்றி ஏராளமான கேள்விகளை இந்த மாமன்றத்தில் கேட்டு இருககிறார்கள். அதையும் மறந்து விடுவதற்கில்லை. விளையாட்டு சம்பந்தப்பட்ட ஒரு கேள்வி வருகிறது என்றால் அதில் விஜயரெகுநாத தொண்டமான் அவர்களுடைய கேள்வி இல்லாமல் அந்தக் கேள்வி நேரம் முடிந்ததாக வரலாறே இல்லை. அதைப்போலவே அவர்கள் தான் சார்ந்து இருக்கிற கட்சிக்கு மிக சிறந்த தொண்டனாகவும் அந்த வட்டத்திலுள்ள மக்கள் இடத்திலே பண்பும், பாசமும் வைத்து பின்தங்கிய மக்களுக்கு பணியாற்றுகிற வகையில் சிறப்பாக அவர்கள் பணியாற்றியிருக்கிறாக்கள்.

[(முற்பகல் 11-40)

அவர் எவ்வளவு அன்போடும், நேசத்தோடும் எல்லோருடனும் பழகக் கூடியவர் என்பதை அறிந்து கொள்ள வேண்டுமென்றால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கோடைக்கானலில் உள்ள படகுக் குழு—போட் கிளப்—என்று அழைக்கப்படும் அந்தக் குழுவிற்கு 16 ஆண்டுகள் அவர் தொடர்ந்து தலைவராக இருந்து பெருமை சேர்த்தவர்கள் என்பதை நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த வகையில் எல்லாத் துறைகளிலும் ஈடுபாடு கொண்டு மிகச் சிறந்த தன்மையில் தமிழகத்திற்குத் தொண்டாற்றிய பெரியவர் ஒருவரையும். இன்னும் பல்லாண்டுக் காலம் வாழ்ந்திருக்க வேண்டிய இளைஞர் ஒருவரையும், இந்த மாமன்றம் இழந்து தவிக்கிறது. ஆகவே, அந்த இருவரின் குடும்பங்களுக்கும் என்னுடைய அஞ்சலியையும் இணைத்துக் கொண்டு என்னுடைய இரங்கலை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் வகையில் அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறைந்த திரு விஜயரெகுநாத தொண்டைமான் அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் ஒத்திவைக்கப் பெறுகின்றன. நாளை (9-10-84) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை முற்பகல் 11-41 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ). சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

1. சென்னை (டௌன் ட்டவுன் லயன்ஸ் கிளப்பு) உள்நகர் அரிமா சங்கத்திற்குச் சொந்தமான எம்.எஸ்.ஒய். 3531-ஆம் எண் மோட்டார் வண்டிக்கு தமிழ்நாடு, 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு சட்டத்தின் கீழ் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து உள் (போக்குவரத்து-I) துறையின் 20-1-1984 நாளிட்ட 206-ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2)பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

2. வருவாய்த் துறையின் 1970 ஆம் ஆண்டு 251 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-அறநிலையத் துறையின் 20-2-1984 ஆம் நாளிட்ட 168 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

3. மதுரையிலுள்ள திருவாளர்கள் கோத்தாரி மலைத் தோட்ட-தொழில் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் வரி விதிப்பு மதிப்பீடு செய்யும் அதிகாரத்தை மதுரை வணிகவரி அதிகாரிக்கு (செயல் பிரிவு) வழங்குவது தொடர்பாக வணிக வரிகள்—அறநிலையத் துறையின் 7-2-1984 ஆம் நாளிட்ட 119 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

4. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மது விலக்கு—ஆயத் தீர்வை துறை III-ன் 2-2-1984 ஆம் நாளிட்ட 133 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



5. வேளாண்மைத் துறையினால் வெளியிடப்பட்ட 1969 ஆம் ஆண்டு மே திங்கள் 27 ஆம் நாளிட்ட II (1)/82716 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 12-1-1984 ஆம் நாளிட்ட 73 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

6. வேளாண்மைத் துறையினால் வெளியிடப்பட்ட 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23 ஆம் நாளிட்ட II (2)/AG/4849/77 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 12-1-1984 ஆம் நாளிட்ட 74 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 3-10-1983 ஆம் நாளிட்ட 2056 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் IV/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

8. சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் சில மாற்றங்கள் செய்வது குறித்து வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 26-10-1983 ஆம் நாளிட்ட 1513 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

9. சென்னை பெருநகர் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 7-7-1983 ஆம் நாளிட்ட 1033 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

10. இஞ்சிப்புல் தைல (Ginger Grass oil) விற்பனை குறித்து விற்பனை வரி விதிப்பிலிருந்து விலக்களிப்பது தொடர்பாக வணிக வரிகள்—அறநிலையத் துறையின் 27-3-1984 ஆம் நாளிட்ட 334 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

11. நாகர்கோவில் திருவாளர்கள் நேசமணி போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான டி.எம்.என். 2537 ஆம் பதிவு எண் கொண்ட பயணிப் பேருந்தைப் பொறுத்த வரையில் வரி வீதத்தைக் குறைப்பது தொடர்பாகவும், மேற்சொன்ன வண்டிக்கு மேல் வரி விதிப்பது தொடர்பாகவும் உள்துறையின் (போ III) 9-3-1984 ஆம் நாளிட்ட 522 ஆம் எண் அரசாணையில் வெளி யிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

12. சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 26-10-1983 ஆம் நாளிட்ட 1514 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்பு திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

13. வணிக வரிகள்—அறநிலையத் துறையினால் வெளியிடப் பட்ட 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22 ஆம் நாளிட்ட II(1)/CTRE/328/82 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—அறநி லயத் துறையின் 3-4-1984 ஆம் நாளிட்ட 366 ஆம் எண் அறிவிக்கையில் வெளி யிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கபபெற்றது.]

14. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதி களில் செய்யப்பட்ட திருத்தம் தொடர்பாக, உள்துறையின் 18-2-1984 ஆம் நாளிட்ட 383 ஆம் எண் அரசாணையில் வெளி யிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) ஆம் பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

15. வருவாய்த் துறையின் 17-12-1969 ஆம் நாளிட்ட II—1 எண். 5939/1969 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 13-9-1982 ஆம் நாளிட்ட 1561 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு வேளாண்மை நில உடைமைப் பதிவுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1969) 18 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]



16. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் (போ-I) 20—2-1984 ஆம் நாளிட்ட 392 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

17. கிராமப் பகுதிகளில் பயணிப் பேருந்துகளாகப் பயன் படுத்தப்பட்டு வருகின்ற 'டில்லர் டிரான்ட் ரெய்லர்' உழுவை எந்திர வண்டி இழுத்துச் செல்லும் தொடர் வண்டிகளைப் பொறுத் வரையில் செலுத்தத்தக்க வரியினைக் குறைப்பது தொடர்பாக உள் துறையின் (போ—I) 24—2-1984 ஆம் நாளிட்ட 427 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு (மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

18. சென்னை திருவாளர்கள் பல்லவன் போக்குவரத்துக் கழகம் செலுத்தத்தக்க வரி பாக்கித் தொகையினை தள்ளி விடுவது தொடர்பாக உள்துறையின் (போ-I) 24-2—1984 ஆம் நாளிட்ட 434 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

19. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்யப்பட்டது குறித்து உள் துறையின் 19—12—1983 ஆம் நாளிட்ட 2663 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது.]

20. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு மது விதிகள இயற்றுவது தொடர்பாக மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை (III) 14-3—1984 ஆம் நாளிட்ட 319 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

21 தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு சாராய மொத்த விற்பனை மூலம் வழங்குதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை III ன் 8-2-1984 ஆம் நாளிட்ட 170 ஆம் எண் அரசாணையில் வெளிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

22. தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு வெட்டு மரங்கள் கடப்பு விதிகளில் திருத்தங்கள் செய்வது குறித்து வன-மீன் துறையின் 11-8-1983 ஆம் நாளிட்ட 971 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1982) 64-A பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

23. உணவு வேளாண்மைத்துறையின் 28-2-1963 ஆம் நாளன்று வெளியிடப்பட்டஎண். II-1-1633/1963 ஆம் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத்துறையின் 24-1-1984 ஆம் நாளிட்ட 107 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

24. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்த (நில உச்சவரம்பு கட்டுதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 15-3-1984 ஆம் நாளிட்ட 469 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நில சீர்திருத்த (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

25. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சி-பணியாளரமைப்பு (ஊரக கலைகள்' கைத்தொழில்கள், தொழில்கள்) விதிகளைச் வகுப்பதுகுறித்து ஊரக வளர்ச்சிமற்றும் உள்ளாட்சித் துறையின் 29-6-1983 ஆம் நாளிட்ட 946 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின்கீழ் போவை முன் வைக்கப் பெற்றது]

26. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு அவைத் தலைவர்கள் தமிழ்நாடு அமைச்சர்கள், சட்டமன்ற அவைத் தலைவர்கள் (அரசு இல்லங்களுக்கு அறை கலன்கள் கொடுத்தல், ஏனைய வசதிகளைச் செய்து கொடுத்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொது (நிர்வாகம்-I) துறையின் 8-2-1984 ஆம் நாளிட்ட 169 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

27. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு சாராவிகள் (மொத்த விற்பனை வழங்கல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மது விலக்கு



ஆயத்தீர்வைத் (III) துறையின் 8-4-1984 ஆம் நாளிட்ட 170 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

28. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைவரிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் அறநிலையத் துறையின் 3-4-1984 ஆம் நாளிட்ட 368 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

29. 1978 ஆம் ஆண்டு வட்டாரக்குழு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 21-4-1984 ஆம் நாளிட்ட 438 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. தமிழ்நாடு 1959 ஆண்டு இந்து சமய மற்றும் அறக் கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

30. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு வரியிலா நில உடைமைகள் சட்டத்தின் விவர அட்டவணையின் பகுதி I-ல் வரியிலா உடமை நிலங்கள் சிலவற்றைச் சேர்த்துக் கொள்வது குறித்து வணிக வரிகள்-அறநிலையத் துறையின் 14 3-1983 ஆம் நாளிட்ட 301 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு இனாமாக கைப்பற்றபட்ட நிலங்கள் மீதான வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1973) 21 (2)பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் வைக்கப்பெற்றது.]

31. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு நகராட்சிக் கட்டிட விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் 19-7-1983 ஆம் நாளிட்ட 1060 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

32. தர்மபுரி மாவட்ட மாவுப்பசை உற்பத்தி பணியாளர்கள் தொழில் கூட்டுறவு சங்கத்திடமிருந்து கொள்முதல் செய்யப்படும் மாவு மற்றும் மாவு பசைகளுக்கு விதிக்கப்படும் தொடர் வரிகளிலிருந்து விலக்களிப்பது குறிப்து வணிக வரிகள்-அறநிலையத் துறையின் 16-3-1934 ஆம் நாளிட்ட 289 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு போது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/ 1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

33. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராய (தயாரிப்பு) விதி
களில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத்
தீர்வைத் துறையின் 6-4-1984-ஆம் நாளிட்ட 429 ஆம் எண்
அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937
ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

34. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி
விதிகள், தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி
விதிகள், மற்றும் தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனை வரி
(மேல்வரி) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக
வரிகள்—அறநிலையத் துறையின் 16-2-1984-ஆம் நாளிட்ட
146 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.
[தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்
தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை
முன் வைக்கப் பெற்றது].

35. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளி
திருத்தமொன்று செய்வது குறித்து மது விலக்கு—ஆயத் தீர்வை
—II துறையின் 14-3-1984-ஆம் நாளிட்ட 320 ஆம் எண்
அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937
ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

36 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையினால்
4-12-1976 ஆம் நாளன்று வெளியிடப்பட்ட 350 ஆம் எண்
அறிவிக்கையில் ஒப்பளிக்கப்பட்ட சென்னைப் பெருநகர்ப் பகுதிக்
கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு
வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 4-1.1980-ஆம் நாளிட்ட
24-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.
[தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்
தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ்
பேரவை முன் வைக்கப் பெற்றது].

37. உணவு மற்றும் வேளாண்மைத் துறையின் 22-10-1965
ஆம் நாளிட்ட II-1-4803/1965-ஆம் எண்ணுள்ள முந்தைய
அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத்
துறையின் 22-3-1984-ஆம் நாளிட்ட 577 ஆம் எண் அரசாணை
யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு சட்டம் 1959-
ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை
முன் வைக்கப் பெற்றது].

38. திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து கொள்முதல்
மற்றும் விற்பனை செய்யப்படும் சோளம், கம்பு மற்றும் கேழ்
வரகு ஆகியவற்றினை கட்டுப்படுத்துதல் குறித்து வேளாண்மைத்



துறையின் 8-1-1984 ஆம் நாளிட்ட 231 ஆம் எண் அரசாணை
யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு
வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு
சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்
பெற்றது.]

39. வேளாண்மைத் துறையின் 24-3-1976 ஆம் நாளிட்ட
II(2)/AG/1840/1976 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று
செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 24-3-1984 ஆம்
நாளிட்ட 88670/AM II/83-6 ஆம் எண் அரசு கடிதத்தில் வெளி
யிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண்
விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு
சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன்
வைக்கப் பெற்றது.]

40. வருவாய்த் துறையின் 18-11-1980 ஆம் நாளிட்ட
எஸ்.ஆர்.ஓ எண்—பி. 570 (a)/80-ஆம் எண் அறிவிக்கையில்
திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின்
16-3-1984 ஆம் நாளிட்ட 470 ஆம் எண் அரசாணையில் வெளி
யிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதி
நேரக் கிராம அதிகாரிகள் பதவிகளை நீக்குதல் சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 3/1981) 12 (3) பிரிவின் கீழ் பேரவை முன்
வைக்கப் பெற்றது.]

41. மதுரை மாவட்டம், காந்தி கிராமத்திலுள்ள லஷ்மி
சேவா சங்கத்தினால் உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்படும்
பொருட்களுக்கு விதிக்கப்படும் வரியினின்று விலக்களிப்பதுகுறித்து
வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 11-5-1984
ஆம் நாளிட்ட 507 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை
வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53 (5) பிரிவின்
கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

42. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதி
களில் திருத்தம் செய்வது தொடர்பாக உள்துறையின்
18-2-1984 ஆம் நாளிட்ட 329 ஆம் எண் அரசாணையில் வெளி
யிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி
கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்
கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

43. தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு அமைச்சர்கள் பயணப்
படி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொது
(பணியாளரமைப்பு-I) துறையின் 27-3-1984 ஆம் நாளிட்ட
518-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.
[தமிழ்நாடு 1951-ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன்
வைக்கப் பெற்றது.]

44. சென்னை கிண்டியிலுள்ள சென்னை குதிரைப் பந்தய மைதானத்தில்''இன்டர்வென்யூ'' பந்தயத்திற்கு ப்பணமகட்டப் படும் குறுக்கு பந்தயம் மற்றும் ஏனைய மையங்களில் நடை பெறும் குதிரைப் பந்தையத்திற்கு வரி விதிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 31-3-1984 ஆம் நாளிட்ட 362 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1935-ஆம் ஆண்டு பந்தைய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

45. சேலம் அண்ணா போக்குவரத்துக் கழகத்திற்கு சொந்த மான சிறு பயணிகள் பேருந்திற்கு செலுத்தப்படும் வரியில் சலுகைகள் செய்வது குறித்து உள் (போக்குவரத்து-I) துறையின் 13-3-1984 ஆம் நாளிட்ட 561 ஆம் எண் அரசாணையில் வெளி யிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

46. சேலம் அண்ணா போக்குவரத்துக் கழகத்திற்கு சொந்த மான சில வண்டிகளுக்கு 1978-79 மற்றும் 1979.80 ஆம் ஆண்டுக்காக செலுத்தக்கூடிய மேல்வரி ரூ. 46, 418-ஐ கை விடுதல் குறித்து உள் (போக்குவரத்து-I) துறையின் 21-3-1984-ஆம் நாளிட்ட 617 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது.]

47. 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் உணவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங் ளை சேர்ப்பது தொடர்பாக தொழிலாளர் நலத் துறையின் 26-4-1984 ஆம் நாளிட்ட 870 ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்14/1947) 40-பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

48. 1981 ஆம் ஆண்டு மதுவகை (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறையின் 22-2-1984-ஆம் நாளிட்ட 250 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

49. விமானப்படை துணைவியர் நலச் சங்கப் பரிசுச் சீட்டின் விற்பனை மீது விதிக்கப்படும் விற்பனை வரியிலிருந்து விலக் களிப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 26-5-1984 ஆம் நாளிட்ட 558 ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விறபனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]



50. கோயம்புத்தூர் மற்றும் குன்னூர் ஆகிய ஏல மையங் களில் விற்கப்படும் தேயிலை மீது விதிக்கப்படும் ஒருமுனை விற்பனை வரியினை குறைப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 26-5-1984-ஆம் நாளிட்ட 553-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I 1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

51. வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 17-12-1980-ஆம் நாளிட்ட II (1)/CTRE/752/80-ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 29-5-1984-ஆம் நாளிட்ட 564-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959)53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

52. திருச்சிராப்பள்ளி பர்மா அங்காடி வியாபாரிகள் சங்கத்தைச் சேர்ந்த பர்மா அகதி வணிகர்கள் தயாரித்த பொருட்களின் விற்பனைக்குச் செலுத்தத் தக்க வரியிலிருந்து விலக்களிப்பது தொடர்பாக வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 9-2-1984-ஆம் நாளிட்ட 127-ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

53. தமிழ்நாடு மின் வாரியத்திற்குச் சொந்தமான வண்டிக்கு வரியை காலதாமதமாக கொடுத்ததற்குக் செலுத்தத் தக்க அபராதத்தை ரத்து செய்வது குறித்து உள் துறையின் 30-3-1984-ஆம் நாளிட்ட 706-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

54. தமிழ்நாடு அரசுத் தேர்வாணைக் குழு ''ஒழுங்கு படுத்தும் சட்டத்தில் திருத்தமொன்று செய்வது குறித்து பணி யாளரமைப்பு நிர்வாக சீரமைப்பு (பணியாளரமைப்பு-எம்) துறையின் 17-5-1984-ஆம் நாளிட்ட 488-ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

55. வருவாய்த் துறையின் 9-7-1984-ஆம் நாளிட்ட 419 ஆம் எண் அறிவிக்கையில் வெளியிடப்பட்ட திருத்தமொன்று செய்வதுகுறித்து வன-மீனளத்துறையின் 6-9-1983-ஆம் நாளிட்ட 1074-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1882-ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64-A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

56. வணிக வரிகள் அறநிலையத் துறையின் 3-3-1984-ஆம் நாளிட்ட No. II (1)/CTRE/37 (a)/84 அறிவிக்கையில் திருத்த மொன்று செய்வது குறித்து வணிக வரிகள் அறநிலையத் துறையின் 24-5-1984-ஆம் நாளிட்ட 549-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் I/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

57. வருவாய் துறையின் 28-3-1959-ஆம் நாளிட்ட No. SRO-A1966 அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் அறநிலையத் துறையின் 20-12-1983-ஆம் நாளிட்ட 1452-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

58. வணிக வரிகள் அறநிலையத் துறையின் 27-[illegible]-1982 ஆம் நாளிட்ட எண் II (1)/CTRE /42 (g)/8[illegible] அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-அறநிலையத் துறையின் 19-4-1984-ஆம் நாளிட்ட 436-ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

59. வணிக வரிகள்-அறநிலையத் துறையின் 5-10-1976-ஆம் நாளிட்ட எண் II(1)/CTRE/306 (C)/76 அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் அறநிலையத் துறையின் 25-5-1984-ஆம் நாளிட்ட 551-ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

60. தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு அபெக்ஸ் சொஸைட்டி (நிர்வாகம் மற்றும் தேர்தல் நடத்தும் முறை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கூட்டுறவுத் துறையின் 8-5-984-ஆம் நாளிட்ட 202-ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961/119 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]



61. தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு பணி நடைமுறை நூலின் பகுதி-Iஇல் உள்ள தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணி யாளர் தேர்வாணைக் குழு ஒழுங்கு முறை விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர் திருத்தத் (பணியாளரமைப்பு-எம்) துறையின் 14-5-1984 ஆம் நாளிட்ட 472 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது ]

62. ஊட்டியில் நடைபெறும் ஒவ்வொரு குதிரைப் பந்தயத் திற்கும் விதிக்கப்படும் வரியினைக் குறைப்பது சம்பந்தமாக வணிக வரிகள்-அறநிலையத் துறையின் 3-4-1984-ஆம் நாளிட்ட 367 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1935ஆம் ஆண்டு குதிரைப் பந்தயத்துக்கான வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

63. தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு ஒழுங்கு முறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு- நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளரமைப்பு-எம்) துறையின் 28-5-1984 ஆம் நாளிட்ட 526 ஆம் எண் அரசாணையில் வெளிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

64. தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு ஒழுங்கு முறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து 'பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தம் (பணியாளரமைப்பு-எம்) துறையின் 25-2-1984 ஆம் நாளிட்ட 174-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

65. தஞ்சாவூர் மாவட்டம் மயிலாடு துறையைச் சேர்ந்த திருவாளர்கள் ஆர். எஸ். கிருஷ்ணா அண்டு கம்பெனியாரால் செலுத்த வேண்டிய ஒருமுனை விற்பனை வரிக்கும் பலமுனை விற்பனை வரிக்குமிடையேயான வேறுபாட்டுத் தொகைகளுக்குத் தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் அறநிலையத் துறை யின் 16-5-1984-ஆம் நாளிட்ட 515-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

66. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு உணவக நிறுவனங்கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து தொழிலாளர் நலத் துறையின் 29-2-1984-ஆம் நாளிட்ட 499 ஆம்எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவு தயாரிக்கும் பணியாளர் தொகுப்பு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1958) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]

67. உணவு வேளாண்மைத் துறையின் 15-10-1963 ஆம் நாளிட்ட எண் II/1588 அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 31-3-1984 ஆம் நாளிட்ட 704 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

68. வேளாண்மைத் துறையின் 27-9-1977 ஆம் நாளிட்ட எண் II (2)'AC/5056/77 அறிவிக்கையை ரத்து செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 26-4-1984 ஆம் நாளிட்ட 877 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

69. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வலுக்குறைந்த சாராயம் மெதில் ஆல்கஹால் மற்றும் மெருகு எண்ணெய்—பிரஞ்சிபாலிஸ் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது தொடர்பாக மது விலக்கு —ஆயத் தீர்வைத் துறையின் 27-12-1983 ஆம் நாளிட்ட 1133 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

70. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு இந்தியாவி தயாரிக்கப் பட்ட வெளிநாட்டு ராவிகள் (தயாரிப்பு) விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறையின் 21-2-1984 ஆம் நாளிட்ட 248 ஆம் என் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]

71. சென்னை உட்பட இந்தியாவில் உள்ள அனைத்து குதிரைப் பந்தய மையங்களில் நடைபெறும் குதிரைப் பந்தயம் தொடர்பாக, உதகமண்டலத்தில் குதிரைப் பந்தய மைதானத் திற்குள் 'இன்டர்வென்யூ பெட்டிங்ஸ்'' மீது வரி விதிப்பது தொடர்பாக வணிக வரிகள்—அறநிலையத் துறையின் 31-3-1984 ஆம் நாளிட்ட 361 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

72. புதுக்கோட்டை முறைமைப் படுத்திய அங்காடி பகுதி யிலிருந்து சில கிராமங்களை நீக்குவது குறித்து வேளாண்மைத் துறையின் 6-4-1984 ஆம் நாளிட்ட 733 ஆம் எண் அரசாணையில



வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

73. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு விதி முறைகளில் திருத்தமொன்று செய்வது சம்பந்தமாக பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 30-5-1984 ஆம் நாளிட்ட 535 ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

74. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு விதி முறைகளில் திருத்தமொன்று செய்வது சம்பந்தமாக பணியாளரமைப்பு-நிர்வாக சீர்திருத்தத் (பணி யாளரமைப்பு—எம்) துறையின் 30-5-1984 ஆம் நாளிட்ட 536 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

75. 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் பணியின் (உள்ளாடை) தொழிலை சேர்ப்பது தொடர்பாக தொழிலாளர் நலத்துறையின் 5-6-1984 ஆம் நாளிட்ட 1227 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [(மத்தியச் சட்டம் 14/1947) தொழில் தகராறுகள் சட்டத்தின் 1947 38 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

76. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு விதி முறைகளில் திருத்தமொன்று செய்வது சம்பந்தமாக பணியாளரமைப்பு – நிர்வாகச் சீர்திருத்தத் (பணி யாளரமைப்பு—எம்) துறையின் 21-6-1984 ஆம் நாளிட்ட 613 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [(இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

77. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு விதி முறைகளில் சில திருத்தங்கள் செய்வது சம்பந்தமாக பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் (பணி யாளரமைப்பு—எம்) துறையின் 20-6-1984 ஆம் நாளிட்ட 601 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [(இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

78. 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர், அரசுக் கொறடாவின் பயணப்படி விதிகளை வகுப்பது தொடர்பாக, பொதுத் துறையின் 9-4-1984 ஆம் நாளிட்ட 598 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் சட்டத்துன் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

79. இராசபாளையத்தைச் சேர்ந்த வத்திராயிருப்பின் அறிவிக்கப்பட்ட அங்காடிப் பகுதியிலிருந்து சில கிராமங்கள் நீக்கம் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 24-3-1984 ஆம் நாளிட்ட 616 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

80. உணவு மற்றும் வேளாண்மைத் துறையினரால் ஏற்கனவே வெளியிடப்பட்ட 1964 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 29 ஆம் நாளிட்ட No. II-1-3693 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 25-5-1984 ஆம் நாளிட்ட 1009 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

81. பருத்தி, சோளம் கம்பு, கேழ்வரகு, மக்காச்சோளம் குறித்து புதுக்கோட்டை மவட்டத்தை அறிவிக்கப்பட்ட பகுதியாக அறிவிப்பது தொடர்பாக வேளாண்மைத் துறையின் 6-4-1984 ஆம் நாளிட்ட 731 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்-விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

82. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழு விதிமுறைகளில் திருத்தம் செய்வது சம்பந்தமாக பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 21-6-1984 ஆம் நாளிட்ட 614 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

83. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டம் செயலுக்கு வரும் நாள் தொடர்பாக வணிக வரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 22-11-1983 ஆம் நாளிட்ட 1351 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம் 1983 (22/1983) 1 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]





84. சதர்ன் பெட்ரோ கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம் தூத்துக்குடி அல்காலி கெமிக்கல்ஸ் அண்டு பெர்டிலைசர்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு விற்பனை செய்த 'அம்மோனியம் வாயுவிற்கு', விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 15-6-1984 ஆம் நாளிட்ட 637 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

85. வருவாய்த் துறையின் 1970 ஆம் அண்டு 80 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 30-6-1984 ஆம் நாளிட்ட 710 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

86. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தில் திருத்தமொன்று செய்வது சம்பந்தமாக வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 22-5-1984 ஆம் நாளிட்ட 525 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

87. திருவாளர்கள் இந்துஸ்தான் மோட்டார்ஸ் லிமிடெட், திருவள்ளூர், விற்பனை செய்த 'டிராலர் டிராக்டர்கள்' முதலியவற்றிற்கு விற்பனை வரியை குறைப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 29-6-1984 ஆம் நாளிட்ட 706 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு சட்டம் I/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

88. வணிக வரிகள்-அறநிலையத் துறையில் வெளியிடப்பட்ட 3-3-1984-ஆம் நாளிட்ட எண். II(1)/CTRE/37(C)/84 அறிவிக்கையை நீக்கம் செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறநிலையத்துறையின் 15-3-1984 ஆம் நாளிட்ட 284 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

89. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிசாலைகள் விதிகள் 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு சாராயம் (தயாரிப்பு) விதிகளில் திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வை III

துறையின் 15-6-1984 ஆம் நாளிட்ட 721 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

90. உணவு-வேளாண்மைத் துறையினரால் வெளியிடப்பட்ட 1964 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 29 ஆம் நாளிட்ட II-1-3693 ஆம் என் அறிவிக்கையில் திருத்தம் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 17-5-1984 ஆம் நாளிட்ட 951 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

91. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிசாலை விதிகளில் திருத்தம் செய்வது சம்மந்தமாக மதுவிலக்கு-ஆயத்தீர்வை (III) துறையின் 11-6-1984 ஆம் நாளிட்ட 646 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]).

92. சூரிய சக்தியால் இயங்கும் கருவிகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-அறநிலைய துறையின் 26-5-1984 ஆம் நாளிட்ட 554 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

93. தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரியில் சில திருத்தங்கள் செய்வது குறித்து விற்பனை வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 3-3-1984-ஆம் நாளிட்ட 227ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

94. மதுரை உலகத் தமிழ் பணி மற்றும் சென்னை அகில உலக-தமிழ் பயிற்றுவிக்கும் நிலையங்களுக்கான கல்வி சம்பந்தமான காஸெட்டுகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 27-6-1984ஆம் நாளிட்ட 693 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



95. தமிழ்நாடு பருத்தி வளர்ப்போர்களிடமிருந்து சென்னையிலுள்ள இந்திய பருத்திக் கழகம் வாங்கக் கூடிய பருத்திக்கு விதிக்கப்படும் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 2-7-1984ஆம் நாளிட்ட 711ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் . வக்கப் பெற்றது].

96. தமிழ்நாடு 1940ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 18-11-1983ஆம் நாளிட்ட 2414ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1939ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின (மத்தியச்சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

97. ஹைதராபாத் அகில இந்திய தானிய ஆராய்ச்சி நிலையத்திற்கு (ஏ.பி.பி. 4118) சொந்தமான வாகனத்திற்குச் செலுத்தப்படும் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து உள்துறை (போக்குவரத்து-I)யின் 7-6-1984 ஆம் நாளிட்ட 1221ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1931ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1931) 11(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

98. தமிழ்நாடு 1940ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 18-4-1984ஆம் நாளிட்ட 811ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1939ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1993) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

99. மதுரை மாவட்டத்தில் சில கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமமாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 22-3-1984ஆம் நாளிட்ட 443 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 15/1958) 28(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

100. 1982ஆம் ஆண்டு தமிழ்நாடு கைத்தறி தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பு நிலைகள் மற்றும் இதரச் சட்டங்கள் சட்டத்தில் திருத்தமொ று செய்வது குறித்து தொழிலாளர் நலத்துறையின் 22-5-1984ஆம் ந ளிட்ட 1108ஆம் என் அரசாணையில் வெளியி ப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு கை றித் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு நிலைகள் மற்று இதர சட்டத்தின் (தமிழ்நாடு சட ம் 61/1981) 57(4) பிரிவி ழ் பேரவை முன் வைக்கப் பெ றது].

101. தமிழ்நாடு 1984ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (மூன்றாவது மற்றும் நான்காவது திருத்தங் களில்) சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக் கட்டளைகள் துறையின் 23-7-1984ஆம் நாளிட்ட 800ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

102. 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு கரும்புச்சாறுக் கட்டுப் பாடு மற்றும் ஒழுங்கு முறை விதியில் திருத்தமொன்று செய்வது சம்பந்தமாக மதுவிலக்கு ஆயத் தீர்வை (எட்டாம்) துறையின் 19-3-1984ஆம் தேதியிட்ட 340ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை. [தமிழ்நாடு 1937ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

103. வேளாண்மைத் துறையினால் ஏற்கனவே வெளியிடப் பட்ட 1966ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22ஆம் நாளிட்ட No. II-1 No. 1900 எண் அறிவிக்கையில் திருத்தம் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 16-6-1984ஆம் நாளிட்ட 1186ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு வேளாண் விளைப்பொருள் அங் காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

104. தமிழ்நாடு 1977ஆம் ஆண்டு பணிநடைமுறை நூலின் பகுதி-I இல் உள்ள தமிழ்நாடு 1954ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணை குழு விதி முறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் (எம்) துறையின் 27-7-1984 ஆம் நாளிட்ட 749ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

1 5. தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு கடல் மீன் பிடித்தல் ஒழுங்கு படுத்தும் விதியில் திருத்தம் செய்வது குறித்து வன மீன் வளத்துறையின் 17-8-1983ஆம் நாளிட்ட 993ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1983 அம் ஆண்டு கடல் மீன் பிடித்தல் ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1983) 26 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].





திருத்தம் (பணியாளரமைப்பு-எம்) துறையின் 27-7-1974-ஆம் நாளிட்ட 748 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

107. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு சாராய விதிகளில் (உரிமம் வழங்கல்) சில திருத்தங்கள் செய்வது குறித்து மது விலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 23-4-1984 ஆம் நாளிட்ட 488 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டத்தின் [(தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)].

108. தமிழ்நாடு 1983-ஆம்ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் பட்ட வெளிநாட்டு சாராய வகைகள் சட்டத்தில் திருத்த மென்று செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத் தீர்வை துறையின் 23-4-1984 ஆம் நாளிட்ட 491-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [(தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)].

109. சேலம் மாவட்ட ஸ்டார்ச்சு மற்றும் ஜவ்வரிசி தயாரிப் பாளர்கள் தொழில் கூட்டுறவு சங்கம் லிமிடெட் மற்றும் தர்மபுரி மாவட்டம் பசை மாவு தயாரிப்பாளர் தொழில் கூட்டுறவு சங்கம் விற்பனை செய்யும் ஜவ்வரிசி மற்றும் பசைமாவிற்கு விற்பனை வரியை குறைப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 11-7-1984-ஆம் நாளிட்ட 747 ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை, [(தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).]

110 தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைப் பொருள் அங்காடிகள் சட்டத்தில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 26-3-1981 ஆம் நாளிட்ட 665ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் ஆங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

111. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 10-7-1984ஆம் நாளிட்ட 1359 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் அண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட் டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்க பெற்றது.]

112. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தில் திருத்தம் மொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 26-6-1984 ஆம் நாளிட்ட 1263 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

113. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 24-4-1984 ஆம் நாளிட்ட 835 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

114. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 11-7-1984 ஆம் நாளிட்ட 1375-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

115. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 21-4-1984-ஆம் நாளிட்ட 830-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

116. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையினால் வெளியிடப்பட்ட 1976 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 4 ஆம் நாளிட்ட No.II (1) 350/76 (RUL) ஆம் எண் அறிக்கையில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 16-12-1982-ஆம் நாளிட்ட 1109 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)].

117. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையினால் வெளியிடப்பட்ட 1976 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4-ஆம் நாளிட்ட No. II (1) /R L/ 350/76-ஆம் எண் அறிவிக்கையில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி- நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 19-8-1983-ஆம் நாளிட்ட 1294 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகர நாட்டுப்புறத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



118. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையினால் வெளியிடப்பட்ட 1976-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4 ஆம் நாளிட்ட No. (1)/350/76 (RUL) ஆம் எண் அறிவிக்கையில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 12-11-1983 ஆம் நாளிட்ட 1558-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புறத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

119. நாமக்கல் கிராமத்தின் சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 18-3-1983 ஆம் நாளிட்ட 596 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புறத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

120. மேட்டுப்பாளையம் கிராமத்தின் சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 21-4-1982 ஆம் நாளிட்ட 349 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புறத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

121. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு சாராய (உரிமம் வழங்கல்) விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக மதுவிலக்கு ஆயத்தீர்வை துறையின் 26-7-1984 ஆம் நாளிட்ட 907 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [(தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

122. வேளாண்மைத் துறையினால் வெளியிடப்பட்ட 1976 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 8 ஆம் நாளிட்ட No. II (2)/AG/1486/76 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 10-7-1984 ஆம் நாளிட்ட 1360-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

123. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வலுக்குறைந்த சாராயம், மெதில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரஞ்சு பாலிஷ்) விதிகளில் திருத்தம் செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 15-2-1984 ஆம் நாளிட்ட [illegible]

எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

124. சோழன் போக்குவரத்துக் கழகத்தால் காலம் தவறிக் கட்டிய மிகுதியான மிகுவரி சம்மந்தமாக உள்துறையின் 27-7-1984 ஆம் நாளிட்ட 1663 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் வைக்கப்பெற்றது.]

125. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சொந்தமான (TMZ 4628) வண்டிக்குச் செலுத்தப்படும் வரியிலிருந்து விலக்களிப்பது சம்பந்தமாக உள்துறையின் 11-7-1984 ஆம் நாளிட்ட 1531 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

126. உள்துறையினால் வெளியிடப்பட்ட 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11 ஆம் நாளிட்ட No. II (2)/HO/2190/84 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்வது குறித்து உள்துறையின் 12-7-1984 ஆம் நாளிட்ட 1540 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

127. திருவாளர்கள் ஆந்திர மாநில போக்குவரத்துக் கழகத்திற்கு சொந்தமான (AAZ2095) வண்டிகளுக்கு வரி மற்றும் அபராதத்தொகை செலுத்துவதிலிருந்து தள்ளுபடி செய்வது குறித்து உள்துறையின் 9-8-1984 ஆம் நாளிட்ட 1753 ஆம் எண் அரசாணையின் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

128. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளரமைப்பு-எம்) துறையின் 29-8-1984 ஆம் நாளிட்ட 872 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.



129. வருவாய்த் துறையினால் வெளியிடப்பட்ட 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் நாளிட்ட No. SRO B-570 (a)80 எண் அறிவிக்கையில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 28-7-1984 ஆம் நாளிட்ட 1233 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1981 ஆண்டு பகுதி நேர கிராம அதிகாரிகள் நீக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1981) 13 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

130. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு சாராய லைசென்ஸ் (உரிமம் வழங்கல்) விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 5-7-1984 ஆம் நாளிட்ட 816 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

131. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு சாராவிகள் (மொத்த விற்பனையின் கீழ் வழங்குதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 26-7-1984 ஆம் நாளிட்ட 908 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937)54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

132. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு சாராவிகள் (தயாரிப்பு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 3-4-1984 ஆம் நாளிட்ட 416 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

133. 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர்களின் நியாய ஊதியங்கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 12-5-1983 ஆம் நாளிட்ட 866 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர்களின் நியாய ஊதியங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/1969) 14 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

134. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை மற்றும் 1983-84 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கை. [1948 ஆம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 61 (1) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

135. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (கமர்சியல்) (ஆங்கிலம்) [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

136. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (சிவில்) (ஆங்கிலம்) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

137. தமிழ்நாடு அரசின் 1982-83 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள் (ஆங்கிலம்) [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

138. தமிழ்நாடு அரசின் 1982-83 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் கணக்குகள் (ஆங்கிலம்) [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

1. 1984 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 6/1984)

2. 1984 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 7/1984).

3. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 8/1984).

4. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நகராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச்சட்டம் எண். 9/1984).

5. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 10/1984).

6. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 11/1984).

7. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 12/1984).



8. 1984 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகம் மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகம் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 13/1984).

9 1984 ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழகம் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண்.14/1984).

10. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 15/1984).

11. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நகர்ப்புற நில உச்ச வரம்பு (முறைப்படுத்தல்) திருத்தச் செல் திறன் அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 16/1984).

12. 1984 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர குடிநீர் வழங்குதல் கழிவுநீர் அகற்றுதல் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 17/1984).

13. தமிழ்நாடு 1952 ஆம் ஆண்டு மலைப் பகுதிகள் (மரங்கள் பாதுகாத்தல்) விதிகளில் செய்யப்பட்ட திருத்தம் தொடர்பாக, வன-மீன் வளத் துறையில் 7-6-1983 ஆம் நாளிட்ட 696 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப் பட்டது.

14. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சங்கு எடுத்தல் (Chank Fisheries Rules 1981) விதிகளில் செய்யப்பட்ட திருத்தம் தொடர்பாக. வன-மீன் துறையின் 12-11-1983 ஆம் நாளிட்ட 1333 ஆம் எண் அரசாணையில் அறிவிக்கை வெளியிடப்பட்டது.

15. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 14-2-1984 முதல் 24-2-1984 முடிய உள்ள நடவடிக்கைகளின் சுருக்கக் குறிப்பு.

16. தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் 3-3-1984 முதல் 28-4-1984 முடிய உள்ள நடவடிக்கைகளின் சுருக்கக்குறிப்பு.

17. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் 13-2-1984 ஜூலை 23 ஆம் நாள் முதல் 28-4-1984 முடிய உள்ள நடவடிக்கைகளின் சுருக்கக் குறிப்பு.

18. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில்-இணைப்பு 'உ' பொது நிறுவனங்களின் பட்டியல் (தமிழ்நாடு அரசிதழ் நகல் மற்றும் திருத்தம் வெளியிடப்பட்டது. 1984 ஆம் ஆண்டு ஜூலை 4 ஆம் நாள், ஜூலை 23 ஆம் நாள்).

[1984 அக்டோபர் 8

19. தமிழ்நாடு அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் 1981-82 ஆம் ஆண்டு ஆண்டறிக்கையை தாமதமாக பேரவைமுன் வைப்பதற்கான காரணங்கள்)

20. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் 11-வது ஆண்டறிக்கையை 1981-82 ஆம் ஆண்டு, தாமதமாக பேரவை முன் வைப்பதற்கான காரணங்கள்).

21. 1984 ஆம் ஆண்டையத் தமிழ்நாட்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு-முறைப்படுத்துதல்) திருத்த செல்லுற அவசரச் சட்டத்தை அதிகார முறையில் வெளியிட்டதை அவசியமாக்கக் கூடிய சூழ்நிலைகளை விளக்கி தமிழ்நாடு சட்ட மன்ற பேரவை விதிகளைச் சேர்ந்த 182 ஆம் விதியின் கீழ் அளிக்கப்படும் விவர அறிக்கை.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

*In Madras City.*

1. Account Test Institute, Egmore, Madras-8.
2. The City Book Co., Madras-4.
3. Higginbothams (Private) Lt., Madras-2.
4. P. Varadachary & Co., Madras-1.
5. C. Subbiah Chetty & Co., Madras-5.
6. The Universal Book House, Moore Market, Madras-3.
7. C. Sitaraman & Co., Madras-14.
8. Mohan Pathiappagam & Book Depot., Madras-5.
9. C. Venkatesami Chetty & Co., No. 8-C, Pycrofts Road, Madras-5.
10. The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Lt., Madras-1.
11. The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12. New Century Book House (Private) Ltd., Madras-2.
13. Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

*In Moffussil of Tamil Nadu.*

1. A. Venkatasubban and Company Vellore (Norh Arcot District)-632 001.
2. Bharathamatha Book Depot. Thanjavur.
3. P. V. Nathan and Company. Kumbakonam (Thanjavur District).
4. Appar Book Stall. Thanjavur.
5. P. N. Swaminathan and Company. Bazaar Street. Pudukkottai.
6. Palaniappa Brothers. Tirunelveli-2.
7. S. R. Subramania Pillai Tirunelveli Junction.
8. B. Aruldass. Villupuram (South Arcot District).
9. Vasantham Stores Book Sellers. No. 9/31. Cross Cut Road. Coimbatore-12.
10. Mercury Book Company. No. 20 Karuppa Gounder Street. Coimbatore-1.
11. S. M. Jaganathan Book House. P.B. No. 327, No. 35. Nanthi Koil Street. Tiruchirappalli-2.
12. Ganesh Stores South Car Street Sivakasi.
13. Mary Martin Book Sellers. Kotagiri (The Nilgiris).
14. A. K. Chandriah Chettiar and Sons. Salem-636 001.
15. Parameswari Book Shop. No. 46-D, Old Market Street. Salem-636 001.
16. Meenakshi Pathippagam Pudukkottai.
17. K. V. Narayana Iyer and Sons. Dindigul. Madurai District.
18. Jayakumari Stores. Nagercoil. Kanyakumari District.
19. Baby Stores, Book Sellers. Villupuram (South Arcot District)
20. Dinamani Stores No. 3/1. Old Post Office Road. Coimbatore-18.
21. Kumaran Book Depot. Book Sellers Erode-1.
22. Vela Book Company. No. 4, Annaji Rao Street. Erode-1.
23. Radhamani Stores. No 6-A Raja Street. Coimbatore-1.
24. Aiantha Book Centre. Salem-1.
25. Sri Vidhya Book Shop. No. 63. Tennure High Road. Tiruchirappalli-2.
26. Sri Rama Vilas Book Shop. No. 90 Amman Sannathi. Madurai-1.

*In other States.*

1. Jain Book Agency, New Delhi-1.
2. International Book House, Trivandrum.
3. Firma. K. L. Mukhopadhyay, Calcutta-12.
4. The Book Syndicate, Hyderabad-1.
5. Labour Law Publications, Hyderabad.
6. Puthaghalayam, Pondicherry.
7. Prabhu Book Service, Gurgaon, Haryana.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 5TH NOVEMBER 1979) AND [illegible] BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING.

வெளியீடு 21-2-85] [Issued 21-2-85

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, அக்டோபர் 9, 1984 - தொகுதி LXVIII எண் 2

Tuesday the 9th October 1984 - Volume LXVIII No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George, Madras - 600 009**

விலை: ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

# உள்ளடக்கம்.

**9—10—1984**


பக்கங்கள்.

1. வினாக்கள்-விடைகள் :

உடுக்குறியிட்ட வினாக்கள். . .. .. .. 55—99

2. தகவல் கோரல் :
தமிழக முதலமைச்சர் உடல்நலம் குறித்து .. 99—106

3. ஒழுங்குப் பிரச்னை :
அமைச்சரவையிலிருந்து திரு. எஸ் டி. சோம சுந்தரம் விலக்கப்பட்டதற்கான காரணத்தை அவைக்கு அறிவிப்பது குறித்து .. .. 106—115

4. அறிவிப்புகள் :

(அ) பேரவை அலுவல் .. .. .. 115—116

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல். . .. 116

(இ) நகர்ப்புற நில (உச்சவரம்பு—முறைப் படுத்துதல்) திருத்தச் செல்திறன் சட்ட முன்வடிவு. 1984 (ஆ. இ) .. 131

(ஈ) கட்டிட கட்டுமானப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்—பல்வகை விதித் துறைகள்) சட்டமுன்வடிவு, 1983 (ஆ. இ.) .. .. .. .. 149

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் :

(அ) சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு 1984. .. .. 116

(ஆ) தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1984 .. .. .. 117

(இ) சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1984 .. .. .. 117—121

(ஈ) கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்தச்) சட்ட, முன்வடிவு 1984 .. .. .. 123—127

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1984 .. .. .. 127—131

(ஊ) நகர்ப்புற நில (உச்சவரம்பு—முறைப் படுத்துதல்) திருத்தச் செல்திறன் சட்ட முன்வடிவு, 1984 .. .. .. 131—149

(எ) கட்டிட கட்டுமானப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்—பல்வகை விதித் துறைகள்) சட்ட முன்வடிவு, 1983 .. 149—176

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். 176—178

2811

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

———

1984, அக்டோபர் 9, செவ்வாய்க்கிழமை

புரட்டாசி 24, ரக்தாக்ஷி—திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும் ''

' யாம் அரசர்க்குப் பழைமையானவராய் உள்ளோம் ' எனக் கருதித் தகுதி அல்லாதவற்றைச் செய்யும் உரிமை கேட்டைத் தரும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### சிவாடி, பெரியவெண்மணி, காட்டுதேவாதூர் கிராமங்களில் உள்ள குடியிருப்பு மனைகள்மீது செல்லும் மின் கம்பித் தொடர்கள்

(*வினா எண். 20375)—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் வட்டம், சிவாடி, பெரியவெண்மணி, காட்டுதேவாதூர் ஆகிய கிராமங்களில் மக்கள் குடியிருப்பு மனைகள்மீது மின்கம்பிகள் செல்வது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அக்கம்பிகள் மாற்றி அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) மின்கம்பித் தொடர்கள் அமைக்கப்பட்ட பிறகே அவைகளின்கீழ் குடியிருப்புகள் ஏற்பட்டன. இதை மாற்றியமைப்பதற்கான செலவைக் குடியிருப்புக்குச் சொந்தக்காரர்கள் ஏற்றுக் சொள்வதாக இருந்தால் மின்கம்பித் தொடர்களை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[1984 அக்டோபர் 9

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சட்டமன்றப்
பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே குடியிருப்பு ஏற்படு
வதற்கு முன்பே மின் கம்பிகள் அந்தக் குடியிருப்புப் பகுதியில்
சென்றிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தி
ருக்கிறார்கள். இந்தக் குடியிருப்புகளுக்கு பட்டாக்கள் எல்லாம்
இலவசமாக அரசால் வழங்கப்பட்டிருக்கின்றன. அவர்களால்
வீட்டு மனை கட்டுவதற்கே சிரமமான நிலையில் இருப்பதால்,
இந்த மின் கம்பியை மாற்றுவதற்கான நிலைமையில் அவர்கள்
இல்லை. ஆதலால், அரசாங்கமே, ஏதாவது உதவி செய்து.
அந்த மின் கம்பிகளை மாற்றுவதற்கான நடவடிக்கையை எடுக்
குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்
களே, குடிசைவாசிகளின் சிரமத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்
கள். அதைவிட, சிரமமான நிலைமையில் மின்வாரியம் இருந்து
கொண்டிருக்கிறது. அரசு ஏதாவது உதவி செய்ய முடியுமா
என்பதுபற்றி அரசு ஆராயும்.

## இரண்டாவது அணு மின்நிலையத்தைத் தமிழகத்தில் நிறுவவேண்டு மென்பதற்கான வேண்டுகோள்

(*—வினா எண் 21904)—திரு. எம். சின்னசாமி மற்றும்
திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்
கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரண்டாவது அணு மின்நிலையத்தைத் தமிழகத்தி
லேயே ஏற்படுத்த வேண்டுமென்று மாநில அரசு மத்திய
அரசைக் கேட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கூடன்குளத்தில்
இரண்டாவது அணுமின் நிலையத்தை நிறுவ வேண்டும் என்று
மத்திய அரசை இவ்வரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்
களே, இரண்டாவது அணு மின்நிலையம் தமிழகத்திற்கு வந்தால்,
எவ்வளவு மின்சாரம் கிடைக்கும் ? இந்தத் திட்டத்தின் விவரம்,
மதிப்பீடு ஆகிய விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்
களே, தமிழகத்தில் அமையும்போது இந்த விவரங்களைத் தெரி
விப்பது எளிது.



984 அக்டோபர் 9]

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே,
இரண்டாவது அணு மின்நிலையம் ஆரம்பிப்பது பற்றிய
யோசனை வரவேற்கத்தக்கது. முதலாவதாக கல்பாக்கத்தில்
ஆரம்பிக்கப்பட்ட அணு மின்நிலையத்திற்குத் தேவையான
'ஹெவி வாட்டர்' முழுமையாகப் பெறுவதற்கான உறுதி அளிக்
கப்பட்டதா ? இல்லையெனில், அதற்கு என்ன மாற்று
ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகி
றேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்
களே, ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். திரு
நெல்வேலி மாவட்டத்தில் கூடன்குளத்தில் இரண்டாவது
அணு மின்நிலையம் வேண்டுமென்று கேட்டு வருகிறோம்.
இன்னும் அதுபற்றி இந்திய அரசு முடிவு செய்யவில்லை. தமிழ
கத்தில் எந்தெந்த இடங்களில் அணு மின்நிலையங்களை அமைக்க
லாம் என்பதை ஆராய்ந்து, அதுசம்பந்தமாக குழு இந்திய அர
சுக்கு அறிக்கை கொடுத்திருக்கிறது. அவர்கள் இன்னும் முடி
வெடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறது. முதலாவதாக நிறு
வப்பட்ட கல்பாக்கம் அணு மின்நிலையம்பற்றித் தனிக் கேள்வி
கேட்டால், விவரங்கள் தர இயலும்.

திரு. மூ. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கூடன்குளத்தில் அணு மின்நிலையம் ஆரம்பிப்ப
தற்கு 1972-லே அதற்கான கோப்புகள் தயார் செய்யப்பட்டி
ருக்கின்றன. அந்தப் கோப்புகள் இப்போது எந்த நிலையில்
இருக்கின்றன ? எந்த ஆண்டு இந்தத் திட்டத்தைத் துவங்க
மத்திய அரசு உத்தேசித்துள்ளது என்பதை அறிய விரும்புகி
றேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்
களே, இந்திய அரசிடமிருந்து 9—7—1984 அன்று நம் அரசுக்கு
வந்திருக்கின்ற கடிதத்தின்படி, தென்னகத்தில் எங்கெங்கு
அணு மின்நிலையங்கள் அமைப்பதற்கான இடங்கள் தேர்ந்தெடுக்
கப்பட்டிருக்கின்றன என்பதற்கான அறிக்கையை இந்திய
அரசு பெற்றிருப்பதாகவும், அந்த அறிக்கையின்மீது தக்க
நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நமக்குத் தகவல் வந்தி
ருக்கிறது.. அதுதான் இன்றைய நிலை.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்திய அரசு ஆய்வு செய்த இடங்கள் தமிழகத்தைப்
பொறுத்தமட்டில் எந்த, எந்த இடங்கள் ? அந்த இடங்
களுக்குத் தமிழக சர்க்கார் என்ன, என்ன வசதிகள் செய்து
தர வேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறதா ? அதற்கான
நடவடிக்கையைத் தமிழக அரசு எடுத்திருக்கிறதா என்பதை
அறிய விரும்புகிறேன்.

[1984 அக்டோபர் 9

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்
களே, இந்திய அரசின் சார்பில் தேர்வு செய்த இடங்களில்
கூடன்குளம் ஒன்று, முக்கியமானது. அந்த இடத்தில் எல்லா
வசதிகளையும்,—தண்ணீர் வசதி மிகத் தேவையானது, பேச்சிப்
பாறை நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் தருவது முதல்—எல்லா
வசதிகளையும்,—அமைத்துத் தர நாம் தயார் என்று இந்திய
அரசுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 16-8-1984
அன்று கடிதமும் எழுதி இருக்கிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே,
தமிழ் நாடு தொழில் வளர்ச்சியில் முன்னேற வேண்டுமென்று
இந்த அரசு பாடுபட்டு வருகிறது. அந்தத் தொழில் வளர்ச்
சிக்கு மின்சாரம் இல்லாத காரணத்தினாலும், நிலக்கரி தமிழ்
நாட்டில் பற்றாக் குறையாக இருக்கிற காரணத்தினாலும் மற்றும்
நீர்த் தேக்கங்களிலிருந்து அதிகப்படியான மின்சாரம் எடுக்க
முடியாத காரணத்தினாலும் இந்த அணு மின் நிலையத்தைத்
தமிழ் நாட்டிலேயே விரைவில் ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய
அரசிடம் தமிழக அரசு கோரிக்கை விடுக்குமா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்
களே, தென்னகத்தில் ஏற்படுகின்ற மொத்தப் பற்றாக் குறை
யில் பெரும் பங்கு பற்றாக் குறை இருப்பது தமிழ்நாட்டில்தான்.
ஆகையினால் மத்திய அரசின் மூலமாக நிறைவேற்றப்படுகிற
இந்த அணு மின் நிலையத்தை—நிலக்கரி கொண்டு வருவதாக
இருந்தாலும் வெகு தூரத்திலிருந்து கொண்டுவர வேண்டி
இருப்பதாலும், மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல்
நீர் மின் வாய்ப்புக்கள் குறைந்து விட்டதாலும்,—தமிழகத்தில்
ஏற்படுத்தினால்தான் நல்லது என்பதை நாம் தெளிவுபடுத்தி
இருக்கிறோம்.

1984 ஜனவரியில் சென்னையில் நடைபெற்ற மின்சார உற்பத்தி
குறித்த கருத்தரங்கு.

3—(*வினா எண். 22287)—திரு. பெ. சு. திருவேங்கடம் :
மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) சென்னையில் 1984 ஜனவரியில் நடந்த மின்சார
உற்பத்திக் கருத்தரங்கில் மின் உற்பத்தி நிலையங்களை நவீனப்
படுத்தி அதிகப்படியாக மின் உற்பத்தி செய்யும் திட்டம் ஆய்வு
செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இது குறித்து மின்வாரியம், திட்டங்கள் தயாரித்து
வருகிறது.



1984 அக்டோபர் 9]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்
களே, மின் வாரியம் திட்டங்கள் தயாரித்து வருகிறது என்று
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நவீ
னப்படுத்த ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டபொழுது அந்தக்
கருத்தரங்கிலே எப்படிப்பட்ட கருத்துக்கள் சொல்லப்பட்டன ?
அவை யாவை ? அவற்றை அமுல்படுத்துவதிலே ஏதாவது சிரமம்
உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்
களே, தமிழகத்தில் 3 அனல் மின் நிலையங்கள் இருக்கின்றன.
ஒன்று தூத்துக்குடி ; அதை மேம்படுத்த வேண்டிய அவசியம்
இல்லை. அடுத்தபடியாக பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலை
யத்திலும், எண்ணூர் அனல் மின் நிலையத்திலும் மேம்பாடு
செய்ய வேண்டிய பணிகள் நிரம்ப இருக்கின்றன. எண்ணூரில்
ஏற்கனவே ரூ. 37.64 கோடி செலவில் மேம்பாடு திட்டத்தை
அமுல்படுத்தி வருகிறோம். அதற்கு மத்திய அரசு அனுமதி
தந்துள்ளது. பேசின் பிரிட்ஜைப் பொறுத்தவரையில் தூசியைக்
கட்டுப்படுத்துகிற வகையில், Electro-static Precipitators
போடலாம் என்ற யோசனையை நாம் தெரிவித்து இருக்கிறோம்.
அதற்கு மாறாக, பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்தில் அனல்
மின் உற்பத்திக்குப் பதிலாக கேஸ் டர்பைன்ஸ் போடலாம்
என்கின்ற ஆலோசனையை நம்முடைய அரசு மத்திய அரசுக்குத்
தெரிவித்து இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்
களே, நவீனப்படுத்துவோம் என்று சொல்கின்றபொழுது, மின்
உற்பத்தியைப் பொறுத்தவரையில் தூத்துக்குடியிலும் சரி,
எண்ணூரிலும் சரி, பேசின் பிரிட்ஜிலும் சரி, நெய்வேலியிலிருந்து
எடுக்கப்படுகிற அந்த சதவீதம் அளவு நம்முடைய மாநில அர
சினுடைய நிர்வாகத்திலே இருக்கிற இந்த மின் உற்பத்தி
நிலையங்களால் உற்பத்தி செய்ய முடியவில்லை. ஆகவே, அந்த
மின் நிலையங்களை நவீனப்படுத்திய பிறகாவது, நெய்வேலியில்
உற்பத்தியாவதற்குச் சமமான சதவீதம் இந்த மின் நிலையங்
களில் உற்பத்தி செய்து தேவையைப் பூர்த்தி செய்ய இயலுமா ?
இதற்காக நவீனப்படுத்தும் முறையை அரசாங்கம் விரைவாக
நடைமுறைப்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,
நவீனப்படுத்துவது என்பது அங்கிருக்கிற இயந்திரங்களையும் அதி
லிருக்கிற தொழில் நுட்ப முறைகளையும் மாற்றி அமைப்பது
தான். வருகிற கரி, மோசமான சரியாக இருந்தால் என்னதான்
இயந்திரங்கள் செம்மையாகச் செயல்பட்டாலும் உற்பத்தித்
தரத்தினை மேம்படுத்துவது என்பது இயலாது. ஆனால் அங்கே
இருக்கிற டிசைன், எக்குவிப்மென்ட்ஸ் ஆகியவற்றை மாற்ற
எண்ணூரை பொறுத்தவரையில் நாம் ஏற்கெனவே அமுல்படுத்தி
வருகிறோம். பேசின் பிரிட்ஜைப் பொறுத்தவரையில் கூடிய
விரைவில் முடிவு எடுப்போம்.

[1984 அக்டோபர்

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள அனல் மின் நிலைய இயந்திரங்கள் திடீர்திடீரென்று பழுதாகி விடுவதால் மின் உற்பத்தி தடைப்படுகிறது. ஆகவே, ஒவ்வொரு அனல் மின் நிலையத்திலும் காஸ் டர்பைன்கள் பொருத்தி வைத்துக் கொள்ளப்பட்டால் இம்மாதிரி நேரங்களில் மின் தடைபடுவதைத் தடுக்க முடியும். அந்த இயந்திரங்கள் நம்முடைய நாட்டில் உற்பத்தியாகவில்லை என்பதால், வெளிநாடுகளில் இருந்து அவற்றை இறக்குமதி செய்வதற்கு மைய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ? அப்படி வற்புறுத்தி எதற்காவது அனுமதி பெற்று இருக்கிறதா?

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல யோசனை. இந்த யோசனை மாநில மின்சார அமைச்சர்கள் மாநாட்டில் மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அனல் மின் நிலையத்திற்கும் ஒரு 50 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்கிற வகையிலாவது டீசல் ஜெனரேட்டர் வைத்துக் கொண்டால் சாதாரணமாக ஏற்படுகின்ற மின்சார ஏற்றத்தாழ்வுகளை (ப்ளக்சுவேஷன்ஸ் இன் தி கிரிட்) சமாளிக்க உதவிகரமாக இருக்கும். மத்திய அரசு முதலில் தயக்கம் காட்டினார்கள். இப்போது கொள்கை அளவில் அதை ஏற்கலாம் என்று பரிசீலித்து வருகிறது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னையிலே கூடிய அந்தக் கருத்தரங்கில் பேசின் பிரிட்ஜ் பற்றி பேசியதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது அதனுடைய உற்பத்தித் திறன் எவ்வளவு இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். பேசப்பட்ட அந்தக் கருத்தரங்கில் எதிர் காலத்தில் பேசின் பிரிட்ஜ் நிலையம் எவ்வளவு மின் உற்பத்தியைச் செய்யும் வகையில் மாற்றி அமைக்கத் திட்டமிடப்பட்டது என்பதையும்; அதே நேரத்தில் அதிலிருந்து வெளிப்படும் தூசு எந்த வகையில் தடுக்கப்பட வேண்டும் என்பதையும் குறித்து ஏதேனும் முடிவு எடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழக அரசைப் பொறுத்தவரையில், அந்த பேசின் பிரிட்ஜ் நிலையத்தில் தற்போது இருக்கும் அமைப்பிற்கு பதிலாக, இரண்டு 50 மெகா வாட் திறனுள்ள, மொத்தம் 100 மெகா வாட் மின் உற்பத்தி செய்யக் கூடிய திறனுள்ள வகையில் கேஸ் டர்பைன்கள் அமைத்து, அதன் மூலம் மின் உற்பத்தி செய்வது நல்லது என்று இந்திய அரசிடம் சொல்லி இருக்கிறோம். மத்திய எரி சக்தித் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் நானே நேரில் இதைப் பற்றித் தெரிவித்து இருக்கிறேன். அவர்களும் விரைவில் அதைப் பரிசீலித்து அனுமதி தருவதாகக் கூறியுள்ளார்கள். அப்படி ஒரு அனுமதி கிடைத்து விடுமானால், சென்னையைப் பொறுத்தவரையில் அதனால் ஏற்படும் சுற்றுப்புற சூழல் கெடுதல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்படும்.



1984 அக்டோபர் 9]

## மொரிஷியஸ் தீவில் உள்ள தமிழர்களுக்கான தமிழக அரசின் உதவி

*4—(வினா எண் 19491)—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மொரிஷியஸ் தீவில் உள்ள தமிழர்களுக்குத் தமிழ் படிப்பதற்காகத் தமிழக அரசு ஏதேனும் உதவி அளித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆம்.

திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிக்க தலைவர் அவர்களே, மொரிஷியஸ் தீவில் உள்ள தமிழர்களுக்குத் தமிழ் படிப்பதற்காக தமிழக அரசு உதவி செய்வதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இப்படிப்பட்ட முறையில் தமிழ் மொழியை வெளிநாட்டிலே பரப்புவதற்காக நம்முடைய அரசு உதவி செய்வது நல்லது என்றாலும் தமிழ் நாட்டிலேயே தமிழுக்கு நிறைய ஆபத்து வரும் சூழ்நிலை உருவாகி வருகிறது இந்தி மொழியைத் தமிழ் நாட்டிலே சிலர்தான் அரசியல் ஆதாயத்திற்காக எதிர்க்கிறார்கள் என்றும், இந்தி எதிர்ப்பு ஒரு ''அரசியல் அயோக்கியத்தனம்'' என்றும் இந்தியாவில் உள்ள முக்கிய பொறுப்பில் உள்ள சிலர் சொல்லி வருகிறார்கள். அதனால் தமிழ் மக்கள் மனதில் ஏற்படும் அச்ச உணர்வைப் போக்க அரசு ஏதாவது திட்டம் வகுத்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, 'இந்தி எதிர்ப்பு ஒரு அரசியல் அயோக்கியத்தனம்' என்று சிலர் சொல்லி இருப்பதாகச் சொன்னார்கள். அந்த வார்த்தை கடுமையாக இருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : அந்த வார்த்தையை அவைக் குறிப்பில் இருந்து எடுத்து விடுவது நல்லது.

திரு. ரா. உமாநாத் : அந்த வார்த்தை அவருடைய கருத்து அல்ல. யாரோ அப்படிச் சொன்னதாக இங்கே தெரிவித்தார்கள். அது ஒன்றும் அன்பார்லிமெண்டரி வார்த்தை அல்ல. ஆங்கிலத்தில் சொன்னால் அந்த வார்த்தை dishonest என்பதைக் குறிக்கும். It is not an unparliamentary word.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அந்த வார்த்தையே தமிழ் வார்த்தை அல்ல. தமிழுக்காகப் பேசிக்கொண்டு இருக்கும் அவர் தமிழ் வார்த்தையாகச் சொன்னால் சரியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'சிலர்' அப்படிச் சொல்லி வருகிறார்கள் என்று தான் சொல்லியிருக்கிறார்கள். அந்தச் 'சிலர்' யார் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. மூலக்கேள்வி

[1984 அக்டோபர் 9

மொரிஷியஸ் தீவில் உள்ள தமிழர்களுக்கு உதவி செய்வதைப் பற்றியதாகும். ஆகவே, மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே' இந்தியை எதிர்ப்பது தவறானது என்ற உணர்வோடு யாராவது விமர்சனம் செய்து இருந்தால் அது ஒரு அரசியல் அப்பாவித் தனம்.

திரு. கே. சௌந்திரராசன் : தலைவரவர்களே, மொரிஷியஸ் தீவிலுள்ள தமிழர்களுக்கு தமிழ் படிப்பதற்காக தமிழக அரசு உதவி செய்துள்ளது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். மொரிஷியஸ் தீவிலிருந்து தமிழ் சொல்லிக் கொடுப்பதற்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேண்டும் அல்லது தமிழ் பயின்றவர்கள் வேண்டும் என்று வேண்டுகோள் ஏதேனும் வந்திருக்கிறதா? அதன்மீது இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? தமிழ் ஆசிரியர்களை அல்லது தமிழ் பயின்றவர்களை அங்கு அனுப்புகின்ற யோசனை இந்த அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மொரிஷியஸ் நாட்டிலுள்ள ஆரம்ப பாடசாலைகளில் தமிழ் சொல்லித் தருவதற்கு வசதியாக, அங்குள்ள ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு தமிழை அங்குள்ள ஆரம்பப் பள்ளிகளில் எப்படிச் சொல்லித் தருவது எ பது பற்றிய ஆசிரியர் பயிற்சி வகுப்பினை ஆண்டொன்றுக்கு 50 ஆசிரியர்கள் வீதம் சென்னையிலுள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வாயிலாகப் பயிற்சி முகாமாக நடத்துவது பற்றிய கருத்துருவொன்று அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, மொரிஷியஸ் தீவில் தமிழ் சொல்லிக் கொடுப்பதற்கு ஆசிரியர்கள் தேவை என்று அரசு சார்பிலே விளம்பரம் செய்யப்பட்டு, அதற்கான நேர்முகத் தேர்வும் நடத்தப்பட்டது. ஆனால் பல மாதங்கள் ஆகியும் இன்னும் அவர்கள் அனுப்பப்படவில்லை. என்ன காரணத்தால் இந்த தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்த வினா மொரிஷியஸ் தீவு சம்பந்தப்பட்டதல்ல; பிஜி தீவு சம்பந்தப்பட்டது என்று கருதுகிறேன். தற்போது அது பற்றிய விவரம் இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, நம்முடைய அரசின் சார்பில் மொரிஷியஸ் தீவிலுள்ள தமிழர்கள் தமிழ் படிப்பதற்காக செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு? அதைப்போன்று வேறுபல வெளிநாடுகளில் இருக்கின்ற தமிழர்கள் தமிழ் படிப்பதற்கு நம்முடைய அரசு உதவி செய்திருக்கிறதா?



1984 அக்டோபர் 9]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே,
மொரிஷியஸ் தீவிலுள்ள தமிழ் சந்ததியினர் தமிழைச் சரிவரக்
கற்பதற்கு வசதியாக மொரிஷியஸ் உள்ளிட்ட ஆப்ரிக்க நாடு
களில் குடியேற்றம் பெற்றுள்ள தமிழ்ச் சந்ததியினர் தானாகவே
தமிழ் பேசக் கற்றுக்கொள்ளும் அடிப்படை அமைந்த விஞ்ஞான
ரீதியான குறுகிய காலத் தமிழ்ப் பயிற்சியை " ஒலிப்பதிவு
நாடாக்களில் தமிழ் " என்ற 6 மணி நேர குறுகிய கால பயிற்சி
யாக நூல் மற்றும் ஒலி வடிவங்களில் தயாரிக்க 500 செட்டுகள்
கொண்ட இந்தப் பணிக்கு ஆகும் செலவு சுமார் 84,500
ரூபாயை அரசு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சிறப்பு
மானியமாக வழங்கியுள்ளது. இந்தப் பிரச்னை மொரிஷியஸ்
தீவு போன்ற இடங்களில் வந்திருக்கிறது. அங்கிருக்கிற தமிழர்
கள் நூறு ஆண்டுகளுக்கு முன்னால் குடியேறி, நாளாக நாளாக
அவர்கள் தமிழையே மறந்த நிலையில், இப்போது இருக்கிற
தமிழ்ச் சந்ததியினரின் குழந்தைகள் தமிழ் தெரியாத நிலையில்
இருப்பதால் இந்தச் சிறப்பு முயற்சியைத் தமிழ் நாடு அரசு
எடுத்திருக்கிறது.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, மொரிஷியஸ் தீவில் மட்டுமல்லாமல் உலகின் பல்வேறு நாடுகளில்,—ஏறத்தாழ 50 நாடுகளுக்குமேல் —தமிழர்கள் இருக்கிறார்கள், இருக்கக்கூடிய தமிழர்களுக்கு எல்லாம் தமிழைக கற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆசை இருப்பதை, எங்களைப் போன்றவர்களை எல்லாம் வெளி நாடுகளுக்கு அனுப்பிவைத்த இந்த அரசுக்கு கோரிக்கையாக வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில், தமிழ் கற்றவர்கள் ஆங்கிலம், இந்தி படிப்பதற்கு வசதியாக அந்த மொழிகளைத் தமிழோடு கலந்து அச்சிட்டு புத்தமாக வெளியிட்டிருப்பதைப் போன்று, அந்த நாட்டு மொழியோடு தமிழைக் கலந்து புத்தக வடிவில் வெளியிடவும், ஒலி, ஒளிக் காட்சிகள் மூலமாகக் கற்பிக்கவும் 'உலகத் தமிழ் மையம்' என்று ஏதாவது ஒரு அமைப்பை அமைக்கின்ற வகையில் முனைப்பான நடவடிக்கை எடுக்க நமது அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகின் பல்வேறு பகுதிகளில் தமிழை மறந்த நிலையில், தமிழ் தெரியாத நிலையில் இருக்கின்ற தமிழர்களுக்குத் தமிழைச் சொல்லித் தருவதற்காக ஒரு குறுகிய காலப் பயிற்சியை நாம் இப்போது தயார் செய்திருக்கிறோம். அது வெற்றிகரமாக நடைபெறுமேயானால் அதைப் பல்வேறு நாடுகளிலேயும், பயன்படுத்த முடியும். முதலிலே ஆங்கிலத்தின் மூலமாகச் சொல்லித் தருவதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, அதற்குப் பிறகு ப்ரெஞ்ச் மொழியின் மூலமாகவோ அல்லது அந்தந்த நாடுகளில் உள்ள மொழிகளின் மூலமாகவோ தமிழைச் சொல்லித் தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டி வரும். அது பின்னாலே நாம் செய்ய வேண்டிய முயற்சிகள் ஆகும்.

திரு. தி. கா. நல்லப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மொரிஷியஸ் தீவில் மட்டுமல்லாமல் வேறுபல நாடுகளிலே உள்ள தமிழர்களுக்கும் தமிழ் கற்றுக் கொடுப்பதற்காகத் தமிழக அரசு எவ்வளவு செலவு செய்கின்றது, எந்தெந்த நாடுகளுக்கு அந்த மாதிரி உதவிகளை அரசு செய்கின்றது என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நான் மொரிஷியஸ் தீவிற்குப் போய் இருந்தபோது அங்கே இருக்கின்ற தமிழர்கள் தமிழ் தெரியாமல் இருக்கின்ற நிலைமைகளை உணர்ந்து, இங்கே வந்ததற்குப் பிறகு எடுத்துக் கொண்ட முயற்சிகள்தான் இந்த அளவுக்கு வந்திருக்கின்றது. மொரிஷியஸ் தீவிற்குப் பக்கத்திலே '' ரேயூனியன் '' என்ற ஒரு ப்ரெஞ்ச் பிரதேசம் இருக்கின்றது. அங்கே இருக்கின்ற தீவிலே தமிழர்கள்தான் அதிகப்படியாக இருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அந்தத் தீவில் இருப்பவர்கள் தமிழ் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். இப்படி மொரிஷியஸ் தீவிற்கு மேற்கே உள்ள பல்வேறு சிறுசிறு இடங்களிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, மொரிஷியஸ் தீவின் தமிழர்களுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சி வெற்றிபெற்றால் அதனை மற்ற தீவுகளில் இருக்கின்ற தமிழர்களுக்கும் நாம் விரிவுபடுத்தி பயன்படுத்தலாம்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்கள் மொரிஷியஸ் தீவிற்குச் சென்றிருந்தபோது அந்த நாட்டு மக்கள் தமிழ் படிப்பதற்குரிய ஆர்வம் கொண்டிருந்தும் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்றும் எனவே, அதற்கான உதவிகளைச் செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை கொடுத்ததாகச் சொல்லப்பட்டது. அந்தக் கோரிக்கைக்கேற்ப புத்தகங்கள் அனுப்பப்பட்டதா என்றும் அவ்வாறு அனுப்பப்பட்டிருந்தால் மேலும் அனுப்புவதற்கு உரிய வகையில் தனியார் ஸ்தாபனங்களையும் அழைத்து அவர்கள் மூலமாகவும் அந்த உதவிகளைச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்கள் மறுபடியும் மொரிஷியஸ் தீவிற்குப் போகும்போது புத்தகத்தைக் கொடுத்திருக்கிறார்கள். மேலும் அனுப்பியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 15,000 புத்தகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் அந்த முயற்சிகளைப் பொறுத்தவரையில் அங்கே இருந்து கேட்கப்படுகின்ற தேவைக்கேற்ப ஏற்பாடுகள் செய்யலாம். ஆனால் இப்போது புத்தகம் படிக்கின்ற நிலைமையில் அந்தத் தமிழர்கள் இல்லை......(குறுக்கீடு) .... பாட





புத்தகங்களைப் பொறுத்தவரையில் அந்த நாட்டுக்குத் தகுந்தபடியான பாடப்புத்தகங்களை அனுப்புவதற்காக மத்திய அரசிலே இருந்து ஒருவரை அனுப்பி பாடப்புத்தகங்கள் தயாரிப்பது சம்பந்தமான யோசனைகளைச் சொல்லச் சொல்லி இருக்கிறார்கள். அதற்கு மாநில அரசு என்னென்ன உதவிகளைச் செய்ய வேண்டும் என்ற நிலைமை வருகிறதோ அந்த உதவிகளைச் செய்ய அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக மொரிஷியஸ் நாட்டில் தமிழ் படிக்க விரும்புகின்றவர்களுக்கு ஏதேனும் உதவிகள் செய்யப்படுகின்றனவா ? எனக்குத் தெரிந்த வரையில் அங்கே தமிழ் படிப்பவர்களை ஊக்குவிப்பதற்காக அரசு விசேஷமாகத் தொகை ஒதுக்குவதாக அறிகிறேன். ஆனால் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மூலமாக இந்தப் பணிக்காக ஏதாவது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பல்கலைக் கழகத்திலே இதற்கென என்னென்ன முயற்சிகள் எடுக்கப்பட்டன என்ற விபரம் என்னிடத்திலே இல்லை. ஆனால் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் முயற்சி எடுக்கப்பட்டு அதற்கான நூல்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை அனுப்பி அவர்களிடத்திலே தமிழைச் சொல்லித் தரவேண்டும். அவ்வாறு சொல்லித் தருகின்ற பணி எந்த அளவுக்கு வெற்றிகரமாக நடைபெறுகின்றது என்பதைப் பார்த்து, நாம் தருகின்ற புத்தகங்கள் மூலமாக அவர்களுக்கு சுலபமாகத் தமிழ் சொல்லித் தர முடியுமா என்பதைப் பார்க்கவேண்டும். இல்லை என்றால் அந்தப் பாடப் புத்தகங்களில் உள்ள பாடங்களைத் திருத்தவேண்டி வரும். அந்த நிலையில் தான் இந்த முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மொரிஷியஸ் தீவில் மட்டுமல்லாமல் ரஷ்ய நாட்டில் உள்ள மாணவர்கள் ரஷ்ய யூனிவர்சிட்டியிலே தமிழ் ஆராய்ச்சி செய்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய தமிழ்ப் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்றும், இலக்கியப் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்றும் நாங்கள் அங்கே சென்றிருந்தபோது அந்த மாணவர்கள் முறையிட்டார்கள். எனவே, அந்த ரஷ்ய யூனிவர்சிட்டி மாணவர்களுக்குத் தமிழ்ப் புத்தகங்களை அனுப்ப அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இது தனியாகக் கேட்கப்பட வேண்டிய கேள்வியாகும்

[1984 அக்டோபர் 9

தமிழக வரலாற்றை எழுத அமைக்கப்பட்ட குழு

5—(*வினா எண். 21116)—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக வரலாற்றை எழுத அமைத்த குழு தனது பணியை முடித்துவிட்டதா ?

(ஆ) இல்லையெனில், எப்போது முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) இப்பணி எப்போது முடிவுறும் எனத் தற்போதைய நிலையில் அறுதியிட்டுக் கூற இயலாமல் உள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றை எந்தக் காலத்திலிருந்து எந்தக் காலம் வரையில் எழுதவேண்டும் என்று அரசு ஏதேனும் வரையறை செய்து இருக்கின்றதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1. தொல் பழங்காலம் ; 2. சங்க காலம் ; 3. பல்லவர்—பாண்டியர் காலம் ; 4. சோழப் பெருவேந்தர்கள் காலம் : 5. பிற்காலம் ; 6. இக்காலம் என ஆறு பிரிவுகளாகப் பிரித்து எழுத வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. தொல் பழங்காலம் என்ற நூல் 1975-லே வெளியிடப்பட்டது. அரசியல் வாழ்வு—இரண்டாம் தொகுதியாக சங்க காலம் 1983 சனவரித் திங்கள் 15-ஆம் நாள் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாளில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வெளியிடப்பட்டது. மீதி பகுதிகள் வெளியிடப்பட வேண்டும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, முழுமையாக எழுதுவதற்கு அறுதியிட்டு இவ்வளவு காலம் என்று சொல்ல முடியாது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆராய்ச்சி படிப்புக்காகப் படிக்கும் மாணவர்களுக்கு மிகச் சாதாரணமான பாடங்களைக் கொடுப்பதை விட, இது மாதிரி குறிப்பிட்டு தமிழகத்தினுடைய வரலாற்றை எழுதுவதற்கான பணியை ஒப்படைப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே. இந்தப் பணியை தமிழ்ப் பல்கலைக்கழகத்தினிடம் ஒப்படைப்பது குறித்து அரசு இறுதி முடிவு எடுக்க இருக்கிறது.

திரு. ஆர். தியாகராசன் : தமிழகத்தினுடைய வரலாற்றை எழுதும்போது தமிழகத்தின் சுதந்திரப் போராட்டச் சரித்திரமும் சேர்த்து எழுதப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ' இக்காலம் ' என்ற அப்பகுதியில் அதுவும் வரத்தான் வேண்டும்.



1984 அக்டோபர் 9]

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, தமிழக வரலாறு என்பது வேறு, தமிழ்ச் சமுதாயத்தின் வரலாறு என்பது வேறு. அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து இந்தக் குழு தமிழகத்தின் வரலாற்றை மட்டும்தான் தொகுத்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் தமிழர்களின் வரலாறு என்பது—இந்தியாவைத் தவிர வெளிநாடுகளாகிய, இலங்கை, மலேசியா, இந்தோனேசியா போன்ற பல்வேறு நாடுகளிலும் தமிழர்கள் ஏறத்தாழ பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அந்த வரலாற்றை எல்லாம் சேர்த்து தொகுத்து, இந்த வரலாற்றோடு இணைத்து வெளியிடுவதற்கு அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அரசு ஆணையிட்டு, வரலாறு எழுதுவது என்பதே ஒரு சரியான முறையல்ல என்பதுதான் என்னுடைய கருத்தாகும். அது ஆராய்ச்சியாளர்கள் தங்களுக்குக் கிடைத்திருக்கின்ற ஆதாரங்களை வைத்துக் கொண்டு எழுதப்பட வேண்டிய ஒன்றே தவிர, அரசு ஆணை ஒன்றின் மூலம் எழுதப்படவேண்டிய ஒன்றல்ல. ஆகவே, இது பல்கலைக் கழகத்திலே நடைபெறக் கூடிய ஒன்று என்று கருதி, இப்போது தமிழ்ப் பல்கலைக்கழகத்தினிடம் ஒப்படைக்க இருக்கிறோம். பல்கலைக்கழகங்கள் ஒன்றல்ல, பல இருக்கின்றன. எந்தப் பல்கலைக் கழகத்திற்கு இதுபோன்ற மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை ஏற்று செயல்படுவதற்கு எல்லா வாய்ப்புகளும் இருக்கின்றனவோ, அந்தப் பல்கலைக் கழகங்கள் அப்படிச் செய்யலாம்.

திரு. ஏ. கி. சண்முகம் : தலைவர் அவர்களே, தமிழக வரலாறு எழுதும்போது அதிலே மொழிப் போராட்டம் அடங்குமா ? இந்திய வரலாற்றை எழுதி காலப் பெட்டகத்தில் புதைத்து வைப்பதைப் போன்று, தமிழக வரலாற்றையும் எழுதி காலப் பெட்டகத்தில் புதைத்து வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தல்லவர் அவர்களே, இந்திய வரலாறு எழுதும்போது தமிழகத்தினுடைய வரலாற்றுக்கு ஒரு முக்கியத்துவம் தரப்படவில்லை. அதனுடைய உண்மையான நிலையை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு தரப்படவில்லை என்ற காரணத்தினாலே இந்தப் பிரச்சினை எழுந்திருக்கிறது என்று கருதுகிறேன். தமிழக வரலாற்றை எழுதுவதற்கு தமிழகத் தென்று அரசு முயற்சித்துக் கொண்டிருக்கிறது. இருந்தாலும், இதையே பேராசிரியர்கள், பல்கலைக்கழகங்கள் தலைமையில் எழுதுவது தான் சிறந்தது என்பதால் இதைப் பல்கலைக் கழகத்திற்குத் தருகிறோம். இப்போது நாம் தமிழக வரலாறு என்று குறிப்பாகச் சொல்லியிருப்பதால், இந்தச் செய்தியும் விடுபட்டுப் போகாமல் அந்தப் பேராசிரியர்கள் தக்க ஆதாரங்களுடன் இந்த நூலை வெளியிடுவார்கள் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது.

[1984 அக்டோபர் 9

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றுவது குறித்து 1983-84-ல் பெறப்பெற்ற கோரிக்கைகள்.

6—(*வினா எண். 21260)— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப்பள்ளியாக மாற்றுமாறு அண்மையில் 1983-84-க்கு அரசுக்கு ஏதேனும கோரிக்கை வந்ததா?

(ஆ) ஆம் எனில் எந்தெந்த பள்ளிகள் கோரியுள்ளன?

(இ) அரசு என்ன முடிவு செய்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ), (ஆ) மற்றும் (இ) : விவர அறிக்கை ஒன்று* அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-30)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, கேட்கப்பட்டுள்ள கேள்வி ரொம்ப காலம் கடந்து போய்விட்டது என்று நினைக்கிறேன். அதற்குப் பிறகு, ஒரு ஆண்டுக் காலத்திற்குப் பிறகு சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என நினைக்கிறேன். 1983-84-ம் கல்வியாண்டில் நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை என இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்படாததற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே அந்த ஆண்டு மேல்நிலைப் பள்ளிகள் துவங்கத் தேவை இல்லை என்றிருந்ததால நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, ஏற்கனவே வந்த கோரிக்கையின் அடிப்படையில் அதிலும் குறிப்பாக மதுரா கோட்ஸ் தொழிலாளர்களுக்காக இருக்கிற அந்த அசோஸியேஷன் பள்ளியையும் விக்கிரமசிங்கபுரத்திலுள்ள லேபர் அசோஸியேஷன் பள்ளியையும் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தவேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் இந்த ஆண்டு உயர்த்தப்பட்ட இருக்கின்றனவா எப்போது அவை செயல்படத் துவங்கும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, உயர்த்தப்பட்டிருக்கின்றன என்ற செய்தி தெரியும் என்று கருதுகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலில் 1983-84-ம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றுவதற்கு நிதி ஒதுக்கீடு,

* 178-182-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



1984 அக்டோபர் 9]

செய்யப்படவில்லையென்று சொன்னார்கள். 1984-85-லாவது அவசியத்தைக் கருதி, குழந்தைகள் மிகத் தூரத்திலுள்ள மேல்நிலைப் பள்ளிகளுக்குச் செல்லவேண்டியிருப்பதால், அப்படிப்பட்ட இடங்களில் மேல்நிலைப் பள்ளிகள் துவங்க அரசு முன்வருமா ?

குறிப்பாக என் தொகுதியில் இளையரசன் அரசு உயர்நிலைப் பள்ளியையும் திருவேங்கடம் அரசு உயர்நிலைப் பள்ளியையும் பணம் வசூல் செய்து பொது மக்கள் கட்டியும்கூட அந்த உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கப்படாமல் இருக்கின்றன. இனிமேலாவது அமைச்சர் அவர்கள் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பல்வேறு கோரிக்கைகள் வந்ததன் காரணமாகத்தான் ஏறக்குறைய நாற்பது பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கும் விவரங்கள் என்னிடமில்லை. ஆகவே திட்டவட்டமாக என்னால் சொல்லமுடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் பதிலில் முப்பது பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்குவதற்கு வழிவகை செய்திருப்பதாகச் சொன்னார்கள். பெண்கள்மீது அக்கறை வைத்துள்ள இந்த அரசு எங்கெங்கெல்லாம் உயர்நிலைப் பள்ளிகளில் பெண்கள் அதிகமாகப் படிக்கிறார்களோ அவர்களுக்காக தனிச் சலுகை காட்டி, எவ்வளவு பணம் செலவழித்தாலும் பரவாயில்லை— இப்போது பத்திரிகைகளில் பார்க்கிறோம், பல இடங்களில் 16 வயது மாணவன் கூட 16 வயது மாணவியைக் கத்தியால் குத்துகிற சூழ்நிலை இருப்பதால், அப்படிப்பட்ட நிலைமை களை மாற்றியமைப்பதற்காக பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளையாவது மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்குவதற்கு வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கருத்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, 1983-84-ம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றுவதற்கு அரசு அனுமதி அளிக்கவில்லை என அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதற்குக் காரணம் என்ன ? இந்த ஆண்டு முப்பது பள்ளிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்திருக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு அதிகமான கோரிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன. அவைகளைப் பரிசீலித்து அதிகப்படியான உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, போன ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யாததற்குக் காரணம் அந்த ஆண்டு மேல்நிலைப் பள்ளிகள் துவங்க வேண்டியதில்லை என்று அரசு கருதியதால் பணம் ஒதுக்கவில்லை. அதுமட்டுமல்ல, அதற்கு முன்னால் துவக்கப்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் பலவற்றில் 150,200 மேல்நிலைப் பள்ளிகளில் போதுமான அளவு மாணவர்கள் எண்ணிக்கை இல்லாமல் இருக்கிறது என்ற ஒரு நிலைமை இருந்த காரணத்தாலும் நாம் மேல்நிலைப் பள்ளிகள் துவங்கவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் வற்புறுத்தி வந்த காரணத்தாலும் நியாயமான இடங்களில் துவங்கவேண்டியிருக்கின்றன என்ற நிலைமையினாலும் இந்த ஆண்டு முப்பது பள்ளிகளுக்கு அனுமதி தந்திருக்கிறோம். உறுப்பினர்களிடமிருந்து யோசனைகள் வந்து, வேறு எங்கேயாவது மேல்நிலைப் பள்ளிகள் துவங்கவேண்டிய நிலைமை இருக்குமானால், அதை கவனத்தில் கொண்டு வந்தால் இப்போதிருக்கிற வசதிக்கேற்ப நாம் முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, ஹையர் செகன்டரி ஸ்கூல்கள் ஆரம்பிக்கிறபோது கோ-எஜுகேஷனாக ஆரம்பித்தோம். இப்போது கோ-எஜுகேஷன் இருக்கிற நிரந்தரப் பள்ளிகளில்கூட பெண்களைப் பொறுத்தவரையில் அந்தப் பள்ளியிலேயே அவர்கள் படிக்க விருப்பம் தெரிவித்தும், வேறு பள்ளிகளுக்குச் செல்லவில்லை என்று சொன்னாலும்கூட, பெண்கள் பள்ளிகளுக்குத்தான் போகவேண்டும் என்று வற்புறுத்தி வருவதை அரசு அறியுமா? அதைத் தடுத்து நிறுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பெண்களுக்கு தனியாக பள்ளிகள் வேண்டுமென்று நாம் கேட்கிறோம். அதற்காக, பெண்களுக்கு தனிப் பள்ளிகள் ஆரம்பிக்கிறோம். அப்படி ஆரம்பித்ததற்குப் பிறகு அங்கே போகமாட்டோம் என்று சொன்னால், இப்படி இரண்டு முரண்பட்ட கருத்துக்கள் கூறுவதன் மூலம் அரசுக்குத்தான் ஒரு குழப்பம் ஏற்படுகிறது. பெண்கள் மேல்நிலைப் பள்ளிகள் வருவதன் காரணமாக, பெண்களுக்காக தனியாக பள்ளிகள் அமைத்தும் இங்கிருக்கிற பெண்கள் அங்கே போகவில்லை என்றால் அந்தப் பள்ளிக்கூடங்களை மூட வேண்டிவரும். ஆகவே அப்படிப்பட்ட நிலைமை வராமல், போதுமான அளவிற்கு பெண்கள் இல்லாமல் இருக்கிறார்கள் என்றால்—அப்படிச் சில சந்தர்ப்பங்களில் அரசாங்கம் அதை ஏற்றுக்கொண்டு அனுமதி தருகிறதே தவிர மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் அதைச் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இதிலே நாம் குறிப்பாக கவனிக்கவேண்டியது என்னவென்றால், ஆண்களும் பெண்களும் ஒன்றாக படிப்பது நல்லதா அல்லது தனித்தனியாகப் படிப்பது நல்லதா என்பதைப் பார்க்க வேண்டும். நமக்குத் தெரிந்திருக்கிற விவரங்களின் அடிப்படையில் பொதுவாக ஒன்றாகப் படிப்பதுதான் நல்லது என்ற கருத்து இருக்கிறது.



ஆனால் ஒரு குறிப்பிட்ட வயதில் இருப்பவர்கள், 'அடலசன்ட் பீரியட்' அதாவது 14 வயதிலிருந்து 18, 19 வயது வரை இருப்பவர்கள் தனித்தனியாகப் படிப்பதுதான் நல்லது ; இல்லையென்றால் அவர்களது கவனம் பாதிக்கப்படுகிறது என்ற நிலைமையில் தனித்தனியாகப் படிப்பதுதான் நல்லது என்ற கருத்து இப்போது வலுப்பெற்று வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 30 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றுவதற்கு அரசு அனுமதித்திருப்பதைப் பாராட்டுகிறேன். இருந்தாலும் தஞ்சை மாவட்டத்தில் மேல வளையூர், கண்ணங்குடி, மேல்பாடி ஆகிய இரண்டு ஊர்களிலும் மேல்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்துவதற்கு அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இன்னும் சில பள்ளிகள் நியாயமான கோரிக்கைகள் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, பல மேல்நிலைப் பள்ளிகளில் ஸ்ட்ரென்த் போதிய அளவிற்கும் அதிகமாக இருக்கிறது. அந்தப் பள்ளிகளில் முஸ்லீம் பெண்கள் அதிகமாகப் படித்து வருகிறார்கள்; அந்தப் பெண்கள் தனியாகப் படிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, புதிய பள்ளிகள் திறக்கிறபோது இப்படிப்பட்ட சமூக நிலைமைகளை அனுசரித்துத்தான் நாம் அனுமதி கொடுத்து வருகிறோம்.

குசஸ்தலை ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் கட்டும் திட்டம்.

7—(*வினா 18536)—திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி வட்டம், மணவூர் அருகில் ஓடும் குசஸ்தலை ஆற்றின் குறுக்காக தரைப்பாலம் கட்டும் உத்தேசம் அரசிற்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

(இ) எவ்வளவு மதிப்பீடு ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ): இப் பணியை 1983-84 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பாகத் திட்டத்தின்கீழ் ரூ. 20.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப் பணிக்குத் தற்போது விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதற்கு தொழில் நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்ட பின்னர் இந்த ஆண்டு இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும்.

சிதம்பரம்—காட்டுமன்னார்குடி நெடுஞ்சாலையை விரிவுபடுத்துவதற்கான கோரிக்கை.

8—(*வினா எண். 18880)—திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம்—காட்டுமன்னார்குடி நெடுஞ்சாலையை விரிவுபடுத்தும்படி அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) தற்பொழுது ரூ. 4.99 இலட்சம் செலவில் இச்சாலையில் பல்வேறு பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, சாலையினுடைய அகலத்தை அதிகப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

மார்க்கம்பட்டியில் இயங்கிவரும் சத்துணவுக் கூடம்.

9—(*வினா எண். 23045)—திரு. மெ. ஆண்டி அம்பலம்; மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி சாணார்பட்டி யூனியன், மார்க்கம்பட்டியில் சத்துணவுக்கூடம் கீற்றுக் கொட்டகையில் இயங்கி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நிரந்தரக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இம்மாவட்டத்திற்கு "தாரா" (மு. கு. ச. தி.) நிதியிலிருந்து 19 சத்துணவுக் கூடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. இந்நிதியைப் பயன்படுத்தி மார்க்கம்பட்டியில் தற்பொழுதுள்ள கீற்றுக் கொட்டகைக்குப் பதில் ஓர் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.





திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வி. எஸ். கோட்டை ஊராட்சியில் ஒரு சத்துணவுக் கூடமும் நாகலாபுரம் ஊராட்சியில் ஒரு சத்துணவுத் கூடமும், வத்தலம் தோப்பம்பட்டி ஊராட்சியில் தேத்தாம்பட்டியில் சத்துணவுக் கூடம் ஒன்றும் சிறிய வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருவதால் அதற்கு ஒரு கட்டிடமும், காமாட்சிபுரத்தில் ஒரு சத்துணவுக் கூடமும் கட்ட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதிகளில் நிரந்தரமற்ற கொட்டகைகளை வைத்துக் கொண்டு இதுபோன்று சத்துணவு மையங்கள் நடத்தப்படுகிறதோ அந்தப் பகுதிகளில் ' தாரா ' என்ற நிறுவனத்தின் மூலம் நிரந்தரமான கொட்டகைகள் அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய அந்தப் பகுதிகளிலும் அமைப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9-40)

திரு. மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, சுக்காம்பட்டியிலே குழந்தைகள் சத்துணவுக் கூடம் தற்போது இல்லை. அவர்கள் 2½ கிலோ மீட்டர் தூரம் போய் பக்கத்தில் உள்ள நாகனம்பட்டியிலேதான் சாப்பிடவேண்டியிருக்கிறது. அது மட்டுமல்லாமல் மழைக் காலங்களில் குழந்தைகள் போவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, சுக்காம்பட்டியிலே ஒரு சத்துணவுக் கூடத்தை அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தேவையின் அடிப்படையிலே அது எடுத்துக் கொள்ளப்படும்.

சர்வதேசத் துறைமுக நிர்வாகப் பயிற்சிக் கழகத்தைத் தமிழகத்தில் அமைக்கும் திட்டம்.

10—(*வினா எண். 22061) — திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்வதேசத் துறைமுக நிர்வாகப் பயிற்சிக் கழகத்தைத் தமிழகத்தில் அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) இந்நிறுவனம் சென்னையில் ஏற்படுத்தப்பட்ட பின்னர், இந்தியாவிலுள்ள பெரிய துறைமுகங்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் ஆண்டுதோறும் வரும் சுமார் 3,500 துறைமுக அதிகாரிகளுக்கு துறைமுகப் பணியிலும், துறைமுக நிர்வாகத்திலும் பயிற்சி அளிக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சர்வதேசத் துறைமுக நிர்வாகப் பயிற்சிக் கழகத்தை விரை வில் அமைக்க மத்திய அரசுக்கு மாநில அரசு கோரிக்கை விடுக்குமா? எவ்வளவு ரூபாய் செலவில் இந்தத் துறைமுகப் பயிற்சிக் கழகம் அமைக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 6 கோடி ரூபாய் செலவில் அமைக்க திட்டம் போடப் பட்டிருக்கிறது. அதை விரைவிலே அமைக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை மாநில அரசாங்கம் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் அவர்களே, விரைவாக அமைக்க வேண்டும் என்ற முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சர்வதேச துறைமுக நிர்வாகப் பயிற்சிக் கழகத்திற்குத் தேவைப்படும் இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா? அது மட்டுமல்லாமல், உலகத்தில் வேறு எங்காவது இப்படிப்பட்ட பயிற்சிக் கழகம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 15-லிருந்து 20 ஏக்கர் வரை தேவை என்று கேட்கிறார்கள். உலகம் முழுவதும் எங்கெங்கே இருக்கிறது என்று நமக்குத் தெரியாது. ஆனால் சிங்கப்பூரில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதற்குப்பிறகு தென்கிழக்கு ஆசியாவில், இரண் டாவதாக இங்கே ஆரம்பிப்பதாக நமக்குத் தகவல் கிடைத் திருக்கிறது.

அண்ணா போக்குவரத்துக் கழகம் மூலம் பழங்குடியினருக்கு ஓட்டுநர் பயிற்சியளிக்கும் திட்டம்.

11—(*வினா எண். 22304)—திரு. செ. செம்மலை : மாண்பு மிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அண்ணா போக்குவரத்துக் கழகம் மூலம் பழங்குடியின ருக்கு ஓட்டுநர் பயிற்சி கொடுக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதே பயிற்சி மற்ற போக்குவரத்துக் கழகத் திற்கும் விஸ்தரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) இல்லை. ஆனால் பொதுவாக, ஓட்டுநர் உரிமம் பெற்றுக் கொடுப்பதற்கான பயிற் சிப் பள்ளிகள் எல்லா போக்குவரத்துக் கழகங்களிலும், நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.





திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினருக்கு என்று தனியாக பயிற்சிப் பள்ளி அமைக்கப்படவில்லை என்று சொன்னாலும், இதுவரையில் எத் தனை போக்குவரத்துக் கழகங்கள் மூலம் இப்படிப்பட்ட பயிற்சிப் பள்ளிகள் துவக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள 12 போக்குவரத்துக் கழகங்கள் 13 ஆக ஆகியிருக்கின்றன. இந்த 13 போக்குவரத்துக் கழகங்களிலே 4 போக்குவரத்துக் கழகங்களில் இதை ஆரம்பிப்பதற்கான நட வடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இந்த ஆண்டே எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் ஆரம்பிக்க வேண்டும் என்ற முயற்சியை போக்குவரத்துக் கழகங்கள் எடுத்துக் கொண் டிருக்கின்றன.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி பயிற்சி பெறுபவர்களுக்கு போக்குவரத்துக் கழகத்தின் மூலம் ஏதாவது கட்டணம் வசூலிக்கப்படுகிறதா ? அப்படி கட்டணம் வசூலிக்கப்பட்டால் பழங்குடியினருக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்குப் சலுகைகள் அளிக்கிற வகையில் அவர்களுக்கு அந்தக் கட்டணச் சலுகையாவது அளிக்க அரசு முன் வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ ஒரு ஓட்டுநருக்கு 6 மாதம் பயிற்சி யளிக்க வேண்டியிருக்கிறது. பழங்குடியினர் என்று பார்க்காமல் எல்லோருக்குமே சலுகையிலே, 1,000 ரூபாய் மட்டும் கட்டினால் போதும் என்ற கட்டண விகிதத்தோடு அந்தப் பயிற்சி அளிப்ப தற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்பட்டவர்கள் இதுவரையில் எத்தனை பேர்கள்? அவர்கள் பயிற்சி முடிந்த பிறகு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அண்ணா போக்குவரத்து கழகம் மூலம் பழங்குடியினருக்கு ஓட்டுநர் பயிற்சி கொடுப்பதைப் பற்றிய கேள்வி இது. எனவே மூலக் கேள்வியை ஒட்டிக் கேளுங்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்பட்டவர்கள் இதுவரையில் எத்தனை பேர்கள்? பயிற்சி முடிந்தவுடன், பயிற்சி அளிக் கப்பட்டவர்களுக்கு போக்குவரத்துக் கழகத்திலே பணியிடம் ஒதுக்கிக் கொடுக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் நாம் ஆரம்பிப்பதாக இருக்கிறோம். ஐ.ஆர்.டி. என்ற சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் மூலமாக நாம் பயிற்சி கொடுத்துக் கொண்டு வந்தோம். முடிந்த வரையில் அவர்களைத்தான் நாம் ஆங்காங்கே எடுத்துக் கொண்டு வந்தோம். ஒரு வேளை அவர்கள் கூடுதலாகப் பயிற்சி கொடுத்துவிட்டால், அவர்கள் அத்தனைபேரையும் எடுத்துக் கொள்ள உத்தரவாதம் கொடுக்க முடியாது. ஒட்டு மொத்தத்தில் ஓட்டுநர்கள் தரம் உயர வேண்டும் என்பதற்காகத்தான் இந்த முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. போக்குவரத்துக் கழகத்திற்கு ஓட்டுநர்களைத் தயாரிப்பதற்காக மட்டுமல்லாமல், ஏனைய தனியார் துறைகளுக்கும் பயன்படுத்த வேண்டும் என்ற உணர்விலேதான் இந்த ஏற்பாட்டை நாம் செய்திருக்கிறோம்.

கோவை மாவட்டத்தில் கடந்த மூன்றாண்டுகளில் பேருந்துகள் இயக்கப்படும் புதிய வழித்தடங்கள்.

12—(*வினா எண் 23093)—திரு. மா.சின்னராசு : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் எவ்வளவு புதிய வழித்தடங்களில் பேருந்துகள் விடப்பட்டிருக்கிறது?

(ஆ) கூடுதலாக விடப்பட்டுள்ள பேருந்துக்ள் எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) கோவை மாவட்டத்தில் கடந்த மூன்றாண்டுகளில் மொத்தம் 66 புதிய வழித்தடங்களில் சேரன் போக்குவரத்துக் கழக பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன.

(ஆ) இம் மூன்றாண்டுகளில் ஏற்கனவே இயங்கி வரும் வழித்தடங்களில் கூடுதலாக 22 பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தினுடைய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பார்க்கிறபோது கூடுதலாக விடப்பட்ட பேருந்துகள் 22 என்பதைப் பார்க்கிறபோது அங்கே உள்ள பயணிகளுடைய தேவைக்கு ஏற்றதாக அமையவில்லை என்று கருதுகிறேன். அண்மைக்காலத்திலே கூடுதலாக பேருந்துகள் விடுவதற்கு அமைச்சர் அவர்கள் உத்திரவு வழங்கியிருக்கிறார்களா? கூடுதலாக பேருந்துகள் கடந்த 2 மாதங்களில் எவ்வளவு விடப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, 14—6—1984 வரையில் நாங்கள் கணக்குக் கொடுத்திருக்கிறோம். அதற்குப் பின்பு இதுவரையில் ஏறத்தாழ 10 பேருந்துகள் கூடுதலாக விடப்பட்டிருக்கின்றன. இன்னும் எங்கெங்கே



பேருந்துகள் கேட்கிறார்களோ அதை பரிசிலனை செய்து விட வேண்டுமென்ற முறையிலே ஏற்பாடுகளை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். கொஞ்சம் குறைவாக எண்ணிக்கை இருப்பதற்குக் காரணம் ஏற்கெனவே தேவையான அளவுக்கு பேருந்துகளை சேரன் போக்குவரத்துக் கழகம் இயக்கியதுதானே தவிர அப்படி பேருந்துகள் இயக்கப்படாமல் இருந்திருந்தால் அந்த இடங்கள் அத்தனைக்கும் பேருந்துகள் விடப்பட்டிருக்கும்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே இருக்கிற எல்லா கிராமங்களுக்கும் பெரும்பகுதிக்கு பேருந்துகள் விடப்பட்டிருந்தாலும்கூட நெரிசல் அதிகமாக உள்ள வழித்தடங்களில் வருகிற வசூலை கருத்தில் கொண்டு எங்கே அதிக நெரிசல் இருக்கிறதோ அந்த வழித்தடங்களில் புதிதாக சேரன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பேருந்துகள் விடப்படுவதற்கு உத்திரவிடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நெரிசல் இருக்கிற நேரங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, கோவை
மாவட்டத்திலே கடந்த 3 ஆண்டுகளில் 66 புதிய வழித் தடங்
களில் பேருந்துகள் விடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள்
தெரிவித்தார்கள். கோவை மாநகராட்சி தொழிலாளர்கள்
அதிகமாக இருக்கிற பகுதியாக இருக்கிற காரணத்தினாலும்
கோவையை கார்ப்பரேஷனாக ஆக்கியதால் பள்ளிகளுக்குச்
செல்லக்கூடிய குழந்தைகள் கூட பீக் ஹவர்ஸில் செல்ல முடி
யாத அளவுக்கு நெருக்கடி இருக்கிற காரணத்தினாலும் அப்
படிப்பட்ட நேரங்களிலேயாவது அதிகப்படியான பேருந்து
களை விடுவதற்கு அரசு முன்வருமா? என்னுடைய தொகுதியான
அவினாசி போன்ற தொகுதிகளில் கிராமங்களுக்கு அதிகப்படியான
பேருந்துகள் விடப்படாமல் இருந்துகொண்டிருக்கிற காரணத்
தினால்—அந்தக் கிராமங்களினுடைய பட்டியலையே நான்
தொடுத்திருக்கிறேன்—அந்த மாதிரியான இடங்களிலே
அதிகமான பேருந்துகளை விடுவதற்கு அமைச்சர் அவர்கள்
முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : ஏற்கெனவே நான் சொன்னேன். நெரிசலான இடங்களில் அதிகப்படியான பேருந்துகள் விடப்படுமென்று சொன்னேன். பேருந்துகள் எங்கெங்கு தேவையோ அது யார் தொகுதி என்று கணக்குப்பார்க்காமல்—அங்கேயெல்லாம் பேருந்துகளை இயக்குவதற்கு அரசாங்கம் தயக்கம் காட்டியதில்லை. எனவே நீங்கள் பட்டியல் கொடுத்தால் அரசாங்கம் முழு மனதோடு ஏற்றுச் செய்யும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, புதிய வழித்தடங்களில் பேருந்துகள் விடப்படவேண்டுமென்ற அடிப்படையில் அவசியம் எங்கு அதிகமாக இருக்கிறது என்பதை எப்படிப் பார்க்கிறார்கள்? மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே தெரிவிக்கப்பட்ட அடிப்படையிலே அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே ஒரு குழுவை அமைத்தோ அவர்கள் சொல்லக்கூடிய அந்த லிஸ்டின் அடிப்படையில் அவசியமான இடங்களில் கலெக்டர்களே அனுமதிக்கக்கூடிய வழக்கம் இருந்ததே, இப்போது எல்லாமே அமைச்சரிடம் வந்துதான் புதிய வழித்தடங்களை சாங்ஷன் செய்ய வேண்டுமென்ற நிலைமை இருப்பது உண்மைதானா? அதை மாற்றி எந்த எந்தப் புதிய வழித்தடங்களில் பேருந்துகளை விடவேண்டுமென்பது குறித்து முன்னாலே இருந்ததைப்போல் கலெக்டர்களே அனுமதி வழங்கக்கூடிய முறையைக் கொண்டுவர முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, முறையாக உரிமங்கள் தருகிறபோது மாவட்ட ஆட்சித் தலைவர்தான் வழங்கிக் கொண்டிருந்தார்கள். இப்போது அந்த முறை மாற்றப்படவில்லை. இப்போது போக்குவரத்துக் கழகங்கள்தான் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கின்றன. தனியார் துறைக்கு நாம் கொடுப்பதில்லை. எனவே அவர்களுக்கு அந்த வேலையைக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எந்த எந்த இடங்களுக்கு பேருந்துகள் தேவை என்று பரிந்துரை செய்வதற்கு எந்தத் தடையும் இல்லை. அவர்கள் சொல்கிற சில இடங்களில் நாம் பார்வையிட்டு கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்போது இருக்கிற நிலையில் போக்குவரத்து அதிகாரிகளும் போக்குவரத்துக் கழக அதிகாரிகளும் வழித்தடங்களைப் பார்த்து பேருந்துகள் போவதற்கு சரியான பாதை இருக்கிறதா என்று பார்த்து அதற்குப் பிறகு எவ்வளவு வசூல் ஆகும் என்று கணக்குப் பார்த்து, சில நேரங்களில் அன்-சர்வ்டு ஏரியாவாக இருந்தால் பேருந்து செல்லாத இடங்களாக இருந்தால் வசூல் கணக்கைப் பார்க்காமல் நேரடியாகப் பேருந்துகளை இயக்கக்கூடிய நிலையும், ஏற்கெனவே பேருந்துகள் போய்க்கொண்டிருந்தால் எவ்வளவு வசூலாகிறது என்று பார்த்து கூடுதல் பேருந்துகள் தேவைதானா என்பதைப் பார்த்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

### கிராமப்புறத்திலுள்ள படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டம்.

13 —*வினா எண். 2690—திரு. இல. பலராமன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு கிராமப்புற படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற அடிப்படையில் தமிழகத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது?





(ஆ) இதனால் எவ்வளவு இளைஞர்கள் பயன் அடைவார்கள்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, (அ) ஊரக பகுதிகளில் உள்ள படித்த இளைஞர்களுக்கும் மற்றவர்களுக்கும் சுய வேலை பயிற்சி அளிக்கும் திட்டம் உதவுகிறது. அதன் செலவுகளை, மத்திய, மாநில அரசுகள் சமமாக ஏற்கின்றன. அதேபோல், மாவட்ட தொழில் மையங்களும், அப்பகுதிகளில் வசிக்கும் படித்த இளைஞர்களுக்கும், மற்றவர்களுக்கும் உதவுகின்றன. அதன் செலவையும் மத்திய, மாநில அரசுகள் சமமாக ஏற்கின்றன. மற்ற திட்டங்களில், படித்த இளைஞர்கள் பெறும் உதவிக்கு மத்திய அரசிடமிருந்து மொத்த கடனாகவும்/மானியமாகவும் வருகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1980-81ல் | பயிற்சி பெற்றவர் | எண்ணிக்கை | 5,058 |
| | 1981-82ல் | பயிற்சி பெற்றவர் | எண்ணிக்கை | 61,117 |
| | 1982-83ல் | பயிற்சி பெற்றவர் | எண்ணிக்கை | 40,468 |
| | 1983-84ல் | பயிற்சி பெற்றவர் | எண்ணிக்கை | 30,970 |

(முற்பகல் 9-50)

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில் ஒரு எண்ணிக்கையை ஆண்டு வாரியாக சொன்னார்கள். இதில் பயனடைந்தவர்கள் என்ற ரீதியில் இன்றைக்கு அவர்கள் எப்படி பயனடைந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை ஆய்வு செய்வதற்கு மாநில அரசு ஏதாவது ஒரு குழுவை போட்டு இருக்கிறதா? எந்த எந்த இடங்களில் இதற்கான பயிற்சி நிலையங்கள் மாநில அளவில் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக தனியாக குழு இல்லை. ஆனால் தற்போது தமிழகத்தைப் பொறுத்தவரை வேலை வாய்ப்பு பயிற்சி துறையின் மூலமாகவும் மற்றும் இருக்கக்கூடிய வேளாண்மைத்துறை, ரூரல் டெவலப்மெண்டு, மீன்வளத்துறை, டான்சி, காதிபோர்டு, அனிமல் அஸ்பண்டரி, என்கோபட் போன்ற 8 துறை மற்றும் நிறுவனங்கள் மூலமாக இத்தகைய பயிற்சிகள் தமிழகத்தில் அளிக்கப்படுகின்றன. பயிற்சிபெற்று இருக்கக்கூடியவர்களுக்கு வங்கிகள் மூலமாக அவர்களுக்கு தேவைப்படுகின்ற உதவிகளை செய்து அவர்கள் சுய தொழிலில் ஈடுபடுகின்ற நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் வழங்கப்பட்ட தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற துறைகள் மூலமாக வழங்கப்பட்டு இருக்கிற தொகை பற்றிய தகவல் தற்போது என்னிடத்தில் இல்லை என்றாலும் வேலை வாய்ப்பு பயிற்சித் துறை மூலமாக மட்டும் ஏறத்தாழ 10,031 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு TRYSEM திட்டத்தின் கீழ் வங்கிகள் மூலமாக ஒரு கோடியே 81 லட்சத்து 63 ஆயிரத்து 601 ரூபாய் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறை மூலமாக அந்த 10,031 பேரில் தகுதியுள்ளவர்கள் பயன் பெறுகின்ற வகையில் வங்கிகள் மூலமாக பல்வேறு கடன் உதவிகள் வழங்கப்பட்டு இருக்கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்டத் தொழில் மையத்தின் மூலமாக படித்த இளைஞர்களுக்கு நிதி ஒதுக்குவது நடப்பு ஆண்டுக்கு இன்னும் நிதி ஒதுக்கீடு வரவில்லை என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா? அப்படியானால் எப்போது நிதி ஒதுக்கீடு கிடைக்கும்? அப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தால் நடப்பு ஆண்டுக்கு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட தொழில் மையங்களைப் பொறுத்தவரை அது என்னுடைய துறையின் கீழ் வரவில்லை. ஊரகத் தொழில் துறையின் கீழ் வருகிறது. ஆகவே அந்த அமைச்சரிடத்தில் அதற்குரிய கேள்வியைக் கேட்டால் அதற்குத் தகுந்த பதில் கிடைக்கும்.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கிராமப்புற படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மாவட்ட ரீதியாக எவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தத்தில் அளிக்கப்பட்டு இருக்கிற வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் மூலமாக கொடுக்கப்பட்டு இருக்கிற தொகையைத்தான் நான் எடுத்துச் சொல்லி இருக்கிறேன். மாவட்ட வாரியாக இருக்கக்கூடிய விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் கிடைக்கும்.





திரு. ஐ. யூசன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க ஆதி திராவிட நலத் துறை மூலமாகப் பல திட்டங்களை அமைத்து அவர்களுக்கு வேலை கொடுப்பதாக ஏற்கனவே இங்கே சொல்லப்பட்டது. அவர்களுக்கு இது வரையில் எந்த எந்த மாவட்டங்களில் அத்தகைய வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு எவ்வளவு பேர் வேலை செய்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக தமிழகத்தில் ஆதி திராவிடர்கள் எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு அரசின் மூலமாக—துறையின் மூலமாகத் தரப்பட்டு இருக்கிறது என்று கேட்கிறார்கள். இது பொதுவாக வேலை வாய்ப்பு பற்றியது. இந்தக் கேள்வி மத்திய அரசிலிருந்து கிராமப்புற படித்த இளைஞர்களுக்கு எந்த வகையில் வேலை வாய்ப்பு வசதி செய்யப்படுகிறது என்ற வகையில் கேட்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல் " தாட்கோ " மூலமாகத் தமிழ்நாடு ஆதி திராவிட வீட்டுவசதி வளர்ச்சி வாரியத்தின் மூலமாக தனியாக தமிழகத்தில் வங்கிகள் உதவியோடு ஆதி திராவிட இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெறுகின்ற நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. அது குறித்து விவரம் இல்லை என்றாலும் தனியாகக் கேள்வி போட்டால் விவரமான பதிலை அரசு அளிக்கும்.

## கோவை மாவட்டத்தில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் திட்டம்.

14 (*வினா எண் 16183)—திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் ஒரு I. T. I. தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : கோவை மாவட்டத்தில் ஏற்கனவே ஒரு தொழிற் பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. அங்கு 1983-84 ஆம் ஆண்டு முதல் மூன்றாவது ஷிப்ட் துவங்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் மற்றுமொரு தொழிற் பயிற்சி நிலையம் துவங்கும் உத்தேசம் தற்போது இல்லை.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒரு தொழில் பயிற்சி நிலையம் கோவை மாவட்டத்தில் இயங்கி வந்தாலும் கூட, அங்கே 3 ஷிப்ட் முறைகள் அனுசரிக்கப்பட்டு வந்தாலும் கூட, படித்த மாணவர்களுக்கு

அங்கே இடம் கிடைக்காமல் மிகுந்த அல்லல்களுக்கு ஆளாகின்ற நிகழ்ச்சிகள் ஒவ்வொரு ஆண்டும் வளர்ந்து கொண்டே இருக் கின்றது. அதைக் கருத்திலே கொண்டு, அரசு கோவை மாவட்டத்தில் மிக விரைவாக ஒரு ஐ. டி. ஐ.-யை—தொழிற் பயிற்சி நிலையத்தை—அமைப்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தைப் போல, கோவை நகரத்திலே இருக்கிற ஐ. டி. ஐ.-யைப் பொறுத்த வரையில், அங்கே அதிகமான மாணவர்கள் சேர்வதற் காகக் காத்திருக்கிறார்கள் என்கிற அடிப்படையில், அங்கே மூன்றாவது ஷிப்டை அரசு கொண்டு வந்திருக்கிறது. என்றாலும், இதை நினைவில் கொண்டே, கோவை மாவட்டத்திலேயே தனி யாக ஒரு தொழில் பயிற்சி நிலையத்தை அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் அரசு கொண்டிருக்கிறது. அதன் அடிப் படையில் வருகின்ற பகுதி-2 திட்டத்தின்கீழ், அதாவது 1985-86 ஆம் ஆண்டின் பகுதி-2 திட்டத்தின்கீழ், இதற்கான செயற் குறிப்பு ஒன்றை மாநிலத் திட்டக் குழு தயாரித்து, அதன்படி திருப்பூரிலே ஆண்களுக்கான ஐ. டி. ஐ. ஒன்றும், திருச்சியிலே பெண்களுக்கான ஐ. டி. ஐ. ஒன்றும், ஏறத்தாழ ரூ. 10 இலட்சம் செலவில் ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தை அரசு கொண்டிருக்கிறது. அதை அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. அதாவது இந்த ஐ. டி. ஐ. இரண்டையும், திருப் பூரிலே ஒன்றும், திருச்சியிலே ஒன்றும் அமைக்கலாமா என்பதற் கான நடவடிக்கைகளை அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் திருப்பூர் நகரத்திலே 1985-86 ஆம் ஆண்டில் ஐ. டி. ஐ. ஒன்று நிறுவப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த விவரத்திற்காக மக்களுடைய சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அமைக்கப்பட விருக்கிற அந்தத் தொழில் பயிற்சி நிலையத்தில் எவ்வளவு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன். அதோடு, அதற்கான தொகை ஒதுக்கீடு இருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையில், டிரேட் மாணவர்களோடு, மாணவியர்களும் இரண்டறக் கலந்து படிக்கும்படியான ஒரு சூழ்நிலையை அந்தத் தொழில் பயிற்சி நிலையத்தில் உருவாக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, டிரேடுகளைப் பொறுத்த வரையில், பெண்களும் சேர்ந்து படிக் கின்ற பல டிரேடுகள் உள்ளன. அவைகளில் அவர்களைச் சேர்த்துக் கொள்வதிலே அரசுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. ஆனால் திருப்பூரிலே அமைக்கவிருக்கின்ற அந்த ஐ. டி. ஐ.-யில் ஆண்களுக்கான 3 டிரேடுகள்தான் அமைக்கப்பட





இருக்கின்றன. அதற்காக ஏறத்தாழ பத்து இலட்சம் ரூபாய் செலவில் ஒதுக்கீடு செய்து ஆரம்பிக்கக்கூடிய நடவடிக்கைகளை அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கோவை மாவட் டத்தில் ஒரே ஒரு ஐ. டி. ஐ. பள்ளிதான் இப்பொழுது இருக் கிறது. இதே சட்டமன்றத்தில் சென்ற ஆண்டு நான் இதே கேள்வியை—கோவை நகரத்திலே மற்றொரு ஐ. டி. ஐ. பள்ளி வேண்டும் என்று கேட்டேன். கோவை தாலுக்கா பல்லாயிரக் கணக்கான என்ஜினீயரிங் தொழில்களும், தொழிலாளர்களும் நிறைந்து உள்ள பகுதி. அந்தத் தொழிலாளர்களுடைய பிள்ளை களுக்கு அப்படிப்பட்ட பயிற்சி வேண்டும். தனியார்களுக்கு இப்படிப்பட்ட பள்ளிகளை அமைக்க அனுமதி கொடுத்துக் கொண்டே வந்தால் அந்த தொழிலாளர்களால், அவர்கள் கேட்கின்ற அளவுக்கு பீஸ் கொடுத்து பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியாமல் போய்விடுகின்ற நிலைமை இருக்கிறது என் பதையும் நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். திருப்பூர் நகரத்திலே இப்படி ஒன்றை ஆரம்பிப்பது வரவேற்கத்தக்கது தான் என்றாலும், இது கோவை மாவட்டத்திற்கு 35 மைல் தள்ளி இருக்கிற இடத்தில் அமைக்கப்படவிருக்கிறது. ஆகவே, கோவையிலேயே இத்தகைய ஒரு பள்ளியை ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஏதோ தொழிற்சாலைகளை 24 மணி நேரம் தொடர்ந்து நடத்துவதைப் போல, 3 ஷிப்ட்டுகளைப் போட்டு படிக்க வைக்கின்ற முறை சரியல்ல. ஆகவே, தனியாக ஒன்றை ஏற்படுத்த அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, திருப்பூர் நகரத்தைப் பொறுத்த வரையில் கோவை நகரத்திற்கு அடுத்து அதிக தொழில்களைக் கொண்டு விளங்குகின்ற நகரம். அங்கே ஐ. டி. ஐ. அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அரசு இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கள் மேலும் புதிதாக கோவையில் ஐ. டி. ஐ. தேவை என்று கேட்கிறார்கள். தற்போது அந்த எண்ணம் இல்லையென்றாலும், உறுப்பினரவர்கள் ஒரு கருத்தை எண்ணிப் பார்க்க வேண்டும். புதிதாக ஒரு ஐ. டி. ஐ. ஆரம்பிக்க வேண்டுமென்றால் ஏறக் குறைய 65 இலட்சம் ரூபாய் செலவாகிறது. அதற்காகத்தான் ஏற்கனவே கோவையில் இயங்கி வருகின்ற ஐ. டி. ஐ.-யில் மூன்றாவது ஷிப்டை அரசு கொண்டு வந்தது. சாதாரண ஷிப்டில், 200 மாணவர்கள் ஒரு ஷிப்டில் பயிற்சி பெறுகிறார்கள். மூன்றாவது ஷிப்டிலேயும் அதே அளவிற்கு 200 பேர் பயன் அடைகிறார்கள். அப்படி ஒப்பிட்டுப் பார்க்கின்ற பொழுது, புதிதாக ஐ. டி. ஐ. ஆரம்பிக்க வேண்டுமென்றால் சுமார் 65 இலட்சம் ரூபாய் செலவழிக்க வேண்டுமென்ற நிலையில், அதே அளவிற்கு மாணவர்கள்—200 பேர் பயன் பெறுகின்ற

ஏறத்தாழ 5 இலட்சம் ரூபாய் செலவில் மூன்றாவது ஷிப்டிலே அவர்கள் திறமையாகவும், முறையாகவும் பயிற்சி பெறுவதற்கான வசதிகள் இருக்கின்றன. அந்த அடிப்படையிலே அரசு எடுத்திருக்கிறது. புதிதாக ஐ. டி. ஐ. வேண்டுமென்ற கோரிக்கையை எதிர் காலத்திலே வேண்டுமென்றால் அரசு பரிசீலிக்கும்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. எம். வி. இரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொள்ளாச்சி நகரம் இன்றைய சூழ்நிலையில் தொழில் துறையில் ஒரு முன்னோடியாக வளர்ந்து வரும் நகரம் ஆகும். அங்கே தனியார் துறையின் மூலம் ஐ. டி. ஐ. தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க முன் வந்தால் அதற்கு அரசு அனுமதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழிற் கல்வியைப் பொறுத்த வரையில் ஊக்குவிக்க வேண்டுமென்ற கொள்கையை இந்த அரசு கொண்டு இருக்கிறது. அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல், பொள்ளாச்சி பகுதிக்குத் தனியார் யாராவது ஐ.டி.ஐ. அமைப்பதற்கு முன் வருவார்களேயானால் அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளைச் செய்ய அரசு முன் வரும்.

### மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கான இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் எடுக்கும் ஆதி திராவிடர் பழங்குடியினர் மாணவர்களை ஊக்குவிக்கும் திட்டம்.

15—(*வினா எண். 20672)—திரு. சி. கணேசன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேல்நிலைப்பள்ளி—உயர்நிலைப்பள்ளி இறுதி ஆண்டில் மாநில அளவில் முதல் மதிப்பெண் எடுத்த ஆதி திராவிடர், மலை ஜாதி வகுப்பு மாணவர்களை ஊக்குவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : அங்கீகரிக்கப்பட்ட அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் மாநில அளவில் மேல்நிலை வகுப்பு இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் எடுத்த ஆதி திராவிடர் மலைஜாதி (பழங்குடியினர்) மாணவர்களை ஊக்குவிக்க தனி செயற் குறிப்பு எதுவும் இல்லை. ஆனால் பள்ளி [illegible] மாநில அளவில் ஆதி திராவிட இக்கல்[illegible]





பழங்குடியினர், கிறிஸ்துவ மதத்துக்கு மாறிய ஆதி திராவிடர் ஆகியோருள் அதிக விழுக்காடு மதிப்பெண்கள் பெறுகின்ற ஒரு மாணவன், ஒரு மாணவிக்கு முறையே ரூ.500-ம், அதற்கு அடுத்த அதிக விழுக்காடு மதிப்பெண்கள் பெறுகின்ற ஒரு மாணவன், ஒரு மாணவிக்கு முறையே ரூ. 250-ம் வெகுமதி அளிக்கப்படுகிறது. இவ்வாறு வெகுமதி அளிக்கப்படுகின்ற தொகை தபால் அலுவலகச் சேமிப்பில் சேர்க்கப்படுகிறது.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இவ்வாறு ஊக்கத் தொகை அளிக்கப்படும் பொழுது, அவர்களுக்கு ஏற்கனவே தரப்படும் ஸ்காலர்ஷிப் தொகையை நிறுத்திவிட்டு, ஊக்கத் தொகையை மட்டும் அளிப்பதாக நான் அறிகிறேன். எனவே, இரண்டையும் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு தலைவரவர்களே, இவ்வாறு ஊக்கத் தொகை பெறுகின்றவர்கள் உதவித் தொகை பெறுவதற்கு எந்தவிதமான தடையையும் அரசு விதிக்கவில்லை. இதைப் பெறுகின்றவர்கள் அதையும் பெறலாம் என்றுதான் விதி முறைகள் இருக்கின்றன. அது தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.

### 18-1-1983 அன்று தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் சங்கம் சார்பில் அரசிடம் தரப்பட்ட கோரிக்கை மனு

16—(*வினா எண் 19039)—திரு. ப. பொன்னுரங்கம், திரு. வே. இராஜசேகரன் : மாண்புமிகு பிற்பட்டோர் நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சலவையாளர் சங்க சார்பில் 18—1—1983 அன்று அரசுக்குத் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி மனு ஏதேனும் தரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) ஆம், 20—1—1983 தேதியிட்ட சலவைத் தொழிலாளர் சங்கங்கள், மதுரை, தர்மபுரி, வட ஆற்காடு, சேலம் மற்றும் தஞ்சாவூரிலிருந்து பெறப்பட்டன.

(ஆ) அந்த மனுக்களில் வலியுறுத்தப்பட்ட கோரிக்கைகளின் விவரம் பின்வருமாறு :

1. சலவையாளர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும்.

2. சலவைத் துறைகள் கட்டித் தர வேண்டும்.

[1984 அக்டோபர் 9

3. சலவையாளர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கி வீடு கட்டித் தர வேண்டும்.

4. மண்டல் கமிஷன் அறிக்கையை அமுல் படுத்த வேண்டும்

5. மதப் பாகுபாடின்றி தொழில் கருவிகள் வழங்க வேண்டும்.

6. தொழில் கருவிகளை வரிசைக் கிரமப்படி வழங்க வேண்டும்.

7. சலவைத் தொழில் செய்ய முதலீட்டுக் கடன் வழங்க வேண்டும்.

8. சலவையாளர்களில் படித்த ஆண், பெண் இரு சாரார்களுக்கும் உடனடியாக சர்க்கார் அலுவலகங்களில் வேலை கொடுக்க வேண்டும்.

9. தகுதிக்குத் தக்கவாறு உத்தியோக உயர்வு அளிக்க வேண்டும்.

10. சலவையாளர் விதவைகளுக்குச் சர்க்கார் அலுவலகங்களில் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சலவைத் தொழிலாளர்கள் வைத்திருக்கின்ற முதல் கோரிக்கையே, தங்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்பதுதான். இது நியாயமான கோரிக்கையும்கூட. ஏனென்றால், இந்து ஆதி திராவிடர் என்று சொல்லும்பொழுது என்ன நிலைமை என்பதைப் பார்க்க வேண்டும். இந்து நாயக்கர், இந்து செட்டியார் என்று சொல்லும்பொழுது அவர்கள் பேக்வேர்ட் கிளாசிலும் வருகிறார்கள். ஆனால் இந்து ஆதி திராவிடர் என்று வரும் பொழுது அவர்கள் ஷெட்யூல்ட் காஸ்ட். இந்து வண்ணார்களாக இருப்பவர்களை ஏன் டிஃபரன்ஷியேட் பண்ணவேண்டும்? சலவைத் தொழிலாளர்கள் வண்ணார் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்களில் இந்துவாக இருப்பவர்களை ஒரு பிரிவாக வைத்து, குதிரை வண்ணார்கள் என்பவர்களைத் தனியாகப் பிரித்து. அதன்படி ஒரு பகுதியினரைக் குதிரை வண்ணார் என்றும் மற்றொரு பகுதியினரைச் சாதாரண வண்ணார் என்றும் ஏன் பிரித்து வைக்கவேண்டும்? குதிரை வண்ணார் என்பவர்களை மாத்திரம் எஸ். ஸி. என்ற பிரிவிலே காட்டியிருப்பதால் அவர்களுக்கு அதன்படி சலுகைகள் பெற வாய்ப்புண்டு. ஆனால் சாதாரண வண்ணாருக்கு அந்த வாய்ப்பு இல்லை. ஆகவேதான் இந்தக் கோரிக்கையை அவர்கள் எழுப்பி இருக்கிறார்கள். எனவே அனைத்து வண்ணார்களும் குதிரை வண்ணார்கள்தான் என்று மாநில அரசு அறிவிக்க முன்வருமா? அதற்கான அதிகாரம் மாநில அரசினிடத்திலே இருக்கின்றதா? அவ்வாறு இல்லை



1984 அக்டோபர் 9]

என்றால் மத்திய அரசை வலியுறுத்தி அனைத்து வண்ணார்களையும் குதிரை வண்ணார்கள் என்ற பிரிவிலே சேர்க்க மாநில அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, சலவைத் தொழிலாளர்களை தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலிலே சேர்க்கவேண்டும் என்று கோரிக்கை வந்திருக்கின்றது. இது தொடர்பாக மத்திய அரசுதான் முடிவெடுக்க வேண்டும்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் வைத்திருந்த மற்ற கோரிக்கைகளும் நியாயமான கோரிக்கைகள்தான். இப்போதுகூட என்னென்னவோ நிதிகளை எல்லாம், அதை வாங்க, இதை வாங்க என்று கொடுக்கிறோம். எனவே அவர்கள் வைத்திருப்பது நியாயமான கோரிக்கைதான். கருவிகள் போன்றவற்றை வாங்குவதற்கு உதவ வேண்டும் என்று கலைஞர் ஆட்சிக் காலத்திலேகூட அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். இப்போது சலவை செய்வதற்குரிய வாஷிங் பவுடர் போன்றவற்றை சப்சிடி ரேட்டிலே வழங்க வேண்டும் என்று கேட்கிறார்கள். எனவே, கலைஞர் ஆட்சிக் காலத்திலே செய்ததைப்போல இப்போதும் அவர்களுடைய கோரிக்கைகளை ஆழ்ந்த அனுதாபத்தோடு பரிசீலித்து அக்கோரிக்கைகள் நிறைவேற அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, சலவைத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை இந்த அரசு பரிசீலித்துத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அவர்களுடைய கோரிக்கைகளையும், அதற்காக அரசு எடுத்து வருகின்ற நடவடிக்கைகளையும் பற்றி இப்போதுதான் இங்கே தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன்.

இது தொடர்பாக 1971 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு அனைத்து மாவட்டத்திலும் உள்ள பேருராட்சி மற்றும் நகராட்சிகளில் சலவைத் துறை கட்டுவதற்காக 50 சதவீதம் கடன், 50 சதவீதம் மானியம் என்ற விகிதாச்சாரத்தில் நிதியுதவி அளித்து வந்துள்ளது. 1980 ஆம் ஆண்டு முதல் சென்னை மாநகராட்சிக்கு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. 1982–83 முதல் 54 நகராட்சிகளுக்கு சலவைத் துறை கட்ட நிதியுதவியை அரசு அளித்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் கயத்தாற்றில் சலவைத் துறை கட்டுவதற்கு 15 ஆயிரம் மானியமும், 8 ஆயிரம் ரூபாய் கடன் உதவியும் செய்ய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 1981-லிருந்து நிதிப் பற்றாக்குறையாக உள்ள நகராட்சி மன்றங்களுக்கு 75 சதவீதம் மானியமாகவும், 20 சதவீதம் உள்ளாட்சி மன்றங்களும், 5 சதவீதம் பயனடைவோர் பங்குத் தொகையாகவும் ஏற்கவேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது. 20 சதவீதத்திற்குக் குறைந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு அரசு சுலபமான தவணைகளில் கடனாக அளித்து வருகிறது.

சலவைத் தொழிலாளர்களுக்கு வீட்டு மனைப் பட்டா
வழங்கி வீடு கட்டித் தர வேண்டும் என்று ஒரு கோரிக்கை.
தற்போது மிகப் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒட்டர், நாவிதர்
மற்றும் நரிக்குறவர் ஆகியவர்களுக்கு மட்டுமே வீட்டுமனை
வழங்கப்படும் திட்டம் 1981–82-ல் இருந்து அமல்படுத்தப்பட்டு
வருகின்றது. அதன்படி பயனடைந்தவர்களின் எண்ணிக்கை
1981 முதல் 1983 வரை 4,628 பேர். இதற்காகச் செலவு
செய்யப்பட்ட தொகை 20.2 இலட்சம் ரூபாய். 1983–84 இல்
சலவையாளர்களுக்கு வீட்டு மனை வழங்க நில ஆர்ஜிதம்
செய்ய 15.99 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
இப்படிப் பல்வேறு நல்ல திட்டங்கள் சலவையாளர்களுக்குக்காகச்
செய்யப்பட்டு வருகின்றது. என்பதோடு சலவையாளர்களுக்கான
சிறப்பான திட்டங்கள் குறித்துப் பரிசீலித்துச் செய்வதற்கு இந்த
அரசு முடிவெடுத்திருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே,
சலவைத் தொழிலாளர்கள், அதேபோல் சவரத் தொழிலாளர்
கள் இந்த இருவரைப் பொறுத்தவரையிலும் நகரங்களில்
இருப்பவர்களைவிட கிராமங்களிலே இருப்பவர்கள்தான் மிக
மிகக் கேவலமான வாழ்க்கையை நடத்திக்கொண்டு வருகி
றார்கள். அவர்கள், ஷெட்யூல்ட் காஸ்ட் என்று சொல்லப்படக்
கூடிய அந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரை விட மிக மிக
மோசமான பொருளாதார நிலையில், சமுதாய நிலையில் இருக்
கிறார்கள். அவர்களை ஷெட்யூல்டு காஸ்ட் லிஸ்ட்டிலே சேர்க்க
வேண்டும் என்று பரிந்துரை செய்வதோடு நிறுத்திக்கொண்டால்
மட்டும் போதாது. இது பலகாலமாகச் சொல்லிக்கொண்டு
வரக்கூடிய ஒரு பிரச்சினையாகும். எனவே, மத்திய அரசினை
வற்புறுத்தி இதனை ஷெட்யூல் காஸ்ட்டிலே சேர்க்கவேண்டும்
என்பதற்கு What concrete steps have been taken by the Government
during the last seven years ? இந்த ஏழாண்டுக் காலமாக
இந்த அமைச்சரவை அவர்களை ஷெட்யூல்ட் காஸ்டிலே சேர்க்க
வேண்டும் என்பதற்காக மத்திய அரசோடு என்னென்ன பேச்சு
வார்த்தைகளை நடத்தினார்கள் ? அதற்காக என்ன முயற்சியை
எடுத்தார்கள்?

(முற்பகல் 10–10)

இரண்டாவது, நகரங்களிலே டோபிகானாக்கள் கட்டிக்
கொடுக்கிறார்கள். ஆனால் கிராமங்களிலே இருக்கக்கூடிய சல
வைத் தொழிலாளிகளுக்கும், சவரத் தொழிலாளிகளுக்கும்
சொந்தமாக அரசாங்கமே முழு மானியத்திலே கட்டிக்
கொடுத்தால் அவர்கள் ஒரே இடத்திலேயிருந்து தங்களுடைய
தொழிலைச் செய்ய முடியும். இல்லையென்றால், வீடுவீடாகச்
சென்று துணியை எடுத்து, வீடு வீடாகச் சென்று சவரம்
செய்யக் கூடிய கேவலமான நிலையிருக்கிறது. அதைப் போக்கு
வதற்கு அரசாங்கம் என்ன முயற்சிகளை எடுக்க இருக்கிறது
என்பதை அறிய விரும்புகிறேன்.

—



மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர்
அவர்களே, கிராமப் பகுதிகளுக்குத் தனியாக சலவைத் துறை
கட்டிக் கொடுக்கிற முயற்சி இதுவரையில் மேற்கொள்ளப்பட
வில்லை. ஏனென்றால் முழுவதுமாக அரசினுடைய நிதியிலிருந்து
செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். என்றாலும் இதுபற்றி
அரசு பரிசீலிக்கும்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சலவைத் தொழிலாளர்களைத் தாழ்த்தப்பட்டோர்
பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கம்
தந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தாழ்த்தப்
பட்ட மக்கள் ஏற்கனவே மனித உரிமைகளை இழந்து தவிக்கிற
வர்கள். அப்பாவி மக்களை மீண்டும் அதிலே சேர்த்து அவர்
களுக்கு அந்த உரிமைகளைப் பறித்து விட வேண்டாமென்ற
கோரிக்கையை விடுத்து அதோடு அவர்கள் நகரத்திலே டிரை
கிளீனிங் வைக்கிறபொழுது அரசு செலவிலே டிரை கிளீனிங்
வைத்து அவர்கள் நாகரீகமாக தொழில் செய்வதற்கான கருவிகள்
வழங்கவேண்டுமென்ற முக்கியமான கோரிக்கை விடுத்திருக்கிறார்
கள். அதை அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர்
அவர்களே, சலவைத் தொழிலாளர்களுக்கென்று தனித் திட்டம்
தீட்டுவதற்கு சமீபத்தில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் கூட
முடிவெடுத்திருக்கிறோம். ஆகவே, விரைவாக அவர்
களுக்கு என்னென்ன நல்ல திட்டங்களைத் தீட்டலாம் என்
பதைப் பற்றி இந்த அரசு பரிசீலிக்கும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே,
சலவைத் தொழிலாளர்கள் அழுக்குத் துணிகளைத் தூக்கித்
துவைக்கின்ற காரணத்தினாலும், சவரத் தொழிலாளர்கள் முடி
வெட்டுகின்ற பணியினைச் செய்கின்ற காரணத்தினாலும் அவர்
களுக்குத் தொழில் துறை சம்பந்தமான நோய்கள் (Occupational
Diseases) வருகின்றன. அழுக்கு அவர்கள் மேல் படுகின்ற
காரணத்தினால் அவர்களுக்கு நோய் வர, அதனால் சலவைத்
தொழிலாளர்கள் துன்பப்படுகிறார்கள். சிறுசிறு முடித் துணுக்கு
கள் மூச்சுக் குழாய்க்குள் போகிற காரணத்தினால் சவரத்
தொழிலாளர்கள் துன்பப்படுகிறார்கள். அந்த வகையிலே
அவர்கள் பாதிக்கப்படாமல் இருக்க அரசாங்கம் ஏதாவது வழி
வகை கண்டிருக்கிறதா? பாதிக்கப்பட்டவர்களுக்கு நல வாழ்வு
கொடுக்கின்ற திட்டம் ஏதாவது அரசாங்கம் வைத்திருக்கிறா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பாதிப்பு ஏதும்
வருவதாக அந்தச் சமுதாயத்தினரிடமிருந்து இது வரையில்
கோரிக்கை, ஏதும் வரவில்லை. அப்படிக் கோரிக்கை வந்தால்
அரசாங்கம் பரிசீலித்து ஆவன செய்யும்.

—

[1984 அக்டோபர் 9

## இராமநாதபுரம் மாவட்டத்தில் வைகைக்கு இருபுறமுள்ள கால்வாய்களைப் பழுது பார்க்கும் திட்டம்.

17—(*வினா எண் 19740)—திரு. ஆர். தவசி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பார்த்திபனூர் மதகு முதல் இராமநாதபுரம் கண்மாய் வரை வைகைக்கு இருபுறமுள்ள சேரணிக் கால்வாயின் உடைப்புகள், பாலங்கள் ஆகியவற்றை அதிகாரிகள் பார்வையிட்டு மதிப்பீடுகள் தயார் செய்த வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, இத் திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 685 இலட்சம். 15–9–1984 ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 1906 அடிப்படையில் இத் திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டிலே வேலை துவங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

திரு. ஆர். தவசி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் பார்த்திபனூர் மதகு முதல் இராமநாதபுரம் கண்மாய் வரை வைகைக்கு இருபுறமுள்ள சேரணிக் கால்வாயின் உடைப்புகள், பாலங்கள் ஆகியவற்றைப் பழுது பார்க்கின்ற கோரிக்கையை அரசு ஏற்றுக் கொண்டு அதிகாரிகள் மதிப்பீடு செய்துள்ளார்கள். அந்த வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்திலேயே பதில் சொல்லியிருக்கிறேன். இந்தத் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியிருக்கிறது. இத் திட்டம் உடனடியாக மேற்கொள்ளப்படும் என்று ஏற்கெனவே பதில் வழங்கியிருக்கிறேன்.

திரு. ஆர். தவசி : தலைவர் அவர்களே, தமிழர்களின் தலைவராம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்த அவைக்கும், அரசு அதிகாரிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் அமர்கிறேன். (குறுக்கீடுகள்.)

திரு. ரா. உமாநாத் : கேள்வி நேரத்தில் கேள்வி கேட்பது. தகவல் தெரிந்து கொள்வதற்காக. கேள்வி கேட்கப்பட்டது. தகவலும் தெரிந்துக் கொள்ளப்பட்டது. தீர்ந்தாயிற்று. சப்ளிமெண்டரியில் நன்றி கூறுகிறேன் என்று கூறுவதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நன்றி கூறுவது ஒரு மரபு. அவ்வளவுதான். அதற்குப் பதில்தான் ஒன்றும் இல்லையே,



1984 அக்டோபர் 9]

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, பார்த்திபனூர் மதகானது 1978–79 ஆம் ஆண்டில் அதிகமாகப் பாதிக்கப்பட்டு, 685 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சீரமைப்பு பணிகளுக்கு 15–9–1984 இல் அனுமதி செய்யப்பட்டு வேலைகள் துவங்கப்படும் என்பதையறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தக் கால்வாய் மூலம் கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ஏக்கர் நிலம் எனது தொகுதியில் மட்டும் பாசனத்திற்குப்பயன் பெறுகிற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்தத் திட்டத்தை சாங்ஷன் செய்து கொடுத்ததற்கு நான் நன்றி தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நன்றி சொல்வதென்றால் தனியாக அமைச்சரிடத்தில் சொல்ல வேண்டும்.

18—(*வினா எண் 21669—)திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை ஆற்றில் 1979 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் விரகனூரிலிருந்து அமைக்கப்பட்ட சீரமைப்புக் கால்வாய்கள் பாதிக்கப்பட்டதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்தக் கால்வாய்களைச் சீரமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம்.

(ஆ) விரகனூர் மதகணைக்குக் கீழ் உள்ள இடது பிரதானக் கால்வாயில், வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களைச் சீரமைப்பதற்கான மதிப்பீடு தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் ஆய்வில் உள்ளது.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த 1979-ஆம் ஆண்டு வெள்ளத்தால் சேதம் அடைந்தது இந்தக் கால்வாய். 5, 6 ஆண்டுகள் இப்போது கடந்து விட்டது. இன்னும் தலைமைப் பொறியாளரின் ஆய்வில் இருப்பதால் அதை விரைவுபடுத்தி, அரசாங்கம் அதற்குத் தேவையான நிதியை வழங்குவதற்கு இந்த ஆண்டே முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பணிகள் இரண்டு கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. முதல் கட்டமாகத்தான் நான் முந்தைய கேள்விக்குப் பதில் அளித்த பார்த்திபனூர் மதகுக்குக்கீழேயுள்ள கால்வாய்கள் சீரமைக்கும் திட்டமாகும். இரண்டாவது கட்டமாக விரகனூர் மதகுக்குக்கீழேயுள்ள கால்வாய்கள் சீரமைக்கும்

திட்டமாகும். ஏற்கனவே முதல் கட்டத்திற்குரிய ஆய்வுகள் முடி
வடைந்து அரசு அனுமதி வழங்கி வேலை துவங்கப்பட்டு வரு
கின்றது. இரண்டாவது கட்டத்திற்காக ஆய்வுகள் நடத்தப்பட்டு
185 இலட்சம் ரூபாயில் திட்டத்தை மேற்கொள்ளலாம் என்று
ஒரு அறிக்கை அரசுக்கு அனுப்பக் கூடிய சூழ்நிலை இப்போது
உருவாகி இருக்கிறது. அந்த அறிக்கை வந்த பிறகு உரிய ஆய்வு
கள் நடத்தப்பெற்று அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்
ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,
வைகை ஆற்றில் அவ்வப்போது ஏற்படுகிற வெள்ளப் பெருக்கி
னால் அந்தக் கால்வாய்கள் மேடிட்டு தண்ணீர் பாயாமல் உணவு
உற்பத்தி தடைபடுகிறது. ஆகவே இந்தத் திட்டங்களுக்கு
முன்னுரிமை கொடுத்து, டாப் பிரையாரிட்டி கொடுத்து, 'வார்
புட்டிங் என்று சொல்வார்களே, அந்தப் போர்க் கால அடிப்படை
யில் அந்தக் கால்வாய்களை சீரமைப்பு செய்ய அரசு முன் வருமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே,
ஏற்கனவே இப்படிப்பட்ட பணிகளைத் தமிழக அரசு போர்க் கால
அடிப்படையில்தான் மேற் கொண்டு வருகிறது என்பதையும்
அதே நடவடிக்கை இனியும் இருக்கும் என்பதையும் தெரிவித்துக்
கொள்கிறேன்.

பாலாற்றின் குறுக்கே புல்லூர் அணை கட்டும் திட்டம்.

19—*(வினா எண் 21842)—திரு. ஏ. எம். சேதுராமன் :
மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் நாட்ராம்பள்ளி ஒன்றியம்,
பாலாற்றின் குறுக்கே புல்லூர் அணைப் பணிகள் எப்போது
துவக்கப்படும் ?

(ஆ) இதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ மற்றும் ஆ)
தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், வாணியம்பாடி
வட்டம், புல்லூர் கிராமத்தருகில் பாலாற்றின் குறுக்கே நீர்த்
தேக்கம் ரூ. 920 இலட்சம் மதிப்பீட்டில் அமைப்பது குறித்து
ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நீர்த் தேக்கத்
தால், நீரில் மூழ்கும் பகுதியில் 192 ஏக்கர் நிலப்பகுதி ஆந்திர
மாநிலத்தின் எல்லைக்கு உட்பட்டதாகும். இப்பகுதியில் விரி
வான ஆய்வு நடத்த ஆந்திர அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளது.
ஆந்திர அரசு அந்த மாநிலத்தின் எல்லைக்குள் ஆய்வு செய்வதற்கு
அனுமதி தர மறுத்து விட்டது. எனவே, அணைப் பகுதியில்
தண்ணீரில் மூழ்கும் பகுதி தமிழக எல்லைக்குள் இருக்குமாறு





செய்ய சாத்திய கூறுகள் இருக்கின்றனவா என்று ஆய்வு செய்து
அறிக்கை அளிக்குமாறு தலைமைப் பொறியாளர் (நிலநீர்) அவர்
கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவர் அவர்களே, புல்லூர்
கிராமத்தருகில் பாலாற்றின் குறுக்கே அணைகட்டும் பணிகள்
துவங்குவதற்கு 920 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதாக
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். ஆந்திர
மாநிலத்தில் இருக்கிற நிலப் பகுதியை விட்டு விட்டு தமிழகத்தின்
எல்லைக்குள் இருக்கிற நிலப் பரப்பில் அந்த அணை கட்டப்படுமா
என்பதையும், இந்த அணையின் மூலம் எத்தனை ஏக்கர் நிலம்
பயன்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே,
அத்திட்டத்திற்காக ரூ.920 லட்சம் ஒதுக்கீடு செய்ததாக நான் கூற
வில்லை. ஆனால் அந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு
என்பதைத்தான் முன்பே சொன்னேன். அந்தத் திட்டத்தை மேற்
கொண்டோமென்றால் 856 ஏக்கர் நீரிலே மூழ்கக் கூடிய வாய்ப்பு
இருக்கிறது. அதிலே 192 ஏக்கர்தான் ஆந்திர மாநிலத்தைச்
சேர்ந்ததாகும். அந்த விவரங்கள்தான் இங்கே கொடுக்கப்பட்டி
ருக்கின்றன.

(முற்பகல் 10–20)

திரு. ந. குலசேகரபாண்டியன் : தலைவர் அவர்களே,
இந்தத் திட்டம் வடாற்காடு மாவட்டத்தில் உள்ள வாணியம்
பாடி பகுதிக்கு பயன் அளிக்கும் நல்ல திட்டமாகும். வடாற்காடு
மாவட்டம் முழுவதும் இறைவைப் பாசனத்தை நம்பியுள்ள
மாவட்டமாக இருப்பதால், இந்தத் திட்டத்தின் வாயிலாக பெரி
தும் பயன் தரும். மேலும், என்னுடைய தொகுதியில் உள்ள
கழிவு நீர் பிரச்சினையும் இதனால் தீர்க்கப்பட்டுவிடும். ஆகவே,
இந்தத் திட்டத்திற்கு முக்கியத்துவம் தந்து செண்பகத்தோப்பு
அணைத் திட்டத்தையும், ஆம்பூர்-ஆனைமேடு அணைத்திட்டத்
தையு விரைவில் அமல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே,
வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எந்தெந்தத்
திட்டங்களை உடனடியாக மேற்கொள்ள முடியுமோ அவற்றை
யெல்லாம் விரைவாக மேற்கொள்ள இந்த அரசு ஆழ்ந்து
யோசித்து நிறைவேற்ற தகுந்த முயற்சிகளை மேற்கொண்டு வரு
கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவர் அவர்களே, வடாற்காடு
மாவட்டம் ராஜா தோப்பு அணைசம்பந்தமாக ஏற்கெனவே
ரூ. 44 இலட்சம் அளவிற்கு ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு,
மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே அதற்கான தீர்மானமும் நிறை
வேற்றப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அந்தத்

தீர்மானத்தின் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது? அந்த வேலை எப்போது துவக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் நன்றாக இருக்கும்.

திரு. ப. சுந்தரம்: தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் உள்ள புல்லூர் அணைத்திட்டத்தைப் போலவே, ஆண்டியப்பனூர் அணைத் திட்டத்திற்கும் நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அது விரைவில் நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து வடாற்காடு மாவட்டத்தில் உள்ள புல்லூர் அணைத் திட்டம் ஆந்திர மாநில அரசின் ஒப்புதல் இல்லாத காரணத்தால் வேறு இடத்திற்கு மாற்றப்பட இருக்கிறது என்றும், அதற்கான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன என்றும் தெரிகிறது. அதே நிலையில் செண்பகத்தோப்பு அணை இருப்பதாகவும் சொன்னார்கள். ஆய்வு என்பது நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. ஆகவே, அந்த ஆய்வு குறித்து விரைவாக ஒரு முடிவு எடுத்து நிறைவேற்ற முன் வந்தால், அந்தப் பகுதி மக்களுக்கு அது ஒரு திருப்தியை ஏற்படுத்தும். ஆகவே, ஆய்வு நடக்கிறது என்பது நீண்டநாள் பிரச்னையாக இருப்பதால், இது குறித்து ஒரு உறுதியான பதிலை அளிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, உறுதியற்ற பதிலை எந்தக் காலத்திலும் இந்த அரசு வழங்கியது கிடையாது. நீர்ப்பாசனத்துறையைப் பொறுத்த வரையில், ஆய்வு நடக்கிறது என்று சொன்னால், அது மற்ற துறையில் நடைபெறும் ஆய்வை விட வேறுபட்டு இருக்கிறது. இது பற்றி ஏற்கெனவே, பல முறை நான் விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். ஆகவே, அத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, நிச்சயமாக அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும். அப்படி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் காரணமாகப்பலன் கிடைக்கும் என்றால்தான் அதை மேற்கொள்ள முடியும். அதனால் பலன் ஒன்றும் ஏற்படாது என்றால் எதிர்ப்புகள் வரும். ஆகவே, நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்த வரையில் காலம் கடத்தாது ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



திரு. கே. ஆர். சுந்தரம்: தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்திலே கடந்த செப்டம்பர் மாதத்திலே புதிதாகப் பொறுப்பேற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் புல்லூர், செண்பகத்தோப்பு மற்றும் மோர்தானா அணைத் திட்டங்களுக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது என்றும், விரைவில் பணிகள் தொடங்கப்படும் என்றும்பத்திரிகை நிருபர்களுக்குபேட்டி அளிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இது குறித்து நான் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே வினா எழுப்பிய நேரத்திலும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். ஆகவே, நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அந்தத் திட்டங்கள் எப்போது தொடங்கப்படும், எப்போது அவை முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவரவர்களே, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. இருந்தாலும், அந்தத் திட்டங்கள் விரைவில் மேற்கொள்ளப்பட எவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுக்க முடியுமோ அவ்வளவு விரைவாக எடுக்கலாம் என்ற வாக்குறுதியைத்தான் நான் இப்போது தரமுடியுமே தவிர வேறு வகையிலே வாக்குறுதி தர இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அனைத்து வருவாய்க் கிராமங்களிலும் நியாய விலைக் கடைகள் திறக்கும் திட்டம்.

20—(*வினா எண். 10765)—திரு. சோ. அழகர்சாமி, திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திற்கும் ஒரு நியாயவிலைக் கடை என்ற முறையில் திறக்கப்பட்டு உள்ளதா?

(ஆ) இல்லையெனில், காரணம் யாது?

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: (அ) ஆம்.

(ஆ) எல்லா வருவாய்க் கிராமங்களிலும் அத்தியாவசியமான பொருள்கள் வழங்க நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. மிகவும் சிறிய வருவாய்க் கிராமமாக இருந்தால் அந்தக் கிராமம் பக்கத்திலுள்ள வருவாய்க் கிராமத்துடன் இணைக்கப்பட்டு, அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இது நீண்ட நாட்களுக்கு முன்னால் கேட்கப்பட்ட கேள்வி. இப்போது ஆயிரம் கார்டுகளுக்கு ஒரு நியாயவிலைக் கடை என்று ஆரம்பித்திருப்பதாக அறிகிறேன். மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை
; ) ) கார்டுகளுக்கு ஒரு நியாயவிலைக் கடை வேண்டும் என்பது

[1984 அக்டோபர் 9

இப்போது கூட ஒரு கடையில் 1,250 கார்டுகள், 1,100 கார்டுகள்
என்று இருந்தால் ஆயிரத்திற்கு மேற்பட்டிருக்கிற கார்டுகளை
2 மைல், 3 மைல் தூரத்திற்கு மாற்றி, மக்களுக்கு ஒரு பெரிய
தொந்தரவை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மேலும், நியாயவிலைக்
கடைகளில் வழங்கப்படுகின்ற அரிசியும் பல கலர்களில் இருப்ப
தாக புகார் வந்துகொண்டிருக்கிறது. இந்த குறைகளைப் போக்கு
வதற்கு 500 கார்டுகளுக்கு ஒரு நியாயவிலைக் கடை என்ற
அளவில் அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : தலைவரவர்களே,
மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு
நாள் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்படுகின்ற கடைப்
பக்கம் செல்லும்போது மக்கள் நீண்ட வரிசையில் நீண்ட நேரம்
நின்றுகொண்டிருப்பதைக் கண்டார்கள். அவர்களுடைய கஷ்
டத்தைப் போக்குகின்ற அடிப்படையில் ஆயிரம் கார்டுகளுக்கு
ஒரு நியாயவிலைக் கடை அமைகின்ற நடவடிக்லை எடுக்கப்
பட்டது. அந்த அடிப்படையில் 3,832 கடைகள் திறக்கப்பட
வேண்டுமென்று கணக்கிடப்பட்டது. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்
கப் பதிவாளரிடம் உரிய முறையில் கணக்கெடுத்து, நடவடிக்கை
எடுக்கச் சொன்னதில், கூட்டுறவுத் துறையில் 3,044 கடைகள்
திறக்கப்பட்டுள்ளன. ஆயிரம் கார்டுகளுக்கு ஒரு நியாயவிலைக்
கடை என்று இப்போது நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மக்க
ளுக்கு சிரமம் இல்லாமல் தரமான பொருள்களை குறைந்த விலை
யில் நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்க வேண்டும் என்பது
தான் இந்த அரசின் எண்ணம். மாண்புமிகு உறுப்பினர் அவர்
களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, விரைவில் நடவடிக்கை
எடுக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, ஆயிரம்
கார்டுகளுக்கு அதிகமாக 200 அல்லது 150 அல்லது 100 கார்டு
கள் இருந்தால், அவை அடுத்த நியாயவிலைக் கடைக்கு மாற்றப்
படாமல், அந்த நியாயவிலைக் கடை இரண்டாகப் பிரிக்கப்பட
வேண்டுமே தவிர, வேறு இடத்திற்கு மாற்றப்படக் கூடாது.
அப்படி மாற்றி, மக்களை சிரமப்படுத்துவது நியாயமில்லை.
மக்களுடைய கஷ்டத்தைப் போக்க, ஆயிரம் கார்டுகளுக்கு மேல்
இருந்தால் அந்த இடத்திலேயே இரண்டு கடைகளை ஏற்படுத்த
அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : தலைவரவர்களே, ஒரே
நேரத்தில் சிரமங்களை எல்லாம் குறைத்துவிட முடியாது. படிப்
படியாகத்தான் சிரமங்களைக் குறைக்க முடியும். மாண்புமிகு
உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கவனிக்கப்பட்டு, காலப்
போக்கில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.



1984 அக்டோபர் 9]

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவ
ரவர்களே, ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு நியாயவிலைக் கடை
திறக்கப்பட்டது அத்தாவசியப் பண்டங்கள் முறையாக மக்க
ளுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால்
கிராமப்புற மக்களின் கல்வியறிவின்மையைப் பயன்படுத்திக்
கொண்டு, ஒரு குறிப்பிட்ட பொருளை, உதாரணமாக
அரிசி மட்டும் வாங்கியிருந்தால்கூட நியாய விலைக் கடை நிர்
வாகிகள் மற்ற பொருள்களையும் வாங்கிவிட்டதாக கார்டில்
குறித்து விடுகிறார்கள். மக்களுக்கு பொருள் கிடைக்காமல்
போய் விடுகிறது. இப்படிப்பட்ட குறைபாடுகளைத் தவிர்க்க
நியாயவிலைக் கடைகளைக் கண்காணிக்க நியமிக்கப்பட்டிருக்கிற
கண்காணிப்புக் குழுவிற்கு இன்னும் அதிகமான அதிகாரங்களை
வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : தலைவரவர்களே, மக்க
ளுக்கு கொடுக்க வேண்டிய அத்தியாவசியப் பொருள்கள் அவர்
களுக்கு முறைப்படி சென்று சேருகின்றனவா என்பதைக் கண்
காணிப்பதற்கு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இருக்கிற அதி
காரத்தை வைத்தே அவர்கள் செயல்படலாம். அதற்கு
மேல் அதிகாரம் தேவை என்றால் அதிக அதிகாரம் கொடுக்க
முடிவு எடுக்கப்படும்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, இப்போது
ஆயிரம் கார்டுகளுக்கு ஒரு நியாயவிலைக் கடை என்று அமைக்கப்
பட்டிருக்கிறது. கிராமம் என்றால் ஒரு கிராமத்திலிருந்து இன்
னொரு கிராமத்திற்கு அதிகமாக இருக்கிற கார்டுகளை மாற்றி
விடலாம். ஆனால் சென்னை மாநகரைப் பொறுத்தவரையில்
நிலைமை வேறு. 1,500 கார்டுகள் கூட ஒரு கடையில் இருக்
கின்றன. அதிகப்படியான கார்டுகளை மாற்றுகிறோம் என்று
சொல்லி, பக்கத்தில் இருக்கிற கடைக்கு மாற்றாமல் 2 மைல்,
3 மைல் தூரத்தில் இருக்கிற ஒரு கடைக்கு மாற்றி, அதனால்
மக்கள் அவதிப்படுகிறார்கள். ஆகையால் அதிகாரிகளுக்கு,
பக்கத்தில் இருக்கிற கடைகளுக்குத்தான் மாற்ற வேண்டும்
என்று முறையாக தாக்கீது அனுப்புவீர்களா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : தலைவரவர்களே, இந்த
அரசு எப்போதுமே முறையாக தாக்கீது அனுப்பும் ; அனுப்
பிக்கொண்டிருக்கிறது. மக்கள் சிரமப்படக்கூடாது என்பதற்
காகத்தான் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேற்பட்டிருக்கிற
கார்டுகளை பக்கத்துக் கடைக்கு மாற்றியது மட்டுமல்லாமல் ஒரு
நாள் குறிப்பிட்டு, அந்த குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட
கடையில் அத்தியாவசியப் பொருள்களை வாங்க வேண்டுமென்று
வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

[1984 அக்டோபர் 9

அப்படி அவர்கள் குறிப்பிட்ட நாட்களில் அதை வாங்க வில்லை என்று சொன்னால், ஞாயிற்றுக்கிழமை வாங்கலாம் என்ற நிலை இப்போது இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் சொல்வதைப் போனறு தூரம் அதிகமாக் இருந்தால், அதைப்பக்கத்திலுள்ள கடைகளுக்கு மாற்ற ஏற்பாடு செய்யலாம்.

(முற்பகல் 10-30)

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : ஒரு ரெவின்யூ கிராமத் திற்கு ஒரு நியாய விலைக் கடை இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். கொடைக்கானல் தாலுக்காவைப் பொறுத்த வரையில், ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு 3, 4 கிராமங்கள் இருக் கின்றன என்றால், ஒவ்வொரு கிராமத்திற்குமிடையே 7, 8 மைல்கள் நடந்து செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. எனவே கொடைக்கானல் கிராமத்தைப் பொறுத்தவரையில், ஒரு ரெவின்யூ கிராமம் என்று பார்க்காமல் ஒரு தனித் திட்டம் வகுத்து கிராமத்திற்கு ஒரு நியாயவிலைக் கடை என்று ஏற்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஜனத்தொகையின அடிப்படையில்தான் கணக்கிடப்பட்டு, நியாயவிலைக் கடைகள் திறக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப் பினரவர்கள் சொன்னதைப்போல, எல்லா ரெவின்யூ கிராமங் களிலும் கடைகள் திறக்கப்படுவதில்லை. மிகச் சிறிய ஜனத் தொகை உடைய பகுதி, பக்கத்திலுள்ள பெரிய கிராமத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்களுடைய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு பரிசீலனை செய்யப்படும்.

திரு. என். பழனிவேல் : இப்போதுள்ள வருவாய்க் கிராமத் திற்கு ஒரு நியாயவிலைக் கடை என்பது சாதாரணமாக கிராமப் புற மக்களுக்கு பெரிய தொல்லையாக இருக்கிறது. அப்படியும், 4, 5 மைல்கள் நடந்து சென்றாலும், கடையிலே சரக்கு இல்லை என்று சொல்கிறார்கள். நாளைக்கு வாங்க என்று சொல்லி விடுகிறார்கள். ஆகவே, அவர்கள் வாங்கமுடியாமல் போய்விடு கிறது. ஆயிரம் பேருக்கு ஒரு கடை விதம் என்று நீங்கள் சொல்வது கூட, இன்றைய நடைமுறையில் இல்லை. அதனால் ஒரு கிராமத்திற்கு ஒரு கடை விதம், ஒவ்வொரு கிராமத் திலும் 300, 400 வீடுகள் இருக்கின்றன, அமைப்பதற்கு கண்டிப் பாக கடைகள் திறப்போம் என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார் களா ?

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : இந்த அரசினுடைய எண்ணமும், மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணம்தான். இருந்தாலும், நிதி நிலைமைக்கேற்ப கிராமத்தில் வீடுகிடைக்க வேண்டும். இப்படிப்பட்ட கிராமங்களைக் கருத்திற்கொண்டு



1984 அக்டோபர் 9]

இப்போது வருவாய் கிராமத்திற்கு ஒரு கடை என்றிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், மைய அரசு ஒரு ரெவின்யூ கிராமத் திற்கு ஒரு கடை தான் திறக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக் கிறது.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு கடைதான் திறக்க வேண்டுமென்று மைய அரசு ஆணையிட் டிருப்பதாக அமைச்சரவர்கள் பதிலிலே சொன்னார்கள். ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு கடை—1,000 கார்டுகளுடைய கிரா மத்திற்கு ஒரு கடை என்ற விதத்தில் நல்ல அரிசியையும் விநியோகம் செய்கிறார்கள். அதை வரவேற்கிறோம். இருந் தாலும், 3, 4 மைல்கள் தூரத்திற்கு பெண்கள் நடந்து சென்று வரிசையாக நின்று வாங்குவது என்றால் சிரமமே. ஆகவே, இங்கே கடைகள் இருந்தாலும், அந்த விநியோகக் கடைகளிலே இருக்கக்கூடிய அதிகாரிகள், பக்கத்திலே உள்ள மூன்று நான்கு மைல்களுக்குள் உள்ள சாவடிகளிலும், பள்ளிகளி லும், அரிசி மற்றும் இதர பொருட்களை வைத்து விநியோகம் செய்வதற்குரிய வகையிலே அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : தலைவர் அவர்களே, நான் முன்னமேயே சொல்லிவிட்டேன். அரசினுடைய நோக் கமே மக்களுடைய சிரமங்களைக் குறைக்க வேண்டுமென்பதே. இருக்கின்ற சூழ்நிலையை அனுசரித்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### தமிழக முதலமைச்சர் உடல் நலம்குறித்து.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த சில நாட்களாக உடல்நலம் சரியின்றி தனியார் மருத்துவ மனையில் சிகிச்சைப் பெற்றுவருகிறார்கள் என்கிற செய்தியை நாம் நன்கு அறிவோம். அவர்கள் விரைவில் பூரண குணம் பெற வேண்டும் என்று இந்த மன்றமும், நாடும் எதிர்பார்க்கிறது. அவர்களுக்கு மருத்துவ

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1984 அக்டோபர் 9

மனையில் என்ன சிகிச்சை அளிக்கப்படுகிறது, அரசாங்கம் மருத்துவர் குழுவை நியமித்திருக்கிறதா? என்பதுபற்றி பத்திரிகைகளில் பல்வேறான செய்திகள் வருகின்றன. உங்கள் மூலமாக நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம்—அரசின் சார்பிலே ஒரு அறிக்கை கொடுக்க வேண்டும்—அவ்வாறு கொடுப்பதன் மூலம் இந்த மன்றமும், மக்களும் தெரிந்துகொள்ள ஏதுவாக இருக்கும். அதற்குத் தாங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் உடல்நலம் சரி இல்லாமல் அப்போலோ மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும், அவருடைய உடல்நலம் தேறி வருவதாகவும், அந்த மருத்துவ மனை அதிபர் பி. சி. ரெட்டி அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கையைப் பார்த்தபிறகு, அவர்கள் பூரண குணம் அடைந்து விரைவிலே வரவேண்டும் என்று நான் மட்டுமல்ல, இந்த நாடே விரும்புகிறது. ஆனால் இன்றைய தினம் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையைப் பார்த்தபோது, எனக்கு மட்டுமல்ல, இந்த நாட்டுமக்கள் அத்தனை பேர்களுக்கும் ஒரு அச்சமும் அதிர்ச்சியும் ஏற்படுகிற வகையில் செய்திகள் வந்திருக்கின்றன. உண்மையிலே நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்கு என்ன நோய் என்று தெரிந்து கொள்வதற்கு நான் மட்டுமல்ல, இந்த நாடே எதிர்பார்க்கிறது. காரணம் அவர் ஒரு தனி மனிதர் அல்ல. இந்த நாட்டு மக்களுடைய பிரதிநிதி அவர்கள். அவர்களுடைய நலனில் எல்லோருக்கும் அக்கறை உண்டு. எனவே, இந்தப் பத்திரிகையில் வந்த செய்தியைப் பார்த்தபோது உண்மையிலேயே நான் மிக மிக வேதனைப்பட்டேன். டாக்டர் ரெட்டி அவர்களுடைய அறிக்கையையும் அந்தப் பத்திரிகையிலே வந்த செய்தியையும் பார்க்கும்போது, சாதாரணமாக என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை என்றால், ஏதும் அறியாத இந்த நாட்டு லட்சோப லட்ச மக்கள் எவ்வளவு வேதனை அடைவார்கள் என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தப் பத்திரிகையில் வந்த செய்தியும் (குறுக்கிடு) ரெட்டி அவர்களுடைய அறிக்கையும் நமக்கு மனவேதனையைத் தருகிறது. பொதுவாகவே இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி ஏற்படும் போது அதை முன்னவர் அவர்களோ, அல்லது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களோதான் அறிக்கை கொடுப்பது வழக்கம். ஆனால், தனியார் துறையைச் சேர்ந்த ஒரு டாக்டர் அறிக்கை கொடுத்திருப்பது அவ்வளவு நல்லதல்ல. எனவே, இனிமேலாவது நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுடைய உடல் நிலையைப் பற்றி, அவ்வப்போது நம்முடைய அவை முன்னவர் அவர்களோ, அல்லது நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களோ, அரசாங்கத்தின் சார்பில்—டாக்டர் அறிக்கை அல்ல—அறிக்கை வைப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விரைவிலே குணமடைந்து வரவேண்டும் என்று வேண்டி விரும்பி அமைகிறேன்.



136272

1984 அக்டோபர் 9]

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் உடல்நிலை சம்பந்தமாக கவலை தெரிவித்து எனக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் பேசினார்கள். மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக இந்தச் செய்தி தெரிந்தவுடன் நானும் காரியதரிசி நல்லசிவன் அவர்களும் கவலை தெரிவித்து ஒரு தந்தியை அடித்ததோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு நிச்சயமாக 'அரசாங்கத்தின் சார்பிலே அறிக்கை........(குறுக்கீடு) ஏன் என்றால், டயாலிசிஸ்.......... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே கட்சி விவகாரம் இல்லை. ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு உறுப்பினரை பேசச் சொல்ல முடியாது. (குறுக்கீடு) அரசாங்கத்தின் சார்பில் அறிக்கை வைப்பார்கள். அதற்குப்பிறகு வேண்டுமானால் விளக்கம் கேட்கலாம்.

திரு. ரா. உமாநாத் : அறிக்கை வைக்கும்போது, இந்த பாயின்டையும் அவர்கள் கவர் பண்ணவேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். சும்மா ஒரு அறிக்கை வைக்கக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர்கள் கொடுக்கிற அறிக்கையைத்தான் அமைச்சர் அவர்கள் வைப்பார்கள். அமைச்சர் டாக்டர் அல்ல. டாக்டர்களிடமிருந்து வருகிற அறிக்கையைத்தான் இங்கே வைப்பார்கள். இதிலே டிபேட் செய்ய முடியாது. உடல்நிலை பற்றிய விளக்கம்தான் இது.

திரு. ரா. உமாநாத் : நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். டாக்டர்கள் சொல்வதைத்தான் இங்கே அமைச்சர் அறிக்கையாக வைக்கிறார்கள். ஆனால் நான் சொல்வது, டாக்டர்கள் சொன்ன விளக்கத்திற்கு மாறாக டயாலிசிஸ் நீண்ட நாட்களுக்குத் தேவை என்றெல்லாம் பத்திரிகையிலே வந்திருக்கிறது ஆகவே அவர்கள் அறிக்கை வைக்கிறபோது இதிலே வந்திருக்கக்கூடிய விஷயங்கள் உட்பட ரியல் ட்ருத் என்ன, புல் பேக்ட்சையும் வைக்கவேண்டும். அவர்கள் ஒரு ஃபார்மல் ஸ்டேட்மென்ட் வைக்கக்கூடாது. இதையெல்லாம் மீட் பண்ணக்கூடிய முறையில் வைக்க வேண்டும். அந்த முறையிலே இதையெல்லாம் கவர் செய்கிற வகையிலே ஸ்டேட்மென்ட் வைக்கவேண்டும்.

(முற்பகல் 10–40)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் உடல்நலம் குன்றி மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டதைக் குறித்து இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் அத்தனை பேரும், குறிப்பாக எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் மிகவும் கவலை

கொண்டு, அவர்கள் விரைவிலே உடல் நலம் தேறி வழக்கம் போல வந்து பணியாற்ற வேண்டும் என்ற தங்களுடைய விழைவையும், வேண்டுகோளையும், விருப்பத்தையும் தெரிவித்து வாழ்த்துக்களை அனுப்பியிருக்கிறார்கள்.

எல்லா அரசியல் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும் அவர்கள் உடல்நலம் பெறவேண்டும் என்ற முறையிலே கடிதம் மூலமாகவும், தந்திகள் வாயிலாகவும், இந்த மன்றத்திலும் எங்களைப் போன்றவர்களிடத்திலேயும் சொல்லி அவர்களுக்கு தெரிவிக்கும்படியாக தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு 5-10-1984 வெள்ளிக்கிழமையன்று இரவு ஆஸ்துமா நோய் போல மூச்சு விடுவதில் அதிக சிரமம் ஏற்பட்டதால் உடனே அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சைக்காகவும் ஓய்வுக்காகவும் அனுமதிக்கப்பட்டார். சென்னை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் டாக்டர் கே.வி. திருவேங்கடம் அவர்களும், சென்னை மருத்துவக்கல்லூரியின் நீரிழிவு துறையைச் சார்ந்த டாக்டர் சேஷய்யா அவர்களும், அப்போலோ மருத்துவ மனையினுடைய தலைமை மருத்துவர் டாக்டர் பி.சி. ரெட்டி அவர்களும், அப்போலோ மருத்துவ மனையைச் சேர்ந்த டாக்டர் ராமலிங்கம் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தனி மருத்துவராக விளங்குகிற டாக்டர் பி. ஆர். சுப்பிரமணியம் அவர்களும் அடங்கிய மருத்துவர் குழு ஒன்று முதலமைச்சர் அவர்களுக்குத் தொடர்ந்து சிகிச்சை அளித்து வருகிறது.

மறுநாள் காலையிலேயே முதலமைச்சர் அவர்களின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டது. மருத்துவர் குழு அளித்த விவரத்தினுடைய அடிப்படையில் பொது மக்கள் தகவலுக்காக அரசின் சார்பாக ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது. முதலமைச்சர் அவர்களுக்கு தொடர்ந்து நல்ல முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்றும், மூச்சு விடுவதிலும், சளி இருமல் ஆகியவற்றில் இருந்த சிரமம் தற்போது நீங்கியுள்ளது என்றும் அப்போலோ மருத்துவமனை வெளியிட்ட அறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மற்ற பரிசோதனைகளையும் செய்து, அவருக்கு முழு ஆரோக்கியத்தை உறுதி செய்யும்வண்ணம் எல்லாவிதமான சிகிச்சைகளையும் மேற்கொள்ளும்படி மருத்துவர்கள் குழு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. பிரபல மருத்துவர் டாக்டர் எம்.கே. மணி அவர்களும் டாக்டர் சேஷய்யா அவர்களும் டாக்டர் ராமலிங்கம் அவர்களும் முதலமைச்சர் அவர்களின் உடல்நிலையைப் பரிசோதித்து வருகின்றனர். ஆக, ஏற்கெனவே அந்த மருத்துவ மனையின் சார்பாக அவருடைய உடல் நிலையைப் பற்றி அறிக்கைகள்





வெளியிடப்பட்டிருந்தாலும், இன்று காலையிலே வந்த அறிக்கையை இந்த அவைக்கு வைப்பதுதான் பொருத்தம் உள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

MEDICAL BULLETIN ON THE HEALTH OF THE HONOURABLE CHIEF MINISTER ON 9TH OCTOBER 1984.

The Honourable Chief Minister's health has shown improvement. He is cheerful and is in good spirit. Doctors are assessing his kidney function as well as the over-all clinical state periodically.

The background has been respiratory infection which had caused deterioration of his renal condition. Peritoneal Dialysis has helped to improve his clinical state.

Further decisions regarding the actual modality of treatment will be taken on the basis of results of tests to be done.

Sd/- Dr. PRATHAP C. REDDY,
*Chairman, Appollo Hospital*

இதனுடைய தமிழ் ஆக்கத்தையும் குறிப்பிட நான் விரும்புகிறேன். '' மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உடல் நலத்திலே நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. அவர் உற்சாகமாகவும், நல்ல மன உணர்வோடும் இருக்கிறார்கள். அவரது சிறுநீர் பையின் இயக்கம் சரியாக நடைபெற்று வருகிறது. அவரது உடல் பற்றிய முழு பரிசோதனைகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டிருந்ததால் அவரது பொது உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்தது. பெரிடோனியல் டயாலிஸிஸ் செய்ததில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. மேற்கொண்டு எந்தவிதமான சிகிச்சை அளிப்பது என்பதுஅடுத்து மேற்கொள்ளப்படும் சோதனைகளின் முடிவுகளைப் பொறுத்து எடுக்கப்படும் என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.''

மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் குறிப்பிடும் போது, சில ஏடுகளிலே மட்டும் ஆதாரம் இன்றி சிலபல செய்திகள் வெளிவந்திருப்பதை குறிப்பிட்டார்கள். மாண்புமிகு அன்பில் தர்மலிங்கம் அவர்களும், உமாநாத் அவர்களும், மற்றவர்களும் தெரிவித்ததற்கு இணங்க, இது வேறு பல எண்ணங்களை உருவாக்குவதற்கு காரணமாக இருந்து வருகிறது. ஆனால் இன்னமும் கிட்னி டயாலிஸிஸ் நடைபெறவே இல்லை. ஆனால் கிட்னி டயாலிஸிஸ் நடைபெற்றிருப்பதாக பத்திரிகையிலே வந்திருப்பது தவறு. ஆனால் இப்பொது நடைபெற்று இருப்பது பெரிடோனியல் டயாலிஸிஸ் என்பது. அது என்ன என்பது டாக்டர்களுக்குத்தான் தெரியும்.

டாக்டர் ஹண்டே அவர்கள் வேண்டுமானால் அது பற்றிய விவரங்களை தரக்கூடும். அது வயிற்றிற்குள்ளே இருக்கும் சதைகளுக்கிடையே இருக்கிற ஜவ்வைப் பொறுத்த ஒன்று என்று சொல்லுகிறார்கள். முழு விவரம் பெறவேண்டும் என்றால் டாக்டர்கள்தான் தரவேண்டும். இருந்தாலும் கிட்னியைப் பொறுத்தவரையில் ஓர்ளவுக்கு நன்றாக இயங்கிக் கொண்டு வருகிறது என்றும், அதனுடைய பரிசோதனை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்றும் அதற்கு மேலும் சோதனைகளை நாங்கள் நடத்த வெண்டும் என்றும் அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள். பத்திரிகையில் வந்ததைப் போன்று கிட்னி டயாலிசிஸ் இன்னும் நடைபெறவில்லை. அது எடுக்கப்படவில்லை. அதற்கான கட்டம் வருகிறதா என்று கூட இப்பொது சொல்லவும் முடியாது என்று சொல்லிவிட்டார்கள். முழுப் பரிசோதனையும் நடை பெற்றுக் கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் தர்மலிங்கம் தெரிவித்ததைப்போன்று ஒரு குழுவாக அமைத்து பார்க்கப்பட்டு வருகிறது என்றாலும் யாராவது பொறுப்பான ஒருவர் அறிக்கையைத் தினமும் தரவேண்டுமென்று அவர்கள் தெரிவித்த கருத்தை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் என்ற முறையில் அவர்கள் நாட்டு மக்களுக்குப் பத்திரிகை மூலமாகவும் தெரிவிக்கலாம். இந்த அவைக்கு பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெற்று அவைக்குத் தெரிவிக்கிற அத்தகைய பொறுப்பை அவர்கள் ஏற்று அதை மருத்துவர்கள் குழுவிடமிருந்து பெற்று வைப்பார்கள் என்பதைக் குறிப்பிட்டுக் கூறவிரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு முழு ஓய்வு தேவைப் படுவதால் பார்வையாளர்கள் யாரையும் அனுமதிப்பதில்லை என்று மருத்துவர்கள் குழு முடிவு செய்துள்ளது. பொதுமக்கள், கழகத் தோழர்கள், அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், அரசு ஊழியர்கள், கட்சித் தலைவர்கள் அனைவரும் ஒத் துழைப்பு நல்கவேண்டுமென்று அரசின் சார்பிலே வெளியிடப் பட்டுள்ள அறிக்கையில் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. இப்போது நடைபெற்றுவரும் மருத்துவப் பரிசோதனை முடிந்த வுடன் அவருடைய உடல்நிலைபற்றிய முழு விவரமான அறிக்கை வெளியிடப்படும். நான் முதலிலேயே கூறியபடி மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தேவைப்படுகிற அவ்வப் போது அறிக்கையை அவையிலே வைப்பார்கள். அவை நடை பெறும் நாட்களிலே இங்கே வைப்பார்கள்.

ஆதாரமற்ற செய்திகளை யாரும் நம்பவோ அவற்றைக் கண்டு பரபரப்பு அடையவோ வேண்டாம் என்று நான் அனைவரையும் இந்த அவையின் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக ஒருவருடைய உடல்நிலை, குறிப்பாக, அமைச்சர் அல்லது முதலமைச்சர் போன்றவர்களுடைய உடல்நிலையைப் பொறுத்து ஆதாரமற்ற செய்திகளைப் பரப்புவது உள்ளபடியே மனித





தன்மைக்கு ஏற்றதல்ல என்பதை இந்த வாய்ப்பிலே நான் தெரிவித் துக்கொள்கிறேன். மேதகு குடியரசுத் தலைவர், மேதகு உதவிக் குடியரசுத் தலைவர் மாண்புமிகு பிரதமர், மேதகு தமிழக ஆளுநர், மாண்புமிகு ஆந்திர, கர்நாடக மாநில முதலமைச்சர்கள், தமி ழகத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உடல்நலம் தேறிட வேண்டுமென்ற செய்தியை அனுப்பியுள்ளனர் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். அவர்கள் கவலை கொண்டு முதல்வர் அவர்கள் விரைவில் உடல் நலம் பெற்று திகழ வேண்டும் என்ற நல்ல எண்ணத்தை வெளிப் படுத்திய அத்தனை பேருக்கும் இந்தப் பேரவையின் சார்பாக இந்தப் பேரவையின் முன்னவர் என்ற முறையில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் விரைவில் உடல் நலம் தேறி நம்முடன் வழக்கம் போல் வந்து மக்களையும் ஆட்சியையும் வழி நடத்திச் செல்லவேண்டும் என்று அனைவரும் ஆவலோடு உள்ளோம். அவர்கள் விரைவில் முழு நலம் பெற்றுத் திகழவேண்டும் என்ற வாழ்த்தை தெரிவித்து இந்த அறிக்கையை இந்த அளவோடு முடிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு வார்த்தை kidney Dialysis என்பது அல்ல Routine Dialysis என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டும். Instead of that word kidney dialysis, Routine Dialysis which is normally known as haemo-dialysis. அந்த வார்த்தையை மட்டும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இது போன்ற சந்தர்ப்பங்களில் அதிலும் முதலமைச் சரின் உடல் நிலை பொறுத்த விஷயம் என்ற காரணத்தினால் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் Director of Medical Services போன்ற முக்கியமானவர்களைக் கொண்ட ஒரு மருத்துவர் குழுவால் இந்த மெடிக்கல் புல்லட்டின் அப்போதைக்கப்போது வெளியிடப்பட வேண்டும். அதைப் பற்றி அவை முன்னவர்கள் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க விரும்புகிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக இப்படிப்பட்ட நிலைமையில் ஒரு மருத்துவர் குழு தான் அமைக்கப்படும். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அதை அமைக்க வேண்டியது அவருடைய கடமை. மருத்துவர் குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. அரசின் சார்பாக

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1984 அக்டோபர் 9

Dr. K. V. Thiruvengadam, General Physician. He takes
charge of the department and then directs the other specialists as to
what particular area they have to examine.

அந்த வகையில் ஜெனரல் பிசியனாக இருக்கக்கூடிய சீனியர்
பிசியன் டாக்டர் கே. வி. திருவேங்கடம் அந்தப் பொறுப்பை
ஏற்றுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் எந்த
எந்த ஸ்பெசலிஸ்ட்டுகள் என்ன என்ன பணிகளைச் செய்ய வேண்
டும் என்பதை அப்போதைக்கு அப்போது கோ-ஆர்டினேட் செய்
வதற்கு இருக்கிறார்கள். அதை நான் பார்த்துக் கொண்டு
இருக்கிறேன்.

Normally Minister is not supposed to be the Chairman of any
such Committee. This is the usual convention.

### 3. ஒழுங்குப் பிரச்சினை

அமைச்சரவையிலிருந்து திரு. எஸ். டி. சோமசுந்தரம் விலக்கப்பட்டதற்
கான காரணத்தை அவைக்கு அறிவிப்பது குறித்து.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இங்கே
நான் என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டரை ரெயில் செய்ய
அனுமதி கோருகிறேன். அமைச்சராக இருந்த திரு. எஸ். டி. எஸ்.
அவர்கள் ராஜினாமா செய்வதும் அல்லது அவருடைய ராஜி
னாமாவை முதலமைச்சர் அவர்கள் பெற்று அதை அறிவிப்பதும்
பாராளுமன்றத்தில் கடைபிடிக்கக்கூடிய கொள்கைதான் என்
றாலும் அமைச்சராக இருந்த எஸ். டி. எஸ். அவர்கள் தமிழக
மந்திரி சபையிலிருந்து விலகிய சந்தர்ப்பத்தில் பல்வேறுபட்ட
செய்திகள் பத்திரிகைகளில் வந்தன. ஒரு பக்கத்தில் ஒரு
மாதிரியாகவும், இன்னொரு பக்கத்தில் இன்னொரு மாதிரியாக
வும் வந்தன.

The House is the Paramount body to know all these information.
தொடர்ந்து ஆளும் கட்சி சார்பாக இருக்கக்கூடிய பத்திரிகையில்
படித்து இருக்கிறேன். எஸ். டி. எஸ். பிரச்சினை முடிந்து விட்ட
பிரச்சினை ஒன்றும் இல்லை என்று ஒரு நாள் வருகிறது. அதற்கு
ஓரிரு நாள் கழித்து மறுபடியும் அந்த ராஜினாமா அல்லது
ராஜினாமா கேட்டுப் பெறுவது அல்லது அவரை நீக்குவது என்ற
பிரச்சினை என்று செய்திகள் வந்தன. இந்தச் செய்திகளுக்கு
உண்மையான ஆதாரத்தை பல விதத்தில் பார்க்க வேண்டியவர்
களாக இருக்கிறோம். ஆகையால் இந்த மன்றத்திலே அமைச்ச
ராக இருந்த எஸ். டி. எஸ். அவர்கள் எதற்காக ராஜினாமா
செய்தார்கள் ? அவர்கள் ராஜினாமா செய்தார்கள் என்றால்
இந்த மன்றத்திலே சில உரிமைகள் இருக்கின்றன. எந்த மந்திரி
ராஜினாமா செய்தாலும் (குறுக்கீடு) (கூச்சல். குழப்பம்).



1984 அக்டோபர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் உட்காருங்கள். நீங்கள் ஒரு தவறான எண்ணத்தின் பேரில் ஒரு ஆர்க்யுமெண்டை பில்ட் அப் செய்து கொண்டு போகிறீர்கள். அவர் ராஜினாமா செய்ததுபோல் நீங்கள் சொல்கிறீர்கள். அவர் ராஜினாமா செய்திருந்தால் நீங்கள் சொல்லும் வாதங்களை பாராளுமன்ற சம்பிரதாயங்களை எல்லாம் நான் ஒத்துக் கொள்கிறேன். நீங்கள் 10 வருடங்கள் பாராளுமன்றத்தில் இருந்து இருக்கிறீர்கள். நானும் 10 வருடங்கள் பாராளுமன்றத்தில் இருந்து இருக்கிறேன். நம் எல்லோருக்கும் பாராளுமன்ற மரபுகள் தெரியும். (குறுக்கீடு) நீங்கள் சொல்வதை வைத்துத் தான் பிரஸ்யூம் செய்கிறேன். (குறுக்கீடு) அவர் ராஜினாமா செய்யவில்லை. அந்த அடிப்படையில் விவாதத்தைத் தொடருவது சரியாக இருக்காது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது என்ன என்றால், பத்திரிகைகளில் பலவிதமான கருத்துக்கள் வந்திருக்கின்றன ; ஆளும் கட்சி பத்திரிகைகளில் ஒன்றும், எதிர்க் கட்சி பத்திரிகைகளில் ஒன்றும் வந்து இருக்கின்றன. எனவே இந்த மன்றத்திற்கு சரியான தகவல் தெரிய வேண்டும். எனவே, மதிப்பிற்குரிய திரு. எஸ். டி. எஸ். அவர்கள் இந்த அவைக்கு ஏதாவது தகவல் தருவதற்கு விருப்பம் தெரிவித்தால் அதை அனுமதிக்க வேண்டியது உங்கள் கடமை. (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய கடமைகளை ஞாபகப்படுத்தியதற்கு மிக்க நன்றி. அவர் ராஜினாமா செய்யவில்லை. எனவே, அந்தப் பிரச்சினை எழவில்லை. மேலும் பத்திரிகைகளில் வருவது அனைத்தையும் இங்கே விவாதிக்க முடியாது. நீங்கள் பல பத்திரிகைகளைப் படிக்கலாம் ; நான் சில பத்திரிகைகளைத்தான் படிக்கிறேன். ஆகவே, எல்லாப் பத்திரிகைகளிலும் வருவதை வைத்து பேரவையில் விவாதிப்பது தவறு ; அது முறையும் அல்ல ; இதற்கு பாராளுமன்ற சம்பிரதாயம் இடம் கொடுக்கவில்லை. (கூச்சல்-குழப்பம்).

Thiru V. KRISHNAMURTHY : Sir, resignation letter was obtained. It is a fact.

திரு. ரா. உமாநாத் : போன செஷனிலே மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்களை இந்த ஹவுஸ் அமைச்சர்கள் வரிசையில் பார்த்தது ; இந்த செஷனிலே அவர்களை இந்த ஹவுஸ் எதிர்க் கட்சிகள் வரிசையில் பார்க்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் ஜனநாயகம்.

திரு. ரா. உமாநாத் : பத்திரிகைகளிலே வந்திருக்கின்ற செய்திகளை வைத்து இங்கே விவாதிக்கக்கூடாது என்று

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 அக்டோபர் 9

ஆகவேதான் இந்த மரபை கடைப்பிடிக்கவேண்டும் என்று சொல்கிறேனே தவிர வேறல்ல. ஒவ்வொரு கட்சியிலிருந்தும் இலர் நீக்கி வைக்கப்படுகிறார்கள். அப்படி நீக்கி வைக்கப் பட்டவர்கள் அங்கே இருந்து இந்தப் பக்கமும் வருகிறார்கள். இங்கே இருந்து அந்தப் பக்கமும் வருகிறார்கள். எனவே அது எல்லா உறுப்பினர்களுக்கும் இருக்கின்ற உரிமைதான். தற்போது கம்யூனிஸ்ட் கட்சியிலே இருந்து கூட சிலரை நீக்கினார்கள். அப்படி நீக்கப்பட்டு இங்கே வந்தவர்கள் அதற்கான காரணம் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அதுபோல் இங்கே இருந்து சிலபேர் அங்கே போய் இருந் தாலும் அவர்களும் காரணம் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. ஆகவே அமைச்சரைவைப் பொறுத்தவரையில் இருக் கின்ற மரபு என்னவென்றால், ஒருவர் ராஜினாமா பண்ணி, அந்த ராஜினாமா ஏற்றுக் கொள்ளப்படுகின்ற சூழ்நிலை வந்தால், ஏன் ராஜினாமா பண்ணினேன் என்று சொல்ல குறிப்பிட்ட அமைச்சருக்கு வாய்ப்புண்டு, அப்படிக்கூட அமைச்சர் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. சிலபேர் ராஜினாமா செய்துவிட்டு, விளக்கம் தரவேண்டியதில்லை என்று ஏற்கெனவே சொல்லி இருக்கிறார்கள். அப்படி விளக்கம் தர விரும்பினால், மாண்புமிகு பேரவைத் தலைவரின் இணக்கத்தைப் பெற்று விளக்கம் தரலாம் என்றிருக்கிறது. ஆனால் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நீக்கிவைக்கப்பட்டதின் காரணத்தால் அதை இங்கே கிளப்பவேண்டியதில்லை.. அவர் வர்களுக்கு இருக்கின்ற உரிமைகளின் அடிப்படையில், கட்சி களுக்குள்ளே இருக்கின்ற நிலைமைகள், மற்றவைகளைப் பொறுத்து நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். ஏன் நடவடிக்கை எடுத்தீர்கள் என்று எந்த முதலமைச்சரையும் கேட்க முடியாது. அது அவரவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது. அந்தந்தக் கட்சிக்குள்ளே இருக்கின்ற சூழ்நிலை மற்றவைகளைப் பொறுத்து அவரவர்கள் தங்கள் விருப்பப்படி ஒரு கட்சியிலே இருக்கவோ, வேறு கட்சியிலே சேரவோ அல்லது தனியாக நிற்கவோ உரிமை உண்டு. மேலும் அவரவர்கள் தங்களு டைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல தொடர்ந்து வர இருக்கின்ற நிலைமைகளில் பல்வேறு வாய்ப்புகள் உண்டு. அப்படிப்பட்ட வாய்ப்புகள் இருப்பதன் காரணத்தால், இதன் பேரில் அறிக்கை வெளியிடவேண்டிய அவசியம் இல்லை. அது மரபும் இல்லை. எனவே அந்த மரபைக் காப்பாற்றுவது தான் நல்லது. ஆகவே அதற்காகத்தான் இதைச் சொல் கிறேனே தவிர வேறு எந்தக் காரணமும் இல்லை.

மேலும் யாரும், யாருக்கும் பயப்படவேண்டிய அவசியம் இல்லை. யாரும் பயப்படுகிற மாதிரியும் இல்லை. நீங்களும் பயப்படுகிற மாதிரி இல்லை. நாங்களும் பயப்படுகிற மாதிரி இல்லை. எனவே இங்கே எல்லாப் பக்கத்திலே இருக்கின்ற அத்தனைபேர்களும் வீரர்களே என்பதைச் சொல்லி இந்தப் பிரச்சினையை இத்தோடு முடித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.......... (குறுக்கீடு)........



1984 அக்டோபர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

நான் கெசட் நோட்டிபிகேஷனைப் படிக்கிறேன்.. The following notification shall be published in the Extraordinary issue of the Gazette. (கூச்சல், குழப்பம்.)

திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பக்கத்திலே இருப்பவர்களும் ஜனங்களைப் பிரதிநிதித் துவப்படுத்துகிறார்கள்; அந்தப் பக்கத்திலே இருப்பவர்களும் ஜனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் இது ஒரு மார்ஜினல் கேஸ். ஸ்ட்ரெய்ட்டாக ஒரு அமைச்சர் ட்ராப் செய்யப் பட்டார் என்ற நிலைமை இந்தப் பிரச்சினையில் வரவில்லை. அதற்கு முன்பு அவர் ராஜினாமா கடிதம் கொடுத்திருக்கிறார். அவ்வாறு ராஜினாமா கடிதம் கொடுக்கப்பட்டது பற்றி அவை முன்னவர் அவர்களே .......................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நோட்டிஃபிகேஷனை படிக்கிறேன்... (கூச்சல், குழப்பம்). No. There are limitations.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: அவை முன்னவர் அவர்களே சொன்னார்கள், அமைச்சர் ரிஸிக்னேஷன் லெட்டர் கொடுத்தார் என்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கெஸட்டிலே இருப்பதைப் படிக்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: அவை முன்னவர் அவர்களே சொல்கிறார்கள், ரிஸிக்னேஷன் லெட்டர் வந்தது என்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கட்சிக்குள்ளே இருக்கின்ற சாதாரண ஒரு உள் விவகாரம். உங்கள் கட்சி யிலேயும் ஆயிரம் நடக்கின்றது. எல்லாக் கட்சிகளிலும் நடக்கின்றது............ (குறுக்கீடுகள்)............... இன்னொரு கட்சிக்காக வாதாடுவது என்பது ரொம்ப சுலபமானது. நம்முடைய கட்சி விவகாரம் என்று வரும் போதுதான் சங்கடமாக இருக்கும் (குறுக்கீடுகள்)........ I am going to read the gazette notification. The Hon. Member Thiru Krishnamurthy has raised a point of order and I am going to read the Gazette notification which was published in September, 1984. (கூச்சல், குழப்பம்).

[1984 அக்டோபர் 9

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர். அவர்களே, நான் சொல்வது 5 நிமிஷம், 10 நிமிஷம் செலவானாலும பரவாயில்லை. முதலிலே நீங்கள் மரபைப் பற்றிக் கேட்கிறீர்கள். இந்தப் பக்கத்திலே இருக்கிற சீனியர் லீடர்ஸ் எழுந்து ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் அல்லது ஒரு கான்ஸ்டிட்யூஷனல் பாயின்ட் ஆப் லா எழுப்பும்போது அதைக் கேட்பதற்குக்கூட பொறுமை இல்லையென்று சொன்னால், அப்புறம் என்ன மரபு வேண்டியிருக்கிறது. (கூச்சல்-குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெரியவர் திரு. சங்கரய்யாவுக்குச் சொல்கிறேன், திரு. கிருஷ்ணமூர்த்தி ஒரு பிரச்சினையைக் கிளப்பி இருக்கிறார். திரு. உமாநாத் ஒரு பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார் இரண்டு பேரும் ஒரே பிரச்சினையைத்தான் கிளப்பினார்கள். அதற்கு அவை முன்னவர் பதில் சொன்னார். பதில் சொல்கின்ற வரையில் நீங்கள் கேட்டுக் கொண்டிருந்தீர்கள். (குறுக்கீடுகள்) அவை முன்னவர் பதில் சொல்வதற்கு முன்பே நீங்களும் பேசுவதற்கு அனுமதி கேட்டிருந்தால் அளித்திருப்பேன். அப்போது நீங்கள் பேசவில்லை. இரண்டு பேர்கள் பேச, அவை முன்னவர் பதிலளித்தபிறகு நீங்கள் திரும்பவும் அதேபிரச்னை குறித்துப் பேசுவது எப்படிப் பொருத்தமாகும்? நான் மரபையே கேட்கிறேன் (குறுச்கீடு). திரு. சங்கரய்யா அவர்களுக்கு எல்லாவிதமான மதிப்பும் மரியாதையும் தருவதில் நான் என்றைக்கும் மறுத்தது கிடையாது. அது வேறு விவகாரம். ஆனால் இந்தப் பிரச்சினையில் அவரது கட்சியில் திரு. உமாநாத் பேசினார்கள். நீங்களும் பேச வேண்டுமென்று சொல்லியிருந்தால் முதலிலேயே உங்களுக்கும் அனுமதி அளித்திருப்பேன். நீங்களும் பேசியிருக்க முடியும். விவகாரத்திற்கு அவை முன்னவர் பதில் சொன்ன பிறகு திரும்பவும் அதே பிரச்சினை குறித்து நீங்கள் பேசத் தொடங்கினால் சபையை எப்படி நடத்துவது என்று சொல்லுங்கள். இது என்ன முறை என்பதை முதலில் நீங்கள் சொல்லுங்கள்.

திரு. என். சங்கரய்யா : நீங்கள் என்னைப் பேச அனுமதித்தீர்கள். தங்கள் அனுமதியுடன் நான் பேச ஆரம்பித்த பிறகு, அதைத்தடுத்தால் எப்படிச் சரியாக இருக்கும். நீங்கள் தான் என்னைப் பேச அனுமதித்தீர்கள். அதனால் நான் என்னதான் சொல்கிறேன் என்பதைக் கேட்டுவிட்டு, பிறகு நீங்கள் அதைப் பற்றிச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வேறு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புகிறீர்கள் என்று நினைத்து அனுமதித்தேன். முடிந்துவிட்ட பிரச்னை பற்றியே திரும்பவும் நீங்கள் சொல்வதால் இதை அனுமதிப்பதற்கில்லை. நீங்கள் கோபப்பட்டால் என்ன செய்வது.



1984 அக்டோபர் 9]

திரு. என். சங்கரய்யா : அமைச்சர் பயம் இல்லை என்றார்கள்; கேட்பதற்குப் பயம் இல்லையென்று சொன்னால், கேட்பதற்கு ஆர்க்யூமெண்டுக்கு ஆர்க்யூமென்ட்டை வைத்துச் சந்திக்கட்டும்; (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நான் இருக்கிற நிலைமையைத் தெளிவுபடச் சொல்லியிருக்கிறேன்.. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். டி. எஸ். அவர்கள் அமைச்சர் பதவியை இராஜினாமா பண்ணினார்கள். அதை ஏற்றுக்கொள்வதும் ஏற்றுக்கொள்ளாததும் கட்சியைப் பொறுத்தது; இராசினாமா ஏற்றுக்கொள்ளப்படவில்லை; அவர் விலக்கப்பட்டார்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : There we differ ரெசிக்னேஷன் கொடுத்த பிறகு ரெசிக்னேஷனை ஏற்றுக்கொள்ளாமல் டிஸ்மிஸ் செய்திருக்கிறீர்கள் ................

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எந்த நேரத்திலும் எந்தக் கட்சியிலும் இராஜினாமா கொடுத்ததை ஏற்றுக் கொள்ளாமல் டிஸ்மிஸ் செய்ததற்கு எவ்வளவோ வரலாறு இருக்கிறது. வேறு ஒரு மாநிலத்தைப் பற்றிக் குறிப்பிடுவதற்காக மன்னிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்—ஆந்திராவில் கூட, இராஜினாமா செய்தார். இராஜினாமாவை ஏற்றுக் கொள்ளாமல் டிஸ்மிஸ்தான்—அங்கேயும் அவர்கள்—செய்தார்கள். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக்கொள்ளாததும் முதலமைச்சருடைய முழுப் பொறுப்பு. அமைச்சர் பதவியை இராஜினாமா செய்து கடிதம் கொடுத்தார். ஆனால் எம். எல். ஏ. பதவியை இராஜினாமா செய்யவில்லை; கட்சிப் பதவியை அவர் இராஜினாமா செய்ய வில்லை. கட்சி நடவடிக்கை எடுத்தது என்பது வேறு. இங்கே அதைப் பற்றி பேச வேண்டிய அவசியம் இல்லை. எம்.எல்.ஏ. பதவியை அவர் இராஜினாமா செய்யவில்லை. அமைச்சர் பதவியை இராஜினமா செய்து கடிதம் கொடுத்தார். எந்தக் கட்சியிலும் எந்த இடத்திலும் இராஜினாமா கொடுத்தால், அந்த இராஜினாமாவைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கட்டாயம் கிடையாது. இராஜினாமாவை ஏற்றுக்கொள்ளாமல் அவரை நீக்கி வைக்க உரிமை உண்டு. மாண்புமிகு, முதல்வர் அவர்கள் முடிவை எடுக்க நூற்றுக்கு நூறு முழு உரிமை படைத்தவர்கள், அவர்கள் நீக்கி வைத்தார்கள். நீக்கி வைத்ததன் அடிப்படையிலே ஸ்டேட்மென்ட் விடவேண்டிய அவசியம் இல்லை. ஆகவேதான் இந்த மரபைக் காப்பாற்ற மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் அத்தனை பேரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இந்தப் பிரச்சனையை இத்தோடு விடுவதுதான் நல்லது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1984 அக்டோபர் 9

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, இவ்வளவு நேரம் அவர்கள் பேசினார்கள். நாங்கள் கேட்டுக் கொண்டிருந்தோம். அதேபோல நாங்கள் சொல்வதையும் அவர்கள் கேட்க வேண்டும். நான் சொல்வது டெக்னிக்கலாக மட்டும் இதை பார்க்கக் கூடாது. தமிழ் நாட்டு மக்கள் மத்தியில் பத்திரிகைகள் மூலம் பிரபலமாகிவிட்ட ஒரு பிரச்சனை. ஆகவே ஜனங்களுக்கு தெளிவு பண்ணுவதற்கு ஏற்கனவே அமைச்சராக இருந்தவர் ஒரு விளக்கத்தைச் சொல்லி, அரசாங்கத்தின் சார்பாக ஒரு விளக்கத்தையும் சொன்னால் நிலைமை தெளிவாகும்.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிப் பல பிரச்னைகள் வரலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கருத்துக்கள் பரிமாறுவது என்பது வெளியிலே எல்லோரும் அவரவர்களுடைய அபிப்பிராயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஏராளமாகச் சொல்லியிருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் எஸ்.டி.எஸ். அவர்களும் அறிக்கைகள் விட்டிருக்கிறார்கள். நிலைமைகள் பொதுமக்கள் பார்த்து தீர்ப்பளிக்க வேண்டிய ஒன்று. இங்கே அரசு சம்பந்தமாக, சட்டமன்றம் சம்பந்தமாக இருக்கிற உரிமைகளைத்தான் சொல்கிறோம். கவர்னர் அவர்களின் நோட்டிபிகேஷனில் சொல்லி யிருப்பது என்னவென்றால்,

"..........

*NOTIFICATION*

I, S. L Khurana, Governor of Tamil Nadu hereby accept the recommendation of the Chief Minister that S. D. Somasundaram be dismissed from the Council of Ministers and direct that he be relieved of his duties as Minister with immediate effect.

S. L. KHURANA,
*Governor of Tamil Nadu.*"

என்று தான் சொல்லப்பட்டிருக்கிறது. சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் இருக்கிற நடைமுறைகளைப் பற்றித்தான் நாம் பேசுகிறோமே தவிர வேறல்ல. மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் சொல்லியமாதிரி அவர்கள் பக்கத்திலிருந்தும் கருத்துக்கள் பொதுமக்களிடத்தில் பரிமாறப்பட்டிருக்கின்றன. ஆளும்கட்சி பக்கத்திலிருந்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டிருக்கின்றன. அதைப்பார்த்து சிந்தித்து முடிவளிக்க



1984 அக்டோபர் 9] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வேண்டியது, தீர்ப்பளிக்க வேண்டியது பொதுமக்கள் மன்றம். வாய்ப்பு ஏற்படுகிறபோது அதை செய்து கொள்ளலாம். அது வேறு. இங்கே சட்டப்பிரச்னை, சட்டமன்றத்தை நடத்து வதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. ஆகவேதான் இதிலே விதிமுறைகளுக்கும், மற்றவைகளுக்கும் மாறுபட்ட செயல் எதுவும் நடைபெறவில்லை ; முறைப்படிதான் நடைபெறுகிறது, என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : புரசிஜர் ஹேஸ் பீன் வயலேட்டட்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் பதவியை விட்டு விலகுகிற உறுப்பினர் பேரவைத் தலைவர் இசைவைப் பெற்றுதான் பதவியை விட்டதற்கான தன்னிலை விளக்கத்தை அளிக்கலாம் என்று விதி இருக்கிறது. அது இராஜினாமா செய்தவருக்குத்தான் பொருந்தும். இவரைப் பொறுத்த வரையில் விலக்கப்பட்டவர். ஆகவே, அந்தப் பிரச்னை அத்தோடு முடிந்தது.

4. அறிவிப்புகள்.

(அ) பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று, 8-10-1984 தேதியன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவுகளுக்கேற்ப பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்பெற்றுள்ளன :—

| | |
|---|---|
| 9-10-1984 (செவ்வாய்க்கிழமை)<br>10-10-1984 (புதன் கிழமை) | அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். |
| 11-10-1984 (வியாழக்கிழமை) | தனியார் அலுவல்கள். |
| 12-10-1984 (வெள்ளிக்கிழமை) | 1. அரசினர் நிதி அலுவல்கள்.<br>2. அரசினர் சட்டமுன்வடிவுகள்—ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும். |
| 13-10-1984 (சனிக்கிழமை) | அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். |

[பேரவைத் தலைவர்] [1984 அக்டோபர் 9

| | |
|---|---|
| 14–10–1984 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை |
| 15–10–1984 (திங்கட்கிழமை) | 1. அரசினர் நிதி அலுவல்கள் 2. அரசினர் சட்ட முன்வடிவுகள்—ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும். |

16–10–1984-க்கு மேல் நிகழ்ச்சி நிரல் பின்னர் அறிவிக்கப்படும்.

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவை விதி 9 உள்விதி 1-ன் படி கீழ்க்கண்ட உறுப்பினர்களை பேரவையின் ஒன்பதாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (பேனல் ஆப் சேர்மென்) நியமிக்கிறேன்.

1. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்.
2. திரு. மே. அ. இராசகுமார்.
3. திரு. எல். இளையபெருமாள்.
4. திரு. பெ. சு. திருவேங்கடம்.
5. திரு. தி. கா. நல்லப்பன்.
6. திரு. ஏ. சி. சண்முகம்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் : ''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.



1984 அக்டோபர் 9]

(ஆ) தமிழ்ப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1984 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1984

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

'' 1984 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் இங்கே அறிமுகம் செய்ய அனுமதி கோரப்பட்டு இருக்கும் சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை நான் சார்ந்து இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கடுமையாக எதிர்க்கிறேன்.

இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். ஏற்கனவே இந்தப் பேரவையிலே மாநகராட்சித் தேர்தல் வரும் என்று பலமுறை அறிவிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட அண்மையில் சிவகங்கையில் பேசுகிறபோது நகராட்சித் தேர்தல் அக்டோபர் மாதத்தில் நிச்சயமாக வரும் என்று சொன்னார்கள். இங்கே இதற்கு முன்னாலே உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. காளிமுத்து அவர்களும், மாண்புமிகு திரு. மாண்புமிகு திரு. ... அவர்களும் நகராட்சித் தேர்தல்கள் ஆகஸ்டிலே அல்லது செப்டம்பரிலே வரும் என்று தொடர்ந்து ஒரே பாடல், ஒரே ராகம் என்ற முறையிலே சொல்லிக்கொண்டு வந்தார்கள்.

இப்போது அந்தத் துறைக்குப் புதிதாக வந்திருக்கும் மாண்புமிகு திரு. சௌந்திரராஜன் அவர்களும், ஏற்கனவே ஆகஸ்ட், பிப்ரவரி என்று சொல்லிவிட்டதால், இந்த மாத இறுதியிலே வரும் என்று கூடச் சொல்லலாம்.

இந்த நகராட்சித் தேர்தல்களைப் பொறுத்தவரையில், தேர்தல் வரும் என்பது ஒரு அறிவிப்பாக இருக்கிறதே தவிர, அதை நடைமுறைப்படுத்துவதற்கான எந்த விதமான நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால், இந்தத் தேர்தல்களைத் தள்ளிப் போடுவதற்காக ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு காரணத்தைச் சொன்னார்கள். முதலில், மழைக்காலமாக இருக்கிறது; இது முடிந்த பின்னர் தேர்தல் வரும் என்று சொன்னார்கள். அடுத்து, தஞ்சை இடைத் தேர்தல் வந்து விட்டது, ஆகவே, அதற்குப் பிறகு வரும் என்று சொன்னார்கள் அதற்கு அடுத்து, மஸ்டர் ரோல் வழக்கு இருக்கிறது, அதன் தீர்ப்பு வந்தபின்னர் நடைபெறும் என்று சொன்னார்கள். அடுத்து 18 வயது நிரம்பிய இளைஞர்கள் வாக்காளர்கள் என்று அறிவிக்கப்பட்டு இருப்பதால், அதற்கான வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படவேண்டும், அது செய்து முடிக்கப் பட்டவுடன் தேர்தல் வரும் என்று சொன்னார்கள். அடுத்து ஆதி திராவிடர்களுக்கு, பெண்களுக்கு வார்டுகள் தனியாக ஒதுக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டு இருப்பதால், அந்த வார்டுகள் பிரிக்கப்பட்டவுடன் தேர்தல் வரும் என்று சொன்னார்கள். பின்னர் இந்த இட ஒதுக்கீடு குறித்து வழக்கு இருக்கிறது, அதன் மீது தீர்ப்பு வந்தவுடன் தேர்தல் வரும் என்று சொன்னார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து உயர்நீதி மன்றத்தில் இதற்கு இடைக்காலத் தடை உத்தரவு போட்டு இருக்கிறார்கள், அது முடிந்த பின்னர் தேர்தல் வரும் என்று சொன்னார்கள். இப்படிச் சொல்லப்பட்ட எல்லாக் காரியங்களும் இன்றைக்கு முடிந்து விட்டன. கடைசியாக என்ன சொல்வது என்று தேடிப்பார்த்து, ஒன்றைச் சொன்னார்கள். இப்போது நடைபெற்ற இடைத் தேர்தலில் கள்ள ஓட்டுப் போடுவது அதிகமாக இருந்ததால், இதைத் தவிர்ப்பதற்காக வாக்காளர்களுக்கு போட்டோ ஒட்டிய அடையாள அட்டை தரப்படும் என்று சொன்னார்கள். அப்போதே நாங்கள் கேட்டோம், அக்டோபர் மாதத்திற்குள்ளாக இதைச் செய்ய முடியுமா என்று. நிச்சயமாகச் சொன்னார்கள், அதை எல்லாம் நாங்கள் செய்து விடுவோம். நிச்சயமாக குறிப்பிட்ட தேதியில் தேர்தல் வரும் என்று சொன்னார்கள். இப்போது புதிதாக உள்ளாட்சித் துறை அமைச்சராக வந்துள்ள திரு. சௌந்திரராஜன் அவர்கள் அதேமாதிரி ஒரு பாடலை இங்கே பாடி, ஒரு மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.





நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே ஒன்றைக் கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நீங்கள் சொல்லியதைப் போல வாக்காளர்களின் புகைப்படங்களை எடுக்க என்ன முயற்சிகளை மேற்கொண்டீர்கள்? பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டது. டெண்டர்கள் கோரப்பட்டன. புகைப்பட நிபுணர்கள் அதற்கான மனுவைப் போட்டு, நீங்கள் கேட்ட ரூ. 10,000-ஐ டெபாசிட் கூட செய்தார்கள். பெண்களை பெண் போட்டோ கிராபர்கள் போட்டோ பிடிப்பார்கள் என்று எல்லாம் கூட சொல்லப்பட்டது. அப்போதுகூட கேட்டோம் இதுவெல்லாம் அக்டோபர் மாதத்திற்குள் முடிந்து விடுமா என்று. ஆஹா, நாங்கள் இதைச் செய்து முடித்து விடுவோம் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது என்ன நிலைமை என்றால், போட்டோ கிராபர்களிடமிருந்து பெற்ற டெபாசிட் தொகை அவர்களிடத்திலேயே திருப்பித்தரப்படவிருக்கிறது என்பதுதான். அதற்கான உத்தரவுகள் கூட போடப்பட்டு இருப்பதாக நான் அறிகிறேன்.... (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது மசோதவை அறிமுகம் செய்யத்தான் நான் அனுமதி கோரியிருக்கிறேன். இந்தக் கருத்துக்களை எல்லாம் அவர் மசோதா ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிற நேரத்தில் தெரிவிக்கலாம். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஜனநாயகத்தைக் காப்பாற்ற எந்த அளவிற்கு உரிமையும், உணர்வும் இருக்கிறதோ அதே அளவிற்கு ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டும் என்கிற உரிமையும், உணர்வும் எங்களுக்கும் இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு பேசப்படுகிறது, பாராளுமன்றத் தேர்தல் ஜனவரி மாதத்தில் வரலாம், அல்லது டிசம்பர் மாதத்தில் வரலாம் என்று. அந்த பாராளுமன்றத் தேர்தலோடு சட்டமன்றத் தேர்தலும் நடக்கக் கூடும் என்றும் செய்திகள் வந்து கொண்டு இருக்கின்றன. ஆகவே, நீங்கள் இப்படி தேர்தல் நடத்துவதைத் தாமதப்படுத்திக் கொண்டே போனால், தள்ளிப்போட்டுக் கொண்டே போனால் அது எதைக் காட்டுகிறது என்றால், நீங்கள் தேர்தலை நடத்தப் போவது இல்லை. மந்திரிகளுக்கு அழகு வரும் பொருள் உரைத்தல்,. ஆனால் நீங்கள் வராததை உணர்த்தி, மக்களை ஏமாற்றிக்கொண்டே இருக்கிறீர்கள். இப்படி ஏமாற்றுவதற்காக உங்களுக்கு நோபிள் பரிசு கூட கொடுக்கலாம். ஜனநாயகத்தைப் படுகொலை செய்கிறீர்கள், மக்களை ஏமாற்றுகிறீர்கள்; ஏமாற்றப்படுவீர்கள் என்று சொல்லி, இதை எதிர்க்கிறேன்.

(முற்பகல் 11-20)

திரு. ரா. உமாநாத் : துணை சபாநாயகர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவை இன்ட்ரொடியூஸ் பண்ணக்கூடாது என்று இன்ஷியல் ஸ்டேஜிலேயே அப்ஜக்ஜஷன் ரெய்ஸ் பண்ணுகிறேன். ஏன் இன்ட்ரொடியூஸ் பண்ணக்கூடாது என்பதற்கு சில காரணங்களைச் சொல்கிறேன்.

நகராட்சி தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பது. அதற்குப் பிறகு மாநிலத் தேர்தல் நடைபெற இருப்பதால் காலத்தை நீட்டிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இருக்கக்கூடிய இந்த பில். என்னுடைய அப்ஜெக்ஷன், இந்த நோக்கத்திற்காக அல்ல இந்த பில். நீங்கள் கொண்டுவந்திருக்கிற நோக்கம் வேறு, இங்கே கூறப்பட்டிருக்கிற நோக்கம் வேறு. To bury the local elections once for all is your aim. தமிழிலே சொல்வதாக இருந்தால், மாநகராட்சி மற்றும் ஸ்தல ஸ்தாபன நிறுவனங்களுக்கு தேர்தலையே நடத்தாமல், ஒரேயடியாக குழிதோண்டிப் புதைப்பதற்காக இந்த பில் வந்திருக்கிறது. அதனால் நாங்கள் அப்ஜெக்ட் பண்ணுகிறோம்.

பார்லிமென்டரி எலக்ஷன் குறிப்பிட்ட காலத்திற்குள் நடத்தப்படும் என்று பிரதமர் சொன்னார். அது முறைப்படி நடக்கும் என்று பலதடவை சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்கிறபோது அவை முன்னவர் ஒரு பப்ளிக் மீட்டிங்கிலே கூட ஒருதடவை சொல்லியிருக்கிறார். நாடாளுமன்றத்திற்கு எப்போது தேர்தல் நடத்தப்படுகிறதோ அதோடு சேர்த்து சட்டமன்றத்திற்கும் தேர்தல் நடக்கும் என்று சொன்னார்கள். மத்தியில் ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு முக்கியமானவரும் இரண்டு தேர்தல்களுமே சேர்ந்து நடக்கும் என்று சொல்லியிருக்கிறார். இது எப்படி என்று எனக்குத் தெரியாது. ஆனால் இரண்டும் சேர்ந்து நடக்கும் என்று சொல்கிறார்கள். அந்த நிலைமை வந்தால் இந்த அவையின் லாஸ்ட் செஷன் இதுதான். இதற்குப் பின்னால் எலெக்ஷன் என்றால் ஜெனரல் எலெக்ஷன் தான். அப்படி இருக்கும்போது லோக்கல் பாடீஸ் எலெக்ஷன், முனிசிப்பல் எலெக்ஷன் எப்போது வரும்? அதனால்தான் சொல்கிறேன்.

It is just brought to bury the local bodies once for all. அதுதான் நோக்கம். அதனால்தான் ஸ்ட்ராங் அப்ஜெக்ஷன் ரெய்ஸ் பண்ணுகிறோம். நீங்கள் வந்து 7 வருஷம் ஆகிவிட்டது. உங்கள் காலம் முடிகிற வரையில் தேர்தலை நடத்துவதாக இல்லை என்ற நிலைமை வந்தபிறகு, இதுவரையிலும் ஏமாற்றிவிட்டீர்கள். மறுபடியும் ஏமாற்றப் பார்க்கிறீர்கள். இந்த அவையை ஏமாற்றுகிறீர்கள். ஏன் இந்த நிலை? தேர்தலை நடத்தமாட்டோம் என்ற உண்மையைச் சொல்லிவிடுங்கள். மேலும் இந்த அவையை ஏமாற்றாதீர்கள். எனவே, இந்த பில்லை வித்ட்ரா பண்ணுங்கள், பில்லை இன்ட்ரொஸ்டியூ பண்ணாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்தக்கூடிய நேரத்திலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் இந்த





அரசுக்கு உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதிலே கடந்த ஏழு ஆண்டுகாலமாகவே தயக்கம் இருக்கிறது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலேயும் உங்களுக்கு இருக்கக்கூடிய தயக்கத்தை, பயத்தை நீங்கள் காட்டிக் கொண்டிருக்கிறீர்கள். 6 மாதம் அல்லது ஓராண்டு காலத்தில் தேர்தல் வரும் என்று ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள்; வாக்குறுதி தந்திருக்கிறார்கள். ஆனால் கொடுத்த வாக்குறுதி என்னவாயிற்று? 6 மாத காலத்தில் அல்லது 3 மாத காலத்தில் நிச்சயமாக தேர்தல் நடக்கும் என்கிறார்கள். ஆனால் எதுவும் நடப்பதில்லை. நீங்கள் இந்த மன்றத்தின்மீது எவ்வளவு மரியாதை வைத்திருக்கிறீர்கள் என்பதை இது காட்டுகிறது. ஆகவே, இந்த மன்றத்தை மதிப்பதற்கு நீங்கள் தயாராக இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நான் மற்றொரு விஷயத்தையும் இந்தச் சந்தர்ப்பத்திலே குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பூங்காவனம் அவர்கள் சென்ற தடவை இந்த மன்றத்திலே அமைச்சரவர்கள் இந்த பில்லை அறிமுகம் செய்கின்றபோது அது சம்பந்தமாக நடைபெற்ற விவாதத்திலே "பொள்ளாச்சியார் இருக்கும் வரையில் உள்ளாட்சித் தேர்தல் நடக்காது, நடக்காது, நடக்காது" என்று சொன்னார்கள். இல்லை, 'நடக்கும், நடக்கும், நடக்கும்' என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். இதிலே வேடிக்கை என்னவென்றால், அந்த அமைச்சர் மாறியிருக்கிறார், பொறுப்பு மாறியிருக்கிறது. ஒரு வேளை அவரே மீண்டும் இந்த பில்லை அறிமுகப்படுத்தினால் தர்மசங்கடம் ஏற்படும் என்று பொறுப்பு மாற்றப்பட்டிருக்கிறதோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆகவே, இந்த முறையில் இன்றைய தினம் கூறுகின்றீர்கள். நிச்சயமாக இந்தத் தேர்தலை நடத்துவதற்கு இந்த அரசிற்கு எண்ணம் இல்லை என்று தமிழக மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இதனால், ஏற்படும் பல்வேறு பிரச்சினைகள் பற்றி நமக்குத் தெரியும். எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் மட்டும் விருப்பம் காட்டுகிறார்கள். தேர்தல் நடத்தவேண்டுமென்று சொல்லுகிறார்கள் என்று எண்ணக் கூடாது. நகராட்சி மன்றங்களுக்கு, உள்ளாட்சி மன்றங்களுக்கு யார் வேண்டுமானாலும் பொறுப்பிற்கு வரலாம். ஆளுகின்ற கட்சியிலே உங்களைச் சேர்ந்தவர்கள் கூட வரலாம். உள்ளாட்சி மன்றங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லாத காரணத்தால் மக்களுக்கு ஏற்படக்கூடிய கொடுமைகள் கஷ்டங்கள் எந்த அளவிற்கு அதிகரித்துக் கொண்டிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே, மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உள்ளாட்சி மன்றங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளைக் கொண்டுவருவதற்கு நீங்கள் தயாராக இல்லை. ஆகவேதான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் இந்தச் சட்டமுன்வடிவை நீங்கள் அறிமுகப்படுத்தக்கூடிய நிலையிலேயே கடுமையாக ஆட்சேபிக்கின்றோம். உங்களுடைய இந்த

[திரு. இரா. க்ருப்பையா] [1984 அக்டோபர் 9

நடவடிக்கைகள்—தேர்தலை நடத்தாமல், காலத்தை நீட்டிப்பதற் காக கண்டனம் தெரிவித்து இந்தச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்வதையே நிறுத்தி வைக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமா நாத் அவர்கள் பேசுகின்றபோது ஜனநாயகத்தை குழி தோண்டி புதைக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். தேர்தலை குழி தோண்டி புதைக்கிறார்கள் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அது போலவே மாண்புமிகு கருப்பையா அவர்கள் ஓர் உறுப்பினர் தேர்தல் நடக்காது நடக்காது என்று கூறியபோது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் நடக்கும், நடக்கும் என்று குறிப்பிட்டதாகச் சொன்னார்கள். அதையே தான் சொல்லவிரும்புகிறேன். ஜனநாயக முறையில் தேர்தல் நிச்சய மாக நடக்கும் நடக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன். ஜன நாயக முறையில் தேர்தல் நடைபெற வேண்டும். அந்தத் தேர்தலும் சில நேரங்களில் நடப்பதற்கு கூட காலங்கள் தேவைப் படுகிறது. ஆகவே, 7 ஆண்டு என்பது ஒரு பிரச்சினை அல்ல. பல காலங்களில் தேர்தல் நடக்காமல் கூட இருந்திருக்கிறது. அதைப் பார்த்திருக்கிறோம். ஆகவே, தேர்தல் நடக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டு இருக்கிறது. அதோடு மட்டுமல்ல, தனி அதிகாரிகளுடைய காலத்தை நீட்டிக்காமல் விட்டுவிட்டால், உள்ளாட்சி நிர்வாகமே ஸ்தம்பித்துவிடும். ஆகவே தான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. மேலும் விரிவான ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்போது விரிவான விவாதத்தை வைத்துக் கொள்ளலாம் என்று கூறி, நான் இந்தச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" 1984 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்டமுன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.



1984 அக்டோபர் 9]

(ஈ) கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்தச்) சட்ட முன்வடிவு. 1984.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1984-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ".

*திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர் களே, கோவை மாநகராட்சியினுடைய தனி அதிகாரி யுடைய காலத்தை நீட்டிப்பதற்காக வேண்டி கொண்டுவரப்பட் டுள்ள அவசரச் சட்டத்தை, உண்மையாக சட்டம் ஆக்க இங்கே முயற்சிப்பதை நான் கடுமையாக மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி யின் சார்பாக எதிர்க்கிறேன். இதே காரணம் ஏற்கெனவே சொன்ன காரணம் தான் என்பது மட்டுமல்ல. நீங்கள் உண்மை யிலேயே தேர்தல் நடத்தாமல் இருக்க கண்டுபிடித்து இருக்கக் கூடிய ஒரு பேக்டோர்மெதட் என்று சொல்லக்கூடிய ஒரு புற வழி ஏற்பாடு. பார்ப்பதற்கு சட்டமாக காட்டவேண்டியது. உண்மை யிலேயே தேர்தல் நடத்த நீங்கள் விரும்பவில்லை. அதற்காக வேண்டித்தான் இந்த ஏற்பாடு.

(முற்பகல் 11-30)

10 ஆண்டுகளுக்கு மேலாக கோயம்புத்தூர் மாநகராட்சித் தேர்தல் நடத்தப்படாமல் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். பிறகு ஜனநாயகத்தை பற்றி கோபுரத்தின் மேலே ஏறிக்கொண்டு பேசுவதில் என்ன பயன்? நீங்கள் தேர்தலை நடத்த விரும்பவில்லை என்பது மக்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அங்கே இருக்கின்ற ஸ்பெஷல் ஆபிசர்களும், அதிகாரிகளும் சேர்ந்த குழு எந்தவிதமான தொடர்பையும் மக்களோடு கலக்காமல் இருப்பது •(குறுக்கீடு). . . . அவர்கள் சொல்லட்டும். இந்த மாநகராட்சியினுடைய நடவடிக்கையிலே மிகப் பெரிய மக்கள் விரோத நடவடிக்கை நடத்தி, வரிகளை தன்னிச்சையாக போட்டு, கோர்ட்டுக்குப் போய் தடை உத்தரவு கூட பொதுமக்கள் தண்ணீர் வரிக்கும், வீட்டு வரிக்கும் போய் வாங்கவேண்டிய நிலையிருக்கிறது. மாநகராட்சி நிர்வாகத்தை நடத்துவதற்கு எந்தவிதமான ஒழுங்கான ஏற்பாடுகள் இல்லாமல் மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் செய்யப்பட்டிருக்கிறது. இத னுடைய நோக்கம் என்ன? தேர்தலை நடத்தக்கூடாது. அப்படி நடத்தினால் நீங்கள் ஜெயிக்க மாட்டீர்கள், தோல்வி அடை வீர்கள். பார்லிமெண்டுக்கும் சட்டசபைக்கும் தேர்தல் வைத்து அதிலே, வெற்றி பெற்ற பிறகு அந்த வெற்றி அலையிலே இதை நடத்தலாம் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள். (குறுக்கீடு). தோழர் உமாநாத் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நான்

இன்னொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். உண்மையிலே நீங்கள் அப்படிக் கருதினால், இந்தச் சட்டத்தை 6 மாதத்திற்கு மேல் நீடிக்கவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இன்றைக்கு வந்திருக்கக்கூடிய செய்தி என்னவென்றால், எலக்சன் கமிஷன் என்ன செய்தி சொல்லியிருக்கிறது என்றால், வரும் பார்லிமெண்ட் தேர்தலோடு சட்டசபைத் தேர்தலும்—9 கலைக்கப்பட்ட சட்டசபைகளுக்கான தேர்தல்--நடக்கப் போவதில்லை என்று வந்திருக்கின்றது. அப்படியானால் நீங்கள் மாநகராட்சித் தேர்தல் இன்ன தேதியில் நடக்கும் என்று சொல்லலாம் அல்லவா? ஏன் சொல்லமாட்டேன் என்று சொல்கிறீர்கள். அதற்குப்பதிலாக, இன்றைக்குத் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிக்கவேண்டும், தேர்தலை நடத்தக் கூடாது என்று நீங்கள் சட்டத்தைக் கொண்டு வருகிறீர்கள். ஏன் தேர்தல் நடத்தவில்லை. நீங்கள் வெற்றி பெற முடியாது. அதற்காக ஜனநாயகத்திற்கு விரோதமாக மக்களுக்கு அதிகமான வரி போடுவதற்காக தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்கிறீர்கள். உமாநாத் அவர்கள் சொல்லும்போது ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைத்து விட்டதாகச் சொன்னார்கள். நான் சொல்கிறேன், குழி தோண்டி புதைத்துவிட்டால், அதனுடைய எலும்புக்கூட்டை தோண்டி எடுக்க முடியும். ஆனால் நீங்கள் செய்கிற இந்த வேலையிலே அதுகூட காற்றிலே போய்விடும். ஒன்றுமே இருக்காது. உங்களுடைய ஜனநாயக அண்டர்ஸ்டான்டிங் இப்படி இருக்கிறது. அதனால்தான் சொல்கிறேன். ஜனநாயகத்தை மறுப்பதற்கும், தேர்தலே இல்லாமல் செய்வதற்கும் கொண்டு வரக்கூடிய ஜனநாயகத்தை கொலை செய்யக்கூடிய, ஜனநாயகத்திற்கு விரோதமான சட்டம். இதை அமைச்சர் அவர்கள் தயவு செய்து வாபஸ் வாங்குவார்கள், வாங்க வேண்டும், என்று சொல்லி அமர்கிறேன்.

*திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியினுடைய தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிப்பதை திராவிடமுன்னேற்றக கழகத்தின் சார்பிலே நான் மிக வன்மையாகக் கண்டிக்கிறேன். இங்கே எனக்கு முன் பேசிய பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதைப்போல, இந்த அரசாங்கத்திற்கு ஜனநாயகத்திலே நம்பிக்கை இருக்கிறது என்று அமைச்சர் பெருமக்கள் சொன்னாலும், உண்மையிலேயே தேர்தல் நடத்துவதிலே உங்களுக்கு பெரிய அலர்ஜி இருக்கிறது என்பதை அருள்கூர்ந்து நீங்கள் ஒத்துக் கொள்ள வேண்டும். காரணம், சட்டமன்றம், நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்துவது மாநில அரசாங்கத்தினுடைய கையிலே இல்லை. அதை மத்திய அரசாங்கம் நடத்துகிறது. 1977-லே ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு நீங்கள் தமிழகத்திலே ஏதாவது ஒரு மாநகராட்சிக்கோ, அல்லது வேறு நகராட்சி ஒன்றியங்களுக்கோ—மதுரையைத் தவிர—நீங்கள் நடத்தியதுண்டா? என்றால், இல்லை. இப்போது இந்த மதுரையும் தனி அதிகாரிகள் கையிலே வந்துவிட்டது. மாநகராட்சி தேர்தலை நடத்தினால், பல பேர்கள் கவுன்சிலராக ஆகலாம், அல்லது மேயராக





ஆகலாம் என்பது மட்டும் காரணமல்ல. இன்றைக்கு நகரங்கள் ஆனாலும், மாநகராட்சி, அல்லது கிராமங்கள் ஆனாலும், பொதுமக்கள் தங்களுடைய கஷ்டங்களை சொல்வதற்கு அங்கே மக்களுடைய பிரதிநிதிகள் இல்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்தாக வேண்டும்.

இன்றைக்கு தனி அதிகாரிகளுடைய நிர்வாகத்தினால், கோவை மாநகராட்சியின் நிர்வாகம் சீர்கெட்டு விட்டது என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் சொன்னார்கள். நீங்கள் தேர்தல் வருகிறது, வருகிறது என்று சொல்கிறீர்களே தவிர,—அமைச்சர்கள் எல்லாம் மாறி மாறி வருகிறார்கள், அதை நான் வரவேற்கிறேன்—தேர்தல் வருகிறதா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இன்றைய தினம் விளக்குகள் எரியவில்லை. சாக்கடைகள் சுத்தம் செய்யப்படாமல் இருக்கின்றன. அதேபோல் குப்பைகள் அகற்றப்படவில்லை. இப்படிப்பட்ட பல்வேறு மோசமான நிலைமையிருக்கிறது. பொதுமக்கள் இந்தத் தேர்தல் நடைபெறாது என்ற முடிவுக்கே வந்துவிட்டார்கள். பெரியவர்கள் சொல்லி நான் கேட்டிருக்கிறேன். மாநகராட்சி, நகராட்சிகள்தான், ஜனநாயகத்தினுடைய தொட்டிலாக விளங்குகின்றன என்று சொல்வார்கள். தற்போது தேர்தலே நடைபெறவில்லை. எனவே, பெரியவர்கள், குழந்தைகளை சொல்வதைப் போல, இந்த ஜனநாயகத்தின் தொட்டிலே இல்லாத ஒரு சூழ்நிலையை நீங்கள் உண்டாக்கிவிட்டீர்கள். அது மட்டும் அல்ல, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சொன்னதோடு மட்டுமல்ல, முதலமைச்சர் அவர்களும் இந்த அவையிலேயே சொன்னார்கள் அதேபோல ஆளுநர் அவர்கள்கூட அவருடைய அறிக்கையை இந்த அவையிலே படிக்கின்றபோது.......(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது அறிமுக நிலை தான். சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: நாங்கள் அறிமுகத்தையே எதிர்க்கிறோம். அதனால்தான் விளக்கமாகச் சொல்ல வேண்டிய அவசியம் வருகிறது.

ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையை இந்த அவையிலே படிக்கிறபோது, அவர்கள் கூட இந்த தேர்தல்கள் எல்லாம் கண்டிப்பாக வரும் என்று அறிவித்தார்கள். அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அதேபோல ஆளுநர் அவர்களும் சொன்னார்கள். ஆனால் யார் சொன்னாலும் தேர்தலை நடத்துகின்ற எண்ணம் உண்மையிலேயே உங்களுக்கு இல்லை என்பதை நினைக்கிறபோது, நீங்கள் மக்களை மட்டும் ஏமாற்றிக் கொண்டிருக்கவில்லை, உங்களை நீங்களே, உங்களை அறியாமலேயே ஏமாற்றிக் கொண்டிருக்கிறீர்கள் என்பதைமட்டும் உங்கள்மூலமாக இந்த அரசாங்கத்

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1984 அக்டோபர் 9

திற்கு தெரிவித்துக் கொண்டு, இந்த சட்டமுன் வடிவின் அறிமுக நிலையை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று கூறி நான் அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாநகராட்சியினுடைய தனி அதிகாரிகளினுடைய காலத்தை நீட்டிப்பதற்கான இந்த சட்டத்தை, அறிமுகம் செய்யக் கூடிய நிலையிலே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் வன்மையாக பலமாக ஆட்சேபிக்கிறோம்.

கோவை மாநகராட்சியிலே இருக்கக்கூடிய பல்வேறு விஷயங்களைப் பற்றி தோழர் திரு. ரமணி அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இன்றைய தினம் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பது என்பது மிகவும் வேதனைக்குரியது. கோவை மாநகராட்சிக்கு உட்பட்டிருக்கிற பல்வேறு பகுதிகளில் தேர்ந்து எடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் தனி அதிகாரிகள் எல்லாம் மிகவும் தன்னிச்சையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு அவல நிலை கோவை மாநகராட்சியிலே நடந்து கொண்டிருக்கிறது.

தண்ணீர் வரியை உயர்த்தியிருக்கிறார்கள். வீட்டு வரியை உயர்த்தியிருக்கிறார்கள். மின்சார கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள். இப்படி மக்களின் மீது அதிகப்படியான வரிகளை போடுவதே தனி அதிகாரிகளுடைய கொள்கையாக, தொழிலாக ஆகிக் கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை கோவை மாநசரத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவேதான் இப்படிப்பட்ட அதிகமாகன அதிகாரங்களைக் கொடுத்து, அவர்களுடைய பதவிக் காலத்தையும் நீட்டிப்பது என்பது மக்களுக்கு ஆற்றக்கூடிய பணியாக இருக்காது என்று நாங்கள் சொல்லி வருகிறோம். கோவை மாவட்டத்தில் மட்டுமல்ல தனி அதிகாரிகள் எங்கிருந்தாலும் அங்கு இப்படி அதிகப்படியாக வரிகளைப் போடுவதும், மின் கட்டணத்தை உயர்த்துவதும், வீட்டு வரிகளை அதிகப்படுத்துவதும் போன்ற பணிகளைத்தான் குறிப்பாகச் செய்து வருகிறார்கள். வேறு நல்ல பணிகள் நடைபெறுவதே இல்லை. எனவேதான் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்கக்கூடாது என்று கேட்டுக் கொண்டு வருகிறோம்.

அது மட்டும் அல்ல, சென்ற ஆண்டு இதேபோன்ற சட்டமுன்வடிவைக் கொண்டு வந்து அறிமுகப்படுத்துகிறபோது, இதே சட்டமன்றத்தில் எங்கள் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. என். ஏ. பூங்காவனம் அவர்கள், இதே பில் சம்பந்தமாக, அதை அறிமுகம் செய்து வைக்கக் கூடிய நேரத்தில் பேசிய போது கேட்டார்கள், மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்களைப் பார்த்து கேட்டாகர்ள். வரக்கூடிய இந்த



1984 அக்டேபர் 9] [திரு. எம். ஆறுமுகம்]

பில்லுக்கு பின்னாலாவது தேர்தல் நடைபெறுமா, நம்பலாமா மக்கள் மத்தியிலே போய்ச் சொல்லலாமா என்று கேட்கக் கூடிய நேரத்திலே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த குழந்தைவேலு அவர்கள், நம்பலாம், தேர்தல் நடைபெறும், மக்கள் மத்தியிலே எடுத்துச் சொல்லலாம் என்று சொன்னார்கள். ஆனால் என்ன நடந்தது ? (மணியடிக்கப்பெற்றது).

நாங்கள் கேட்டுக் கொள்வதெல்லாம் மக்களை இப்படி ஏமாற்றக்கூடிய சட்டத்தைக் கொண்டு வந்து, அடிக்கடி மக்களை ஏமாற்றாதீர்கள் என்று சொல்லி, இதை பலமாக எதிர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1984 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராசன் : துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(உ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்)
இரண்டாம திருத்தச் சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1984 ஆம்ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

*திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்வதை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். சென்ற தேர்தல் நேரத்திலே 80வது வருடத்திலே ஜனநாயக மரபுகளை பாதுகாப்பதாக சொல்லி மக்களிடம் வாக்குகளைப் பெற்று வந்திருக்கக் கூடிய இந்த அரசு, இன்று மக்களுடைய ஜனநாயக உரிமைகளை கொஞ்சம் கூட

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1984 அக்டோபர் 9

மதிக்க முடியாத அளவுக்கு, இந்த தனி அதிகாரிகளுடைய ஆட்சியின் கீழ் நகராட்சிகளை விட்டிருக்கிறது என்பது மிகக் கடுமையாக ஆட்சேபிக்க வேண்டிய ஒரு விஷயம்.

இன்று மக்களுடைய பேசிக் பெசிலிட்டீஸ்களைக் கூட, இந்த நகராட்சி அதிகாரிகளால் பாதுகாக்க முடியாத அளவுக்கு நகராட்சிகளில் விஷயங்கள் சென்றுக் கொண்டிருக்கின்றன என்பது நாம் கவலையோடு பார்க்க வேண்டிய ஒரு விஷயம். இன்று, மேலும் இந்தத் தேர்தலை தள்ளி வைப்பதற்காக கொண்டு வரப்படும் இந்தச் சட்டமுன்வடிவிலே அதற்காக சொல்லப் பட்டிருக்கக்கூடிய காரணம் பொருத்தமானது அல்ல என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11–40)

தேர்தல் கமிஷனுடைய அறிக்கைப்படி நாடாளுமன்றத் தேர்தல்கூட 5 வருஷங்கள் முடிந்தவுடன் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுன்றன. ஒரு சில முனிசிபாலிட்டிகளுக்கு 7 ஆண்டுகாலமாக தேர்தல் நடத்தமுடியாமல் அதன் காரணமாக மக்களுடைய வசதிகள் பாதிக்கப்படுகின்ற அளவில் எந்த அளவுக்கு அதிகாரிகளிடத்திலே அவை விடப் பட்டிருக்கின்றன என்பதற்கு இது ஒரு தெட்டத் தெளிவான எடுத்துக்காட்டாக இருக்கிறது.

பல இடங்களிலே குடிநீர் வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. பல இடங்களிலே சுகாதார வசதிகள் கவனிக்கப்படவில்லை. இப்படிப்பட்ட அவல நிலைமை இருக்கிறது. மீண்டும் இந்த அவல நிலைமை 6 மாத காலத்திற்குத் தொடரவேண்டுமென்ற முறையிலே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இன்னும் 6 மாத காலத்திற்கு தமிழகத்தில் நகராட்சிகள் செயல்பட விடாமல் இருப்பது மன்னிக்க முடியாத தவறு என்பதை நான் சுட்டிக்காட்டி, அந்த அளவுக்குத் தள்ளிக் கொண்டு போகாமல் உடனடியாக நகராட்சிகளுக்குத் தேர்தல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வலியுறுத்தி இந்த சட்டத்தை அறிமுகம் செய்யாமல் வாபஸ் பெறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. து. இராசரத்தினம் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நகராட்சிகளுக்குத் தேர்தல்களை நடத்தாமல் தள்ளிவைக்க வேண்டுமென்ற முறையிலே தொடர்ச்சியாக 10-வது முறையாக இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வன்மையாகக் கண்டித்து சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நகராட்சிகளுக்குத் தேர்தல் நடத்தாமல் இருப்பதற்காக தனி அதிகாரிகளிடம் ஏகபோக அதிகாரங்களை ஒப்படைக்க இது வழி வகுக்கிறது. நகராட்சிக்கு இந்த நிலை என்றால்



1984 அக்டோபர் 9] [திரு. து. இராசரத்தினம்]

நகரியத்தை எடுத்துக் கொண்டால் இன்னும் மோசமான நிலை
தான் இருக்கிறது. உதாரணமாக ஆவடி நகரியத்தை எடுத்துக்
கொண்டால் தேர்தல் நடத்தவேண்டியதில்லை, ஆனால் குழு
போடவேண்டும்—அந்தக் குழுகூட அங்கே போடாமல் குடிநீர்,
பாதைவசதி, சுகாதார வசதிகள் இவைகள் இல்லாமல் இருப்
பதை எடுத்துக்காட்டி ஆவடியில் இன்று உண்ணாவிரதம்
இருக்கிறார்கள். ஆகவே தனி அதிகாரிகளின் ஏகபோகத்
தன்மையை தொடர்ந்து ஆதரித்துக்கொண்டு வருகிறது இந்த
அரசு. 31–10–1981 அன்று குழு நியமித்திருக்கவேண்டும்.
உங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களைத்தான் நீங்கள் நியமிக்
கப் போகிறீர்கள். சட்டமன்ற உறுப்பினர்கள்கூட அங்கம்
வகிக்க முடியாத அளவுக்கு நகரியத்திற்கு கூட குழு போடாமல்
இருக்கிற அவல நிலைமை இருப்பதற்கு என்ன காரணம் என்று
தெரியவில்லை. இந்த மசோதாவை வன்மையாக நான் கண்டித்து
நகரியத்திற்கு உடனடியாகக் குழு போடவேண்டும் என்று
கேட்டுக் கொண்டு, 3 ஆண்டுகளாக போடாமல் இருப்பதை
வன்மையாகக் கண்டித்து முடித்துக் கொள்கிறேன்.

திரு. இல. பலராமன் : துணைத் தலைவர் அவர்களே,
உள்ளாட்சித் தேர்தல்களைத் தள்ளிவைப்பது என்பது ஜனநாயக
மரபுக்கு முரணானது புறம்பானது என்பதை எல்லோரும் ஏற்றுக்
கொள்வார்கள். நான் இங்கே அதற்கான காரண காரியங்
களைச் சொல்லிக் கொண்டிருக்கலாம். ஆனால், தேர்தல்களைத்
தள்ளிவைப்பது என்பது முறையல்ல. ஜனநாயகத்தில் தேர்தல்
கள் மிக மிக அத்தியாவசியம் என்பதை உணர்ந்து இந்த அரசு
தேர்தல்களை விரைவாக நடத்த தீவிரமாகத் திட்டமிட வேண்
டும். மக்கள் பிரதிநிதிகள் இல்லாததால் பல சங்கடங்கள் ஏற்
படுகின்றன. இருக்கக் கூடிய அதிகாரிகள் முறையாக நடந்து
கொள்வதில்லை, மக்கள் குழுக்கள் நல்ல முறையில் செயல்படு
கின்றனவா? மக்கள் குழுக்களின் ஆலோசனைகளைக் கேட்டு
அதிகாரிகள் செயல்படுகிறார்களா என்றால் இல்லை. மக்கள்
குழுவிலே உள்ள ஒருவர் இறந்து விட்டால் வேறு ஒருவரை
நியமிப்பதில்லை. மக்கள் குழுவிலே ஒருவர் இறந்து விட்டால்
உடனடியாக அந்த இடத்தில் வேறு ஒருவரை நியமிப்பதற்கு
அமைச்சர் அவர்கள் இனிமேலாவது உடனடியாக நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜனநாயக அமைப்புகளாக இருக்கக்கூடிய உள்ளாட்சிகளுக்
கான தேர்தல்களை நீட்டிப்பது சரியல்ல, உடனடியாக அவை
களை நடத்த வேண்டும். சுகாதார வசதிகளையும் சாலை
வசதிகளையும் உடனடியாகச் செய்ய வேண்டும். அந்த முறை
யிலே இந்தத் தேர்தல்களை மேலும் மேலும் தள்ளிவைக்காது
உடனடியாக நடத்த தீவிரமாக நடவடிக்கை மேற்கொள்ள
வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளின் தனி அதிகாரி களின் பதவி காலத்தை நீடிப்பது என்ற இந்த சட்ட முன்வடிவை நான் முதலிலேயே கடுமையாக ஆட்சேபிக்கிறேன் என்பதை தெரி வித்துக் கொள்கிறேன். நகராட்சிகளுக்கு தேர்தல்கள் நடந்து 7 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது என்பது மட்டும் அல்ல எல்லா நகராட்சிகளிலும் அன்றைக்கு இருந்த வரியைக் காட்டி லும் இன்றைக்கு பல்வேறு முறையில் வரியை கூட்டியிருக்கிறீர் கள். எந்த நகராட்சியை எடுத்துக் கொண்டாலும் தமிழகத்தில் உள்ள நூற்றுக்கணக்கான நகராட்சிகளுக்கு வரியை கூட்டி யிருக்கிறீர்கள். ஆனால் வசதி குறைந்து இருக்கிறது. நீங்கள் ஆட்சிக்கு வருகிறபோது நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பல்வேறு கோரிக்கைகளை சொல்கிற நேரத்தில் இதையும் சொல்லியிருக் கிறீர்கள். ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் பல நன்மைகளை தேவைகளை சொன்ன நேரத்தில் வரியை குறைப்போம், வசதியை கூட்டுவோம் என்று சொன்னீர்கள். ஆனால் நீங்கள் வரியை கூட்டியிருக்கிறீர்கள் வசதியை குறைத்து இருக்கிறீர்கள். எந்த நகராட்சியை எடுத்துக் கொண்டாலும் மக்களுக்கு குடிநீர் வசதி, மின்சார வசதி, கல்வி வசதி சுகாதார வசதி இப்படி பல வசதிகள் முறையாக கிடைக்கிறதா என்று சொன்னால் இல்லை என்ற அவல நிலை தான் இன்றைக்கு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த சட்ட முன் வடிவை இங்கே அறிமுகம் செய்ய வேண்டாம். நீங்கள் இருக்கும் வரை தேர்தல் வருமா வராதா என்ற உறுதிமொழி பல முறை கேட்டு ஆகிவிட்டது. இப்போது உள்ள சூழ்நிலையில் தேர்தல் வராது என்பது உறுதி யாகிவிட்டது. இப்படிப்பட்ட நிலையில் இச்சட்ட முன் வடிவை மேலும் அறிமுகம் செய்து தனி அதிகாரிகள் நாட்டு மக்களை சுரண்டுவதற்கு தவறான முறையில் அவர்களை பயன்படுத்து வதற்கு தன் நிலையை வெளிப்படுத்த இந்த அரசு துணை போகிறதா என்ற ஐயப்பாடு பொது மக்களுக்கு ஏற்படும் என் பதை உங்களுக்குச் சொல்லி சட்ட முன்வடிவை கடுமையாக ஆட்சேபிக்கிறேன். அதை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிய வரிகள் போடப் படுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொல் கிறார்கள். அப்படி எதுவும் போடப்படுவது இல்லை என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.





மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்பு மிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

## 4. அறிவிப்புகள்.—தொடர்ச்சி.

### (இ) நகர்ப்புறநில (உச்சவரம்பு—முறைப் படுத்துதல்) திருத்தச் செல்திறன் சட்ட முன்வடிவு, 1984. (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு 1984 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு-முறைப்படுத்துதல்) திருத்தச் செல்திறன் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 34/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரி வித்துள்ளார்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (ஊ) நகர்ப்புற நில (உச்சவரம்பு—முறைப்படுத்துதல்) திருத்தச் செல்திறன் சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு-முறைப்படுத்துதல்) திருத்தச் செல் திறன் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 34/1984* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1[illegible]8 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு-முறைப் படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1978) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (எல்) பகுதி பொருள் ''வைத்திருத்தல்'' என்பது (To hold) காலி நிலத்தை, உரிமையாளர் அல்லது குத்தகைதாரர் அல்லது அடைமானதாரர் என்ற முறையில் அல் லது திரும்பப் பெற இயலாத பகர அதிகாரப் பத்திரத்தில் (Pow r of A torn y) கீழ் அல்லது தவணைக் கொள் முதல் ஒப்பந்தத்தின் கீழ் அல்லது மேற் சொன்ன வகைகளில்

*1984 ஆம் ஆண்டு ஏப்ரல் 25ம் தேதிய தமிழ்நாடு சிறப் அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 அக்டோபர் 9

ஏதேனும் ஒன்றின்படி, ஒரு பகுதியையும், மேற்சொன்ன வகை அல்லது வகைகளில் ஏதேனுமொன்றின்படி ஒரு பகுதியையும் சொந்தமாக வைத்திருத்தல் அல்லது அந்நிலத்தின் உடைமை உரிமையைப் பெற்றிருத்தல் என்று பொருள்படும் என்று விளக்கமளிக்கிறது. சென்னை உயர்நீதி மன்றம், மேற் சொன்ன விதித் துறைக்குப் பொருள் விளக்கம் அளிக்கையில், மேற் சொன்ன (எல்) பிரிவில் தற்போதுள்ள விதித்துறைகளின்படி பார்த்தால், ''வைத்திருத்தல்'' என்ற தொடரில், யாதொரு நிறைவேற்றுபவர் அல்லது நிருவாகி அடங்காது என்று தீர்ப்பளித்துள்ளது.

(முற்பகல் 11.50)

உயர்நீதி மன்றத்தின் மேற்சொன்ன தீர்ப்பினால், மேற்சொன்ன சட்டத்தின் விதித் துறைகளைச் செயற் படுத்துவதில் சில நடைமுறை இடர்ப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. எனவே, நிறைவேற்றுபவரிடம் அல்லது நிருவாகியிடம் நிலைபெற்றுள்ள காலி நிலத்தைப் பொறுத்தமட்டில், திட்டவட்டமாக விதித்துறை இயற்றுவதற்கு இயலும் வகையில், மேற்சொன்ன 3 (எல்) பிரிவைத் திருத்துவது அவசியமென அரசு முடிவெடுத்தது. இதற்கிணங்க, 1978 ஆம் ஆண்டைய தமிழ்நாட்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு - முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/78) பொருத்தமான விதித்துறைகளைத் திருத்தியமைக்கக் கருதப்பட்டது. மேற் கூறிய சட்டத்தின் பொருத்தமான விதித் துறைகளில் செய்யக் கருதப்பட்ட திருத்தங்களுக்கு முந்தைய ஒரு நாளிலிருந்து, அதாவது மேற்கூறிய விதித்துறைகள் செயலுக்கு வந்த நாளிலிருந்து (அதாவது 3-8-76) செயல் வடிவம் கொடுக்கவும் கருதப்பட்டது. மேற் கூறிய முடிவுகளுக்கு செயல் வடிவம் கொடுக்கும் நோக்கத்துடன் 25-4-1984 ஆம் நாளன்று சட்டப் பேரவையில் சட்ட முன் வடிவு ஒன்று, அதாவது 1984ம் ஆண்டைய தமிழ்நாட்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு-முறைப் படுத்துதல்) திருத்தச் செல்கிறச் சட்ட முன் வடிவு (சட்டபேரவை சட்ட முன் வடிவு எண். 34/1984) கொண்டு வரப் பட்டது. மேற் கூறிய சட்ட முன்வடிவை நிறைவேற்றுவதற்குத் தமிழ்நாடு மாநில சட்டமன்ற பேரவைக்கு போதிய அவகாசமில்லாததால், மேற்கூறிய சட்ட முன் வடிவை பரிசீலிக்க அதனால் இயலவில்லை. சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடர் ஒத்தி வைக்கப்பட்டதால், அவசர முக்கியத்துவத்தை கருதி, கொண்டு வரவிருக்கும் சட்டத்தை அவசரச் சட்டமாகக் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அதன்படி, இந்த அவசரச் சட்டம் 9-9-1984 அன்று ஆளுநர் அவர்களால் அதிகார முறையில் கொண்டு வரப்பட்டு, 10-9-84 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீட்டில் பாகம் IV பிரிவு 2-இல் தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு 16ஆம் அவசரச் சட்டமாக வெளியிடப்பட்டது.



1984 அக்டோபர் 9] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இதிலே ஒரு சிறு திருத்தம் தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதாவது, உயர்நீதி மன்றத்தினுடைய தீர்ப்பினுடைய அடிப்படையிலே 'டு ஹோல்ட்' என்பதற்குப் பல்வேறு இனங்களைச் சேர்த்திருக்கிறோம். அதிலே ஒரு இனத்தைப் பொறுத்த வரையில் அட்மின்ஸ்ட்ரார் அல்லது மேனேஜர் என்ற அளவிற்கு வருகின்ற பொழுது அதிலே அந்தப் பெயர் இல்லாதகாரணத்தினால் அது உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் வராது என்று நீதிமன்றம் சொல்லிவிட்டது. ஆகவே, குத்தகைதாரர்கள், வைத்திருப்பவர்கள், அடைமானக்காரர்கள் ஆகியவர்களிடத்தில் இருக்கின்ற, பவர் ஆப் அட்டார்னியில் குறிப்பிட்டு உச்சவரம்புச் சட்டத்தின்படி மிகுதிப்பட்ட நிலத்தை நாம் எடுத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. ஆனால் குறிப்பிட்ட அளவிற்கு ஒரு கோர்ட், உத்தரவு இட்டு, ஒரு அட்மினிஸ்ட்ராரை நியமித்து விட்டால் அவர்களிடத்தில் இருக்கிற நிலத்திலேயும் உச்சவரம்பு பெற்று, மீதியை எடுத்துக் கொள்ளலாம் என்பதற்கு அட்மினிஸ்ட்ரார் என்ற வார்த்தை இல்லாத காரணத்தினாலே இந்தச் சட்டம் செல்லாது என்று உயர்நிதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆகவேதான், அந்த இடையூறு இல்லாமல் ஆக்குவதற்காக உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அட்மினிஸ்ட்ராரிடத்திலே இருந்தாலும், மேனேஜரிடத்திலேயிருந்தாலும் இந்த உச்சவரம்புச் சட்டம் செல்லும் ; இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட 1976—ஆம் ஆண்டிலேயிருந்து செல்லும் என்பதற்காகத்தான் இந்தச் சிறு திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதை நிறைவேற்றுவதன் மூலமாக இந்தச் சட்டத்தினுடைய முக்கிய நோக்கத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று அவை உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : துணைத் தலைவரவர்களே, நீதிமன்றத்தினுடைய யோசனைப்படி இதில் சிறு திருத்தம்தான் செய்யப்பட்டிருக்கிறது என்று நம்முடைய நிதியமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நீதிமன்றத்தினுடைய யோசனையை உடனடியாக அமல்படுத்துவதற்காக ஆர்டினன்ஸ் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்றம் இல்லாத காரணத்தால் இது பில்லாகக் கொண்டுவரப்பட முடியவில்லை. ஆர்டினன்ஸாக வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி இந்த இடைப்பட்ட காலத்தில்—நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கும், இந்தச் சட்டமன்றத்தில் மசோதாவாகக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு முன்னால் உள்ள இந்த இடைப்பட்ட காலத்திற்குள்ளாக அவ்வளவு அத்தியாவசியமாகச் செய்யப்பட்டதால் இதற்கிடையிலே இந்த அரசாங்கம் அதன் மூலம் என்ன அச்சீவ் செய்திருக்கிறது ? ஏனென்றால், ஆர்டினன்ஸ் வர வேண்டுமென்றால், தன்ல வெடிக்கின்ற விஷயத்திற்குத்தான் வரும். ஆர்டினரி புரொசீஜருக்கு ஆர்டினன்ஸ் வரக்கூடாது. ஆகவே, இந்த இடைப்பட்ட காலத்தில் ஏதாவது சாதித்திருக்கிறது என்பதற்கு ஆதாரம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[1984 அக்டோபர் 9

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதனைப் பட்டியல்
எதுவுமில்லை, இது சாதனை என்று சொல்லுமளவிற்கு. ஏற்
கனவே இதைக் கொண்டு வந்து, ஒரு வழக்கிலே தீர்ப்பளித்து
விட்டார்கள். அதேபோன்று அதே வழக்கினுடைய தீர்ப்பிலே
பலபேர் புகுந்துகொள்ள வழியேற்படுகிறது. ஆகவேதான் முன்பு
சட்டமன்றக் கூட்டத்திற்கு முன்னாலேயே அவசரச் சட்டம்
போட்டு சென்ற தடவையே சட்டமன்றத்திலே சட்டமுன்
வடிவை நிறைவேற்றுவதற்காக வைக்கப்பட்டது. ஆனால்,
அப்பொழுது அவசரம் அவசரமாக நாம் அதிக நாட்கள் கூடாமல்
குறிப்பிட்ட அளவிற்கு உள்ள நாட்களிலே முடித்துவிட்டு, இடைத்
தேர்தல் வேலையிலே ஈடுபடுவதற்காக எல்லோரும் செல்ல வேண்
டிய அவசியம் ஏற்பட்டதன் காரணமாக 1 ஆம் தேதியே அதை
முடித்து விட்டோம். ஆகவே, இந்தச் சட்டத்தைக் கொண்டு
வந்து வைத்தும் அதை நிறைவேற்ற முடியவில்லை. அதற்குப்
பிறகு அது காலாவதியாகிவிட்டது. மறுபடியும் அவசரச் சட்
டம் போட வேண்டிய அவசியம் வந்தது. அவசரச் சட்டம்
போட்டு அதைச் சட்ட வடிவிலே இப்போது கொண்டு வந்தி
ருக்கிறோம். கொண்டு வருவதும், 1976-லேயிருந்துதான் நாம்
எபெக்ட் கொடுக்கிறோம்.

1976-லேயிருந்து எஃபெக்ட் கொடுப்பதற்காகத்தான் சட்ட
மாக வருகின்றது. ஒருவர் பெற்ற அதே வாய்ப்பை அதே
சார்பாக இருக்கின்ற பலபேரும் பெற்றுவிட்டுப் போகாமல் இருப்
பதற்காகத்தான் இந்த சட்டம் கொண்டுவரப்பட்டதே தவிர
வேறல்ல. இந்தச் சட்டம் ஏற்கனவே கொண்டுவரப்பட்டது.
இடையிலே முடியாமல் போனதன் காரணமாக மறுபடியும் அவ
சரச்சட்டம் போட்டு இப்போது கொண்டுவரப்பட்டதே தவிர
வேறல்ல. ஆனால், இனிமேல் நடக்க வேண்டிய சங்கதியாக
இருந்தால் மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள் சொல்வது
மாதிரி அவசரச் சட்டம் போடவேண்டிய அவசியம் இல்லை.
1976-லே இருந்து எஃபெக்ட் கொடுக்கவேண்டி இருப்பதால்,
பல்வேறு வழக்கு மன்றங்களிலே தீர்ப்பு வழங்க வேண்டியிருப்ப
தன் காரணத்தால் இதனைச் சட்டவடிவிலே கொண்டு வருவது
பொருத்தமாக இருக்கும் என்பதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்
கின்றது.

திரு. துரைமுருகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, முதலிலேயே ஒரு ஆர்டினன்ஸ் வந்தது. ஆர்டினன்ஸ்
வருவதன் விளைவே இம்மீடியட்டாக அதைச் செய்ய வேண்டும்
என்பதற்காகத்தான். ஆனால் அசெம்பிளி கூடி, அந்த ஆர்டி
னன்ஸ் காலாவதியாகிவிட்டதற்குப் பின்னர் மறுபடியும்
ஆர்டினன்ஸ் கொண்டுவருவது என்பது, மறுபடியும் ஆர்டி
னன்ஸ் ப்ரமல்கேட் பண்ணுவது என்பது ஆர்டினன்ஸ் பர்ப்
பஸையே மீனிங்லெஸ்-ஆக ஆக்கி விடுகின்றது. எனவே எதற்கு
வேண்டுமானாலும் ஆர்டினன்ஸ் கொண்டு வருகின்ற நிலைமை
யில் ஒரு ஆர்டினன்ஸ் ராஜ்-ஆக இருக்கக்கூடாது என்பதற்காகத்



1984 அக்டோபர் 9] [திரு. துரைமுருகன்]

தான் சொல்கிறேன். அவ்வளவு முக்கியம் என்றால் இம்மீடி
யட்டாக பர்ஸ்ட் பிரிஃபரன்ஸ் கொடுத்து அதை எடுத்துக்
கொண்டு, போன செஷனிலேயே அதை முடித்திருக்க வேண்டும்.
ஏனென்றால் இது ஆர்டினரி பில் இல்லை. ஆர்டினன்ஸ்லே
வந்ததை ரீப்ளேஸ் பண்ண வேண்டும் என்றால் அந்த
செஷனிலேயே அதை முடித்து இருக்க வேண்டும். அதைவிட்டு
விட்டு அது செத்துப் போய், மறுபடியும் ஆர்டினன்ஸ் கொண்டு
வந்தால் இது ஆர்டினன்ஸுக்கு உட்பட்ட பொருள் அல்ல,
அரசாங்கம் நினைத்தால் ஆர்டினன்ஸ் போடுகின்றது என்று
கருதுகின்ற நிலைமை ஏற்படுகின்றது. It becomes an Ordinance
Raj என்பதை இது ப்ருவ் பண்ணவில்லையா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, 1976-லே இருந்து சட்டம் நடை
முறைப்படுத்தப்பட்டு வருகின்றது. கடைசியில் தீர்ப்பளித்த
தற்குப் பிறகுதான் உடனடியாக இந்தச் சட்டத்தை ஆர்டினன்
ஸாகக் கொண்டுவர வேண்டிய அவசியம் நமக்கு ஏற்பட்டது.
தீர்ப்பளித்து விட்டார்கள் ; உடனடியாக ஆர்டினன்ஸ் போட்
டோம். ஆர்டினன்ஸ் போட்டவுடனே 6 மாதங்களுக்குள்ளாக
இதைச் சட்டமாக ஆக்கவேண்டும் என்று விதி இருக்கிறது.
அவ்வாறு 6 மாதங்களுக்குள்ளாக இதைச் சட்டமன்றத்திலே
வைப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டு அப்போதே அறிமுகமும்
செய்யப்பட்டு ஆகிவிட்டது. அவ்வாறு அறிமுகம் செய்யப்
பட்ட பிறகு காலம் கடத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை.
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் அத்தனை பேர்
களுடைய சிறந்த, சீரிய யோசனைகளின் அடிப்படையிலும், வற்
புறுத்தலின் அடிப்படையிலும்—மாண்புமிகு திரு. துரைமுருகன்
அவர்கள் கூறுவதுபோன்று அப்போதே இதை நிறைவேற்றி
முடித்திருக்க வேண்டும் என்று துடி துடிப்பான உணர்ச்சி
என்னைப் போன்றவர்களுக்கும், அவர்களுக்கும் இருந்தாலும்—
இங்கே அத்தனை பேர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க
இதனை அப்போது நிறைவேற்ற முடியாமல் போயிற்று. அப்
போது கூட்டத் தொடரை இன்னும் இரண்டு நாட்களுக்குக்
கூட நீட்டித்திருப்போமேயானால் நிறைவேற்றி இருக்கலாம்.
திடீரென்று கூட்டத்தை முடிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்ட
தால் இதுபோன்ற சிலபல சட்டங்கள் நிறைவேற்றப்படாமல்
இருந்து இப்போது மீண்டும் வந்திருக்கின்றன. அடுத்தடுத்து
வரவிருக்கின்றன. எனவே அப்போது நிறைவேற்றப்படாத பல
சட்டங்களை இப்போது நிறைவேற்ற இருக்கிறோம். ஆகவே
வேறு எந்தக் காரணமும் இல்லை. ஆறு மாதங்கள் முடிந்து
விட்டதன் காரணத்தால் காலாவதியாகிவிட்டது. மறுபடியும்
ஆர்டினன்ஸ் போட வேண்டிய அவசியம் வந்தது. போட்டாகி
விட்டது. மறுபடியும் இப்போது தங்களுடைய மேலான ஆத
ரவை எதிர்பார்த்து இந்தப் பிரிவு இங்கே கொண்டுவரப்பட்டி
ருக்கின்றது.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, நகர்ப்புற நிலங்களுக்கு உச்சவரம்பு கட்டுகின்ற சட்டத்திற்கு இங்கே ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அவசரநிலைப் பிரகடனம் அமலில் இருந்தபோது என்று கருதுகிறேன்; 1976 ஆம் ஆண்டு என்று கருதுகிறேன், இந்த நகூர்ப்புற நிலங்களுக்கு உச்சவரம்பு கட்டுகின்ற சட்டம் அமல்படுத்தப்பட்டது. அதன் அடிப்படைகளைப் பற்றிச் சொல்கின்றபோது தனி நபர்களிடத்திலே நிலங்கள் குவியக் கூடாது; காலியிடங்களை வீட்டுமனைகளாகப் பிரித்து கொள்ளை இலாபம் அடிக்கக்கூடிய நிலைமை தவிர்க்கப்பட வேண்டும்; நகர்ப்புறங்களிலே இருக்கின்ற நிலங்களுக்கு உச்சவரம்பு போட்டு ஏழை எளிய, நடுத்தர, வீடு வசதியற்றவர்களுக்கெல்லாம் ஈக்குவல் டிஸ்ட்ரிபுஷன் என்ற அடிப்படையிலே நிலங்கள் வழங்கப்பட வேண்டும் என்றெல்லாம் சொல்கிறோம். இப்படிப்பட்ட அடிப்படைகளில்தான் 1976 ஆம் ஆண்டு இந்த நகர்ப்புற நிலங்களுக்கு, உச்சவரம்பு கட்டுகின்ற சட்டம் கொண்டு வரப்பட்டது.

(நண்பகல் 12-00)

ஆனால், அப்படிக் கொண்டுவரப்பட்ட சட்டத்திலே சில குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்லி அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் சில திருத்தங்களை அந்தச் சட்டத்திற்குக் கொண்டுவந்தார்கள். 1978 ஆம் ஆண்டு கொண்டுவந்ததிலே மிக முக்கியமான பிரிவு செக்ஷன் 3, க்ளாஸ் 1. அந்த செக்ஷன் 3, க்ளாஸ் 1 என்பது எதைப்பற்றிச் சொல்கின்றது என்று சொன்னால் இங்கே நாவலர் அவர்கள் சொன்னது மாதிரி டு ஹோல்ட் தி வேக்கன்ட் லேண்ட் என்பது, அதாவது காலியிடத்தை கையகப்படுத்தி வைத்திருப்பது அல்லது காலியிடத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்வதற்கு என்ன பொருள் என்று சொல்கிறபோது சென்னை உயர்நீதிமன்றம் எக்ஸிக்யூட்டர் அல்லது அட்மினிஸ்ட்ரேட்டர் ஆகிய இரண்டு பேர்களிடத்திலே நிலங்கள் இருக்குமேயானால் அது 'டு ஹோல்ட் தி வேக்கன்ட் லேண்ட்' என்ற அந்த பிரிவிற்குள் வராது என்று அவர்கள் தீர்ப்பு வழங்கிவிட்டார்கள். அந்தத் தீர்ப்பை வழங்கியதன் காரணமாக அந்த நகர்ப்புற நிலங்களுக்கு உச்சவரம்பு கொண்டுவருகின்ற சட்டத்தைச் சரியாக அமல்நடத்த முடியவில்லை. ஆகவே எக்ஸிக்யூட்டராக இருந்தாலும் அட்மினிஸ்ட்ரேட்டராக இருந்தாலும் அந்தத் தகுதி, அந்த கெபாசிட்டியிலே அவர்களிடத்திலே நிலங்கள் இருக்குமேயானால் அவர்கள் காலியிடத்தை வைத்திருக்கிறார்கள் என்று சொல்லி உச்சவரம்புக்கு அவர்கள் உட்படுத்தப்படுவார்கள் என்ற வகையிலே இந்தத்திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. எக்சிக்யூட்டர்களோ, அட்மினிஸ்ட்ரேட்டர்களோ, தனிப்பட்ட முறையில் சொத்து வைத்திருப்பார்களானால், பர்சனல் கப்பாசிட்டி, தனிப்பட்ட முறையிலே, என்ற அடிப்படையிலே, உச்ச





வரம்புக்குள் அது வரும் என்று திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்தத் திருத்தத்தை நான் வரவேற்கிறேன். ஆனால், துணை சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலம் இந்த அரசாங்கத்திற்கு நான் தெரிவிக்க விரும்புவது எல்லாம், நீங்கள் சட்டத்தைக் கொண்டு வருகிறீர்கள், சரி, திருத்தத்தைக் கொண்டு வருகிறீர்கள், சரி. எதற்காக நடைமுறைப்படுத்துகிறோம்? சென்னை போன்ற நகரங்களிலே இருக்கக்கூடிய அதிகமான இடங்கள், செல்வம், தனி நபர்களிடத்திலே குவியக்கூடாது என்று சீலிங் லிமிட் வைத்து காலி இடங்களைக் கையகப்படுத்துவதற்காக, கையகப்படுத்தி அரசாங்கம் பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்காக, அரசாங்கம் பயன்படுத்துவதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. ஆனால் நான் தெரிவிப்பதெல்லாம் இப்பொழுது நடைமுறைச் சட்டத்திலே இருக்கக்கூடிய விதிவிலக்குகள் சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றவில்லை.

இன்னும் தெளிவாகச் சொல்வது என்றால், இந்த மாமன்றத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன், இந்த நகர்ப்புற நிலங்களுக்கு உச்சவரம்பு கட்டுகின்ற சட்டத்தின் அடிப்படையிலே ஒரு குடும்பம் என்று சொல்கின்ற பொழுது 4 பேர்கள் கொண்ட குடும்பமாக இருந்தால் அவர்கள் எவ்வளவு வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லும்போது 2,000 ஸ்கொயர் மீட்டர் வைத்துக் கொள்ளலாம். தனி நபராக இருந்தால் 500 ஸ்கொயர் மீட்டர் வைத்துக் கொள்ளலாம். அதுபோன்று கோவை, மதுரை, திருச்சி போன்ற இடங்களில் இருக்கக்கூடிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் 1,500 ஸ்கொயர் மீட்டர் வைத்துக் கொள்ளலாம். இதுதான் உச்சவரம்பு. இதற்கு மேலே உள்ள நிலம் காலி நிலமாகக் கருதப்பட்டு அரசாங்கத்தாலே கையகப்படுத்தப்பட வேண்டும். ஆனால் பல விதிவிலக்குகள் கொடுத்திருக்கிறார்கள். தொழிற்சாலை வைத்திருக்கிறவர்கள் அந்த உச்சவரம்புக்கு மேலே நிலம் வைத்துக் கொள்ளலாம். ஆலைகள் வைத்திருப்பவர்கள் வைத்துக் கொள்ளலாம். ஆட்டுத்தொட்டி வைத்திருப்பவர்கள் வைத்துக் கொள்ளலாம். குரோட்டன்ஸ் செடி வளர்க்கிறோம், விவசாயம் செய்கிறோம் என்று சொல்லி, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வைத்துக் கொள்வதற்குத் தனிப்பட்டவர்களுக்கு வாய்ப்புகள் இருக்கின்றன. இப்பொழுது மவுண்ட் ரோடிலே இருக்கக் கூடிய ஜெமினி ஸ்டுடியோ கூட விவசாய நிலம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே அரசாங்கம் அதைக் காலி நிலமாக வைத்துக் கையகப்படுத்த முடியாது. அதைப் போல இண்டர்நேஷனல் ஆர்கனைசேஷன் வைத்துக் கொள்ளலாம், அதற்கு உச்ச வரம்பு கிடையாது. அதைப் போலவே, யுனைடெட் நேஷனல் ஆர்கனைசேஷன் இந்த சீலிங்குக்கு மேலும் வைத்துக் கொள்ளலாம்; ஃபாரினர்ஸ் வைத்துக் கொள்ளலாம். இது போன்ற விதி விலக்குகள் வைத்து விட்டு, நான் கேட்கிறேன், இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே, நகர்ப்புற நிலங்களுக்கு உச்சவரம்பு கொண்டு வருகிறோம் என்று

எவ்வளவு நிலங்களைக் கையகப்படுத்த முடியும் ? ஆகவே, இந்தச் சட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை, விதி விலக்குகளின் மூலமாக.

சரி, இந்தச் சட்டம் முறையாக அமுல்படுத்தப்படுகிறதா என்பதையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அண்மையிலே, மைலாப்பூரிலே ஒரு நபரிடத்திலே, நான் எ.ச. நம்பரைச் சொல்கிறேன், 4147/2, பிளாட் நெம்பர் 90, மைலாப்பூர், இந்த நகர்ப்புற நில உச்சவரம்பு கட்டுகிற சட்டத்தின் கீழ், உச்சவரம்புக்கு அதிகமாக நிலம் இருக்கிறது என்று சொல்லி, 83 ஏக்கர் 55 சதுர அடி நிலம் அரசாங்கத்தாலே கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. விவரம் 9-11-1983 அரசாங்கத்தினுடைய அதிகாரபூர்வமான கெசட்டிலே அறிவிக்கப்படுகிறது.

அதற்கடுத்த கட்டம் நிலம் கையகப்படுத்தப்படுகிறது அரசாங்கத்தாலே. உடனடியாக வாரியங்கள் இவ்வளவு நிலத்தைக் கையகப்படுத்தலாம் என்று அதிகாரிகள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மானேஜிங் டைரக்டர், 23-2-1984 அன்று கடிதம் எழுதுகிறார் ; யாருக்குக் கடிதம் எழுதுகிறார் என்றால் சீனியர் ரீஜினல் மானேஜருக்குக் கடிதம் எழுதுகிறார். உடனடியாக அரசாங்கம் மைலாப்பூரிலே கையகப்படுத்தக்கூடிய நிலத்தைப் போய் பார்த்து விடுங்கள், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கோடவுன் கட்டுவதற்கு அந்த இடம் வசதியாக இருக்கிறதா என்று பார்த்து அறிக்கை கொடுங்கள், கடிதங்கள் எழுதுங்கள் என்று உத்தரவு போடுகிறார். இடத்தைப் பார்த்து விட்டு, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் இன்ஜினியர் இடத்தைப் பார்வையிட்டு, கோடவுன் கட்டுவதற்கு அந்த இடம் சரியான இடம் என்று முடிவு செய்து பரிந்துரை செய்கிறார், கடிதம் எழுதுகிறார். அதனுடைய நகல்கள் எல்லாம் தேவைப்பட்டால் தரத் தயாராக இருக்கிறேன். 28-5-1984 அன்று கடிதம் எழுதப்படுகிறது. மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கோட்வுனைக் கட்டுவதற்குக் கையகப்படுத்திய நிலத்தை, நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் சீலிங்குக்கு மேலே என்று கருதப்பட்டு கையகப்படுத்திய நிலத்தை, கோடவுன் கட்டப் பயன்படுத்தலாம் என்று அதிகாரிகள் எழுதுகிறார்கள். ஆனால் திடீரென்று 26-7-84 அன்று சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எம்.டி. யின் கடிதம் வருகிறது. அந்தக் கடிதம் சீனியர் ரீஜினல் மேனேஜருக்கு எழுதப்படுகிறது. இடம் கோடவுனுக்குத் தேவையில்லையென்று எழுதப்படுகிறது. நான் கேட்க விரும்புகிறேன். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று அதில் எழுதப்படுகிறது ; தனி நபர் ஒருவருடைய நிலம், சர்க்கார் கையகப்படுத்துகிறது சட்டத்தின் கீழே; சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கோடவுனுக்கு பயன் படுத்தலாம் என்று அதிகாரிகள் முடிவு சொல்கிறார்கள் ; ஆனால் திடீரென்று அந்த காலி இடம் வேறு தனி நபராலே





இன்றைக்குக் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. உங்கள் அனுமதியோடு சொல்ல விரும்புகிறேன் ; ஏறத்தாழ இந்த இடம் இன்றைக்கு 85 ஏக்கருக்கு மேலே என்று சொல்லப்படுகிறது ; இதை கையகப்படுத்தி இருப்பது யார் ? இந்த நில உச்சவரம்புச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வருகிறீர்களே, இதற்கு பலன் ஏதாவது உண்டா ? இவ்வளவு பெரிய இடங்களைக் கையகப்படுத்தி ஒரு தனி நபர் மாடி வீடு கட்டியிருக்கிறார். அந்த நபரை உங்களுக்குத் தெரியாதா ? கோடவுனுக்கு பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்து விட்டு, கையகப்படுத்தப்பட்ட வேகண்ட் லேண்டிலே தனி நபர் மாடி வீடு கட்டுவதற்கு அனுமதி கொடுத்தது யார் ? இடையிலே நடைபெற்றது என்ன? என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்க விரும்புகிறேன். பயங்கரமாக குற்றம் சுமத்துகிறேன் ; அதிலே ஏதோ மிகப் பெரிய தவறு நடைபெற்று இருக்கிறது. மாடி வீடு கட்டுகிற அளவிற்கு இடத்தைக் கொடுத்து விட்டு, நாங்கள் சீலிங் வைத்திருக்கிறோம், சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வருகிறோம் என்று சொல்வதிலே அர்த்தம் இருக்கிறதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இன்னொன்றோடு முடித்து விடுகிறேன். வீட்டு வசதி வாரியம் இருப்பது உங்களுக்குத் தெரியும். அரசாங்கமே ஒப்புக் கொண்டிருக்கிறது. அந்த வாரியத்தின் தலைவராக ஒருவர் இருந்தார். பல ஊழல்கள் நடை பெற்றது என்று சொல்லப்பட்டது. இன்னமும் சொல்லப் போனால் அப்படி ஊழல் நடைபெற்றது என்று ஒப்புக் கொள்ளப்பட்டு ஒரு கமிஷன் போடப்பட்டது. விஜயராகவன், ஐ.ஏ.எஸ். அந்த கமிஷனுக்கு தலைவராக போடப்பட்டார். நிலப் பிரபுக்களிடம் இது போன்று சீலிங் கொண்டு வரப் போகிறோம் ; உங்களுக்குத் தேவையான நிலம் இவ்வளவு தான் ; அதற்கு மேல் இருப்பதை அரசாங்கம் கையகப்படுத்தப் போகிறது, அதை அக்குயவர் பண்ணப் போகிறது என்று நோட்டீஸ் கொடுக்க வேண்டியது. நோட்டீசை அந்த நிலப்பிரபு பெற்றவுடனே அவர் சந்திக்க வேண்டிய விதத்திலே சந்தித்ததற்குப் பிறகு, திடீரென்று கையகப்படுத்துகிற காரியங்கள் ட்ராப் செய்யப்படுகின்றன என்று இது போன்று பல ஊழல்களை விசாரிக்க வேண்டுமென்ற அடிப்படையில் நம்முடைய அதிகாரி விஜயராகவன் அவர்கள் தலைமையில் கமிஷன் போடப்பட்டது. இந்த நேரத்தில் நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்; குறிப்பாகவே குற்றச்சாட்டு சொல்லப்பட்டது ; அரசாங்கம், முதலமைச்சர் சொன்னதைத் தான் நான் சபையில் சொல்கிறேன். வேலூர் நாராயணன் அன்றைக்கு தலைவராக இருந்தவர் மிகப் பெரிய தவறுகளை நடத்தியிருக்கிறார் என்று சொல்லப்பட்டது. இந்த நேரத்தில் நான் கேட்க விரும்புகிறேன், அந்தக் குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்பட்டனவா? அர்பன் லேண்ட் சீலிங் சம்பந்தமாக நடைபெற்ற ஊழல்களை விசாரித்து அறிக்கை சபைக்கு வைத்திருக்கிறீர்களா? நான் தெளிவாகச் சொல்கிறேன். அந்த கமிட்டி ஒரு கண் துடைப்பு ; தனி நபர்களை காப்பாற்றுவதற்காக போடப்பட்ட

கமிட்டி. அறிக்கைகள் எதுவும் தயார் செய்யப்படவில்லை.
ஆகவே நீங்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்த நகர்ப்புற
நிலங்களுக்கு உச்சவரம்பு கட்டுகிற சட்டம் மக்களை ஏமாற்றுகிற
சட்டம், கொள்ளை அடிப்பதற்கான சட்டம். எனவே இந்தச்
சட்டத்தை முறையாக பயன் படுத்த வேண்டுமென்று கேட்டு
அமர்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டு
வரப்பட்டிருக்கிற இந்த நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்திற்
கான மசோதாவின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில்
சில கருத்துக்களைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மூலச் சட்டத்தின் மூலமாக இன்றைக்கு நகர்ப்புறங்
களில் அதிகமான நிலங்கள் வைத்திருப்பவர்கள் நிலங்களை
எடுத்து அரசாங்கத்தினுடைய காரியங்களுக்காகவும், நிலமற்ற
மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தின்
அடிப்படையில் 1977 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டத்
திற்கு திருத்தச் சட்டத்தை 1978 ஆம் ஆண்டு இதே மாமன்றத்
திலே நிறைவேற்றி, மீண்டும் அந்தச் சட்டத்திற்கு ஒரு திருத்தம்
வேண்டுமென்ற அடிப்படையில், உச்ச நீதிமன்றம் அளித்த
தீர்ப்பின் அடிப்படையிலே திருத்தத்தை அறிமுகம் செய்திருக்
கிறீர்கள்.

எனக்கு முன்பாகப் பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்
பினர் அருமைச் சகோதரர் திரு. ரகுமான்கான் அவர்கள்
சொன்னதைப்போல் இந்தச் சட்டத்தை இந்தக் காரண காரியங்
களுக்காக 1976-ல் கொண்டு வரப்பட்டு, 1978-ல் திருத்தப்பட்டு,
இன்றைக்கு ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத்
தின் மூலமாக இந்த அரசு இத்தனை ஏக்கர் நிலங்களைக் கையகப்
படுத்தியிருக்கிறது என்பதை எங்களைப் போன்ற சட்டமன்ற
உறுப்பினர்களுக்குத் தெரிவித்திருந்தால் இந்தச் சட்டம் எந்த
அளவிற்குச் சமுதாயத்தில் இருக்கும் மக்களுக்குப் பயன்பட்டிருக்
கிறது என்பதை நாங்கள் புரிந்து கொள்ள முடியும்.

(பிற்பகல் 12-10)

ஆனால் இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வருவதன்
மூலமாக இங்கே இருக்கும் மிகப் பெரிய பணக்காரர்களை,
வசதி படைத்தவர்களை மிரட்டி நீங்கள் பணம் வாங்கிக் கொள்ள
லாம் என்ற உள் நோக்கத்தோடு இப்படிப்பட்ட சட்டங்களைக்
கொண்டு வருகிறீர்களோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது.
ஆகவே, நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன், இந்தத்
திருத்தச் சட்டத்தை உண்மையிலேயே அமல் நடத்துவதற்கு
நடவடிக்கை எடுங்கள். உயர்நீதி மன்றத்தில் சொன்ன
தீர்ப்பினால் இந்தச் சட்டத்தின் சில திருத்தங்களை இந்த அரசு
கொண்டு வந்துள்ளதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.





அதே நேரத்தில் ஒன்றை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.
இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருவதால் கிடைக்கக் கூடிய
நிலங்களில் அரசு கட்டிடங்களைக் கட்டுவதற்கு முன்வர
வேண்டும். குறிப்பாக, சென்னை நகரில் அதிகமாக அரசு
கட்டிடங்கள் புறம்போக்கான இடங்களில் மட்டுமே கட்டப்
படுகின்றன. யாருமே எளிதில் போக முடியாத இடங்களில்
கட்டிக் கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. குற்றம் சாட்ட
வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. ஒரு உதாரணத்
திற்குச் சொல்கிறேன். சென்னை மாநகரில் உள்ள 5 ஆதி
திராவிட மாணவர்கள் விடுதிகள் இராயபுரம் பகுதியில் ஒரே
கட்டிடத்தில் இருக்கின்றன. அதைப் போலவே கெல்லீஸ்
பகுதியில் ஒரு ஆதி திராவிட மாணவர்களுக்கான விடுதி மிகவும்
மோசமாக இருக்கும் பகுதியில் கட்டப்பட்டிருக்கிறது. யாரா
வது அமைச்சர்கள் அங்கே சென்று பார்த்தால் நிலைமைகள்
நன்றாகத் தெரியும். இப்படி அரசு கட்டிடங்கள் கட்டுவதற்குக்
கூட நிலம் கிடைக்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது.

இங்கே இடம் கிடைக்காத காரணத்தால்தான் ஆதி திராவிடர்
வீட்டுவசதி வாரிய அலுவலகத்தை விழுப்புரத்தில் கட்டுவதாகச்
சொன்னார்கள். இந்தச் சட்டத்தின் மூலமாக எத்தனை ஏக்கர்
நிலம் கையகப்படுத்தியிருக்கிறீர்கள், அதில் எத்தனை ஏக்கர்
நிலங்களை அரசு அலுவலகக் கட்டிடங்களுக்கு பயன்படுத்த
முடியும் என்கிற புள்ளிவிவரங்களை எங்களுக்குக் கொடுத்தால்
நன்றாக இருக்கும். இன்றைக்கு இந்தச் சட்டம் பல்வேறு
நகரங்களுக்குப் பொருந்தும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.
என்னுடைய மாவட்டத்தில் வளர்ச்சி மன்றக் கூட்டத்தில்கூட
நான் இது குறித்த விவரங்களைக் கேட்டேன். எத்தனை ஏக்கர்
நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன. எத்தனை ஏக்கர் நிலங்கள்
விநியோகிக்கப்பட்டன. ஆனால் இதுவரை எந்தவிதமான
பதிலும் கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட நிலையில் அந்த
சட்டத்திற்கு மேலும் திருத்தம் கொண்டுவருகிறேன், என்று
சொல்லி திருத்தங்களை மட்டும் கொண்டுவந்து மக்களை
ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது. ஆனால் இன்றைக்கு உச்ச
வரம்புச் சட்டத்தின் கீழே பலவிதமான எக்சம்ப்ஷன்ஸ்
கொடுத்துக்கொண்டு இருக்கிறீர்கள். குறிப்பாக இன்றைக்கு
மவுண்ட்ரோடிலே பல உல்லாச ஓட்டல்கள், மிகப்பெரிய
பங்களாக்கள், அவற்றில் எத்தனை ஏக்கர் நிலம் புதைந்து
கிடக்கிறது என்ற விவரமே தெரியாமல் கிடக்கின்றது. பல்வேறு
தர்மஸ்தாபனங்கள் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை
வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலங்களை
யெல்லாம் இந்தச் சட்டத்தின் மூலம் நீங்கள் கையகப்படுத்தி
இந்தச் சட்டத்தின் முழுப்பயனை மக்களுக்கு அளிக்கவேண்டும்
என்று கேட்டு இந்தத் திருத்தத்தை வரவேற்று அமைகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தம் ஒரு வரவேற்கத்தக்க திருத்தமாகும். இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் '' வைத்திருத்தல் '' என்பது '' நிறைவேற்றுபவர் அல்லது நிர்வாகி '' என்பவரைக் குறிக்காது என்று உயர்நீதி மன்றம் சொன்ன தீர்ப்பின் காரணமாக இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தம் என்ன நோக்கத்திற்காகக் கொண்டுவரப்பட்டதோ அந்த நோக்கம் முழுமையாக அமல்படுத்தப்பட வேண்டும். உச்சவரம்புச் சட்டம் என்று கொண்டுவருகிற போது அது நில உச்சவரம்புச் சட்டமாக இருந்தாலும் சரி, அல்லது நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டமாக இருந்தாலும் சரி, ஆரம்பத்தில் அறிவிக்கப்படுகின்ற நேரத்தில் அதிகமான எண்ணிக்கை கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், அதை எடுக்கக்கூடிய நேரத்தில் மிகச் சாதாரணமான அளவே கிடைக்கிறது. அதுவும் விநியோகிக்கும் நேரத்தில் அது மிக மிகக் குறைவாகி விடுகிறது. இதைத்தான் புரொபசர் மௌலானாபீஸ் கமிட்டி அறிக்கை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. இது எப்படி இருக்கிறது என்றால், கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை என்று சொல்வார்களே அப்படித்தான் இருக்கிறது. சென்னை போன்ற நகரங்களில் ஏராளமான நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு குரோட்டன்ஸ் செடிகளை வைத்துவிட்டு ஹார்ட்டிகல்சர் என்று சொன்னாலோ அல்லது ஹோட்டல் என்று போர்டு வைத்துவிட்டலோ அதற்கெல்லாம் எக்சம்ப்ஷன் கொடுக்கப்படுகிறது.

வளர்ந்து வரக்கூடிய இந்த சமுதாய அமைப்பிலே நகர்ப்புறங்களில் இடநெருக்கடி ஏற்படுகிறது. அதிலும் குறிப்பாக அரசு ஊழியர்கள், நடுத்தர வர்க்கத்தினர் வீடு கட்ட நிலம் கிடைக்காமல் அல்லல் படுகிறார்கள். எட்ட முடியாத அளவுக்கு விலை ஏறிக்கொண்டிருக்கிறது. ஏராளமான நிலக் குவியல் ஒரு பக்கம் இருக்கிறது. வீட்டுமனை கிடைக்காமல் அல்லல் படுகிற நிலைமை மறுபக்கம் இருக்கிறது. அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் சில இடங்களிலே கைவைக்க ஆழமான, ஆக்கபூர்வமான காரியங்களைச் செய்யவில்லை என்பதை நடைமுறையில் பார்க்கிறோம்.

அந்த அடிப்படையில் இன்றைக்கு 'அவுட் ஸ்கர்ட்ஸ்'— அதாவது நகர்ப்புறத்தை ஒட்டியிருக்கிற பகுதிகளில் ஏராளமான வீட்டு மனைகள் இருக்கின்றன ; எதிர்பார்ப்புகளும் ஏராளமாக இருக்கின்றன. அரசாங்கம் செய்ய வேண்டிய கடமையை உடனடியாகச் செய்து, இந்தத் திருத்தத்தின் மூலமாக தன் கடமையைச் செய்ய முடியும் என்று இருக்குமானால் அது வரவேற்கக்கூடியது. ஆகவே, நகர்ப்புற நில உச்சவரம்பு என்பதிலே கண்ணும் கருத்துமாக இருந்து, விதிவிலக்கு என்பதைச் சுருக்கி, விதிவிலக்கு என்ற பெயரால் ஏமாற்றுகிறவர்களைத் தடுத்து, அதிலும் குறிப்பாக அதிகமாக பாதிக்கக் கூடியவர்களுக்கு விதிவிலக்கு என்று இருப்பதை ஒழித்து, மிச்ச



நிலங்களை எடுத்து, அரசு ஊழியர்களுக்கு, மத்தியதர வர்க்கத்தினருக்கு அரசாங்கத்தின் மூலம் நியாயமான விலையில் வீட்டு மனைகள் கிடைக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் முதலிலே குறிப்பிடும்போது குறிப்பிட்ட கருத்திலே ஒரே ஒரு திருத்தத்தை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். முதலிலே இதற்கு ஒரு அவசரச் சட்டம் கொண்டு வந்ததாகக் குறிப்பிட்டேன். முதலிலே அவசரச் சட்டம் கொண்டுவரப்படவில்லை. இந்தத் தீர்ப்பு வந்த பிறகு, சட்டம் கொண்டு வந்து, சட்டமன்றத்தில் சட்டமாக நிறைவேற்ற வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டோம். சட்டமன்றக் கூட்டத்தின்போது அவையில் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் போதுமான அவகாசம் இல்லாத காரணத்தால் சட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. பின்னர் அது காலாவதியாகிவிட்டது. அதன் பிறகு மீண்டும் இந்தச் சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அவசரச் சட்டம் போடப்பட்டது. அவசரச் சட்டம் போடப்பட்ட பின்னால் அதை 6 மாதத்திற்குள் நிரந்தரச் சட்டமாக்க வேண்டுமென்ற விதி இருக்கிறது. சட்டமன்றம் கூடிய பிறகு அவசரச் சட்டம் 6 வாரத்திற்குள் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்றும் இருக்கிறது. அந்த முறையிலேதான் நிரந்தரமான சட்டமாக்குவதற்கு இந்தத் திருத்த சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டத் திருத்தம் யாருக்கும் எந்தச் சலுகையும் அளிப்பதற்காகக் கொண்டுவரப்படவில்லை ; ஏமாற்றுவதற்காகவும் கொண்டுவரப்படவில்லை. ஆனால் இதிலே நுழையாமல் இருந்தவர்களையும் நுழைய வைக்க இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. யாரையும் தப்பிக்க விடக் கூடாது என்பதற்காக இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. குத்தகைதாரர் என்றும் இன்னும் பல்வேறு பெயர்களிலே 'அட்மினிஸ்ட்ரேட்டார்' என்ற வார்த்தையைப் போடாத காரணத்தால், அதை வைத்துக்கொண்டு சட்ட நுணுக்கங்களுக்குள்ளே புகுந்து, ஒரு உயர்நீதிமன்ற வழக்கில் ஒருவர் தீர்ப்பு பெற்றுவிட்டார். அதனால் அட்மினிஸ்ட்ரேட்டார் என்ற வார்த்தையும் இதிலே சேர்த்து கொண்டு வந்திருக்கிறோம். அதிலும் குறிப்பாக 1976-ல் எப்போது மூலச்சட்டம் கொண்டு வரப்பட்டதோ அந்த நாளிலிருந்து இந்தத் திருத்தம் நடைமுறைக்கு வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த உச்சவரம்புச் சட்டத்தை முழுமையாக வரவேற்பார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சட்டத்திற்குப் பொருந்தாத, ஆனால் வரவேற்கக்கூடிய சில கருத்துக்களையும் சொன்னார்கள். அதை எல்லாம் கருத்திற்கொண்டு, இந்தச் சட்டத்தி

னுடைய நோக்கம் நிறைவேற அரசு கண்ணும் கருத்துமாக இருந்து, கவனத்தோடு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தச் சிரிய கருத்துக்களின் அடிப்படையில்தான், சில சிறந்த முடிவுகளின் அடிப்படையிலேதான், சில திருத்தங்கள் செய்ய வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டாலும், அவசியமான திருத்தங் களைச் செய்து இந்தச் சட்டத்தை நல்ல முறையிலே நிறை வேற்ற அரசு முயற்சி மேற்கொள்ளும். இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தை நல்ல முறையிலே நிறைவேற்றுவது பற்றி நல்ல முறையிலே ஆராய்ந்திருக்கிறோம். பரிந்துரைக் குழுவும் வைத் திருக்கிறோம்.

ஒருவருக்கு ஏதாவது ஒருவகையிலே விதிவிலக்கு அளிக்கி றோம் என்றால், ஒரு தொழிற்சாலையை வைத்து, அதை விரிவு படுத்த வேண்டும் என்ற முறையிலே ஒருவர் விதிவிலக்குப் பெற் றிருக்கிறார் என்றால், அதற்கு 2, 3 ஆண்டு காலம் கொடுத்து, அதற்குள் விரிவாக்கப் பணிகளை செய்துவிட்டால் அதற்கு விதி விலக்குத் தரப்படும். இல்லை என்றால் அந்த இடம் எடுத்துக் கொள்ளப்படும் என்று நோட்டீஸ் கொடுக்கிறோம். இரண் டாண்டு அல்லது குறிப்பிட்ட காலத்திற்குள் விரிவாக்கப் பணிகள் முடிக்கப்படவில்லை என்றால் அந்த நிலத்தை நாங்கள் கையகப் படுத்துகிறோம்.

(பிற்பகல் 12-20)

அந்த வகையிலே 15—9—1984 வரையிலும், சென்னை நகரைப் பொறுத்த வரையிலும், பிரிவு 11(1)-ன் கீழ் உபரி நிலம் 1,507.21 ஏக்கர் அறிவிப்பு செய்திருக்கிறோம். 11(3)-ன் கீழ் அரசால் 857.36 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்திருக்கிறோம். அரசால் ஸ்வாதீனம் செய்யப்பட்டது 825.36 ஏக்கர். மற்றவை கள் எல்லாம் மேல் முறையீட்டில் இருக்கிறது. இவற்றை யெல்லாம் கையகப்படுத்தி பொதுப் பணிக்காக, வீட்டு வசதி போன்றவைகளுக்காக தரவேண்டுமென்ற அடிப்படையில் இருக் கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் மயிலைப் பகுதியில் இருக்கின்ற ஒரு பிரச்சினை பற்றி கூறியிருக்கிறார்கள். அந்த விவரங்களை அளித்திருக்கிறார்கள். உடனடியாக அதனுடைய தன்மைகளை எடுத்துச் சொல்கிற நிலையில் நானும் இல்லை. அவர்களும் சொல்லவேண்டுமென்று எதிர்பார்க்கவும் முடியாது. விவரங்களைத் தந்திருக்கிறார்கள். அந்த விவரங் களைப் பொறுத்தவரையில் எந்த அளவிற்கு உண்மை, என்ன நடந்தது, எப்படிப்பட்ட தன்மைகளில் நடந்தது என்பதை தானோ அல்லது இதற்கு பொறுப்பு வகிக்கின்ற மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரோ வாய்ப்பு ஏற்படும்பொழுது சிலபல நாட்களில் அறிக்கை மூலமாகவோ அல்லது விவாதத்திலோ அது





பற்றிய தன்மைகளை விளக்குவோம் என்று கூறுகிறேன்.
எனவே அவர்கள் சில விவரங்களை தந்திருக்கிறார்கள். அப்படி
வந்தவுடனேயே அவைகள் குற்றச்சாட்டுகளாகி விடாது.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத்
தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்களின்
கவனத்திற்கு மைலாப்பூர் நிலம் சம்பந்தமான தகவல்களைக்
கொடுத்திருக்கிறேன். அறிக்கையின் மூலமாகவோ, பேரவையின்
மூலமாகவோ விளக்கம் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.
அதற்காக என்னுடைய மகிழ்ச்சியை தெரிவித்துக்கொள்கிறேன்.
ஆனால் இப்போது பேரவை முடிவதற்கு முன்பாக இந்த அறிக்கை
தரப்படவேண்டுமென்று நான் உங்கள் மூலமாக கேட்டுக்கொள்
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதில் அதிக
கஷ்டம் இருக்காது என்று நான நினைக்கிறேன். அறிக்கை
வைக்கிற நிலைமைகள் பொறுத்தவரையிலும், என்னென்ன
அங்கு நடந்தது, எப்படி நடந்தது என்பதைப் பற்றி 10 நாட்
களிலே, நடைபெறுகின்ற கூட்டத் தொடரிலே தெரியப்படுத்த
வேண்டுமென்று சொல்கிறார். இருக்கின்ற தன்மைகளை தெளிவு
படுத்தவேண்டும். ஆகவே, தெளிவுபடுத்துவதற்கு கடப்பாடு
எனக்கு இருக்கிறது. இல்லாவிட்டால் இது ரகுமான்கானுடைய
பிரச்சினையாக நின்றுவிடும். அவைகளை தெரிவிக்கும் நிலையில்
இப்போது முழு விவரங்களையும் அறிய முடியாததன் காரணமாக
தெரிவிக்க முடியவில்லை. அதை அறிந்த பிறகு உண்மை
நிலையை இந்த அவைக்கு விளக்குவேன் என்று நான் குறிப்பிட்டுக்
கூற விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலை
வர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்களுக்கு எந்தவித
சந்தேகமும் வேண்டாம். அந்த இடத்திலே ஒரு மாடி வீடு
கட்டப்பட்டிருக்கின்றது. அதிலே அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகம் என்ற போர்டு இருக்கிறது. அது
சம்பந்தமான போட்டோவும் இருக்கிறது. வேண்டுமானால்
பெயரைச் சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ரகுமான்கான்
அவர்கள் எல்லா ஆதாரங்களையும் என்னிடத்தில் தந்தால் மிக
மிக நல்லது. அதையும் தரட்டும். இருக்கின்ற நிலைமைகளைச்
சொல்லட்டும். பிறகு நான் அவைகளைப் பார்த்த பிறகு தான்
அது நியாயமானதா, அல்லது தகாதது நடந்ததா, இல்லையா
என்பது தெரிய வரும். அவர்கள் எடுத்து வைத்திருக்கிற
விவரங்களுக்கு நான் அறிக்கை தருகிறேன் என்று சொல்லியிருக்கி
றேன். முழு விவரங்களைச் சொல்லி எனக்கு 2, 3 போட்டோக்
களையும் காண்பித்தார்கள் தஸ்தாவேஜுகளையும் காண்பித்தார்
கள். அவைகளை என்னிடத்தில் பேரவைத் துணைத் தலைவர்
மூலமாகவோ, அல்லது நேரடியாக நம்பிக்கையின் பேரில்
என்னிடத்தில் தந்தாலும் சரி........(குறுக்கீடு).

[1984 அக்டோபர் 9

திரு. அ. ரகுமான்கான் : பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் நம்முடைய நிதியமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன். திருப்பித் தரவேண்டுமென்று உங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தாருங்கள். சில நாட்களுக்கு அது என்னிடத்தில் இருக்க நீங்கள் நம்புங்கள்; பிறகு வேண்டுமானால் உங்களிடம் திருப்பித் தந்துவிடுகிறேன். நானும் பார்த்துவிட்டேன் என்று சொல்லி, ஒவ்வொரு அதிகாரியையும் கூப்பிட்டு, ஒவ்வொருவரிடமும் பார்த்தேன் பார்த்தேன் என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. இதைச் சிறிது ஆராயுங்கள் என்று அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும். தஸ்தாவேஜுகளில் கையெழுத்துப் போட்டுக்கொடுங்கள். நானும் கையெழுத்து போட்டு வாங்கிக் கொண்டு பிறகு திருப்பித் தந்து விடுகிறேன். மற்றபடி குறைபாடுகள், குற்றச் சாட்டுக்கள் எடுத்துச் சொல்வதில் தவறில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேலூர் நாராயணன் ஊழல்கள் செய்தார் என்று இந்த அவையிலே சொன்னார்கள் என்று சொன்னார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் சொல்லவில்லை என்பதை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். குற்றச்சாட்டுக்கள் சொல்வதில் தவறில்லை. ஆனால் முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே சொன்னார்கள் என்பது சரியல்ல.

திரு. அ. ரகுமான்கான் : நம்முடைய முதல்வர் அவர்கள் சட்டப் பேரவையிலே வேலூர் நாராயணன் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள் என்று நான் சொல்லவில்லை. வேலூர் நாராயணன் அவர்கள் ஹவுசிங் போர்டு சேர்மனாக இருந்த போது பல ஊழல்கள் நடந்திருக்கின்றன, அதை விசாரிப்பதற்கு பி. விஜயராகவன், ஐ. ஏ. எஸ். அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி போடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதைப் பற்றி என்ன விசாரித்திருக்கிறீர்கள் ? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்பதைப் பற்றி விளக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்கள் சொன்ன குற்றச்சாட்டைப் பற்றி நான் சொல்லவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று இருக்குமானால், அதைப் பற்றி என்னவென்று விசாரித்து அவைக்கு தெரிவிப்பதற்கு ஆட்சேபணை இல்லை என்று குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே உச்சவரம்புச் சட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டாலும், அதனுடைய நோக்கம் நிறைவேறுகின்ற அளவுக்கு தனியாகக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டியிருக்கும். ஆனால் இப்போது இருக்கிற திருத்தத்தை மட்டும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



1984 அக்டோபர் 9]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு—முறைப்படுத்துதல்) திருத்தச் செல்திறன் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 34/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 4 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

The Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN : Mr. Deputy Speaker, Sir, I move the following amendment :—

"In Clause 4,

(1) in sub-clause (a),—

*for* the expression "date of the publication of this Act in the *Tamil Nadu Government Gazette*", *substitute* the expression "10th day of September, 1984".

(2) in sub-clause (b),—

(i) *for* the expression "date of the publication of this Act in the *Tamil Nadu Government Gazette*", *substitute* the expression "10th day of September, 1984";

(ii) in the proviso, *for* the expression "date of the publication of this Act in the *Tamil Nadu Government Gazette*", *substitute* the expression "10th day of September 1984".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 4 திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

புதிய பிரிவு 5.

The Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN : Mr. Deputy Speaker, Sir, I move the following amendment:—

"After clause 4, *insert* the following clause, namely—

"5. *Repeal and saving*—(1) The Tamil Nadu Urban Land (Ceilling and Regulation) Amendment and Validation Ordinance, 1984 (Tamil Nadu Ordinance 16 of 1984), is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the principal Act, as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act."

புதிய பிரிவு 5, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" பிரிவு 1 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும் ".

The Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN: Mr. Deputy Speaker, Sir, I move the following amendment:—

In clause 1, *for* sub-clause (2), *substitute* the following sub clause, namely—

"(2) (*a*) The provisions of this Act, except section 3, shall be deemed to have come into force on the 10th day of September, 1984.

(*b*) Section 3 shall be deemed to have come into force on the 3rd day of August 1976".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:



" தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு—முறைப்படுத்துதல்) திருத்தச் செல்திறன் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 34/1984) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெறவேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன் வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

4. அறிவிப்புகள் —(தொடர்ச்சி.)

(ஈ.) கட்டிட கட்டுமானப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்—பல்வகை விதித்துறைகள்) சட்ட முன்வடிவு, 1983 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு கட்டிட கட்டு மானப் பணியாளர்கள் (பணி நிலைமைகள் —பல்வகை விதித் துறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 44/1983-ஐ) பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள் —(தொடர்ச்சி).

(எ) கட்டிட கட்டுமானப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்—பல்வகை விதித்துறைகள்) சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கட்டிட கட்டுமானப் பணி யாளர்கள் (பணி நிலைமைகள் —பல்வகை விதித்துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 44/1983) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.

இந்தச் சட்டமுன்வடிவை ஒரு ஆண்டிக்கு முன்னதாக அறி முகம் செய்தோம். ஆனால் அறிமுகம் செய்யும்போதே, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம என்று அரசு கோரியிருக்கக்கூடும். ஆனால், அவ்வாறு செய்யாதிருப்பதற்குக் காரணம், 1886 ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதியன்று சிக்காகோ நகரில் தொழி லாளர்கள் போராடினார்கள். மே மாதம் முதல் தேதி 1886-ல் நடந்தது அந்தப் போராட்டம். மூன்று இலட்சத்து 50 ஆயிரம் பேர்கள் போராடினார்கள். அதிலே ஒரு இலட்சத்து 85 ஆயிரம் பேர்கள், 8 மணி நேரம் வேலை உரிமையை கோரி போராடி

*1983-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28-ம் தேதி தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

வெற்றிபெற்றார்கள். அதில் பெரும்பாலானவர்கள் இந்த பில்டிங் டிரேடிலே உள்ள தொழிலாளர்கள்தான். 1886-ல் போராடி 8 மணி நேர வேலை உரிமையை சோரிப் பெற்றவர் களில் பெரும்பாலானவர்கள் கட்டிடத் தொழிலாளர்கள். ஆனால் துரதிருஷ்டவசமாக இந்தப் போராட்டம் நடந்து 100 ஆண்டுக்காலம் ஆகியும்—ஏறக்குறைய 98 ஆண்டுகள் ஆகி றது—இந்தியாவில் இந்தத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரவில்லை. இந்தத் தொழிலாளர்களுக்கு பல்வேறு பாதுகாப்புகள் வேலை பாதுகாப்பு, ஊதிய பாது காப்பு இன்னும் மற்ற பாதுகாப்புகள் எல்லாம்—ஏறக்குறைய 42 பகுதிகள் வருகின்றன—இருக்கின்றன. அப்படிப்பட்ட இந்தப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வரக்கூடிய பொறுப்பை ஏற்றுக்கொண்டவர், புரட்சித் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் காலத்திலேதான் இது வருகிறது என்பதை எண்ணிப் பார்த்து அதை அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்து நிறை வேற்றவும் அந்த வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது. என் னுடைய தாத்தா கூட கட்டிடத் தொழிலாளியாக, கொத்த னாராக இருந்தவர். கிருஷ்ணன் கோனார் என்று சொல்வார் கள். அந்தக் கொத்தனாருடைய பேரன் (குறுக்கீடு), எனக்குத் தெரியாது, அவர்கள் காலத்திலே இருந்தது. கிருஷ்ணன் கோனார் கொத்தனார் என்று சொல்வார்கள், என்னுடைய தாத்தாவை. ஆகவே அவருடைய பேரப்பிள்ளைக்கு வாய்ப்புக் கிடைக்கும் படியாகச் செய்த என்னுடைய புரட்சித் தலைவருக்கு என் னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12–30)

இதை 1983 ஆம் ஆண்டு கொண்டு வந்தபோதே, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவேண்டாம் என்று அரசு கருதியதற்குக் கார ணம், இந்தியாவிலேயே மத்திய அரசும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவில்லை, மாநில அரசும் கொண்டு வரவில்லை. இதிலே மிக அக்கறை காட்டுகின்ற திரு. ஹேமச்சந்திரன் அவர் களுடைய, கட்சி ஆளுகின்ற மேற்கு வங்கத்திலே கூட கொண்டு வரவில்லை. எனவே, தமிழகத்திலேதான் இந்தச் சட்டம் கொண்டு வருகிற காரணத்தால், இதனுடைய சாதக பாதகங் களை எல்லாம் பரிசீலனை செய்து, மாற்றுக் கட்சிகள், தொழிற் சங்கத் தலைவர்கள், உச்ச நீதிமன்றத்திலே நீதிபதியாக இருந்த வர்கள் ஏல்லாம் இதிலே கருத்து கூறுவதற்கு விரும்புகிறார்கள் என்ற காரணத்தால், இப்போது ஓர் ஆண்டுக்காலம் விட்டு, அவர்கள் கருத்துக்களை எல்லாம் மனதிலே ஏற்று, அரசே ஏறக் குறைய 14-க்கும் மேற்பட்ட திருத்தங்களைக் கொண்டு வந் திருப்பதை நீங்கள் பார்த்து இருப்பீர்கள். இதிலேயிருந்து இந்த அரசு எந்த அளவிற்கு ஜனநாயக முறையைக் கையாள்கிறது என்பதையும், பொது மக்களுக்கும், தொழிற்சங்கத் தலைவர் களுக்கும், தொழிலாளர்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் எவ்வாறு மரியாதை தருகிறது என்பதையும் இது நிரூபிக்கிறது





என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதற்காகத்தான் நாங்கள் காத்துக்கொண்டிருந்தோம். இனி காத்துக் கொண் டிருக்க முடியாது என்ற சூழ்நிலையில் இங்கே கூட செலக்ட் கமிட்டிக்கு அனுப்பலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஓர் ஆண்டுக் காலத்திற்கு மேலே ஆகிவிட்டது, அரசே திருத்தங்கள் கொண்டு வந்திருக்கிறது. அந்தத் திருத்தங்கள் மூலமாக பல் வேறு நன்மைகள் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறது. எனவே அங்கே அனுப்பாமல் இங்கேயே நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்தச் சட்டத்திலே உள்ள ஒன்றிரண்டு முக்கியமான அம்சங்களைச் சொல்லலாம் என்று நான் கருதுகிறேன்.

''ஓர்க்கர்'' என்ற டெபனிஷனிலே, 'டெம்பரரி' அல்லது சப்சிடியூட், பெர்மனென்ட்டாக இருக்கக்கூடியவர்கள், கேசுவல் லேபரரர்ஸ் எல்லோரையும், கொண்டு வந்திருக்கிறோம். இதிலே நீங்கள் பார்க்கவேண்டியது, 'நேசனல் பெஸ்டிவல் ஹாலிடேஸ்' இதிலே இணைக்கப்படவில்லை. 7 சட்டங்கள் பொருந்தும் என்று சொல்லியிருக்கிறோம். இந்தச் சட்டங்கள் இதிலே போடவில்லை என்றாலும் நேஷனல்பெஸ்டிவல் ஹாலிடேஸ் ஆக்டிலே இந்த எஸ்டாப்லிஷ்மென்டையும் சேர்த்து, அந்தச் சலுகைகளும் அவர்களுக்குக் கிடைக்கும் படியாக செய்வோம் என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்கிறேன்.

இந்தச் சட்டம் 50, அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய அந்த நிறுவனங்களுக்குத்தான் பொருந் தும் என்று சொன்னாலும், அதற்குக் குறைவாக வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுக்கும் பொருந்தக்கூடிய அளவிலே இந்தச் சட்டத்திற்கு அரசு அறிவிக்கை கொடுக்கலாம் என்று இருக்கிறது. இதை உபயோகப்படுத்திக்கொண்டு, 20 அல்லது அதற்குக் கீழே, 10 தொழிலாளர்கள் வரையில் உள்ள நிறுவனங் களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும் என்று அரசு அறிவிக்கை கொடுப்பதாக இருக்கிறது என்பதை முன்கூட்டியே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு குழந்தைகள் யாரையும் வேலைக்கு வைக்கக்கூடாது. 15 வயது முடியாத யாரையும் வேலைக்கு வைக்கக் கூடாது என்று இந்தச் சட்டத்திலே தடை விதித்திருக்கிறது. 16 வயது, அதற்கு மேற்பட்டவர்களைத்தான் வேலைக்கு வைக்க முடியும் என்று இந்தச் சட்டத்திலே நாம் கொண்டு வந்திருக் கிறோம்.

பெண்கள் கர்ப்பிணியாக இருக்கும்போது, பிரசவத்திற்கு முன்னதாக 6 வாரமும், பின்னதாக 6 வாரமும் அவர்களை வேலையில் வைக்கக்கூடாது என்பதற்கும் இந்தச் சட்டத்திலே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. 7 சட்டங்கள் இதற்காக

அமலாகும் என்று சொன்னதிலே, ஒர்க்மேன் காம்பன்சேசன்
ஆக்ட்டிலே இது செயல்படும் என்று சொல்லியிருக்கிற காரணத்
தாலே, 12-ஆம் தேதி உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்
கள், இறந்து போன தொழிலாளர்களுக்கு 10 ஆயிரம் வேண்டும்
என்று அந்த உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களுக்கு
நான் சொல்லிக்கொள்வேன். ஒர்க்மேன் காம்பன்சேசன்
ஆக்ட் வில் அப்ளை என்று சொல்கிற காரணத்தால் சாதாரண
மாக 200 ரூபாய் சம்பளம் வாங்கினாலும், இறந்து போனால்
20 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். டிசேபிள்மெண்ட் என்றால்,
24 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். அவர்கள் எதிர்பார்த்தது 10
ஆயிரம்தான். ஆனால் இந்தச் சட்டத்திலே வழிவகை செய்
திருப்பதன் மூலமாக குறைந்த பட்சம் இறந்துவிட்டால், 20
ஆயிரம் ரூபாய் கிடைக்கும். அதற்கு மேலும் போகும். இ...
னுடைய பேக்ட்சை எல்லாம் பின்னாலே தெளிவாகச் சொ...
கிறேன்.

பெர்மனன்ட் டிஸ்ஏபிள்மென்ட் என்றால் 24 ஆயிரம் ரூபாய்
கிடைக்கும். உண்ணாவிரதம் இருக்கும் தொழிலாளர்கள்
14 ஆயிரம் என்று குறைத்துக் கேட்கக் கூடாது. 10 ஆயிரம்
என்று குறைத்துக் கேட்கக் கூடாது என்று அரசு கேட்டுக் கொள்
கிறது. இதைத்தவிர இ.எஸ்.ஐ.,பி.எப். போன்றவற்றில்
தேவையான மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு இந்த அர
சுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இந்தச் சட்ட
10 அல்லது 20 தொழிலாளர்கள் உள்ள நிறுவனங்களுக்குப்
பொருந்துமென்ற முறையிலே கொண்டுவரப்பட இருக்கிற...
ஆபத்தான வேலைகள் என்ன என்ன என்பதுபற்றி ஒரு பட்டியல்
கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆபத்தான வேலை என்றால் ஒரு
தொழிலாளர் இருந்தாலும் இந்தச் சட்டம் பொருந்தும் என்று
கொண்டுவரப்பட்டிருக்கிறது. முன்னதாக அறிவிப்புக் கொடுக்க
வேண்டுமென்பதைப் பற்றியும் இந்தச் சட்டத்திலே சொல்லப்
பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாகப் படித்து
இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அப்படி அறிவிப்புக்
கொடுத்ததற்குப் பிறகு என்ன என்ன செய்ய வேண்டுமென்
பதற்கு, என்ன என்ன முறைகள் கையாளப்படவேண்டுமென்
பதற்கு, விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அது மட்டுமல்ல,
இன்ஸ்பெக்டர்களை நியமிப்பது பற்றியும் கேண்டின் வசதிகள்
பற்றியும் இதிலே சொல்லியிருக்கிறோம். விதிவிலக்கு
கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. கவர்ன்மென்ட்
ராக்ட் மூலமாகச் செய்தால் இந்தச் சட்டம் பொருந்தும் என்றும்
திருத்தத்தையும் கொண்டுவந்திருக்கிறோம். மாண்புமிகு
உறுப்பினர்கள் பேச்சுக்களை கேட்டுவிட்டு நான் கடைசியிலே
சொல்ல வேண்டியவைகளை சொல்லலாம் என்று கருதுகிறேன்.
இதிலே முக்கியமாக 23, 29, 36, 40-வது பிரிவுகள் எல்லாம்
இருக்கின்றன. 41-வது பிரிவிலே ஒர்க்மென் காம்பன்சேஷன்
ஆக்ட் மூலமாக சலுகையைப் பெற்றுக்கொண்டு இன்ஷுரன்ஸ்
மூலமாகவும் பெறுவதற்கு வகை செய்வதற்கு புரட்சித் தலைவர்
அவர்கள் அசைக்க முடியாத ஆசையை வைத்திருக்கிறார்கள்.





இந்த இரண்டு வகையிலும் கிடைக்காவிட்டால் வேறு வகையிலே
கிடைப்பதற்குப் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறோம்.
அவர்கள் மருத்துவ மனையில் இருப்பதால் நான் அவைகளை
யெல்லாம் அறிவிக்க முடியாத நிலைமை இருக்கிறது. 12 ஆம்
தேதி உண்ணாவிரதம் இருக்கக்கூடியவர்களுக்குச் சொல்லிக்
கொள்கிறேன். யாராக இருந்தாலும் ஒரு தொகை கிடைப்
பதற்கு இந்த அரசு வழிவகை செய்யும் என்று சொல்லி உறுப்
பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களைத் தெரிவிக்க
வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

Thiru J. HEMACHANDRAN : Sir, I move the following amendment standing in my name :

"That the Tamil Nadu Building and Construction Workers (Conditions of Employment and Miscellaneous Provisions) Bill, 1983 (L.A. Bill No. 44 of 1983) be referred to a Select Committee of the House consisting of—Members." (List of Members will be given later.)

திருத்தம் முறைபே வழிமொழியப்பெற்றது.

Thiru A. RAHMANKHAN : I have already given an amendment. But my name has not been mentioned in the list. That is my humble submission.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விதி 101-ன்படி ஒருவர்தான் மூவ் பண்ணலாம் என்று இருக்கின்றது.

Thiru A. RAHMANKHAN : We are moving some amendments. We are entitled to discuss that subject by means of giving amendments. That is our right.

The Hon. Thiru S. RAGAVANANDAM : The Hon. Member has not moved any amendment.

Thiru A. RAHMANKHAN : The subject matter of my amendment is different. What I have given is that this bill may be referred to a Select Committee for consideration.

The Hon. Thiru S. RAGHAVANANDAM : How can you call it as an amendment ? Your amendment is that the matter be referred to a Select Committee. It is not an amendment.

Thiru A. RAHMANKHAN : The Hon. Minister says it does not come under amendment. But there is a specific rule. I am very sorry that our Hon. Minister is ignorant of that rule.

திரு. துரைமுருகன் : இதிலே போட்டிருக்கிறது. அவர் பெயரையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சேர்த்திருக்கிறது.

(பிற்பகல் 12–40)

* திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமுன்வடிவை முன்மொழிந்து ஒரு சில விவரங்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஒரு கொத்தனாரின் பேரனாக இருக்கும் இந்த அமைச்சர் அவர்கள் ஏறத்தாழ 100 ஆண்டு காலம் தொழிலாளர்கள் போராடியதற்கு பிறகு இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்ததற்கு நான் வரவேற்கிறேன். ஆனால், அதே நேரத்தில், என்னென்ன நோக்கத்தோடு இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டு இருக்கிறதோ அந்த உண்மையான நன்மைகள் அவர்களுக்கு கிடைப்பதற்கு இந்தச் சட்டம் உதவாது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏன் என்றால் இந்தச் சட்டத்திலே முதல் ஷரத்திலே என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்றால் அதாவது 4-வது ஷரத்திலே 1-வது உப—ஷரத்திலே 50 தொழிலாளர்களுக்குமேல் 'not of a hazardous work' 50 தொழிலாளர்கள் வேலை செய்தால் தான் இந்தச் சட்டம் பொருந்தும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அரசுக்கு அதை குறைக்க 2 மாதம் நோட்டீஸ் கொடுக்கவேண்டும். அதற்கு குறைவான தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய ஸ்தாபனங்களுக்கும் பொருந்தும் உரிமை வழங்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் நன்கு அறிவேன். ஆனால் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள் என்னவென்றால் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை எல்லோருக்கும் பொருந்தும் வகையில்.........

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அசார்டுவஸ் நேச்சர் என்றால் தொழிலாளி இருந்தாலும் உண்டு. எது எது அசார்டுவஸ் நேச்சர் என்பதற்கு பட்டியல் கொடுத்து இருக்கிறோம். அசார்டுவஸ் நேச்சர் இல்லாததற்கு 50-க்கு மேல் என்று இருக்கிறது. ஆனால் அரசு அதை 20 ஆகவும், 10 ஆகவும் குறைத்து அறிக்கை விடுவதற்கு முடிவு எடுத்து இருக்கிறது. பின்னர் 20, 10 என்பது பற்றி அறிக்கை கொடுக்கப்படும் என்பதையும் நான் உறுதி மொழியாக கொடுத்து இருக்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை அமைச்சர் அவர்கள் சட்டஷரத்தாகவே கொடுத்து இருக்கலாம் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.





மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த மாதிரி குறைப்பதற்கு ஆக்ட்டில் புரவிஷன் இருக்கிற காரணத்தினால் இந்த ஆக்ட்டை இம்பிளிமெண்ட் பண்ணும்போது அதையும் சேர்த்து இம்பிளிமெண்ட் செய்வோம்.

The words ' This will apply to ' will be added.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரை நீண்ட நாள் தொழிலாளர்களால் நடத்தப்பட்ட போராட்டத்திற்கு பிறகு கொண்டு வரப்பட்டு இருக்கக்கூடிய சட்டம் என்ற முறையில் அனைத்து தொழிலாளர்களுக்கும் இதனுடைய நன்மை கிடைக்கக் கூடிய முறையில் இந்தச் சட்டம் அமைய வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல் 20 தொழிலாளர்கள் அல்லது 10 தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய இடங்களில் இதைப்பொருத்துவதற்கு அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் சென்ற கால அனுபவம் என்ன என்றால் சில சட்டங்களைப் பொறுத்தவரை இப்படிப்பட்ட அதிகாரங்கள் இருந்தது. உதாரணமாக ஹேண்டுலூம் ஒர்க்கர்ஸ் சம்பந்தமாக போடப்பட்டு இருக்கக்கூடிய சட்டத்திலே இப்படிப்பட்ட பல ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டு இன்று அந்தச் சட்டத்தினால் அந்த கை நெசவுத் தொழிலாளர்களுக்கு எந்த நன்மையும் கிடைக்க முடியாத அளவுக்கு இன்று விஷயங்கள் சென்று இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே இப்படிப்பட்ட வரம்புகளை வைத்துக் கொள்வதற்கு பதிலாக அனைத்து தொழிலாளர்களுக்கும் இது பொருந்தும் என்ற முறையில் ஷரத்தை சேர்ப்பதுதான் உசிதமாக இருக்கும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. இந்த தொழிலில் அதிகமான அளவில் வேலை செய்யக்கூடியவர்கள் பெண்கள் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நாடும் நன்கு அறியும். ஆகவே இப்படிப்பட்ட சட்டத்தினுடைய நன்மை அந்தப்பெண் தொழிலாளர்களுக்கு கிடைக்கும் வகையில், எண்ணிக்கை என்ற வித்தியாசம் இல்லாமல் எல்லோருக்கும் பொருந்தும் அளவில் இந்தச்சட்டத்தில் ஷரத்துக்கள் திருத்தப்பட வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

அதேபோல் இன்னொரு பக்கத்தில் பார்த்தால் எல்லாவிதமான பில்டிங் கன்ஸ்ட்ரக்ஷன், இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஷன்களிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு இது கிடைக்கப்பட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல் not of a hazardous work. இப்படிப்பட்ட ஒரு விதிவிலக்கு தேவையா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் இன்னொரு பிரச்சினை என்ன என்றால் கவர்ன்மெண்டு ஆப் இந்தியாவினுடைய எஸ்டாபிளிஷ்மெண்ட்டுகளில் வேலை செய்யக்கூடியவர்கள், அதேபோல் ரெயில்வேயில் வேலை

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1984 அக்டோபர் 9

செய்யக்கூடியவர்கள், மைன்ஸ்லே வேலை செய்யக்கூடியவர்கள்,
சென்ட்ரல் கவர்ண்மெண்டு கண்ட்ரோலில் இருக்கக்கூடிய
கார்ப்பரேஷன்களில் வேலை செய்யக்கூடியவர்கள் இப்படிப்பட்ட
தொழிலாளர்களுக்கு இதிலிருந்து விதி விலக்கு கொடுக்கப்பட்டு
இருக்கிறது. அதிலே அமெண்ட்மெண்ட் என்ற முறையில் கொடுக்
கப்பட்டிருக்கிறது.'' Or pertaining to any such controlled industry
as specified under the First Schedule to the Industries (Development
and Regulation) Act. 1951 (Central Act. LXV of 1951) க்குத்தான்
அமெண்ட்மெண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதி உள்ள
வற்றைப் பொறுத்த வரையில் இப்படிப்பட்ட வரம்புக்
குள்ளே, சட்டத்திற்குள்ளே கொண்டு வருவதற்கு நடவடிக்கை
எடுக்க வேண்டும்.

இன்னொரு பிரச்சினை என்னவென்றால், இந்தச் சட்டத்தைப்
பொறுத்த வரையில் பிறகு வரும் சில யிடங்களிலேயே விதி விலக்கு
கொடுக்கப்பட்டிருக்கிறது.

For example, Section (b) does not include building construction
or work of engineering construction carried on......

என்றெல்லாம் விதி விலக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.
ஆகவே, இப்படிப்பட்ட விதி விலக்குகளைக் கொடுக்க வேண்டுமா
என்பதைப் பற்றி யோசிக்க வேண்டுமென்றும், கூடிய அளவிற்கு
இப்படிப்பட்ட எக்செம்ஷன்களைக் குறைத்துக் கொண்டு வரு
வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவன்போடு
கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு பிரச்சினை என்னவென்றால், ஆப்பரேட்டர்களை
யும், கட்டாயம் ரெஜிஸ்தர் செய்ய ஏற்பாடு செய்ய வேண்
டும். அமைச்சரவர்களால் நேற்று கொடுக்கப்பட்டிருக்கின்ற
திருத்தத்திலே ரெஜிஸ்ட்ரேஷன் சம்பந்தமான சில ஷரத்துக்கள்
இருக்கின்றன. ஆனாலும், அதைப் பொறுத்தவரையில் அதைக்
கட்டாயப்படுத்தும் அளவிற்கு இருக்க வேண்டுமென்று தாழ்மை
யாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அட்வைசரி போர்டு என்ற அமைப்புக்கு இடம் கொடுக்கப்
பட்டிருக்கிறது. வெறும் ஒரு அட்வைசரி நேச்சர் என்பதற்குப்
பதிலாக கொஞ்சம் ஸ்டேச்சுடரி பவரைக் கொடுக்கின்ற அளவிற்கு
அதாவது தொழிலாளர் சம்பந்தமான சில முடிவுகளை எடுப்பதற்
கும் உரிமை உள்ள ஒரு போர்டாக அந்த போர்டை மாற்றுவது
தேவை என்பதையும், அந்த போர்டிலே கட்டாயமாக இந்த
பில்டிங் ஒர்க்கர்சுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும்
என்றும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.



1984 அக்டோபர் 9] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

கேண்டீனைப் பொறுத்தவரையில், 'மே' என்ற வார்த்தை
தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது, கேண்டீன்
வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம் என்ற முறையிலே
அதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. அது சரியல்ல. 'It should
be a must' என்ற முறையிலே அனைத்து காண்ட்ராக்டர்களும்,
அனைத்து எஸ்டாபிலிஷ்மெண்டுகளுக்கும் கேண்டீன் வசதி செய்து
கொடுக்கத் தகுந்த அளவிற்கு சட்டத்திலே மாற்றம் கொண்டு
வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ''residence of the
members of his 'family'" என்ற முறையிலே விதி விலக்கு கொடுக்
கப்பட்டிருக்கிறது. அதாவது குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு,
அவர்களுடைய தேவைக்காக வீடுகள் கட்டப்பட்டால் இந்தச்
சட்டத்திலே இருந்து விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.
அதிலேயும்கூட எத்தனை தொழிலாளர்களை வைத்து வேலை
செய்வது, எந்தெந்த முறையிலே உள்ள கட்டிடங்கள் என்பது
பற்றியும் தெளிவாக இல்லை. சொந்தத்திற்கு அவசியம் என்று
பெரிய மாளிகை வைத்துக்கொள்ள..................

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத்
துணைத் தலைவரவர்களே, அந்த விதி விலக்கை எடுத்து, அதற்
குப் பதிலாக வேறு அமெண்ட்மெண்ட் இருக்கிறது. அதைப்
படித்துப் பார்க்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். கிளாஸ் 39

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: அமைச்சரவர்களால் கொடுக்கப்
பட்டிருக்கும் திருத்தம்,

'Subject to such restriction and conditions as may
be prescribed, the Government may, by notification, declare
that nothing contained in this Act shall apply to any work of
building construction carried on by any person for the purpose of
his residence or for the residence of the members of his family.,
அதாவது, அரசுக்கு நோட்டிபிகேஷன் மூலம் அதிலே நடவடிக்கை
எடுப்பதற்கு உள்ள உரிமைதான் வாங்கப்பட்டிருக்கிறது. நான்
கேட்பது என்னவென்றால், அதைவிடத் தெளிவாக ஒரு குறிப்
பிட்ட அளவிற்கு, அதாவது ஒரு இலட்சம் அல்லது இரண்டு
இலட்சம் ரூபாய் விலை மதிப்புள்ள கட்டிடங்களுக்கு மட்டும்தான்
இம்மாதிரி உள்ள விதிவிலக்கு கொடுக்க வேண்டுமே தவிர,
அதற்கும் மேலே விலை மதிப்புள்ள கட்டிடங்களைக் கட்டிவிட்
டால் அதில் எந்த அளவிற்குத் தொழிலாளர்கள் பயன்படுத்தப்
படுகிறார்கள் என்பதையெல்லாம் கவனித்து, அப்படிப்பட்ட கட்
டிடங்களில் வேலையில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கும் இந்தச்
சட்டத்தின் பாதுகாப்புத் தன்மை இடைப்பதற்கான ஏற்பாட்
டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அமைச்சரவர்களால் சில நல்ல நோக்கத்தோடு ஒரு சில
ஷரத்துக்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அதாவது, காலை
ஏழு மணிக்கு முன்னாலேயும், மாலை ஆறு மணிக்குப் பிறகும்
பெண்களை வைத்து வேலை செய்யக்கூடாது என்ற ஒரு ஷரத்து
பெண்களின் பாதுகாப்பிற்கு அப்படிச்
சேர்க்கப்பட்டிருக்கிறது.

பட்ட ஷரத்துக்கள் தேவைதான் என்றாலும் நடைமுறையிலே ஒருசில பிரச்னைகள் ஏற்படுவதற்கு அது காரணமாக இருக்கலாம் என்று அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்கள் சொல்கிறார்கள்.

(பிற்பகல் 12-50)

. உதாரணமாக அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், கான்க்ரீட் தொழில் போன்ற வேலைகளைச் செய்யும்போது தொடர்ச்சியாகச் செய்யப்படவேண்டிய வேலையாக அவை இருப்பதன் காரணத்தால் 6 மணிக்குப் பிறகு வேலை செய்யக் கூடாது; பெண்கள் வேலை செய்யக்கூடாது என்ற நிலைமை வந்தால் பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதில் சில பிரச்சினைகளை ஏற்படுத்துவதாக அது ஆகிவிடும் என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே பல தொழில்களில் பெண்களுக்கு வேலைவாய்ப்பு என்பது குறைந்து கொண்டு வருவதற்கான ஒரு டென்டென்சி இருக்கக்கூடிய நேரத்திலே மேலும் இப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்குவதற்கு இந்தச் சட்டத்தைக் கான்ட்ராக்டர் உபயோகப்படுத்த முடியாத அளவுக்கு இதனைச் சரிப்படுத்த வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் அமல்படுத்தும்போது நிச்சயமாக பெண்களுடைய, குழந்தைகளுடைய வேலை வாய்ப்பு பாதிக்கப்படக்கூடிய அளவுக்கு நிலைமைகள் ஏற்படாமல் பாதுகாப்பதற்குரிய வழிகளை அரசு கவனிக்க வேண்டும் என்று வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன்.

இன்சூரன்ஸைப் பொறுத்தவரையில் 41-வது ஷரத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது இன்சூரன்ஸ் ஆப் ஒர்க்கர்ஸ் என்பதிலே Insurance of workers "The Government may, by notification direct that every employer shall take out an insurance policy in respect of all or any such classes of the workers" என்ற முறையிலே போடப்பட்டிருக்கின்றது. அதிலே அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் சில ஆப்பரேட்டர்ஸை இவ்வாறு செய்யவேண்டும் என்று சொல்ல முடியாத நிலைமையில், சில ஆப்பரேட்டர்ஸ்-ஐ அவ்வாறு கொண்டு வராமல் இருப்பதற்காக உள்ள நிலைமை இதிலே கொடுக்கப்பட்டிருக்கின்றது. 'may' by notification, direct that every employer shall take out an insurance policy in respect of all such classes என்று அமைக்கவேண்டும். இன்சூரன்ஸ் என்பது அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களின் கட்டாயமான தேவை என்ற முறையில் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய முறையில் இன்சூரன்ஸை அமல் படுத்துகின்ற நிலைமையில் இருக்கவேண்டும். ஹெல்த், ஆக்ஸிடென்ட் போன்றவைகளில் அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு கொடுக்கக் கூடிய அளவுக்கு இன்சூரன்ஸை அந்தத் துறையில் கம்பல்சரியாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து நேஷனல் ஹாலிடேஸ் இந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய முறையில் திருத்தம் கொண்டுவரவேண்டும் என்று அமைச்சர் அவர்களே சொன்னார்கள் அவ்வாறு திருத்தம் கொண்டுவருவேன் என்று அவர்கள் சொன்னதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு பணிவான வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்கிறேன். லேபர் வெல்ஃபேர் பண்ட் கான்ஸ்டிட்யூட் பண்ணுவதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, லேபர் வெல்ஃபேர் பண்ட் ஆக்டிலே நோட்டிஃபை பண்ணுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனவே அதைப் பற்றி அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் லேபர் வெல்ஃபர் பண்ட் ஆக்டிலே இந்தத் தொழிலாளர்களுக்கு பலன் ஏற்படக்கூடிய முறையில் திருத்தம் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொல்லியிருப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மொத்தத்தில் என்ன சொல்கிறேன் என்றால், இந்தச் சட்டத்தை செலக்ட் கமிட்டிக்கு விடாமல் நிறைவேற்றித் தரவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் ஏற்கனவே நான் சொன்ன சில காரணங்களினால் இந்தச் சட்டத்தை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலைமை இருக்கின்றது. எனவே இதனை அபிவிருத்தி செய்யவேண்டிய தேவை இருக்கின்றது என்பது தொழிலாளர்களுடைய எண்ணமும், வேண்டுகோளும் ஆகும். அந்தத் தொழிலாளர்கள் அமைச்சர் அவர்களைச் சந்தித்து இது சம்பந்தமான கருத்துக்களைத் தெரிவித்ததாக நான் கேள்விப்பட்டேன். மேலும் சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக இருந்த திரு. வி. ஆர். கிருஷ்ணய்யர் அவர்கள்கூட இதுசம்பந்தமாக சில மாறுதல்களை இந்தச் சட்டத்திலே ஏற்படுத்தவேண்டும் என்று சொல்லி அமைச்சர் அவர்களுக்கு எழுதி இருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஆகவே, இப்படிப்பட்ட சில காரணங்களினாலே தாங்கள் இந்தச் சட்டத்தை மேலும் தொழிலாளர்களுக்கு நல்ல முறையில் நன்மைகளைக் கொடுக்கக்கூடிய அளவுக்கு இந்தச் சட்டத்திலே சில மாறுதல்களை ஏற்படுத்துவதற்கு இதனை செலக்ட் கமிட்டிக்கு விடுவது உதவிகரமாக இருக்கும் என்ற காரணத்தால்தான் நாங்கள் செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அவ்வாறு செலக்ட் கமிட்டிக்கு விட்டு மேலும் சிறப்பான முறையில் இந்தச் சட்டத்தை அமைத்துக் கொள்வதற்குரிய வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்டத்தை செலக்ட்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1984 அக்டோபர் 9

கமிட்டிக்கு விடுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும் என்று கேட்டு, என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்து அமர் கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்தக் கட்டி டத் தொழிலாளர் பாதுகாப்புச் சட்ட விவாதத்தில் கலந்து கொள்ள வாய்ப்பு அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். கட்டிடத் தொழிலாளர் களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று சென்னை நக ரத்திலே எங்கு பார்த்தாலும் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் அமைச்சர்களைச் சந்தித்தல் போன்ற காட்சிகளை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தோம். நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் அதிலே அக்கறை எடுத்துக் கொண்டு கிட்டத்தட்ட ஓராண்டுக்காலமாக ஒரு பெரிய சட்டத்தைக் கொண்டு வரப்போகிறோம் என்று காலம் கடத்திக் கொண்டே வந்து கடைசியாக இப்பொழுது வந்திருக்கிற சட்டத்தைப் பார்த்தால் ஏதோ மலையைக் கிள்ளி எலியைப் பிடித்தார்கள் என்று சொல்வதுபோல் எல்லோருக்கும் ஒரு பெரிய எதிர் பார்ப்பு, எக்ஸ்பெக்டேஷன்ஸ், இவைகளை வைத்துவிட்டு, கடைசி யிலே கொண்டு வந்திருக்கிற சட்டத்தைப் பார்த்தால், எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது. ஏதோ கட்டிடத் தொழி லாளர்கள் என்று சொன்னால், அமைச்சர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், ரிஜிஸ்டர்ட் கான்ட்ராக்டர்ஸ், அதா வது, மத்திய அரசு, மாநில அரசு, ஸ்டேட் ஹவுசிங் போர்ட் அல்லது பிரைவேட் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியில் உள்ள ரிஜிஸ் டர்ட் கான்ட்ராக்டர்ஸ், இலட்சக்கணக்கான ரூபாய்கள் முதலீடு போட்டு வேலை எடுத்து செய்கிறவர்களிடம் உள்ள கொத்த னார்கள், அல்லது இவர்களைப்போன்ற தொழிலாளர்கள் என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், நாமும் நினைத் துக் கொண்டிருக்கிறோம். தினம் தினம் சென்னை நகரத்தில் வந்து பார்க்கிற நேரத்தில், முன்பெல்லாம் படிப்பு ஏறாமல் போனால் மாடு மேய்க்கப் போ, அல்லது ஆடு மேய்க்கப் போ என்று சொல்வார்கள். ஆனால், இப்பொழுதெல்லாம் படிப்பு ஏறாமல் போனால், ஆண்களாக இருந்தால் பெரியாள் வேலைக் குப்போ என்றும் பெண்களாக இருந்தால் சித்தாள் வேலைக் குப்போ என்றும் சொல்லக்கூடிய நிலைதான் இருந்து கொண் டிருக்கிறது. நான் கூட நினைத்தேன், நம்முடைய மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் தொழிலாளர் மேல் அக்கறை உள்ள வர், ஆர்கனைஸ்ட் செக்டாரில் உள்ள, ரெயில்வே தொழிலாளர் கள், தொழிற்சாலைத் தொழிலாளர்கள், ஆலைத் தொழி லாளர்கள், இவர்களுக்கெல்லாம் பாதுகாப்பு இருக்கிறது. ஆனால் அன்னார்கனைஸ்ட் செக்டாரில் இருக்கிற, வேலை யில் உத்தரவாதம் இல்லாத, அன்றாடம் காய்ச்சிகளாக இருக் கிற தொழிலாளர்கள், அதுவும் குறிப்பாக, கட்டிடத் தொழி லாளர்களுக்கு ஏதாவது பாதுகாப்பு கொடுப்பார் என்று எதிர்



1984 அக்டோபர் 9] [டாக்டர் கே. சௌரிராஜன்]

பார்த்து, கடைசியில் ஏமாற்றம்தான் அடைந்திருக்கிறோம் என்று வருத்தத்துடன் சொல்லிக்கொள்கிறேன். வேண்டுமென் றால் அவர்கள் சொல்வது போல் கேனன் டங்கர்லீ அன்ட் கம்பெனி என்று அந்தக் காலத்தில் இருந்தது. அதுபோல் இப்பொழுது பல கம்பெனிகள் இருக்கின்றன. அந்தக் கம்பெனி களிலே 50 பேர்கள், 60 பேர்கள் நிரந்தரமாக வேலை செய் வார்கள்; அப்படி வேலை செய்பவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க முடியும். How many p rson; ar you going to cov r und r thir Bill-it is no: knowr. The Bill is not at :ll wor.hy of int.oduc ion. in this Ass mbly. எத்தனை பேர்களை நீங்கள் இந்தச் சட்டத்தின் மூலமாக பாதுகாக்கி றீர்களா? How many p rsons are you going to cov r? என்பதைச் சிந்தித்துப் பார்ப்பீர்களானால் அதற்கு இவ்வளவு காலதாமதம் தேவையா, இப்படி ஒரு சட்டம் தேவையா என்று கூட நான் நினைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கார ணம் என்னவென்றால் இதன் மூலமாகப் பயன் அடையப் போகிறவர்கள் யார் என்றால், தனிப்பட்ட கான்ட்ராக்டர் கள் இருக்கிறார்களே, அவர்கள் நம்மைவிட மிகச் சிறந்த அறிவாளிகள். 50 பேர்கள் வேலை செய்தால் நாங்கள் உள்ளே நுழைவோம் என்று சொன்னால் அவர்கள் 49 பேர்களை தினம் தினம் புதிது புதிதாக வைத்துக்கொண்டிருப்பார்களே ஒழிய நிரந் தரமாக 50 பேர்கள் வேலை செய்யக் கூடிய ஒரு எஸ்டாபிளிஷ் மென்டைக்கூட நம்மால் கண்டு பிடிக்க முடியாது. கடைசி யாக இதிலே லாபம் அடைபவர்கள் யார் என்றால், லேபர் இன்ஸ்பெக்டர்கள் என்று சொல்லப்படுகிற இன்ஸ்பெக்டிங் ஆபீசர்கள் அங்கங்கே உள்ள கம்பெனிகளுக்குப் போய், கான்ட் ராக்டர்களைப் பார்த்து, தங்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொள்ள இன்னொரு வாய்ப்பு கிடைக்குமேயொழிய உள்ளபடியே கட்டிடம் கட்டுகிற தொழிலாளி, அந்தத் தொழி லிலே ஈடுபட்டிருக்கிற பெரியாளும் சித்தாளும், பிட்டரும் பெயின்டரும், கான்கிரீட் போடுகின்றவரும் ஆகிய இந்தச் சாதாரணத் தொழிலாளிகள் நன்மை அடையப் போகிறார் களா என்று பார்த்தால் நிச்சயமாக ஒரு பைசாவுக்குக் கூட அவர்களுக்குப் பிரயோசனப்படாது என்பதை இந்த நேரத் திலே நான் தாழ்மையுடன் சொல்லிக் கொள்ள கடமைப்பட் டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

குறிப்பாக, என்னுடைய தியாகராய நகர் பகுதியிலே வந்து பாருங்கள். 8 மணி அடித்தால் மாம்பலம் பஸ் ஸ்டாண் டிலே எத்தனை கொத்தனார்கள், எத்தனை சித்தாள்கள், எத்தனை பெரியாட்கள் வேலை இல்லாமல் அமர்ந்து கொண் டிருக்கிறார்கள் என்பது தெரிய வரும்.

இன்னும் இதில் சொல்கிறார்கள், தனிப்பட்ட சில கட்டிடங் களிலே, அவர்கள் தங்களுடைய உபயோகத்திற்காக, சொந்த உபயோகத்திற்காக என்றால், அவர்களுக்கு இதிலேயிருந்து

விதிவிலக்கு, என்று. ஆகவே, நிச்சயமாக இதிலே என்ன
புரிகிறது? நீங்கள் நிச்சயமாகக் கட்டிடத் தொழிலிலே ஈடு
பட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய வரவில்லை
..............................

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்
களே, அந்த விதிவிலக்குகளுக்கு ஒரு அமென்மெண்ட் கொடுத்
திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் படித்துப்
பார்க்க வேண்டுமன்று கேட்டுக்கொள்கிறேன். முன்பு இருந்
தது பிளாங்கட், அதாவது தனியார் வீடு கட்டினால் பொருந்
தாது. அந்த அளவில் முதலில் சட்டம் அறிமுகம் செய்யும்
போது இருந்தது. இன்றைக்கு இந்தக் கால ஓட்டத்தில் பரி
சிலனை செய்து ஒரு எக்ஸ்க்ளனேஷன் கொடுக்கப்பட்டிருக்
கிறது. என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : அமைச்சர் அவர்களின்
விளக்கத்திற்கு நன்றி. அந்த அமென்ட்மெண்டை படித்திருக்
கிறேன். ஆனால் நடைமுறையில் இருப்பதை. ஒரு சிறிய
நிகழ்ச்சியை சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு தொழிலா
ளர் நல அமைச்சர் அவர்கள் சட்டம் நன்றாகத் தெரிந்தவர்.
லேபர் டிஸ்பியூட்ஸ் ஜட்ஜ்மென்ட்களை நன்றாக கரைத்துக்
குடித்தவர். ஒரு தனி மனிதன் 4, 5 கொலுத்துக்காரர்களை;
10 சித்தாள்களை வைத்துக்கொண்டு தன்னுடைய கட்டிடத்தை
கட்டிக்கொண்டிருக்கிறான் என்றால், அந்தக் கட்டிட வேலை
யில் ஏதாவது பழுது ஏற்பட்டு இடிந்து விழுந்தால், அல்லது
வேலை செய்து கொண்டிருக்கும்போது மேலேயிருந்து கீழே
விழுந்து அடிப்பட்டால் என்ன நடக்கிறது? எனக்கு தெரிந்த
ஒரு நிகழ்ச்சி. ஒருவன் கீழே விழுந்து இடுப்பு எலும்பு உடைந்து
விட்டது, ஸ்பைனல் கார்டு பாதிக்கப்பட்டு இரண்டு கால்களையும்
இழந்து 6, 7 ஆண்டுகளாக கோர்ட்டிற்கு சென்று கொண்டிருக்
கிறான். சட்டத்திற்கு முன்னால் செல்கிறபோது என்ன
சொல்கிறார்கள் தெரியுமா? வீட்டுக்காரர் அதற்கு பொறுப்
பாளி இல்லை. Th job was entrusted to an ind p nd nt contractor,
ஆகவே அவரிடத்திலே நஷ்டயீடு கேட்க வேண்டுமென்று
சொல்லப்படுகிறது. அந்த காண்ட்ராக்டருக்கு இருக்கிற மேஸ்
திரி அவரும் ஒரு அன்றாடம் காய்ச்சியாக இருந்துவிட்டால்
அவனுக்கு அதன்மூலமாக என்ன பயன் கிடைக்கும் என்பதை
நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு
மாற்றுத் தலைவர் அவர்களே, இதிலே "பிரின்சிபல் எம்ப்
ளாயர்", "காண்ட்ராக்டர்" என்பதற்கு விளக்கங்கள் கொடுக்
கப்பட்டிருக்கின்றன. காண்ட்ராக்டர் கொடுக்கவில்லை என்றாலும்
அவரையும் இம்ப்ளீட் செய்து பிரின்சிபல் எம்ப்ளாயரிடமிருந்து





வாங்க முடியும். அந்தப் பணம் வாங்குவதற்குத்தான் ஒர்க்
மென் காம்பன்சேஷன் ஆக்ட் இந்தச் சட்டத்திற்குப் பொருந்
தும் என்று சொல்லி இருக்கிறேன். அதிலே சொல்லி இருப்பது
குறைந்தபட்சம், இறந்து போனால் வயதிற்கு தகுந்தாற் போல
வருகிறது ; பட்டியலே என்னிடத்திலே இருக்கிறது ; அதை
இப்போது படிப்பதற்கு நேரமில்லை. குறைந்தபட்சம் 20
ஆயிரம் ரூபாய் கிடைக்கும். பர்மனென்ட் டிசெபிளிட்டி என்
றால்—அது மத்திய அரசு கொண்டு வந்த சட்டம்—24 ஆயிரம்
ரூபாய் கிடைக்கும். தோழர்கள் கேட்பது 10 ஆயிரம் ரூபாய்
தான். ஆகவே அது நிச்சயம் கிடைக்கும், அதற்கு வழி
வகைச் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாற்றுத் தலைவர் அவர்களே,
இந்த ஷரத்துக்கள் எல்லாம் இருக்கின்றன என்று சொன்னாலும்,
அவற்றினால் தனிப்பட்ட சிலரைத்தனியாக வைத்து வேலை
வாங்குகிற நேரத்தில் இந்தச் சட்டம் அவர்களுக்கு செல்லுபடி
யாகிற நிலைமையில் இல்லை என்பதை எடுத்துச் சொல்லி,
அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று எடுத்துச் சொல்லி
இந்த நேரத்தில் என்னுடைய யோசனையாக ஒன்றைச் சொல்ல
விரும்புகிறேன். கட்டிடத் தொழிலில் ஈடுபடுகிறவர்களில்
கொத்தனார்களைத் தவிர மற்றவர்கள் அதிலே நிரந்தரமாக
இருப்பதில்லை. இன்றைக்கு ஒரு கட்டிடத்திலே பெரியாளாக,
சித்தாளாக வேலை செய்பவர் நல்ல வேலை கிடைத்த உடன்
அந்தத் தொழிலுக்குப் போய் விடுவான். It is a floating type of
labour, அதாவது எந்த வேலையும் கிடைக்கவில்லை என்றால் மண்
வெட்டி எடுத்து கொத்துவது, காங்கிரீட் கலப்பது, மண் வெட்டி
போடுவது, கல் எடுத்துக் கொடுப்பது போன்ற வேலைகளை
செய்து கொண்டிருக்கிறார்கள். ஆக இப்படிப்பட்ட வேலைகளை
செய்து தன்னுடைய வயிற்றை கழுவிக் கொள்ளும் தொழி
லாளர்களுக்கு எந்த விதத்தில் பாதுகாப்பு கொடுக்க முடியும்
என்று சிந்தித்துப் பார்க்கிற நேரத்திலே, என்னுடைய தாழ்மை
யான கருத்து, It is not regular employment for many persons as a
routine profession. எனவே அனைவரையும் கவர் செய்கிற
அளவிற்கு whoever wants to be an employee of construction
work, he must first register with Government of Tamil Nadu
that he is a registered building construction worker. ஒரு
சிறிய தொகையை அரசாங்கத்திற்குச் செலுத்தி, தான்
கட்டிடத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர் என்பதற்கு ஒரு அடை
யாள அட்டையைப் பெற்று, நாம் அதையே அவனுக்கு பாது
காப்பாக, இன்ஷூரன்சாக செய்வோமேயானால், அவன்
எங்கே வேலை செய்தாலும், வேலை செய்யும் நேரத்தில் அடி
பட்டாலோ அல்லது மரணம் அடைய நேரிட்டாலோ அவனுக்கும்,
அவன் குடும்பத்தாருக்கும் பாதுகாப்பாக இருக்க முடியும்.
ஆகவே அதிலே இருக்கிற ஓட்டைகளை அடைத்து எல்லா
ஒர்க்கிங் கிளாசையும் கவர் செய்கிற அளவிற்கு, இன்னும்

அதிகமான அளவிற்கு சிந்தித்து விரிவாக்கம் செய்தால் நன்றாக இருக்கும். At present there is no separate legislation to safeguard the interests of the workers engaged in building and construction works in regard to their wages, health and safety and other working conditions.... என்று சொல்கிறார்கள். இந்த லெஜிஸ்லேஷனுடைய எல்லா நோக்கங்களும் நிறைவேற வேண்டு மானால் ஒரு செலக்ட் கமிட்டியின் மூலமாகவோ, அல்லது மற்ற வர்களை கலந்து ஆலோசித்தோ A compreshensive legislation to cover all the sections of the population of the working class. கொண்டு வரவேண்டுமென்பதை எடுத்துச் சொல்லி, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

* திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு மாற்றுந் தலைவர் அவர்களே, வெய்யிலிலே, மழையிலே, காற்றிலே, குளிரிலே, மக்கள் அவதிப்படக் கூடாது என்பதற்காக உறை விடங்களையும் பல கட்டிடங்களையும் கட்டித் தரும் அந்தத் தொழிலாளர்கள் வாழ்விலே, வேலை நிச்சயமில்லை, வாழ்வு நிச்சயமல்ல என்கிற மிக மோசமான நிலைமை இருக்கிறது. இவைகளை முறைப்படுத்த வேண்டும். அவர்களுக்கு ஊதியம், உடல் நலம் மற்றும் நல்வாழ்வு ஆகியவைகளை எல்லாம் அளிக்க வேண்டும் என்ற தன்மையில் இந்தச் சட்டத்தின் நோக்கம் அமைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும இந்தச் சட்ட முன்வடிவை ஆய்வுக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று வற்புறுத்திச் சொன்னார்கள். அமைச்சர் அவர்களும் இதை கவனித்து இருப்பார்கள் என்று கருதுகிறேன். நானும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அந்தக் கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, இந்தச் சட்டத்திலே இருக்கிற பல்வேறு ஓட்டை களையும், முறைகேடுகளையும், சரியில்லாத தன்மைகளையும் இங்கே எடுத்து வைத்து விவாதிப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இந்தச் சட்டத்திலே யார் கட்டிடத் தொழிலாளர் கள், யார் யாருக்கு இந்தச் சட்டம் பொருந்தும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதை ஊன்றிப் பார்த்தால் இந்தச் சட்டப்படி உண்மையான கட்டிடத் தொழிலாளிக்கு இந்தப் பலன் போய்ச் சேராது.

எங்களைப் பொறுத்த வரையில் கட்டிடத் தொழிலாளி என்று சொன்னால், காலை 6 மணி முதல் 8 மணி வரையில் ஒவ்வொரு நாளும் தன்னுடைய உடல் உழைப்பை விற்பதற்காக நகர மையங்களில் ஏங்கிக் காத்துக் கிடக்கும் இலட்சக் கணக்கான மக்கள் தான் என்பதாகும்.





ஆனால், இந்தச் சட்டத்தின் 1-வது பிரிவில் என்ன சொல்லப் பட்டிருக்கிறது என்றால், 50-க்கும் குறைவாகப் பணியாளர்கள் உள்ள நிறுவனத்திற்கு இந்தச் சட்டம் பொருந்தாது. அரசு அறிவிக்கை மூலம் இரண்டு மாத காலத்திற்குக் குறையாமல் முன் அறிவிப்புக் கொடுத்தபின் பொருந்தும்படி செய்யலாம் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இந்தப் பணியாளர்கள் நிறுவனங்களில் பணி செய்யக்கூடியவர்கள் அல்ல. அன்றாடம் ஒவ்வொரு வீட்டிற்கோ அல்லது யார் அழைக் கிறார்களோ அவர்கள் வீட்டுக்கோ சென்று தன்னுடைய உழைப்பை விற்று ஊதியம் பெறுகிறவர்கள். அந்தத் தொழி லாளிக்கு இந்தச் சட்டத்தைப் பொருந்துமாறு செய்யவேண்டும்.

கிருஷ்ணக் கோனாரின் பேரனாக இருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறாரே என்பது ஆச்சரியமாக இருக்கிறது.

ஒவ்வொரு பிரிவிலும் ஒரு ஓட்டை இருக்கிறது. இந்தச் சட்டத்தில் பிரிவு 2-லே அபாயகரமான பணிகள் என்று அட்ட வணையில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதன்படி பார்த் தால், 3 மீட்டருக்கும் அதிகமான உயரத்தில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டால்தான் அது அபாயகரமான பணி. அப்படியானால் இரண்டு மீட்டர் உயரத்தில் இருந்து பணி செய்கிறபோது ஏதாவது மரம் விழுந்து விபத்து ஏற்பட்டால் அது அபாயம் இல்லையா? இரண்டு மீட்டர் உயரத்தில் இருந்து கர்டர் விழுந்து விபத்து ஏற்பட்டால் அது அபாயம் இல்லையா? ஆழ்கிணறுகளில் தூர் எடுக்கும்போது, கிணற்றில் இருந்து கிளம் பும் விஷ வாயு காரணமாக ஆபத்து ஏற்பட்டு, சில நேரங்களில் தீயணைப்புப் படையினர் வந்துதான் அவர்களைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. அதுவெல்லாம் அபாயகரமான பணி இல்லையா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கிணறு தோண்டும் பணிகள், கிணற்றை அகழ்தல், அதிக ஆழத்தில் கடைகால் தோண்டுதல் போன்ற பணிகள் அபாயகரமான பணிகள் என்று சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைக் கூர்ந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. கு. பா. பழனியப்பன் : கிணறு தோண்டுவதைப் பற்றி நான் சொல்லவில்லை. கிணற்றில் சிமெண்ட் பூசுதல் மற்றும் பல வேலைகள் செய்கிறபோது தவறி விழுந்தால் அதனால் ஏற்படு கின்ற விபத்துகள் அபாயகரமான பணிகள் என்று சொல்லப் படவில்லை. இது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஆகவே, இப்படிப்பட்ட ஓட்டைகள் இதிலே இருக்கின்றன என்பது உங்களுக்கும் தெரியும். எனக்கும் தெரியும்.

[திரு. கு. பா. பழனியப்பன்] [1984 அக்டோபர் 9

அடுத்து பிரிவு 3லே என்ன சொல்கிறார்கள் என்றால், பல்வேறு பணிகளை தனிப் பணிகள் என்றும் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பணிகளை ஒரே பணி என்றும் அறிவிப்பதற்கான அதிகாரம் அரசுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல், பிரிவு 4-லே அதற்கு விலக்கு அளிப்பதற்கான அதிகாரமும் அரசுக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. இந்தப் பிரிவு முன்சொன்ன பிரிவை தூக்கி அடிப்பதாக இருக்கிறது. ஒரு நிறுவனத்தில் உள்ள பணிகள் தனித்தனிப் பகுதிகளாக கருதப் படவேண்டும் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பணிகளை ஒரே பணி என கருதப்படவேண்டும் என்று அரசாங்கம் நிர்ணயிக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. இது யாரை ஏமாற்றுகிற வேலை? அங்கே செய்யப்படுகிற பணிகள் ஒரே பணியா அல்லது தனித்தனி பணியா என்று அரசாங்கம் ஏன் நிர்ணயம் செய்யவேண்டும்? தனித்தனிப் பணி தான் என்றுகூறி சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ள வழி வகுக்காதா?

(பிற்பகல் 1-10)

அதைவிட கேவலமானது 4-வது பிரிவு. அது விதிவிலக்குப் பிரிவு. எதற்காக விதிவிலக்குத் தரவேண்டும்? யாருக்கு விதி விலக்குத் தரவேண்டும்? இதில் "அரசு அறிவிக்கை வெளியிட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படக்கூடிய பொதுவான அல்லது தனி ஆணைகள் மூலம் யாதொரு பணி, பணியாளர் அல்லது தொழில் நிறுவனம் அல்லது பணிவகை அல்லது பணியாளர் வகை அல்லது தொழில் நிறுவன வகை ஆகியவற்றிற்கு இச்சட்டத்தில் விதித்துறைகள் 26, 27(2) பிரிவுகள் நீங்கலாக மற்றும் அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள் ஆகியவற்றின் விதித்துறைகள் அனைத்திலிருந்து அல்லது ஏதாவது ஒன்றிலிருந்து அரசு பொருத்தமெனக் கருதக்கூடிய, கால அளவிற்கும் நிபந்தனைகள் வரையறைகளுக்கும் உட்பட்டு விலக்களிக்கலாம்" என்று இருக்கிறது. எதற்காக இது? ஏதாவது ஆபத்து ஏற்பட்டால், விபத்து ஏற்பட்ட பிறகு அதற்கு இந்தச் சட்டம் பொருந்தாது என்று விலக்களிப்பதற்கு. அதற்காக முன் கூட்டியே திட்டமிட்டு இப்படி தீட்டப்பட்டிருக்கிறது.

இன்னொரு வேடிக்கை என்னவென்றால் சிறப்பாக சிலருக்கு விலக்களிக்கலாம் என்று இருக்கிறது. ஸ்பெஷல் எக்சம்ஷன் யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம் அப்படி ஒரு பிரிவை வைத்திருக்கிறார்கள்.

அதன்பிறகு ஒரு பிரிவில் சொல்லியிருக்கிறார்கள். தொழிலை செய்கின்றவர்கள் பதிவு செய்துகொள்ளலாம். கான்ட்ராக்டர்கள் பதிவு செய்து கொள்ளலாம் என்று இருக்கிறது. ஆனால் பதிவு செய்துகொள்ள வேண்டியது கட்டாயம் இல்லை, பதிவு செய்யவில்லை என்றால் ஒன்றும் செய்யமாட்டார்களாம். அப்படியானால் பதிவு செய்யவேண்டிய அவசியம் ஒன்றும்



1984 அக்டோபர் 9] [திரு. கு. பா. பழனியப்பன்]

இல்லை. கட்டாயம் இல்லை என்று சொன்னால் யார் பதிவு செய்வார்கள்? யாரும் பதிவு செய்யமாட்டார்கள், அவர்களை எதுவும் செய்யமாட்டீர்கள். நீங்களே அதற்கு வழிவகுத்துக் கொடுத்திருக்கிறீர்கள்.

சற்று முன்னால் அமைச்சரவர்கள் குறுக்கிட்டு, எனக்கு ஒரு பதிலைச் சொன்னார்கள். பிரின்சிப்பல் எம்பிளாயர் என்று இருக்கிறார், எம்பிளாயர் என்று இருக்கிறார், கான்ட்ராக்டர் என்று இருக்கிறார் என்று சொன்னார்கள். Principal Employer includes Contractor, Contractor includes Employer, Employer includes sub-Contractor and sub-Contractor includes Maistry. ஆகையால் அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்கிறார்களா? பிரின் சிப்பல் எம்பிளாயர், எம்பிளாயர், கான்ட்ராக்டர், சப் கான்ட் ராக்டர் அவர்களோடு 5, 6 பேர்களை வைத்து தானும் வேலை செய்கின்ற கொத்தனார் அல்லது மேஸ்திரியும் ஒப்பாவாரா? வேலை செய்கிறவர், வேலை செய்து கொண்டே எப்படி சப் கான்ட்ராக்டர் ஆகமுடியும்? மேஸ்திரியாக இருப்பவர் கூட உங்களுடைய விளக்கத்தின்படி, துணை ஒப்பந்தக்காரன் என்றும், 'ஒப்பந்தக்காரர் என்றும், பிறகு தொழிலதிபர் என்றும் இருக்கிறது. இதை எல்லாம் தெரிந்துகொண்டிருக்கிற அமைச்சர் அவர்கள் தகுந்தமுறையிலே திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 3-வது, 4-வது அத்தியாயங்களிலே அந்தப் பணியாளர்களுடைய உடல் நலம், பாதுகாப்பு, வேலை நேரம் போன்றவைகளுக்கு விதி வகுக்கப்பட்டிருக்கிறது. அதிலே கூட 4-வது அத்தியாயத்தில் ஃபாக்டரி ஆக்டில் இருக்கிற பல்வேறு விதிகள் பொருந்தும் அளவுக்கு இருக்கிறது. அதைப்போன்று பல்வேறு விடுப்புகளுக்கு எல்லாம் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

நான் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம், ஏற்கெனவே ஆர்கனைஸ்ட் செக்டாரிலே இருக்கக்கூடிய பாக்டரிகளில் இப்படி பட்ட சட்டங்கள், விதிகள் இருந்தும் அங்கே அவை நடைமுறைப் படுத்தப்படாமல், ஏராளமான தொழிலாளர்கள் அவதிப்படுகிறார்கள். உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்றால் பாலக்கோடு பக்கத்தில் தும்மனஹள்ளி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் போராட்டம் நடத்தினார்கள். எதற்காகப் போராட்டம்? குடிநீர் இல்லை என்று கூட போராட்டம் நடத்தினார்கள்.

இப்படி ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகள் இருக்கும்போது நீங்கள் un-organised sector ஆக இருக்கக்கூடிய இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு எப்படி பாதுகாப்பு தரப் போகிறீர்கள்? இதை எல்லாம் ஏட்டிலே 'சர்க்கரை' என்று எழுதி வைத்துவிட்டு, அதை சாப்பிடு என்று சொன்னால் இது யாரை ஏமாற்றுகிற வேலை? அமுல்படுத்தாத நிறுவனங்களை

என்ன செய்யப்போகிறீர்கள் ? ஃபாக்டரியிலே என்றால் வழக்கு போடுவீர்கள்., வழக்கு போட்டால் என்ன செய்வார்கள்? கோர்ட்டுக்குப் போவார்கள். பத்து ரூபாய் அபராதம் கட்டிவிட்டு, வீட்டுக்குப் போய்விடுவார்கள். வேறு ஒன்றும் இல்லை; உங்களால் வேறு ஒன்றும் செய்ய முடியாது.

இன்னொரு முக்கியமான கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். கூலியோடு வேலைக்கு உறுதி என்று சொல்லியிருக்கிறீர்கள். இப்போது தொழிலாளர்கள் எப்படிப்பட்ட நிலைமையில் இருக்கிறார்கள் ? தினம் கூலி இல்லை, வேலை இல்லை. இவைகளுக்கு உறுதி இல்லை, ஆனால் நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ? ஊதியத்தோடு விடுமுறை கொடுக்கிறேன் என்கிறீர்கள். விடுமுறை நாளில் வேலை செய்தால் இரண்டு மடங்கு ஊதியம் என்கிறீர்கள். இதை எப்படி நிறைவேற்றப் போகிறீர்கள் ? இது யாரை ஏமாற்றுகிற வேலை ?

இன்னொன்று, 'கார்க்னிசன்ஸ்' இருக்கிறது. குற்றம் அல்லது தவறு நடக்கிறது என்றால் யார் நீதிமன்றத்திற்குப் போக முடியும் ? தனியாக யாரும் போய் காக்னிசன்ஸ் எடுத்துக் கொள்ள முடியாது. தனியாகப் போய் அதிகாரிகளிடம் சொல்ல முடியாது. ஆனால் இதிலே சொல்லப்பட்டிருக்கிற இன்ஸ்பெக்டர்தான் அதை எடுத்துக் கொள்ள முடியும். அவர் சொல்வதைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதுதான் கிளாஸ் 33-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னொரு அபாயகரமான பிரிவு இந்தச் சட்டத்திலே இருக்கிறது. (குறுக்கீடு) 34-வது பிரிவிலே இருக்கிற ஒரு வேடிக்கை என்னவென்றால், எனக்கு முன்னாலே பேசும்போது, தொழில் அதிபர்களுக்கு நாங்கள் தண்டனை கொடுப்போம்; தவறு செய்கிற தொழில் அதிபர்களுக்கு, நிறுவனங்களுக்கு நிச்சயமாக தண்டனை கொடுப்போம், அதற்கான சட்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். இதைவிட வேடிக்கை உலகத்தில் வேறு எங்கும் இருக்க முடியாது. தொழிலதிபர்மீது வழக்குப் போடுவார்கள். நீங்கள் தவறு செய்தீர்கள், முறைகேடு செய்தீர்கள், இன்னின்ன முறையில் செய்தது சரியில்லை, அதற்குத் தண்டனை என்று சொல்லிவிட்டால் அவர் அழகாகத் தப்பித்துக் கொள்ள முடியும். இப்படி சட்டத்திலேயா ஒரு ஓட்டை போடுவது ? தவறு செய்தார் என்று வழக்குத் தொடர்ந்தவுடனே குறிப்பிட்ட நபருக்கு நோட்டீஸ் அனுப்புவார்கள் 3 நாள் அவகாசம் கொடுத்து நான் செய்யவில்லை, இது எனக்குக் கீழே இருக்கிற ஒருவர் செய்துவிட்டார், ஆகையால் எனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று எழுதிக்கொடுப்பார். அவர் அப்படி எழுதிக் கொடுத்தவுடனே விசாரணை நடக்கும். விசாரணை நடந்தால், அந்த விசாரணையில் எதிர்த்துச் சொல்ல முடியும். யார் ? யாரை இவர் கூப்பிட்டு, இவன்தான் குற்றவாளி என்று எழுதிக் கொடுத்தாரோ, அவன் இவரை குறுக்கு விசாரணை செய்வார், ஆம். இது முதலாளிக்குத் தெரியாது.



நான் தான் இதற்குப் பொறுப்பு என்று சொல்வார். உடனே அந்த முதலாளியை இந்த வழக்கிலிருந்து விடுவித்துவிடுவார்களாம். அவருக்கு இதிலே தொடர்பு இல்லை என்று எழுதிவிடுவார்களாம். இப்படிப்பட்ட கேவலமான சட்டம் எந்தச் சட்டத்திலும் கூடாது. தனிப்பட்ட வகையில் இருக்கிற சட்டத்திற்கு முரணாக, இப்படியெல்லாம் தப்பித்து விடுவதற்காக வாய்ப்பு இந்தச் சட்டத்திலே இருக்கிறது. அமைச்சரவர்கள் இப்படிப்பட்ட ஆச்சரியமான சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

இந்தக் குற்றச்சாட்டிற்கு ஒரு காலவரையறை—3 மாத காலத்திற்குள் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கலாம். பிறகு சொன்னால் முடியாது. இதெல்லாம்கூட வேடிக்கையாக இருக்கிறது, முரண்பாடாக இருக்கிறது. பலன் கிடைப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அந்தப் பலனைத் தனிப்பட்ட முறையில் ஒப்பந்தம் மூலம் தீர்த்துக் கொள்ளக்கூடாது. ஆனால் 37-வது விதியின் முதல் பிரிவு இரண்டாவது பிரிவிற்கு நேர் மாறாக இருக்கிறது. அப்படிப்பட்ட முறையில் அதிக வசதி செய்து கொடுக்க ஒப்பந்தம் இருந்தால், அப்படிப்பட்ட ஒப்பந்தங்கள் செல்லும். முதல் பகுதி செல்லாது என்று சொல்லப்படுவது இரண்டாவது பகுதியில் செல்லும் என்று சொல்லப்படுகிறது. ஆயிரம் ரூபாய் காம்பன்சேஷன் கொடுக்கவேண்டுமென்று தீர்ப்பு வந்தால், தனிப்பட்ட முறையில் அக்ரிமெண்டு போட்டுக் கொண்டு, அதற்கு மேலே இருந்தால், ஒப்புக் கொள்ளலாம் என்றெல்லாம் பொருள் சொல்லப்படுகிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : விழுப்புரத்தில் நான் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தபோது அவர் அட்வகேட்டாக இருந்த ஞாபகம், மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடுமையான வார்த்தைகளை எல்லாம் உபயோகிக்கிறார்கள். நான் இந்தப் பிரிவைப் பற்றிச் சொல்கிறேன். மற்ற சட்டங்களில், மற்ற ஒப்பந்தங்களில், மற்ற தீர்ப்புகளில் என்ன இருந்தாலும், அதை விட இந்தச் சட்டம்தான் செல்லும் என்று சொல்லியாகிவிட்டது. அதற்குப் பிறகு, இந்தச் சட்டத்திற்கு மேல் அதிகமான பிரச்சினை தரக்கூடிய ஷரத்து இருந்தால் அது இருக்கும். மூன்றாவது இந்தச் சட்டத்திற்கு மேல் உரிமைகள் வழங்கும் முறை இருந்தால் அவர்கள் ஒப்பந்தம் செய்துக் கொள்ளலாம். உறுப்பினர் பேசும்போது கடுமையான வார்த்தைகளையெல்லாம் உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். நாங்கள் போட்டது அட்வான்டேஜ் டு தி ஒர்க்கர்ஸ்.

திரு. கு. பா. பழனியப்பன் : நீங்கள் எந்த வகையில் அது அட்வான்டேஜ் என்று கருதுகிறீர்களோ, அதே வகையில் அது டிஸ்-அட்வான்டேஜ்-ஆகப் போய்விடுகிறது. நான் அதைத் தான் விளக்கப்போகிறேன். சிரிக்காமல் கேளுங்கள், உதாரணமாக இரண்டாயிரம் ரூபாய் தரவேண்டுமென்று நீதிமன்றத் தீர்ப்பு வருகிறது. ஆனால் அந்த முதலாளி இரண்டாயிரம் ரூபாய் தர

வேண்டியதாக தீர்ப்பு வருகிறபோது, அதை விட் அதிகமாக தான் தருவதாகச் சொல்லி, ஒரு அக்ரிமெண்டு போட்டால், அவர்களிடத்திலே வேலை செய்ய வேண்டியிருப்பதால், நான் காயிரம் ரூபாய் பெற்றுக்கொண்டதாகச் சொல்லி வேலைக்கு உத்தரவாதம் வேண்டுமென்ற காரணத்திற்காக ஒத்துக்கொள்ள வேண்டும். எழுதிக்கொடுப்பதோடு சரி, குறைவாக இரண்டா யிரம் ரூபாய் நீதிமன்றத்தின் மூலம் வாங்குவதும் சரி 4,000 ரூபாய்க்கு எழுதி அவர்கள் நாக்கிலே ஒட்டிக்கொள்வதும் சரி. நீங்கள் நல்லெண்ணத்தோடு செய்திருக்கலாம். ஆனால் இவ்வளவு ஓட்டைகள் இருப்பதை கவனிக்கவேண்டும். 39 ஆவது பிரிவின்படி புதியதாக சேர்த்திருக்கிறார்கள். அதாவது சொந்தத்திற்கு வீடு கட்டுகிறார்கள், அவருடைய மகனுக்காவது, மகளுக்காவது, மனைவிக்காவது அல்லது தனக்காவது வீடு கட்டு கிறான், என்று சொன்னால் அந்தச் சட்டம் பொருந்தாது என்று ஏற்கனவே இருந்தது. டிஸ்டிங்ஷன் வித்தவுட் மச் டிஃப ரென்ஸ் — இது பெரிய திருத்தம் இல்லை. இப்படி எக்சம்ஷன் கொடுப்பதற்கு எதைச் செய்யலாம் என்று நோட்டிபிகேஷன் கொடுக்கலாம். இது ஒரு பெரிய திருத்தம் இல்லை. ஏற்கனவே ஆட்டோமேடிக்காக எக்சம்ஷன் இருந்தது. இப்போது கொடுத் துள்ள அரசாங்கத் திருத்தத்தின்படி அப்படி அவர்களுக்கு எக்சம் ஷன் கொடுக்கவேண்டுமென்றால், ஒரு அறிவிப்பு மூலம் கொடுக்க லாம் என்ற நிலை இருக்கிறது. அவர்கள் எக்சம்ஷன் வேண்டு மென்று மனு போடவேண்டும். பிறகு அதற்குப் பதில் சொல்லி, கன்சிடர் எல்லாம் செய்து உத்தரவு போடவேண்டும். எக்சம்ஷன் என்பது எக்சம்ஷன்தான். நான் சொல்ல விரும்புவது எல்லாம் இந்த எக்சம்ஷன் என்பது பெரிய ஓட்டை வழி. முழுமையாக ஏமாற்றப்படப் போகிறார்கள். இதை அரசாங்கம் அனுமதிக் கிறதா? இதை அமைச்சர் அவர்கள் விரும்புகிறார்களா? அதைத்தான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-20)

அதைப்போலவே இந்தச் சட்டத்தின் 40-வது பிரிவிலே சொல் கிறார்கள், மற்ற சட்டங்கள் இதற்குப் பொருந்தும் என்று சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் இ.எஸ்.ஐ. சட்டமோ, பிராவிடென்ட் பண்ட் சட்டமோ பொருந்தும்படி இனிமேல் செய் யலாம் என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு) ஏன் இதிலே மட்டும் பொருந்தும்படி செய்யலாம். அது என்ன செய்யலாம். இவை களுக்கும் பொருந்தும் என்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதுதானே. மற்றவைகளில் பொருந்தும் என்று அதாவது 'ஷல்' என்று போட்டுவிட்டு இதிலே நோட்டிபிகேஷன் கொடுக்க லாம் என்று போட்டிருக்கிறார்கள். எதற்காக இந்த இடை வெளி? எதற்காக இதிலே இவ்வளவு காலதாமதம் செய்யவேண் டும், இதிலே அக்கறை செலுத்தவேண்டும் என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன்.





ஏற்கனவே ஆளுநர் உரையிலே சொல்லப்பட்ட கட்டாய இன்ஷூரன்சும், தொழிலாளர்கள் அனைவரும் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற உத்தரவும் — இறந்தால் 10 ஆயிரம் ரூபாய் என்று அன்றைக்குச் சொன்னார்கள்—இவைகள் எல்லாம் நிச்சய மாக நிறைவேற்றப்பட்ட வேண்டியவைகள் என்று நான் சொல் லிக்கொள்கிறேன். இவைகள் எல்லாம் இன்னும் தொக்கி நிற் கிறது. இவைகளுக்கு எல்லாம் இந்தச் சட்டத்திலே இடம் இருக்கிறதா? என்றால் இல்லை.

ஆளுநர் உரை ஒரு பக்கத்திலே தூக்கி எறியப்பட்டு இருக் கிறது. புதிதாக இந்தச் சட்டத்திலே பல்வேறு விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நான் இதைச் சொல்வதற்குக் காரணம், ஏதோ ஜஸ்டிஸ் கிருஷ்ண ஐயரும் இன்னும் பல்வேறு தலைவர்கள், அறிஞர்கள் எல்லாம் கருத்துக்களைச் சொல்லி யிருக்கிறார்கள். எனவே, நான் கூட ஆசைப்பட்டேன். அமைச்சர் அவர்கள் அந்தக் கருத்துக்களையெல்லாம் அப்படியே தன்னுடைய சட்டத்திலே உள்ளே நுழைத்து புதிதாகச் சட்டம் உருவாக்கி விட்டாரோ என்று. அவர்கள் எல்லாம் சொன்னார்கள். கேட்டுக் கொண்டேன். சில திருத்தங்கள் போட்டேன். இருந்தாலும் என் மனநிறைவிற்கு ஏற்ப இப்படி ஒரு சட்டத்தை எழுதுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இது பொருத்தமாக இல்லை. இது உள்ளபடியே நியாயமான சட்டமாக இருக்கவேண்டும் என்று சொன்னால், இது தொடர்பான தொழிலாளத் தோழர் களை எல்லாம் கலந்து, அவர்களுடைய உண்மை நிலையை அறிந்தவர்கள் இந்தச் சட்டத்தை எழுதவேண்டும். ஏதோ ஏர்-கண்டிஷன் அறையிலே உட்கார்ந்து எழுதுவது போல் எழுதக் கூடாது என்ற நோக்கத்தில்தான் சொன்னேன்.

அதைப்போலவே இன்னொன்று. தொழிலாளர் நலச் சட்டங்கள் ஏற்கனவே முதலாளிகள் மனோபாவத்திலே போடப் பட்ட ஏராளமான தொழிலாளர் நலச் சட்டங்கள் எல்லாம் குப்பைக் கூடையிலே கிடக்கிறது. மக்கள் அவைகளின்மீது சலிப்படைந்திருக்கிறார்கள். தொழிலாளர்கள் எல்லாம் வெறுப் படைந்திருக்கிறார்கள். ஆக இப்படி இருக்கக்கூடிய சூழ்நிலையில் இந்தச் சட்டத்தையும், ஏற்கனவே சலிப்படைந்திருக்கிற, வெறுப் படைந்திருக்கிற. தொழிலாளர்களுக்குத் துரோகமாக இதை யும் குப்பைக் கூடையிலே எறிகிற அளவிற்கு உருவாக்கக்கூடாது என்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்திலே சிந்தனைச் செறிவும் இல்லை; சீர் செய்யும் எண்ணமுமில்லை; நேர்மை உள்ளமுமில்லை. எனவே இந்தச் சட்டத்தை முறையாக வடிக்கவேண்டும் என்று சொன்னால், நிச்சயமாக, பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி, முறைப்படுத்தித்தான் இந்தச் சட்டம் இயற்றப்படவேண்டும் என்று நான் வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : மாற்றுத் தலைவர் அவர்களே, கட்டிடத் தொழிலாளர்கள் பாதுகாப்புப் பணியைப் பற்றி உறுப்பினர் அவர்கள் எதிர்த்துப் பேசியிருக்கிறார்கள். உலகம் பிறந்ததிலேயிருந்து, இப்போதுதான் இதற்கு என்று ஒரு பாதுகாப்புச் சட்டம் வருகிறது. அவர் ஒரு கருத்து சொன்னார். பாலக்கோடு தொழிலாளர்கள் போராட்டம், அங்கே தண்ணீருக்காகப் போராடுகிறார்கள் என்று சொன்னார்கள். இது அல்ல காரணம், அங்கே 50 பேர்களுக்கு வேலை என்று சொன்னால், 100 பேர்கள் இருப்பதால், ஷிப்டு முறையிலே வேலை கொடுக்கிறார்கள். அதற்காகத்தான் அங்கே போராட்டம் நடந்து கொண்டிருக்கிறதே தவிர வேறு அல்ல. காமாலைக் கண்ணுக்கு கண்டதெல்லாம் மஞ்சள் நிறமாகத் தெரியும் என்பதைப் போல, விழுப்புரத்திலே இருந்துகொண்டு, பாலக்கோட்டைப் பார்க்கிறார்கள். நான் பாலக்கோட்டிலேயிருந்து தெரிந்து கொண்டு வந்து இதைச் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம்: மாற்றுத் தலைவர் அவர்களே, கட்டிட கட்டுமானப் பணியாளர்களின் வேலைப் பணிகளை முறைப்படுத்தும் சட்டம் சம்பந்தமாக நான் சார்ந்திருக்கக்கூடிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்தக்கூடிய நேரத்திலே ஒன்றைச் சொன்னார்கள். என்னுடைய தாத்தா அந்தக் காலத்திலே கொத்தனாராக இருந்தவர்கள், இந்தத் தொழிலாளர் வர்க்கத்தினுடைய கஷ்டங்கள் புரிந்து கொண்டதோடு மட்டுமல்லாமல், 1886 ஆம் ஆண்டில் சிக்காகோ நகரத்திலே 8 மணி நேர வேலை வேண்டும் என்பதற்காக அன்று மக்கள் எல்லாம் போராட்டம் நடத்தி, அதிலே கிட்டத்தட்ட 1½ லட்சம் கட்டிடத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டார்கள். அதற்குப்பிறகு கிட்டத்தட்ட 98 ஆண்டுக்குப் பின்னாலே முதன் முதலாக இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறேன் என்று சொன்னார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், 98 ஆண்டுக்காலம் கழித்து நீங்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டம், தொழிலாளர் வர்க்கத்தின் முன்னாலே உங்களுக்கு இருக்கக்கூடிய அனுதாபம். பக்கத்திலே இருக்கக்கூடிய பெரியார் மாவட்டத்திலே இருக்கக்கூடிய கந்தசாமி நூற்பாலையிலே. நீங்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டத்தின்படி, 480 நாட்கள் பணிபுரிந்த தொழிலாளர்களை பெர்மனென்ட் செய்ய வேண்டும் என்று கேட்டு போராடியதற்காக, 600 தொழிலாளர்களை வெளியே நிறுத்தியிருக்கிறார்கள். எனவே நீங்கள் யாருக்கு ஆதரவாக இருக்கிறீர்கள் என்பது இந்தச் சட்டத்திலேயிருந்து தெரியும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாற்றுத் தலைவர் அவர்களே, இது கட்டிடக் கட்டுமானப் பணியாளர்கள் சம்பந்தமாக கொண்டுவரப்பட்ட சட்டம், இதைப்பற்றித்தான் பேச





வேண்டும். நடுவிலே கந்தசாமி நூற்பாலைக்குப் போவார்களானால், நான் சொல்கிறேன், அங்கே ஒரு தொழிலாளி கொலை செய்யப்பட்டு, அந்தக் குற்றத்திற்காக 5 பேர்களுக்கு பெரிய தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை பற்றி தொழிலாளர் மானியம் வரும்போது பேசலாம். ஒரு தொழிலாளியைக் கொன்றார்கள். இது ஏ.ஐ.டி.யு.சி.யைச் சேர்ந்த தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள், அதற்காக 5 பேர்களுக்கு தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது 5, 6, வருஷம் தண்டனை என்று நினைக்கிறேன். எனவே அதைப் பற்றிப் பேச வேண்டாம். இந்த சட்டத்தைப் பற்றிப் பேசினால் எனக்கு உபயோகமாக இருக்கும்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இதைச் சொல்வதற்கு அடிப்படையான காரணம் 1886 ஆம் ஆண்டிலே 8 மணி நேர வேலைக்காக வேண்டி போராடியவர்களில் 1½ லட்சம் பேர் கட்டிடத் தொழிலாளர்கள் இறந்து விட்டார்கள். அவர்களுக்காகவேண்டி 98 ஆண்டுகளுக்கு பின்னாலே இத்தகைய சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்தோம் என்று சொன்னதினாலே, அப்படி தொழிலாளி வர்க்கத்திற்கு ஆதரவாக இருக்கக்கூடிய இந்த அரசாங்கம், பக்கத்திலே இருக்கக்கூடிய பெரியார் மாவட்டத்தில் கந்தசாமி நூற்பாலையில், நீங்களே கொண்டுவந்திருக்கக்கூடிய சட்டத்தை அமல் நடத்தவில்லை என்று போராடியதற்காக வேண்டி 600 பேர்கள் வெளியிலே இருக்கிறார்கள் என்றுதான் சொன்னேன் நான்.

அமைச்சர் அவர்கள் அதை எப்படி எடுத்துக் கொள்வார்களோ, நீங்கள் பண்ணினீர்களா, அவர்கள் பண்ணினார்களா அல்லது இவங்க சொல்லியே செய்தார்களா என்பதெல்லாம் பின்னாலே முடிவாகட்டும். அந்த விஷயத்திற்குள்ளே நான் போகவில்லை. ஆனால் இப்படி ஒரு சமாச்சாரம் நடந்தது தெரியாமல் இருக்காது, அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். இதைச் சொல்லிவிட்டு, இந்தக் கட்டிடத் தொழிலாளர்களுக்காகக் கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டத்திலே இருக்கக்கூடிய பல்வேறு ஷரத்துக்களை பார்க்கும்போது, இப்படி ஒரு சட்டம் கொண்டு வந்திருப்பதை பாராட்டினாலும் கூட, இந்த சட்டத்திலே இருக்கக்கூடிய பல்வேறு சிக்கல்களை எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியாது. பல உறுப்பினர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

தோழர் ஹேமச்சந்திரன் அவர்கள் சொல்லக்கூடிய நேரத்தில் இதிலே பல்வேறு திருத்தங்களை கொண்டு வர வேண்டும் என்று சுட்டிக்காட்டி, அப்படி ஒருமுழுமைப் படுத்தப்பட்ட திருத்தங்கள் சேர்ந்திருக்க வேண்டுமானால், செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி ஆய்வு செய்யப்பட்டு, அதற்குப் பின்னாலே கட்டிடத் தொழிலாளர்களுக்கு பயன்படக்கூடிய முறையிலே

[திரு. எம். ஆறுமு ம்] [1984 அக்டோபர் 9

கொண்டு வரப்பட்டு, அது ஒரு முழுமைப்படுத்தப்பட்ட சட்ட
மாக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். நான் அவை
களையே மீண்டும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதிலே சொல்லப்பட்டிருக்கிறது, 50 தொழிலாளர்களுக்
கும் அதற்கு மேலே பணி புரியக் கூடியவர்களுக்கும் மட்டுமே
இது பொருந்தும் என்று சொன்னது மட்டும் அல்லாமல்,
இங்கே அமைச்சர் அவர்கள் சொல்லக் கூடிய நோத்திலே
50க்கு கீழே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்குக்
கூட, இதில் வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. எந்தக்
காலத்திலும் அரசாங்கம் உத்திரவு போட்டுக் கொள்ளலாம்
என்று சொன்னார்கள். நான் அமைச்சர் அவர்களைப் பார்த்
துக் கேட்டுக் கொள்வதெல்லாம், நீங்கள் என்றைக்கு உத்திரவு
போடப் போகிறீர்களோ, போடுங்கள் அதன் சமாச்சாரமே
வேறு. ஆனால், 50 தொழிலாளர்களுக்கும், அதற்கு மேலே
வேலை செய்யக்கூடியவர்களுக்கும் பொருந்தும் என்று இந்தச்
சட்டத்திலேயே தெளிவாக சொல்லப்பட்டதற்சப் பின்னாலே
கான்டிராக்ட் முதலாளிகள் எப்படி இதை அமல் நடத்துவார்
கள்? தயவு செய்து அதை மாற்ற வேண்டும். கான்டிராக்ட்
டிலே பணிபுரியக் கூடியவர்களுக்கும் இதை பயன்படச் செய்ய
வேண்டும். 50க்கும் அதற்கு மேலும் என்று சொல்வது
சரியாக இருக்காது. இரண்டு பேர் மூன்று பேர்கள் என்று
கூட சேர்த்துக் கொண்டு நாட்டிலே உள்ள பல்வேறு இடங்
களில் வேலை செய்துக் கொண்டிருக்கிறார்கள்.

கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய கிணறு தோண்டுவதற்
காக போகக்கூடிய தொழிலாளர்கள் எத்தனை பேர் இருப்பார்
கள்? இரண்டு மூன்று பேர்கள் தான் இருக்க முடியும். அவர்
கள் இரண்டு மூன்று பேர்களாக கூட்டாகச் சேர்ந்து தான்
கிணறுகளை தோண்டுவதற்கும், வெடிகளை வைப்பதற்கும்
செல்வார்கள். அவர்களுக்கு எப்படி இந்தச் சட்டத்திலே
பாதுகாப்பு கிடைக்கும்? அவர்கள் தொழிலாளர்களா இல்லையா
என்ற நிலைமை கூட இருந்துக் கொண்டிருக்கிறது. அவர்
கள் தொழிலாளர்கள் தாம் என்று நிருபீக்க வேண்டிய கட்டா
யம் கூட ஏற்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டத்திலேயே யார் தொழிலாளி என்று டிஃபைன்
செய்யப்படாமல் இருக்கிறது. யார் தொழிலாளி என்பதை
திருபிக்கக் கூடிய அளவுக்கு தெளிவாக இல்லை. அரசுக்குப்
புரியும் என்று நினைக்கிறேன். ஆகவே, இந்தச் சட்டத்திலே
தொழிலாளி என்பது யார்? அதை யார் எப்படி நிருபிப்பது?
யார் இதற்கு ரிஜிஸ்தர் மெயின்டெயின் பண்ணுவது? கான்டி
ராக்டர் என்பது யார்? அதை எப்படி அளவு கோல் கொண்டு
கணக்கிடுவது? சப்-கான்டிராக்டர்கள் நிறைய பேர்கள் இருந்துக்
கொண்டிருக்கிறார்களே. ஆகவே, இவைகளுக்கெல்லாம் எப்படி



1984 அக்டோபர் 9] [திரு. எம். ஆறுமுகம்]

இந்தச் சட்டத்திலே விளக்கம் தரப் போகிறீர்கள் என்பதற்
கெல்லாம் தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்
சொல்லக் கூடிய நேரத்திலே தெளிவாக பதில் சொல்ல வேண்டும்.

50-ம் 50-க்கு மேலும் என்று இருப்பதைப் பின்னாலே திருத்தம்
செய்து கொள்ளலாம் என்று சொன்னாலும் கூட, அவைகளை
தெளிவாகச் சொல்லிவிட வேண்டும். கான்டிராக்டிலே வேலை
செய்தாலும் கூட, அவர்களும் இதிலே சம்பந்தப்பட்ட தொழி
லாளர்கள் என்று இந்தச் சட்டத்திலே திட்டவட்டமாக இருக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இதிலே அவர்களை
ரெஜிஸ்தரும் செய்ய வேண்டும். (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: போனஸிலே
20-க்கும், அதற்கு மேற்பட்டவர்களுக்கும் பொருந்தும் என்று
இருந்ததை இந்த அரசு 10-ம் அதற்கு மேற்பட்டவர்களுக்கும்
பொருந்தும் என்று முதன்முதலில் அறிமுகப்படுத்தி செயல்படுத்தி
வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவு
படுத்த விரும்புகிறேன்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, இந்தச் சட்டத்திலேயே பல்வேறு சட்டங்களைக்
குறிப்பிட்டு அவைகளும் இந்தக் கட்டிடத் தொழிலாளர்களுக்குப்
பொருந்தும் என்று சொல்லி இருக்கிறார்கள். நான் அமைச்சர்
அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் பல்வேறு சட்டங்
களிலே பல்வேறு கோளாறுகள் இருக்கின்றன. தொழிற் தகராறு
சட்டத்திலே 20 தொழிலாளர்களுக்கும், அதற்கு மேலும்
என்று .......... (குறுக்கீடு).

நான் இப்பொழுது தானே ஆரம்பித்திருக்கிறேன். இப்
பொழுதே நேரத்தைக் காட்டினீர்கள் என்றால் நான் முடித்துக்
கொள்கிறேன். நாளை வேண்டுமானால் தொடர்ந்து பேசிக்
கொள்ளலாம்.

இதிலே 8 சட்டங்களைக் கட்டிடத் தொழிலாளர்களுக்கும்
பொருந்தும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தக்
கட்டிடத் தொழிலாளர்கள் சட்டத்திலேயே 50 தொழிலாளர்
களும் அதற்கு மேலே இருக்கின்றவர்களும், இந்தச் சட்டத்தின்
கீழே வருவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தொழிற்
தகராறு சட்டமும் இதற்குப் பொருந்தும், தொழிற்சாலை சட்ட
மும் இதற்குப் பொருந்தும்; சம்பளம் வழங்கக் கூடிய சட்டமும்
பொருந்தும் என்று சொன்னால் ஒவ்வொரு சட்டத்திலேயும்,
எத்தனை தொழிலாளர்கள் இருக்க வேண்டும் என்பதற்கு
டெஃபனிஷனே கொடுத்துவிட்டு, அதற்குப் பின்னாலே அவை
கள் எல்லாம் பொருந்தும் என்றும் சொன்னால், இதில் எதை
எடுத்துக் கொள்வது? ஆகவே, ஸ்கிரிட்டாக, டெஃபனெட்
டாக இந்தச் சட்டத்திலேயே தொழிலாளி என்று சொன்னால்,

[திரு. எம். ஆறுமுகம்] [1984 அக்டோபர் 9

தொழிற் தகராறு சட்டத்திலே எப்படி விளக்கம் கொடுக்கப் பட்டிருக்கிறதோ, அதே மாதிரி கான்டிராக்டிலே பணிபுரியக்கூடிய வர்களாக இருந்தாலும் அவர்களையும் சேர்த்து இதிலே விளக்க மாகச் சொல்லப்பட வேண்டும். அது மட்டும் அல்ல, இந்தத் தொழிலாளர்களை யார் போய் செக் பண்ணுவது? இந்தச் சட்டத்தை இம்பிளிமெண்ட் பண்ணுவதற்கு இம்பிளிமெண் டேஷன் பாடி என்ன? அதை சரியாக இம்பிளிமெண்ட் பண்ண வில்லை என்றால், யார் நடவடிக்கை எடுப்பது? அதற்கான ஆய்வாளர் என்று மட்டும் இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப் பெற்றது).

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவையின் அனுமதியுடன் பேரவை யின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் இன்னும் 5 நிமிடங்களில் தன்னுடைய பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : நாளைக்கும் மசோதாக்களைத் தான் எடுத்துக்கொள்ளப் போகிறோம். ஆகவே இதைத் தொடர்ந்து நாளைக்கு எடுத்துக் கொள்ளலாமே.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் : சரி பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 10-10-1984 காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

139. மஹாராஷ்டிர மாநிலத்தில் சத்ரா என்னுமிடத்தில் உள்ள அருள்மிகு உத்தரா சிதம்பரம் நடராஜர் ஆலயத்தின் இராஜ கோபுரம் கட்டுவதற்காக அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலயம் மற்றும் ஒன்பது ஆலயங்களின் உபரி நிதியை நிதி மாற்றம் செய்வதற்காக விலக்களித்தல் தொடர்பாக வணிக வரிகள்- அறநிலையத் துறையின் 25-6-1984 ஆம் நாளிட்ட 681 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, தமிழ் நாடு இந்து சமயம் மற்றும் அறக் கட்டளைகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].



1984 அக்டோபர் 9]

140. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு திருவருட்
பாவை வெளியிடுவதற்காக அருள்மிகு கந்தசாமி ஆலயம்; அருள்
மிகு கபாலீஸ்வரர் ஆலயமும், அருள்மிகு தேவி கருமாரியம்மன்
ஆலயம் மற்றும் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி ஆலயங்களின்
உபரி நிதியை மாற்றம் செய்வதற்காக விலக்களித்தல் தொடர்
பாக வணிக வரிகள்—அறநிலையத் துறையின் 5-1-1984 ஆம்
நாளிட்ட 4 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறி
விக்கை. [தமிழ்நாடு இந்து சமயம் மற்றும் அறக் கட்டளைகள்
சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின் கீழ்
பேரவை முன் வைக்கப் பெற்றது].

141. தென் ஆற்காடு மாவட்டம் சிதம்பரத்தில் ஒரு கலைக்
கல்லூரியை திறுவுவதற்காக திருவேற்காடு அருள்மிகு தேவி கரு
மாரியம்மன் திருக்கோயில்ன் உபரி நிதியை மாற்றம் செய்வதற்
காக விலக்களித்தல் தொடர்பாக வணிக வரிகள்—அறநிலையத்
துறையின் 20-6-1983 ஆம் நாளிட்ட 676 ஆம் எண் அரசாணை
யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு இந்து சமயம்
மற்றும் அறக் கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
22/1959) 116 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்
றது].

142. சென்னைப் பல்கலைக் கழகத்தில் சைவ சிந்தாந்த
துறையை நிறுவுவதற்காக மாங்காடு அருள்மிகு காமாட்சி அம்மன்
மற்றும் அருள்மிகு வைகுண்டப் பெருமாள் தேவஸ்தானங்களின்
உபரி நிதியை மாற்றம் செய்வதற்காக விலக்களித்தல் தொடர்
பாக வணிக வரிகள்—அறநிலையத் துறையின் 12-9-1983 ஆம்
நாளிட்ட 1036 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. [தமிழ்நாடு இந்து சமயம் மற்றும் அறக் கட்
டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3)
பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

143. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சாராய (கூடப்பு) விதி
களில் திருத்தமொன்று செய்வது தொடர்பாக மதுவிலக்கு—
ஆயத் தீர்வைத் துறையின், 11-7-1984 ஆம் நாளிட்ட 843
ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்
நாடு 1937 ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டம் (தமிழ்நாடு
சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்
பெற்றது].

144. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின்
1981-82 ஆம் ஆண்டிற்கான பதினோராவது ஆண்டறிக்கை
(தமிழ்) [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்
கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49(3)
பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

145. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1981–82 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை. (ஆங்கிலம்) [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழக சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

146. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1981–82 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் (ஆங்கிலம்) [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைக் பல்கலைக் கழக சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

## இணைப்பு.

(68-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 6–க்கான விடையைக் காண்க).

1983–84 ஆம் கல்வியாண்டில் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக்குவதற்கு நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை., எனவே, இவ்வாண்டில் உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக் உயர்த்தப்படவில்லை. மதிப்பீடு மற்றும் திட்டச் செயற்பாடு ஆய்வு இயக்குநர், மேல்நிலைப்பள்ளிக் கல்வியை விரிவாக்குவது குறித்து ஒரு அறிக்கை கொடுத்துள்ளார். உயர்நிலைப், பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக்குவதற்கான அளவீடு அவ்வறிக்கையில் தரப்பட்டுள்ளது. அவை அரசின் பரிசீலனையில் உள்ளன. குழுவின் பரிந்துரைகளின் மீது ஆணை வெளியிட்ட பிறகு உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாக உயர்த்துவது பற்றிய கருத்துருக்கள் தேவைப்பட்டால் அரசு நிதி வசதிக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும். மேற்குறிப்பிட்ட விவரம் யாவும், அரசு, தனியார், நகராட்சி மற்றும் மாநகராட்சி (ஏஸ்.எஸ்.எல்.சி.) ஆகிய சாதாரணப் பள்ளிகளைப் பொறுந்தவையாகும். ஆனால் அரசுக்கு நிதிச் சுமையற்ற (No financial Commitment) ஆங்கிலோ இந்திய மற்றும் மெட்ரிக்குலேஷன் பள்ளிகளை (Anglo Indian and Matriculation) பொறுத்த மட்டில் விண்ணப்பங்களைப் பரிசீலிக்கத் தடையேதுமில்லை. இதுவரை 11 ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் அண்ட் மெட்ரிக்குலேஷன் பள்ளிகளின் விண்ணப்பங்கள் இக்கல்வியாண்டில் பரிசீலிக்கப்பட்டு மேல்நிலைப்





பள்ளிகளாக உயர்த்தி அரசு அனுமதி வழங்கியுள்ளது. பள்ளிக் கல்வி இயக்குனரால் பெறப்பட்ட பள்ளிகளின் மாவட்ட வாரியான விவரப்பட்டியல் கீழ்வருமாறு :—

### ஈரோடு.

1. வெள்ளாங்கோயில் உயர்நிலைப்பள்ளி.
2. நகராட்சி (பெண்கள்) உயர்நிலைப் பள்ளி, கோபிசெட்டிப் பாளையம்.
3. சிவகிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளி.
4. இரயில்வே காலனி உயர்நிலைப் பள்ளி.
5. அரசினர் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிக்கோவில்.
6. சி.எஸ்.ஐ. பெண்கள் உயர்நிலைப் பள்ளி, தாராபுரம்.

### திருநெல்வேலி.

1. இளையரசனேந்தல் அரசினர் உயர்நிலைப்பள்ளி.
2. பெரிலோவன்பட்டி டி.வி.ஏ. உயர்நிலைப்பள்ளி.
3. ஜான் தி பாப்ஸ்து உயர்நிலைப்பள்ளி, புதியம்புத்தூர்.
4. டி.டி.டி.ஏ. கமலாஞான சிரோமணி நினைவு உயர்நிலைப் பள்ளி, என். கைலாசபுரம்.
5. டான். பேலிஸ் மாதா மகளிர் உயர்நிலைப்பள்ளி, தூத்துக்குடி.
6. அரசினர் உயர்நிலைப்பள்ளி, வாழ்வல்லார்,
7. சென்ட்ரல் உயர்நிலைப்பள்ளி, காயல்பட்டினம்.

### குமரி.

1. எல்.எம்.எஸ். உயர்நிலைப்பள்ளி, தாமரைக்குளம்.
2. அரசினர் உயர்நிலைப்பள்ளி; மாதவாலயம்.
3. அரசினர் உயர்நிலைப்பள்ளி, மட்டக்களா.
4. அரசினர் உயர்நிலைப்பள்ளி, குமாரபுரம்.

### உதகமண்டலம்.

1. தூய மரியன்னை மகளிர் உயர்நிலைப்பள்ளி, கோத்தகிரி.
2. அரசினர் உயர்நிலைப்பள்ளி, கட்டபெட்டு.
3. புனித மேரி உயர்நிலைப்பள்ளி, நீலகிரி,
4. கருப்பண்ண நாடார் கல்வி நிலையம், குன்னூர்.
5. அரசினர் உயர்நிலைப்பள்ளி, எடப்பள்ளி.

உதகமண்டலம்—தொடர்ச்சி.

6. அரசினர் உயர்நிலைப்பள்ளி, காத்தாடிமடம்.
7. ஸ்ரீசத்குரு ஆதிவாசி உயர்நிலைப்பள்ளி, உதகை.
8. அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி, உதகை.
9. ஸ்ரீ சாந்தி விஜயா மகளிர் உயர்நிலைப் பள்ளி, உதகை.

முகவை.

1. எஸ்.எம். அரசினர் உயர்நிலைப்பள்ளி, தொண்டி.
2. அரசினர் உயர்நிலைப்பள்ளி, திருவேகம்பத்து.
3. ச. இராம (ஆண்கள்) உயர்நிலைப்பள்ளி, நாட்டரசன் கோட்டை.
4. வி. புதூர் உயர்நிலைப்பள்ளி.
5. அரசினர் (மகளிர்) உயர்நிலைப்பள்ளி, இளையான்குடி.
6. சாத்தூர்.
7. சிவகாசி.
8. திருவில்லிபுத்தூர்.
9. அருப்புக்கோட்டை.
10. சிமந்திபட்டி நாடார் உறவின் முறை (மகளிர்) உயர்நிலைப் பள்ளி, மம்சாபுரம்.
11. தந்தை பெரியார் அண்ணா நினைவு உயர்நிலைப்பள்ளி, நல்லமங்கலம்.
12. பெருந்தலைவர் காமராஜ் நினைவு உயர்நிலைப்பள்ளி, மீனாட்சிபுரம்.
13. எஸ்.எஸ். நாடார் குருவம்மாள் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, திருத்தங்கல்.
14. தி.உ.ந.ச. வைத்தியலிங்க நாடார் உயர்நிலைப்பள்ளி, திருச்சுழி.
15. வள்ளல் பாரி உயர்நிலைப்பள்ளி, பிரான்மலை.
16. அரசினர் உயர்நிலைப்பள்ளி, நெற்குப்பை.

சேலம்.

1. அரசினர் உயர்நிலைப்பள்ளி, விட்டம்பாளையம்.
2. அரசினர் உயர்நிலைப்பள்ளி, சித்தளந்தூர்.
3. சேலம் நகராட்சி (ஆண்கள்) உயர்நிலைப்பள்ளி, பாவடி.
4. அரசினர் உயர்நிலைப்பள்ளி, சேரிப்பட்டி.
5. மணக்காடு நகராட்சி (மகளிர்) உயர்நிலைப்பள்ளி.
6. அரசினர் உயர்நிலைப்பள்ளி, ஏமூர்.



வடாற்காடு மாவட்டம்.

1. அரசினர் உயர்நிலைப்பள்ளி, பழம்பேட்டை, சேத்துப்பட்டு.
2. அளைக்கள் ஓரியண்டல் (அராபிக்) உயர்நிலைப்பள்ளி, ஆம்பூர்.
3. ஜம்னா மரத்தூர் வனத்துறை உயர்நிலைப்பள்ளி.
4. வடமாதிமங்கலம் உயர்நிலைப்பள்ளி, கீழப்பட்டு.
5. அரசினர் உயர்நிலைப்பள்ளி, சந்தவாசல்.

தென்னாற்காடு மாவட்டம்.

1. அரசினர் உயர்நிலைப்பள்ளி, வேப்பூர்.

செங்கை.

1. அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளி, பொன்னேரி.
2. ஸ்ரீ மகாவீர் ஜெயின் உயர்நிலைப்பள்ளி, திருவொற்றியூர்.
3. அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளி, வளவனூர்.
4. அறிஞர் அண்ணா உயர்நிலைப்பள்ளி, அய்யன்பேட்டை.
5. அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளி, திருத்தணி.
6. அரசினர் உயர்நிலைப்பள்ளி, பெருங்களத்தூர்.
7. அரசினர் உயர்நிலைப்பள்ளி, கத்திவாக்கம்.

சென்னை.

1. கிறிஸ்தவ உயர்நிலைப்பள்ளி, சென்னை-12.
2. காமராஜ் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, சென்னை-21.
3. ஒய்.எம்.சி.ஏ. கல்லூரி உயர்நிலைப்பள்ளி, சென்னை-35.

திருச்சி.

1. ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, தலையாநத்தம்.
2. சி.எஸ்.ஐ. உயர்நிலைப்பள்ளி, மகிமைபுரம்.
3. அரசினர் உயர்நிலைப்பள்ளி, துங்கபுரம்.
4. புனித பீட்டர்ஸ் உயர்நிலைப்பள்ளி, வீரகனூர்.
5. அரசினர் (மகளிர்) உயர்நிலைப்பள்ளி, துறையூர்.
6. அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளி, புகலூர்.
7. அரவக்குறிச்சி.
8. ஆதி திராவிடர் நல உயர்நிலைப்பள்ளி, திருத்தலையூர்.

புதுக்கோட்டை.

1. எஸ்.பி.எம். உயர்நிலைப்பள்ளி, இராமச்சந்திரபுரம்.
2. சக்தி காந்தி உயர்நிலைப்பள்ளி, இராயவரம்.

மதுரை.

1. மதுரை தொழிலாளர் நல கழக உயர்நிலைப்பள்ளி.

தர்மபுரி.

1 மெணசி அரசினர் உயர்நிலைப்பள்ளி.

தஞ்சை.

1. உயர்நிலைப்பள்ளி, மாரியம்மன்கோயில்.
2. சொக்கனாபூர் காசங்கோடு.

கோவை.

1. காந்திஜி அரசினர் உயர்நிலைப்பள்ளி, சொக்கம்பாளையம்.
2. வி.எல்.பி. ஜானகி அம்மாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, கோவை.
3. அரசினர் உயர்நிலைப்பள்ளி, ஒத்தக்கால் மண்டபம்.
4. அரசினர் உயர்நிலைப்பள்ளி, விமான நிலையப் பகுதி, குறைமேடு.
5. ஸ்ரீ கோபால் நாயுடு உயர்நிலைப்பள்ளி, பாரதிநகர்.

136272
D
V211,31 N84
N84.68.1